வானதி பதிப்பகம்



# ம.பொ.சி.

எஸ். மகராஜன்

MK Color Process, Madras-14
Phone : 848311
Designed by P. N. Anandan

M. செல்லம்மாள்

# ரஸஞ்ஞானி

## டி. கே. சி.

டாக்டர் ஜஸ்டிஸ் எஸ். மகாராஜன்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதல் பதிப்பு : மே, 1990

பதிப்புரிமை: திருமதி செல்லம்மாள் மகராஜன்

10-5-90 அன்று புதுவைக் கம்பன் கழக வெள்ளி விழாவில், புதுவை மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர். வி. ஜானகிராமன் அவர்களால் வெளியிடப்பெற்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 18-00

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு.
சென்னை-600 014.

# பதிப்புரை

அரண்மனைகளிலும் அதிகார மாளிகைகளிலும் அடக்கி வைக்கப்பட்டு ஆராய்ச்சிப் பொருளாக இருந்த தமிழ்க் கவிதையைச் சிறை மீட்டு மக்களிடம் உலவ விட்டவன் பாரதி. அவன் வெறும் சொற்களை மட்டும் எளிமைப் படுத்தவில்லை, எளிமையான சொற்களின் மூலம் கடுமை யான பிரச்னைகளை மக்களுக்கு அடையாளம் காட்டியவன். அதுபோலவே கடுமையான - பொருள் புரியாத கவிதையின் உள்ளே புகுந்து, கடலில் முத்தெடுப்பதுபோல கருத்துக்களை அள்ளி வந்தவர் டி.கே.சி. என்ற மூன்று எழுத்துக்களால் அழைக்கப்பெறும் திருவாளர் டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

ஆண்டுதோறும் பருவ காலங்களில் மட்டுமே குற்றாலத் தில் அருவிநீர் பொங்கிப் பெருகி ஓடிவரும். ஆனால் அதே குற்றாலத்தில் டி.கே.சி. வாழ்ந்த இல்லத்தில் நாள்தோறும் தமிழ் அருவி பொங்கிப் பிரவாகமெடுத்து தம்மை நாடி வரும் அன்பர்களுக்கு அமுத விருந்து படைக்குமாம். டி.கே.சி. யின் அழகு தமிழையும் அவரது மேதாவிலாசத்தையும் கேட்டு உணர்ந்து மகிழ்வதற்காகவே தமிழ்நாடெங்கும் இருந்து அறிஞர் பெருமக்கள் அவர் இல்லத்தை நோக்கிப் படையெடுப்பார்களாம்.

கம்பராமயணப் பாடல்களைப் பிழையாகப் பொருள் உணர்ந்து வழங்கியவர்களோடு வாதிட்டுப் புறங்காணச் செய்திருக்கிறார். அதுமட்டுமல்ல, கம்பராமாயணத்தில் அதன் கவித்துவத்திற்கு மாசு நேரும்வகையில் இடையில் வந்தவர்கள் செருகிய பாடல்களை அடையாளம் காட்டி

அவற்றைக் களைந்து கம்பன் கவிநயத்திற்கு மெருகூட்டியவர் டி.கே.சி.

டி.கே.சி.யோடு மிகமிக நெருங்கிப் பழகிய நீதிபதி எஸ். மகராஜன் அவர்கள் அன்னாரின் இலக்கிய மேதா விலாசத்தை இந்த நூலின் மூலம் புலப்படுத்தியுள்ளார். இந்த நூல் டி.கே.சி.யைப் பற்றிய பாராட்டுரையாக மட்டுமே அல்லாமல் அவரது ஆழ்ந்து அகன்ற புலமையை ஆய்வு செய்யும் ஒரு விமர்சனமாகவே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. நூலாசிரியர் மகராஜன் தான் டி.கே.சி. யோடு முரண்பட்ட இடங்களைக்கூட விட்டுவைக்காமல் சுட்டிக் காட்டியுள்ள நேர்மை அவர் ஒரு நீதிபதி என்பதைச் சொல்லாமல் சொல்கிறது.

நீதிபதி மகராஜன் அவர்கள் ரசிகமணி டி.கே.சி. பற்றி எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவதற்கு தூண்டுகோலாயிருந்த திரு கி. ராஜநாராயணன் அவர்களுக்கும் திரு தீப. நடராஜன் அவர்களுக்கும் நன்றி. இதனை அழகுற அச்சிட்டுக் கொடுத்த மாருதி அச்சகத்தாருக்கும் நன்றி.

இந்த நூலைப் படிப்பதன்மூலம் இந்திய சுதந்திரத்திற்கு முன்னும் பின்னுமுள்ள தமிழ் இலக்கிய ரசனையை ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம் என்பதால் இதனைத் தமிழ் மக்கள் சுவைத்து மகிழ்வார்கள் என்பது திண்ணம்.

**வானதி ஏ. திருநாவுக்கரசு**

# பூரண ஹரியும் பூரண ரசிகமணியும்*

## (ரசிகமணியைப் பற்றி ராஜாஜி)

சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்த நாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க் கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம். தமிழ் வசன நடை முன்னேற்றத்தின் ரகசியம்: தாளமும் ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம். தெய்வ பக்தி தரும் நிம்மதியின் ரகசியம். அன்பின் பரம மகிழ்ச்சி, வேஷங்களின் பொய்ம்மை, அனைத்தும் நன்றாகக் கண்ட பூரண ரசிகமணி டி. கே. சி. பிறந்த நாளும்.

ஹரியின் பூரணாவதார கண்ணனின் ஜன்ம நட்சத்திரமும், டி. கே. சி.யின் ஜன்ம நட்சத்திரமும் ஒன்றாய்ச் சேர்ந்த திருவிழாவை மகிழ்ச்சியுடன் சென்ற திங்கட்கிழமை கொண்டாடினோம். இந்தத் திருவிழாக்கள் ஞானமும் அன்பும் நாட்டில் வளரச் செய்யும்.

மகாவிஷ்ணுவின் பூரண அவதாரமாகிய கீதாசாரியனுக்கும் அயோத்தியாபுரி ராஜகுமாரன் ராமசந்திரனுக்கும் உள்ள வேற்றுமைகளை வைஷ்ணவ ஆசாரியர்கள் பக்தியும் சாமர்த்தியமும் செலுத்தி எழுதியிருக்கிறார்கள். மொத்தத்தில் ராமசந்திரன் நான்கில் ஒரு பங்கு அம்சம் என்றும் கிருஷ்ண பகவான் பூரண அவதாரம் என்றும் கொள்ளப்பட்டிருக்கிறது.

---

* *10-9-1967* 'கல்கி' மலரில் ராஜாஜி எழுதிய கட்டுரை.

பகவானைப் பங்கு போட இயலாது. கால் என்றும் அரை என்றும் சர்வேசுவரனை வகுப்பதற்கு இயலாது. ஆயினும் அவதாரங்களில் பேதம் உண்டு. சீதையை இழந்ததும் ராமசந்திரன் துயரமடைந்து பிரலாபித்தது ராம சரிதம் படித்தவர்கள் அனைவருக்கும் தெரியும். கண்ணனுக்குத் துயரம் என்பது கிடையாது. தான் சர்வேசு வரன் என்று உணர்ந்த அவதாரம்.

இராவணனை வதம் செய்து வெற்றி பெற்ற பின் சீதை யிடம் ராமசந்திரன் "உனக்காக நான் யுத்தம் செய்யவில்லை. என் மானத்துக்காக யுத்தம் செய்தேன். நீ எங்கேயாவது எவனுடைய சார்பிலாவது வாழலாம். என்னுடன் இருக்க ஆசைப்படாதே" என்றதையும், இதைக் கேட்ட சீதை தாங்க முடியாத வேதனையடைந்து அக்கினியில் பிரவேசித்ததையும் புராணம் படித்தவர்கள் அறிவார்கள். அக்கினியால் சீதையை எரிக்க முடியவில்லை. அது சோதனைக்கு நடந்த சம்பவம். உண்மையில் ராமசந்திரன் சீதையை விட்டுவிட உத்தேசிக்க வில்லை என்று சொல்லப்படுகிறது. எப்படியாயினும் கண்ணன் இம்மாதிரி நடந்து கொண்டிருப்பானா? ஒருநாளும் இவ்வாறு செய்யமாட்டான். அநுமான் கொண்டு வந்த செய்திக்குப் பின் சோதனை என்னத்துக்கு?

பிறகும் கூட மூடர்கள் கிளப்பிய அபவாதத்துக்குப் பயந்து ராமசந்திரன் சீதா தேவியைக் காட்டுக்கு அனுப்பி விட்டான். கண்ணன் இப்படிச் செய்வானா? ஒருநாளும் செய்யமாட்டான். பிறகும்கூட சீதை குழந்தைகளைப் பெற்ற பின் ராமசந்திரன் சந்நிதியில் நின்றபோது மறுபடியும் முன் போலவே அவமதித்தான். இதற்குமேல் மானுட வாழ்க்கை வேண்டாம் என்று தேவி பூமிக்குள் மறைந்து போனாள். நமக்கு வந்திருக்கும் ராமாயண ஏடுகளில் இப்படியெல்லாம் கண்டிருக்கிறது. உலக வழக்கத்துக்கு பலம் தருவதற்காக இந்தக் கதை உண்டாக்கப்பட்டிருக்கிறது. இது ராமசந்திர னுடைய பெருமையைக் குறைக்கிறது.

கண்ணனே குறைவற்ற தெய்வம். உலகத்துக்கு வழி காட்டினான். 'வீட்டை விடவேண்டாம். மனைவியைவிட வேண்டாம். செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் விடவேண்டாம். அவற்றின் பயன்களில் பற்று வைக்காதே. அதுவே சந்நியாசம்' என்று தெளிவாக எடுத்து உபதேசித் தவன் கண்ணபிரான். ஒரு பற்றை மட்டும் விடாதே. கடவுள் பற்றை விடாதே. அந்தப் பற்றைப் பற்றிக்கொண்டு மற்ற பற்றுகளினின்று விடுதலைபெறுவாய் என்று உபதேசித்தான்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை: அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு**

என்று திருவள்ளுவரும் உபதேசித்தார்.

கண்ண பகவான் ரோஹிணி நட்சத்திரத்தில் அவதரித் தான். ரோஹிணி நட்சத்திரக் கூட்டம் சகடத்தைப் போல் இருப்பதாகக் கண்டு அதற்குப் பெயரும் சகடம் என்றே சொல்லுவது வழக்கம். வண்டியின் முக்கிய பாகம் அச்சு மரம். அச்சு மரத்துக்கு வடமொழி 'அக்ஷ' அதன் கீழ் பிறந்தான் கண்ணன் என்று விஷ்ணுவுக்குப் பீஷ்மாச்சாரியார் தந்து பாடிய ஆயிர நாமங்களில் 'அதோக்ஷஜ:' என்பதும் ஒன்று. அதாவது அச்சு மரத்தடியில் அவதரித்தான் என்று.

இந்த அச்சு மரத்தடியில் மற்றொருவர் அவதரித்தார். தமிழ்க் கவிக் காதலர் டி. கே. சி. என்று பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார் அவர்கள். இவர்தான் 'கல்கி' கூட்டத்தின் குலபதியாக இருந்து பல்லாண்டு அந்தப் பத்திரிகையையும், அதை நடத்தியவர்களையும், படிப்பவர் களையும் ஆசீர்வதித்து வந்தார். அவரைக் கல்கி மறக்க முடியுமா? ஸ்ரீஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள். டி. கே. சி. பிறந்தநாள் என்றும் தமிழர் கொண்டாடும் நாள்.

**ராஜாஜி**

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | ரஸஞ்ஞானி டி. கே. சி. | ... | 9 |
| 2. | டி. கே. சி. ஜாதகம் | ... | 22 |
| 3. | சமயச் சடங்குகளும் டி. கே. சி. யும் | ... | 83 |
| 4. | "சீலம் சிறந்த சிதம்பரநாதன்" | ... | 44 |
| 5. | கம்பன் அறிமுகம் | ... | 51 |
| 6. | ரஸிகமணி டி. கே. சி. | ... | 68 |
| 7. | டி. கே. சி.யும் அழகுணர்ச்சியும் | ... | 77 |
| 8. | டி. கே. சி. யின் உள்ளுணர்வு | ... | 80 |
| 9. | கவிமணியும் ரஸிகமணியும் | ... | 83 |
| 10. | திருந்தத் திருந்திய கை | ... | 89 |
| 11. | டி. கே. சி. யும் மேற் கோள்களும் | ... | 98 |
| 12. | கடித இலக்கியம் | ... | 105 |
| 13. | ரஸிகமணி டி. கே. சி. நூற்றாண்டு விழா | ... | 116 |
| 14. | ராஜாஜியும் டி. கே. சி. யும் | ... | 121 |
| 15. | டி.கே.சி.யும் எழிலியலும் | ... | 145 |
| 16. | டி. கே. சி. யுடன் என் அனுபவம் | ... | 153 |

# 1. ரஸஞ்ஞானி டி. கே. சி.

கொறநாட்டுப் புடவையை வெறுங் கையாலேயே முழம் போட்டு விடலாம். அது பருப்பொருளாக இருப்ப தால், தொட்டுப் பார்த்தே அதை எடை போட்டு விடுவோம்; கண்ணால் பார்த்தே அதன் நீள அகலத்தை நிதானித்து விடுவோம்.

மொச்சைக் கொட்டையை அளப்பதோ அதைக் காட்டிலும் எளிது. தடித் தடியாக வல்லவா இருக்கிறது அது! உரி, உழக்கு, நாழி, பட்டணம் பக்கா என்று எத்தனையோ கருவிகள் வைத்திருக்கிறோம்? அந்தக் கருவிகளைக் கொண்டு, மொச்சைக் கொட்டையை அளந்து, மூட்டை மூட்டையாகக் குவித்துத் தள்ளி விடு வோம்.

ஆனால், சூக்ஷ்மமான பொருள்களை அளக்கவேண்டும் என்றால். கஷ்டப்படத்தான் செய்கிறோம். பண்பாடு, கலை, தத்துவம் என்று சொன்னாலே, நமக்குத் திகைப்பு ஏற்பட்டு விடுகிறது. மொச்சைக் கொட்டை மாதிரி, அவை மசிவதில்லை. நம்முடைய கண்ணை உறுத்துவது மில்லை. கலையை முழம் போடுவதற்கு நம்மிடம் அளவு கோல் இல்லை. தத்துவத்தையும், பண்பாட்டையும் அளக்கப் பட்டணம் படி கிடையாது. கலையிலுள்ள—சிறப்பாகத் தமிழ்க் கலையிலுள்ள—தெளிவும், ஆழமும்

அவ்வளவு நுட்பமாயிருப்பதால் அது நம்மோடு கண்ணாம் பொத்தி விளையாடி விடுகிறது; அதை இனம் கண்டு கொள்ள முடியவில்லை. படித்தவர்களுக்குக்கூட, கலைச் சுவை இன்னது என்று தெரியவில்லை; சுவையுள்ளது எது, சுவையற்றது எது என்று நிர்ணயம் பண்ணவும் முடிய வில்லை.

கலையை அநுபவிப்பதற்கு, படிப்பிருந்தால் போதாது! உள்ளுணர்வு வேண்டும். அதோடு, பரிவும், பௌவியமும் வேண்டும். கலையுலகத்துக்குள்ளே பிரவேசிக்க வேண்டும் என்றால், காலிலே போட்டிருக்கும் செருப்பைக் கழற்றிவைத்துவிட்டு, "நான்" என்ற திமிரைக் கொஞ்சம் பம்ம வைத்துக்கொண்டு, மேல் வேட்டியை அரையிலே கட்டிக்கொண்டு, வாலிருந்தால், வாலைச் சுருட்டிவைத்துக்கொண்டு, அதற்குப் பின்தான் கலை வாசலுக்குள் எட்டி அடி வைக்கலாம்; அல்லாத பக்ஷம், கலையுலகம் வழி திறவாது.

இப்படியெல்லாம் நோன்பிருந்து, மனசைப் பக்குவப் படுத்திக்கொண்டு, கலை உலகத்தினுள் புகுவோமே யானால் ஆணவமற்ற ஆனந்த நிலை நமக்குக் கிட்டும். இந்த அரிய உண்மையை நேரடியாக எடுத்துக் காட்டி னார்கள் ரஸிகமணி டி. கே. சி.

தேனுக்குள் விழுந்து வண்டு எப்படி மயங்கிக் கிடக்குமோ, அதைப் போல, தமிழ்ப் பாடல் ஒன்றில் டி. கே. சி. இறங்கி, அதில் முங்கி, மூழ்கி, மணிக் கணக்கிலே அந்தப் பாடலோடு ஒன்றிக் கரைந்து நிற்பார் கள். அதோடு, பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கும் நம்மையும் அந்த அத்வைத நிலையில் இருத்தி வைக்கும் வல்லமையும் அவர்களிடம் இருந்தது.

டி. கே. சியே சொல்லுவார்கள் :—''கலை என்றால் எப்படி இருக்க வேண்டும்? அது நம்முடைய உணர்ச்சி தத்துவத்தில் போய்க் கலந்து நம்மை வேறு வஸ்து ஆக்கிவிட வேண்டும். அதனால் நமக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டுகிறது. அதுதான் கலை."

கலையைச் சுவைப்பதெப்படி, சுவைத்துக் கணிப்ப தெப்படி என்று தெரிந்து கொள்வதற்கு, ஒரு சுலபமான வழியிருக்கிறது. ரஸிகமணியின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு, கலையுலகத்தை ஒரு சுற்று, சுற்றி வரவேண்டும். சுற்றி வரும்போது, டி. கே. சியின் இதயத்தோடு ஒட்டி, நாமும் விஷயங்களை அனுபவிக்க வேண்டும். அவ்வளவு தான், கலையைச் சுவைக்கும் முறை நமக்கு எளிதில் கைவந்து விடும்!

முதன்முதலாக, டி. கே. சி.யோடு திருச்சியில் நடந்து கொண்டிருக்கிற திருவள்ளுவர் கூட்டத்துக்குப் போவோம். கூட்டத்தில் எட்டுப் பேர் பேசுகிறார்கள். கெட்டிக்காரத் தனமாகவே பேசுகிறார்கள். என்ன இருந்தாலும், அவர் களில் ஒருவராவது நம்முடைய இதயத்தையோ வள்ளுவ ருடைய இதயத்தையோ தொட்டபாடாக இல்லை. காரணம் தெரியாமல், ரஸிகமணியை ஜாடையாகப் பார்க்கிறோம். மீசையை ஒதுக்கி விட்டுக் கொண்டே, காரணத்தை விளக்குகிறார்கள் டி.கே.சி. :—''ஒவ்வொரு வருக்கும் திருவள்ளுவர் கெட்டிக்காரர் என்று பட்டது. ஏன்? தாங்கள் நினைத்திருந்ததை அவர் சொல்லி விட்டாராம்! அப்படியானால், கெட்டிக்காரர் அல்லாமல் வேறு எப்படி இருக்கக் கூடும். எந்த விதத்திலோ, அவர் களுக்கு நம்பிக்கை இருந்தது—திருவள்ளுவர் மேல் அல்ல. தங்கள் மேல்தான்.'' டி. கே. சி.யின் விளக்கம் பேச்சாளர்களுடைய குறையை எடுத்துக் காட்டிவிட்டது.

படுத்திக் கொண்டிருக்கும்போது, அதற்கு ஊர்ஜிதம் கொடுப்பதற்காக, வேறு போக்கு இல்லையென்றால், மேற்கோளைக் கையாளலாம் என்று தெரிந்து கொண்டோம்.

இனி திருச்சியிலிருந்து புறப்பட்டு, ரஸிகமணியின் கையைப் பிடித்துக்கொண்டே திருவாரூருக்குப் போவோம். அங்கே தமிழ் வளர்ச்சிக் கழக விழா அலங்காரமாகவும், ஆரவாரத்தோடும் நடக்கிறது. ''காந்திஜிக்கு ஜே!'' என்று பலர் கத்திக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கேட்ட நமக்கு, ''அடே, தமிழ் வளர்ந்து விட்டதே'' என்ற மயக்கம் ஏற்படுகிறது. ஆனால், பக்கத்திலிருக்கும் டி.கே.சி, ''இதெல்லாம் தமிழ் வளர்ச்சியென்று நினைத்து விடாதே'' என்று எச்சரிக்கை செய்கிறார்கள். இங்கே நடக்கும் பேச்சுகளைப் பற்றிய டி.கே.சி. விமர்சனம் கீழ்க்கண்டவாறு :—''டாக்டர் கிருஷ்ணன் பெரிய நிபுணர். பூமி பிறந்த காலம், சூரியன் பிறந்த காலம் என்ற விஷயமாக உள்ள சில கணக்குகளைத் தமிழில் எடுத்து விளக்கினார். இது எப்படித் தமிழை வளர்த்ததாகும்? சீவில்லிபுத்தூர்க்காரன் ஒருவன் மதுரைக்கு வழி இன்னது என்று எடுத்துச் சொல்லிவிட்டால், தமிழ், ஆகா! வளர்ந்துவிட்டது. 'ஹே, ஹா ஹோ' என்று கத்த வேண்டியதுண்டா?

ஆர்.கே. சண்முகம் செட்டியாரும், நம் நாட்டுக்கும், இதர நாடுகளுக்கும் உள்ள பொருளாதார விஷயங்களைத் தெளிவாய் எடுத்து விளக்கினார் எதில்? தமிழில். அது காரணமாகத் தமிழ் வளர்ந்து விட்டது என்று சொல்ல வேண்டியதுண்டோ?

இந்த விஷயங்களுக்குத் தமிழ் உபயோகப்படாமல் இருந்தால், அது ஒரு பாஷை ஆகுமா? ஆனால்,

ஒன்று. தமிழ் வித்வான்கள் எந்த விஷயத்தையுமே தமிழில் விளக்க முடியாதுதான். இடைப் பிறவரல்கள், சிலேடைகள், மடக்குகள், ஆகிய பல அசந்தர்ப்பங்கள் வந்து விழுந்து விஷயத்தைக் குழப்பிவிடும்.

'கல்கி' அவர்கள் பேசிய வந்தனோபசாரம், அபாரமாய், ரஸமாய், கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதாக இருந்தது—தமிழ் வளர்ந்து விட்டது.''

தமிழ் வளர வேண்டும் என்றால் விஷயத்தைத் தெளிவாகச் சொன்னால் மாத்திரம் போதாது. உணர்ச்சியோடும், அபிநயத்தோடும் தமிழ் மொழி சல்லாபம் செய்ய வேண்டும் என்று டி.கே.சி. பேச்சிலிருந்து தெரிந்து கொண்டோம்.

திருவாரூரிலிருந்து தேரழுந்தூர் வெகு தூரமல்ல அங்கே நடக்கும் கம்பர் விழாவுக்குப் போகிறோம். 'கம்பர் மேட்டி'லிருந்து கவிதையை விளக்கிக் கொண்டிருக்கிறார் ஒரு பேச்சாளர். கவிதையென்றால் ஒரு பொல்லாத காரியம். அதை விளக்குவதற்கு அபாரமான உள்ளுணர்வும், சொல்வாற்றலும் வேண்டும். இவருக்கோ இரண்டும் பூஜ்யம். ஆனால், ரொம்ப ரொம்பப் படித்தவர். ஆகவே கவிதை உலகத்துக்குள்ளே புகுந்து, ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருக்கிறார், எருமை மாடு குட்டையைக் கலக்கின கணக்கில். பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ரஸிகமணி நம்மிடம் சொல்லுவார்கள் :—''இவரிடம் அமிர்தத்தையே கொடுங்களேன்; ஒரு நிமிஷத்தில் அதை அப்படியே விளக்கெண்ணெய் ஆக்கி விடுவார்.'' இப்படிக் கவிதையைத் தொட்டுக் கரியாக்கிவிட்டு இவர் போய் விடுகிறார். அடுத்தாற்போல் வந்த பேச்சாளர், உப்புச் சப்பில்லாத ஒரு விருதாப் பாட்டைக் கவிதையென்று

சொல்லிக் கூத்தாடுகிறார். "வெண்ணெய் தின்கிறோம் வெண்ணெய் தின்கிறோம்" என்று சொல்லிக்கொண்டே, களிமண்ணை உருட்டி உருட்டித் தன்வாயிலே போட்டுக் கொள்ளுகிறார்; 'பெரு மக்கள்' வாயிலும் திணிக்கப் பார்க்கிறார். இவரைப் பார்த்து இரக்கமே வந்து விடுகிறது டி.கே.சி.க்கு. "கருப்பஞ்சாறு ஆறாக ஓடிக் கொண்டிருக்கும்போது, சோளத் தட்டையைக் கடித்துச் சவை போடுகிறார்களே!" என்று ஆற்றாமைப் படுகிறார்கள். இதற்குள்ளாக, அடுத்த கம்ப ராமாயணப் பிரசங்கி மேடையேறி விட்டார். கம்பர் எழுதாத பாட்டின் ஒரு அடியை எடுத்துக்கொண்டு, தனக்குத் தெரியாத பொருளைத் தெரிந்த பாவனையில் அவர் விஸ்தரித்துக் கொண்டிருக்கிறார்; 'பேரன்புமிக்க பெரு மக்களோ' கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ரஸிகமணி பிரசங்கியை ஏற, இறங்கப் பார்த்துச் சொல்லுகிறார்கள் :—"ஐயா! கம்பனுக்கு கிரீடம் சூட்டுவதாகச் சொல்லிக் கொண்டு, அவன் தலையில் வைக்கோல் புரியையல்லவா வளைய வளையச் சுற்றுகிறீர்கள்!"

இனி, வைக்கோல் படப்புகளையும், சோளத்தட்டைகளையும் தாண்டி நாம் சென்னைக்கு ரயிலேறுகிறோம். போகிற வழியெல்லாம், விழாவைப் பற்றிய பேச்சுத்தான். ராமாயணப் பிரசங்கம் நடந்தபோது, கூட்டத்திலுள்ள ராமாயண விரோதி ஒருவர் "சூர்ப்பனகை மூக்கை அரிந்தது அக்கிரமம்" என்று கூப்பாடு போட்டாரே, அவரைப் பற்றிப் பேச்சு வருகிறது. அவர் சூர்ப்பனகைக்கு வக்காலத்து வாங்கினதற்குக் காரணம் என்ன? அரசியல் துவேஷம் காரணமாக, கம்ப ராமாயணப் பாத்திரங்களைப் பரிவோடு அனுபவிக்க முடியவில்லை அவருக்கு. பரிவில்லையென்றால், கம்பனுடைய

அற்புத சிருஷ்டிகளை அனுபவிக்க முடியாது: போதாக் குறைக்கு, அரசியல் துவேஷமும் சேர்ந்து விட்டால், கவிச் சக்கரவர்த்தியின் சந்நிதானத்தை, மலைபோல் நின்று, அது மறைத்து விடுகிறது. அந்த ஆசாமி பேச்சை எடுத்தவுடனேயே, டி.கே.சி.யின் மீசை துடிக்கிறது. அவரை முன்னிலைப் படுத்திக் கொண்டு, 'ஏலே, சூர்ப்பனகை உங்கள் அக்காளோ, லே?'' என்று திருநெல்வேலிப் பச்சைத் தமிழில் ஒரு போடு, போடு கிறார்கள்.

இதற்குள்ளாக நம்முடைய ரயில் வண்டி சென்னை வந்து சேர்ந்துவிட்டது. கலையைப் பற்றியும், கவிதை யைப் பற்றியும் டி.கே.சி.யோடு பேசிக்கொண்டிருக்கும் போது நேரம் போவதே தெரியாது. வெள்ளித் தண்டவாளத்தில், தங்கச் சக்கரம் பூண்டு, நேரம் ஓடிக் கொண்டிருக்கும். கலையுலகத்தில், ஒரு உண்மையோடு நாம் ஒட்டி நிற்கும்போது, காலம், இடம் என்ற தத்துவங் கள் அடங்கி ஒடுங்கி இல்லாமலே போய் விடுகின்றன. பெரும்பாலும் நம்முடைய பேச்சாளர்களுக்கு ஒரு நிமிஷத்துக்கு மேல் ஒரு உண்மையோடு ஒட்டி நிற்க முடியாது. மரநாட்டு விழாவிலே பேசச் சொன்னால். சங்க இலக்கியத்தைப் பற்றிப் பேசுவார்கள். கவிதையைப் பற்றிப் பேசச் சொன்னால், உணவு உற்பத்தியைப் பற்றிப் பேசுவார்கள். சென்னையில் நடந்து கொண்டிருக்கும் தமிழ்த் திருநாளில்கூட, அநேகமாக அப்படித்தான் விதிவிலக்காக டி.கே.சி.யும் இரண்டொருவரும் தமிழ்க் கவியைப் பற்றிப் பேசுகிறார்கள். ''இப்படியும் விதி விலக்காக நீங்கள் அமையலாமா?'' என்று கேட்கிறோம். சிரிப்போடு வருகிறது டி.கே.சி.யின் பதில் :—''ஆம்! கவியைப் பற்றித்தான் பேசினேன். தமிழ்த் திருநாளில்

அதுதானே செய்யவேண்டும், உணவைப் பெருக்க வேண்டும் என்ற வெற்றுரைக்கும், தமிழ்ப் புலவருக்கும் என்ன சம்பந்தமோ? 'டிராக்டர்கள்' முதலிய எந்திரங் களைத் தமிழ்த் திருநாளில் செய்து கொண்டிருக்கவா வேண்டும்? அமெரிக்காவில், ஆங்கில பாஷையையும் அதன் இனிமையைப் பற்றியும் பேசக் கூடினால், விவசாய எந்திரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டா இருப்பார்கள்! அவைகளைப் பற்றி பேச மாட்டார்கள். அவைகளை வெளியிலே (நாட்டில்தான்) செய்து கொண்டிருப்பார்கள். நம்முடையவன் காரியம் எப்படி இருக்கிறதென்றால், விவசாயத்தைப் பற்றியும் 'புல்டோஸ'ரைப் பற்றியும் ஆலோசிக்கக் கூடினால், புறநானூற்றையும், தொல் காப்பியத்தின் பொருளதிகாரத்தைப் பற்றியும் பேசித் தொலைப்பான். அண்டாவிலே விறகைப் போட்டு, நெருப்பை மூட்டுவான். அடுப்பிலே, தண்ணீரையும், அரிசியையும் கொட்டுவான், கெட்டிக்காரன்!''

சென்னையிலிருந்து தென்காசிக்குப் போகிறோம். திருவள்ளுவர் கழகத்தின் ஆண்டு விழா அங்கே விமரிசையாய் நடந்து கொண்டிருக்கிறது. கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான பெண்டிரும், ஆடவர்களும் வந்திருக் கிறார்கள். பொதுவாகப் பேச்சுக்கள் இங்கே ரஸமாகவே யிருக்கும். ஆனால், நாம் போகும் தருணத்தில் ஒயா மொழிப் புலவர் ஒருவர் மணிக் கணக்கிலே பேசிக் கொண் டிருக்கிறார். பேச்சு இப்படியும் நீண்டு கொண்டே போகிறதே என்று செயலாளரை நாம் முறைத்துப் பார்க்கிறோம். அவர் என்ன செய்வார்! புலவர் ''மூன்று மணி நேரத்துக்குக் குறைந்து என்னால் பேசமுடியாது'' என்று கடிதமே எழுதி விட்டாராம். இதைக் கேட்டுக் கொண்டிருந்த டி.கே.சி. நம்மிடம் சொல்லுகிறார்கள் :—

''ஆமாம். உமியும், மணலும் குப்பையுமாக அவ்வளவு தலைக்குள் குவிந்திருக்கும்போது என்ன செய்வார், அப்பாவி! ஊருக்கு எளியவன் பிள்ளையார் கோயில் ஆண்டி, தென்காசிக்காரன் என்று கண்டு, அவ்வளவையும் அவன் தலையில் கொட்டுகிறார். கொட்டியது ஒரு வருஷத்துக்குப் போதும்.''

ஓயா மொழிப்புலவரும் ஓய்ந்து அடுத்த பேச்சாளர் பேச ஆரம்பிக்கிறார். 'அப்பாடா!' என்று சபையோர் பெருமூச்சு விட்டு, விடாயாற்றிக் கொள்ளுகிறார்கள். புதிதாக வந்தவராவது புதிதாக ஏதாவது சொல்ல மாட்டாரா என்று ஏங்கி இருக்கிறோம். அவரோ பழையவர் சொன்ன குறளையே எடுத்துப் பிய்த்துப் பிய்த்து, துவையல் அரைத்துக் கொண்டிருக்கிறார். இந்த அலங்கோலத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு டி. கே. சி. விமர்சனம் செய்கிறார்கள் :—

''திருவள்ளுவர் பட்ட பாட்டை இன்னது என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் குத்தின இடத்திலேயே குத்திக் குத்திச் சித்திரவதை செய்துவிட்டார்கள்.

**தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**

இந்தக் குறளைப் பாடிய முகூர்த்தம், அடடா ரொம்ப, ரொம்பப் பொல்லாத முகூர்த்தம். தெய்வம் பட்ட பாட்டையும், கொழுநன் பட்ட பாட்டையும், இருவரையும் விட, புத்தி கெட்டுப்போய்த் தொழுதாளே, அந்த அம்மாள் பட்ட பாட்டையும், எல்லோரையும்விட, வள்ளுவர் பட்ட பாட்டையும், லேசில் சொல்லிவிட முடியாது; இதிகாசந்தான் எழுத வேண்டும். தென்காசிக்காரனும், தென்காசிக்காரியும், பிழைத்தோம்

பிழைத்தோம் என்று வீடு போய்ச் சேர்ந்தார்கள். இன்னும் ஒரு வருஷத்துக்குத் திருவள்ளுவர் சங்கத்து ஆண்டு விழா கிடையாது. சுபம்.''

இனி, டி. கே. சி. யின் இருக்கையாகிய திருக் குற்றாலத்துக்குப் போவோம். ஐந்தருவிச் சாலையில் முதலிலிருப்பது டி. கே. சி.யின் இல்லம்; 'அடையா நெடுங் கத'வையுடைய இல்லம். அறுசுவையுண்டி அருந்திவிட்டு ரஸிகர் குழாம் ரஸிக மணியைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கிறது. சாய்வு நாற்காலியிலே துய்ய வெள்ளை ஆடை உடுத்து, அமர்ந்திருக்கிற டி. கே. சி. தமிழ்ப் பண்பாட்டின் நயங்களை எடுத்துச் சொல்லி நம்மைப் பரவசப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். அதோ இருக்கிற நடராஜ விக்ரஹத்தைப் பற்றிப் பேச்சு நடந்துகொண்டிருக்கிறது. அந்த அழகின் பல பட்டங்களையும் உணர்ந்து அனுபவிக்க, ''மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்ற பாட்டைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்திலே, அசட்டுத்தனமாக ஒருவர் குறுக்கிட்டு, ''இந்தச் சிலைக் கல்கண்டினால் செய்ததல்லவா? இதைத் தின்று பார்த்தால் இனிப்பாயிருக்குமே'' என்று சொல்லு கிறார். இந்த விரசப் பேச்சைக் கேட்டவுடனே, தன்னை மறந்த லயத்திலிருக்கும் டி,கே.சி. நிஷ்டையைக் கலைத்து விட்டு, முகத்தைச் சுழிக்கிறார்கள்.

கல்க்கண்டு என்ற நினைப்பும், அதைத் தின்று பார்க்க வேண்டுமே என்ற துடிப்பும், சுயநலத்தோடும், ஆணவத் தோடும் கலந்த காரியங்கள். அப்பேர்ப்பட்ட நினைப்புகள் குறுக்கிட்ட மாத்திரத்திலேயே, நாம் கலையுலகத்தின் உன்னதத்திலிருந்து, மண்ணுலகத்தின் படுகுழிக்குள்ளே விழுந்து விடுகிறோம்; ஆனந்தம்

கெட்டு, ஆணவம்தான் மிஞ்சுகிறது. இதையே நவம் நவமான கோணங்களிலிருந்து கண்டிருக்கிறது டி. கே. சி. யின் குரல்.

நாம் சுற்றுப்பிரயாணம் செய்தபோது, டி.கே.சி.க்குச் சொந்தமான ஒரு வெள்ளித் தம்ளர் காணாமல் போய் விட்டது. தேடித் தேடிப் பார்த்தும் காணவில்லை. இதனால் மனசுக்குக் கொஞ்சம் கஷ்டந்தான். சில நாட்கள் கழித்து அந்த வெள்ளித் தம்ளரைக் கண்டு பிடித்து ஒரு நண்பர் டி. கே. சி.யிடமே அதை ஒப்படைத்து விடுகிறார். காணாமல் போன பொருள் கிடைத்துவிட்டதே என்று டி. கே. சி.க்குச் சந்தோஷம். ரூபாய், அணா, பைசாக் கணக்கிலே, அந்த உணர்ச்சியை அவர்கள் மதிக்கவில்லை. அப்படி மதித்தால் அதில் கலைப்பாங்கு இருக்க முடியாது, சுயநலம்தானிருக்கும்; டி. கே. சி.யும், டி. கே. சி.யாக இருக்கமாட்டார்கள். எந்த அளவுகோலைக் கொண்டு அந்த சந்தோஷத்தை அளக்கிறார்கள் என்று பார்ப்போம்:—''வெள்ளித் தம்ளர் கிடைத்துவிட்டது. இனிமேல் காணாமல் போனாலும் கவலையில்லை. காணாமல் போன பொருள் கைக்கு வந்து விட்டதே. பொருள் அல்ல விஷயம். கைக்கு வந்து விட்டதே, அதுதான் விஷயம்'' என்று சொல்லுகிறார்கள் ரஸிகமணி. சுயநலத்தில் இருக்கும் நாம், வெள்ளித் தம்ளர் எத்தனை ரூபாய் எடையிருக்கும், அது காணாமல் போனதால் எத்தனை ரூபாய் நஷ்டம், அது திரும்பக் கிடைத்ததால் நமக்கு எத்தனை ரூபாய் லாபம், என்ற தோரணையில் கணக்குப் போட்டுப் பார்க்கிறோம். ஆனால், ரஸிகமணியின் பேரேட்டிலே, பற்று, வரவு மதிப்பே அலாதி. காணாமல் போனது, வெள்ளியா யிருந்தாலென்ன, மண்ணாங்கட்டியாயிருந்தாலென்ன,

அது திரும்பிக் கிடைக்கும்போது ஏற்பட்ட உணர்ச்சி இருக்கிறதே, அதுதான் மதிக்கத் தக்கது. தம்ளரைத் திரும்பவும் இழக்கலாம். ஆனால், திரும்பிக் கிடைத்த போதுள்ள உணர்ச்சியை இழக்க வேண்டியதில்லையே. அது போதும்.

வெள்ளித் தம்ளர் இருக்கட்டும். அழகிலும், அறிவிலும் சிறந்த தம் அருமை மகனை—ஒரே மகனை——டி. கே. சி. இழந்தார்கள். ஆணவ உலகத்திலிருந்த டி. கே. சி.க்கு எல்லையில்லாத துயரம் ஏற்பட்டது. செல்லையாவோடு (டி. கே. சி.யின் மகன்) நெருங்கிப் பழகிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் தம் துயரத்தை ஒரு வெண்பாவில் வடித்து, அதை டி. கே. சி.க்கே அனுப்பினார்கள்.

**சிந்தை குளிரச் சிரித்தொளிரும் நின்முகத்தை**
**எந்நாள்க் காண்பேன் இனி.**

என்று முடிந்தது அந்த வெண்பா. வெண்பாவைப் பார்த்த டி. கே. சி. சோகத்தால் மூர்ச்சையாகி விழவில்லை. வெண்பா கிடைப்பதற்கு முன்னால், சோகத்தால் மொத்துண்டிருந்த டி. கே. சி. வெண்பாவைப் பார்த்த பிறகு, தன்னை மறந்த ஓர் ஆனந்த சமாதிக்குள் புகுந்து விடுகிறார்கள். பாடலைப் பாடிப்பாடித் திளைக்கிறார்கள். "இப்படியும் ஒரு அற்புதமான கவி தமிழுக்குக் கிடைக்குமானால், உயிரைக் கொடுத்துக்கூட அதை வாங்கலாம்" என்று சொல்லி வியக்கிறார்கள்.

மறுபடியும் பாடலைச் சவுக்கத்தில் பாடுகிறார்கள். இந்த சுகானந்த நிலையில், தந்தை—மகன் என்ற உறவு ஒழிந்தது; காலம்—இடம் என்ற கல்க்கோட்டை தகர்ந்தது; டி. கே. சி. என்ற மானிடன் செத்தான், டி. கே. சி. என்ற ரஸஞ்ஞானி பிறந்ததால்.

## 2. டி.கே.சி. ஜாதகம்*

முப்பது ஆண்டுகளுக்குமுன் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் ஒரு தேநீர் விருந்து நடந்தது. ஸ்காட்லண்ட் தேசத்திலிருந்து வந்த பாதிரியார் ஒருவரை வரவேற்று உபசரிப்பதற்காக நடந்தது விருந்து. கல்லூரியின் பழைய மாணவனான டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர் களையும் விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

காட்டுமிராண்டிகளாகிய ஹிந்துக்களை எப்படி யும் திருத்திவிட வேண்டும் என்று கச்சை கட்டிக் கொண்டு வந்தவர் பாதிரியார். அவரிடத்திலே டி. கே. சியை அறிமுகப்படுத்தினார்கள். உடனே துரை டி. கே. சியைப் பார்த்து, ஏளன பாவத்தோடு தானே, பல கேள்விகளைச் சரமாரியாகப் பொழிந்தார். குறிப்பிடத்தக்க கேள்வியொன்று கீழ்க்கண்டவாறு :—

"ஸ்காட்லண்ட் தேசத்திலுள்ள எங்களுக்கு மரங்கள் என்றால் ரொம்பப் பிரியம். இந்தியர்களாகிய உங்களுக்கு எப்படியோ? (We love trees, do you?)" என்று கேட்டார் பாதிரியார்.

இந்தக் கேள்விக்கு டி. கே. சி. பதில் சொன்னார்கள்: —மரங்களிடத்திலே எங்களுக்குப் பிரியம் கிடையாது,

---

* 1957-ல் எழுதியது.

பக்தியே செலுத்துகிறோம் (We dont love trees but we worship them) என்று சொன்னார்கள். "தமிழ் நாட்டிலே, ஒவ்வொரு கோயிலுக்கும் ஸ்தலவிருக்ஷம் என்று ஒன்று இருக்கிறது. குற்றாலத்திலே பலாமரம்; திருநெல்வேலியிலே மூங்கில் மரம்; திருப்பெருந்துறையிலே குருந்த மரம். இப்படியாக ஒவ்வொரு கோயிலுக்கும் மூலஸ்தானமாக அமைந்திருப்பது ஒரு மரந்தான். அந்த மரம் துளிர்ப்பதும், பூப்பதும், காய்ப்பதும், கனிவதும் கண்டு அதிசயித்தார்கள் எங்கள் முன்னோர்கள். ஒவ்வொரு மரத்துக்குள்ளேயிருக்கும் ரஸாயன விந்தைகள், இஞ்சினீயரிங் ஜாலங்கள், சிற்ப மர்மங்கள் இவைகளைக் கண்டு அனுபவித்தார்கள். அதற்கு மேலே ஒவ்வொரு மரத்திற்குள்ளேயும் ஒரு ஞாபக சக்தியல்லவா இருக்கிறது! ஆயிரக்கணக்கான ஆலமரங்களைப் பார்த்துத்தான் இருக்கிறோம்; ஆனால் எந்த ஆல மரமாவது தப்பித் தவறி ஒரு பலாக்காயைக் காய்த்ததுண்டா! ரோஜாப் பதியொன்றை நடுகிறோம். நடும்போது அது ஒரு வெற்றுக்கம்பாகத் தானிருக்கிறது. பிறகு அதற்குள்ளிருந்து ஒரு அற்புதமான ரோஜா மலர் வருகிறது; அந்த மலருக்கு ஒரு தனித் தன்மை, தனிவர்ணம், தனி மணம். எந்த ரோஜாச் செடியாவது ஞாபக மறதியால் ஒரு பிச்சிப் பூவைப் பூத்ததுண்டா? இப்படியாகத் தாவர வர்க்கங்களுக்குள்ளே ஒரு அதிசயமான ஞாபக சக்தியும் உயிர்த்தத்துவமும் இருந்து கொண்டு அவைகளை இயக்குவதை உணர்ந்தார்கள் தமிழர்கள். இவைகளையெல்லாம் பார்த்த பிறகு, மரத்திற்குள்ளல்லவா இறைவன் இருந்து தொழிற் படுகிறான் என்று அறிந்தார்கள். ஆகவே, மரங்களுக்குக் கோயில் கட்டியே வணங்கி வருகிறோம் நாங்கள்"—என்று டி.கே.சி. விளக்கம் கொடுத்தார்கள்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஸ்காட்லண்ட் துரை அரண்டே போனார்.

* * *

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் சென்னைக்கு விநோபாபாவே வந்திருந்தார். சத்தியத்தை நாடி நாடி வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணம் செய்த மகான் விநோபாஜி. டி.கே. சியோ பரிபூர்ண சௌந்தர்யம் எங்கெங்கே இருக்கிறதோ (பாதாளத்திலிருந்தாலும் சரி) அங்கெல்லாம் துணிச்சலோடு சென்று, அதை தரிசித்து ஆனந்தத்திலே திளைக்கும் அபூர்வப் பிறவி. காலஞ் சென்ற 'கல்கி' செய்த தீவிர முயற்சியின் பயனாக, டி.கே. சியும் விநோபாஜியும் சென்னையில் சந்தித்தார்கள், சத்தியமும், சௌந்தர்யமும் சந்தித்தது போல.

கம்பர் எழுதிய இரண்யவதைப் படலத்தில் "சாணினும் உளன்" என்று தொடங்கும் பாடலை எடுத்து ஒரு மணி நேரம் விளக்கினார்கள் டி.கே.சி. 'கடவுள் இல்லை' என்று சொன்ன இரண்யனைப்பார்த்து, மகன் பிரகலாதன் பேசுகிற கட்டம்.

"இறைவன் ஒருச்சாண் இடத்திலுமிருக்கிறான். அணுவை நூறு பாகமாக வைத்த கோணிலும் (துகளிலும்) இருக்கிறான். உலகத்திலே பெரிய மலை என்று சொல்லும் மேருமலையிலும் நிறைந்திருக்கிறான். இதோ, உன் பக்கத்தில் தூண் இருக்கிறதே, அதிலும் இருக்கிறான். இதோடு நிற்கவில்லை; கடவுளாவது, ஒன்றாவது என்று நீ சொன்னாயே, அந்தச் சொல்லுக்குள்ளும் அவன் ஒளிந்து கொண்டிருக்கிறான். 'இல்லை'

யென்று சொன்னது நீயா? இல்லை. இறைவன் உன் வேஷத்தில் நின்று கொண்டு சொன்ன வார்த்தைதான். 'நீயென்று ஒருவேன இல்லையே'' என்று பிறவி ஞானியான பிரகலாதன் சொன்னான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஹிரண்யன் ''பலே, பலே! இந்தச் சின்னப் பயலுக்கு இவ்வளவு வேதாந்தமா!'' என்று ஏளனத்தோடு சிரிக்கிறான். வருகிறது கம்பன் பாட்டு :—

**''சாணினும் உளன் ஓர்தன்மை**
**அணுவினைச் சதகூறிட்ட**
**கோணினும் உளன், மாமேருக்**
**குன்றினும் உளன், இங்கின்ற**
**தூணினும் உளன், நீ சொன்ன**
**சொல்லினும் உளன்; இத்தன்மை**
**காணுதி விரைவின்'' என்றான் :—**
**நன்றெனக் கனகன்நக் கான்**

இந்தப் பாட்டை டி.கே.சி. தமக்கே உரிய நாதத்தோடும், காம்பீர்யத்தோடும், சவுக்கத்தில் பாடி, விநோபாஜிக்கு விளக்கம் செய்தார்கள்.

''நீ சொன்ன சொல்லினும் உளன்'' என்ற வாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்திலே, விநோபாஜி, உருகி விட்டார். ''எல்லா இந்திய மொழிகளிலும் ஹிரண்ய வதையைப் பற்றிப் பல கவிஞர்கள் பாடித்தான் இருக்கிறார்கள். ஆனால் கம்பனைப் போல், 'நீ சொன்ன சொல்லினும் உளன்' என்று இதர பாஷைக் கவிஞன் ஒருவனாவது சொன்னது கிடையாது'' என்று வெகுவாகப் பாராட்டினார் விநோபாபாவே. அதோடு நின்றுவிடவில்லை. கம்பராமாயணப் பிரதி ஒன்றை வாங்கிப் போய் அதை ஒழுங்காகவே படிக்கத் தொடங்கிவிட்டார் அவர்.

டி,கே.சி.யை சந்தித்து ஏழெட்டு ஆண்டுகள் ஆகி விட்டன; ஆனாலும் சில தினங்களுக்கு முன் வினோபாஜி அந்த சந்திப்பைப்பற்றி ஒரு உருக்கமான கடிதம் (ஹிந்தி யில்) பின்வருமாறு எனக்கு எழுதியிருக்கிறார்:—

''அன்று அவரைச் சந்தித்த சந்திப்பு என்னுடைய ஞாபகத்தில் மிக மிக அழுத்தமாகப் பதிந்து கிடக்கிறது. அதற்குமுன் டி.கே.சி.யை நான் பார்த்ததில்லை. ஆனால் அன்று அவர் மனந்திறந்து என்னோடு ஊடாடியபோது, நீண்ட நெடுங்காலமாகப் பழகி வந்த நண்பர் அவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. வெளிப்பகட்டை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, கவிதையின் இதயத் துடிப்பை அப்படி அப்படியே எடுத்துக் கூறக்கூடிய 'மர்மக்ஞ ரஸிகர்' அவர். அவரைப் போன்ற ரஸிகரைக் காண்பது அரிதினும் அரிது.''

* * *

இப்படியாக அன்னியர்கள்கூட தமிழ்க் கவிதையை யும் பண்பாட்டையும் அறிந்து அனுபவிக்கும் முறையிலே டி.கே.சி. விளக்கம் அமைந்திருக்கும்.

சுமார் எட்டு வருஷங்களுக்கு முன், டி.கே.சி.யும், கல்கியும், சதாசிவம் தம்பதிகளும் பம்பாய்க்குப் போயிருந் தார்கள். போனதும், சோபியா வாடியா (Madame Sophia Wadia) என்ற இலக்கிய மேதை டி.கே.சி.யைத் தன் வீட்டிற்கு அழைத்து, விருந்தளித்து உபசரித்தார். அந்த அம்மாள் (France) பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந் தவர்; தமிழ் தெரியவே தெரியாது; ஆனாலும் பன்மொழிப் புலமை வாய்ந்தவர்; இலக்கியத்திலும், கவிதையிலும் சிறந்த பயிற்சியுடையவர்; இந்திய எழுத்தாளர் சங்கத்தின் தலைவர். அவருக்கு ரஸிகமணி

திருவாசகத்திலிருந்து ஒரு பாடலைப் பாடி, ஆங்கிலத்திலே பொருளை விளக்கினார்கள்.

"ஒரு குடத்திலே ஆற்றுத் தண்ணீரை எடுத்து, வீட்டுக்குக் கொண்டு வந்து, மச்சுப் படியேறி மாடிக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்குள், அப்பாடி! திணறிப் போகிறோம் நாம். இந்தச் சின்னக் காரியத்தைச் செய்து முடிப்பதற்கு அவ்வளவு ஆற்றல் வேண்டியிருக்கிறது. நம்முடைய ஆற்றலை வைத்து, இறைவனுடைய ஆற்றலை அளந்து பார்த்தோமேயானால், அதை இப்படி, அப்படியென்று, சொல்லி முடியாது. இந்து மகா சமுத்திரத்திலேயுள்ள நீரை, ஆவியாக மாற்றி, அதை வானத்திலே பத்து, இருபது மைல் உயரம் கொண்டுபோய், மேகமாகச் சேமித்து வைத்து, பருவக் காலம் பார்த்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள, ரஷ்யாவிலே மழையாகக் கொட்டுகிறான் இறைவன். கோடானு கோடி குடம் தண்ணீரை இப்படிச் சமுத்திரத்திலிருந்து தலைமேல் தூக்கித் தூக்கிப்போய் எவ்வளவு கருணையோடு உலகமெல்லாம் செழிக்க மழையாகப் பொழிகிறான்! இந்தச் சக்தியையும், கருணையையும் உணர்ந்து வியந்த நம் முன்னோர்கள், சிவன் தன் தலைமேல் கங்கையையே குடமாக வைத்திருக்கிறான் என்று கற்பனை செய்து ரஸித்தார்கள்; "அப்பார் சடையப்பன்" என்றார்கள். "அப்பு" என்றால் "தண்ணீர்" என்று பொருள். அப்பார் சடையப்பனைத் தஞ்சமென்று நம்பி, எல்லாம் அவன் செயல், நமக்குச் செயல் என்பதே இல்லை என்று தெரிந்து, தம்மையே அவனிடத்தில் ஒப்படைத்து விடுகிறார்கள் ஞானிகள். அதன் மூலம் கவலை யெல்லாம் நீங்கி ஆனந்தத்தை அடைகிறார்கள், இப்பேர்ப்பட்ட ஞானிகளுடைய இதயத்திலே புகுந்து

சம்மணம் போட்டு உட்கார்ந்து கொள்ளுகிறான் இறைவன். அவ்வளவுக்கு எளியவன்தான் அவன். ஆனால், ஞானமில்லாத வறட்டு அறிவாளிகளுக்குப் புலப்படாதவன் அவன். அண்டம் கடந்து, அகண்டமும் கடந்து எங்கேயோ தூர தொலைவில் இருக்கிற பேர்வழியாகவும் அவன் இருக்கிறான். இந்த முரண்பாட்டு ரகசியத்தை மாணிக்கவாசகர் எடுத்துச் சொல்லுகிறார் :

> "அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
> ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
> அப்பாலுக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்."

இந்தப் பாடலை சோபியா வாடியாவுக்குப் பாடிக் காட்டினார்கள். பாட்டு முடிந்ததும், "சரி, போய் வருகிறேன்" என்று சொல்லி, டி.கே.சி. எழுந்தார்கள். உடனே அந்த அம்மாள், "இன்னும் கொஞ்ச நேரம் தங்க வேண்டும். தாங்கள் சொன்ன பாட்டை இன்னும் ஒரு முறை பாடிக்காட்ட வேண்டும். கருத்தைக் கவனிக்காமல், பாட்டின் ஒலி இன்பத்தை மட்டும் நான் அனுபவித்துப் பார்க்க வேண்டும்," என்று கேட்டுக் கொண்டார்கள். டி.கே.சி.க்கு ஒரே உற்சாகம் பிறந்து விட்டது. மறுபடியும் அந்தப் பாட்டைப் பாடினார்கள்.

> "அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
> ஒப்பாக ஒப்புவிக்கும் உள்ளத்தார் உள்ளிருக்கும்
> அப்பாலுக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்."

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பரங்கி மாது சொன்னார் :—"தமிழ்ப் பாஷையிலே ஒரு அபூர்வமான மந்திர சக்தியிருக்கிறது. பாட்டின் ஒலியைக் கேட்கும் போது எனக்கு ஒரு ஆனந்த மயக்கம் ஏற்படுகிறது" என்று சொன்னார்.

பிரான்ஸ் தேசத்துப் பெண்மணியின் வாக்குமூலம், டி.கே.சி.யின் அடிப்படையான கொள்கையை வலியுறுத்தியது. தமிழ்க் கவிதையிலே ஒரு அபூர்வமான தாளலயம் (ரிதம்) இருக்கிறது. கிரேக்க பாஷையிலேகூட இல்லாத நளினமும் துல்லியமும் தமிழ் மொழிக்கு இருக்கிறது என்று ஆங்கிலப் புலவர் வின்ஸ்லோ சொன்னாரே, அதையடிக்கடி டி.கே.சி. சொல்லி வந்தார்கள். சோபியா வாடியாவின் வாக்கு இந்தக் கொள்கையை ஊர்ஜிதம் செய்தது.

* * *

பல நூற்றாண்டுகளுக்கு முன், சேரன் செங்குட்டுவன் இமயம் சென்று கல்லிலே மீனைப் 'பொறித்து' வந்த வரலாற்றை மேடைப் பேச்சுக்களிலே அடிக்கடி கேட்டு வருகிறோம். மீன் பொறியலை எடுத்து எடுத்து, புலவர் பெருமக்கள் பரிமாறுவதும், "பார்த்தீர்களா தமிழன் வீரத்தை" என்று தொண்டை கிழியக் கத்துவதும் பார்த்து அலுத்துவிட்டோம். மீனைப் பொறித்து வந்த காரணத்தால் தமிழன் வீரம் இமயத்தையே தொட்டு விட்டது என்பது உண்மைதான். ஆனால் தமிழனுடைய பண்பாடு இமயத்தைத் தொட்டுவிடவில்லை. சேரன் செங்குட்டுவனையும் மிஞ்சிய நிகழ்ச்சியொன்று சமீப காலத்தில் நடந்தது. புலவர் உலகம் அதை உணர்ந்து அனுபவித்ததாகவே தெரியவில்லை. பத்து வருஷங்களுக்கு முன் குற்றாலக் குறவஞ்சியென்ற அரிய தமிழ்நூல், இந்து மகா சமுத்திரத்தையும், அட்லாண்டிக் சமுத்திரத்தையுமே தாண்டி அமெரிக்காவிலேயுள்ள நியூயார்க் (New York) நகரத்தின் நாடகமேடையிலே அரங்கேற்றப் பட்டது. அடையாற்றிலேயிருக்கும் திருமதி ருக்மணிதேவி கோஷ்டியார் நடன நாடகமாக அதை அரங்கேற்றிய

போது ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் தமிழ் ஒலியையும், இசையையும், நாட்டியத்தையும், கவிதையையுமே அனுபவித்து ''ஒன்ஸ்மோர்'' போட்டார்கள். இப்படியாகத் தமிழ்ப்பண்பாட்டையே அமெரிக்க மக்கள் உள்ளத்தில் பொறித்து வைத்துவிட்டு வந்திருக்கிறார்கள் கலாக்ஷேத்திரக் கலைஞர்கள். இந்தப் படையெடுப்புக்கும், வெற்றிக்கும் மூலகாரணமாக இருந்தது டி. கே. சி.

1933-ம் வருஷத்தில் சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்குத் தலைவர் டி. கே. சி. பேசியவரோ டாக்டர் அருண்டேல்; அவர் சிறந்த அறிஞர்; பிரம்மஞான சபையின் தலைவர்; ருக்மணி தேவியின் கணவர்; ஆஸ்திரேலியாவிலே பிறந்தவர். முதன்முதலாக அந்தக் கூட்டத்திலேதான் டி.கே.சி.யைச் சந்தித்தார் டாக்டர் அருண்டேல். அவர், டி. கே. சி. தமிழில் பேசிய முடிவுரையைக் கேட்டார். தமிழ் தெரியாதவராயிருந்த போதிலும் டி. கே. சி. பேச்சிலேயுள்ள நயங்களை அருண்டேல் எப்படியோ கண்டு கொண்டார். கூட்டம் முடிந்ததும் அடையாற்றுக்குப் போய் தன் மனைவியாரிடத்திலே அவர் சொன்னார், ''டி. கே. சி. யென்ற அபூர்வமான மனிதரை நான் இன்று சந்தித்தேன்; நீ அவரைக் கட்டாயம் சந்திக்க வேண்டும். இந்தியப் பண்பாட்டைப் பார்க்க வேண்டும் என்றால் டி.கே.சி.யைப் பார்த்தாலே போதும்'' என்றார். இந்தச் சம்பவத்திற்குப்பின் டி.கே.சி.க்கும் அருண்டேல் தம்பதிகளுக்குமிடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

சில ஆண்டுகளுக்குப்பின் ருக்மணிதேவியும் டாக்டர் அருண்டேலும் குற்றாலத்திற்குச் சென்றார்கள். சாரல் காலம்; திருவாங்கூர் மாளிகையின் முற்றத்திலே ஒரு

மாமரத்தடியில் அமர்ந்து டி.கே.சி.யிடம் இருவரும் குற்றாலக் குறவஞ்சியை நாட்கணக்கிலே கேட்டார்கள். பாடம் முடிந்ததும் சிருஷ்டி உற்சாகமே ஏற்பட்டு விட்டது ருக்மணி தேவிக்கு; குறவஞ்சியை நடன நாடகமாக நடிக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்தார். அதன் பயனாக தமிழ்ப்பண்பாட்டின் குரல் அமெரிக்காவையும் எட்டிவிட்டது, ருக்மணிதேவி தமிழர். அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது, சாமானிய காரியம். ஆஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த டாக்டர் அருண்டேல் பத்து நாட்களாக டி.கே.சி. பாடிக் காட்டிய குறவஞ்சியை தமிழ் தெரியாமலே, எப்படி அனுபவித்து விட்டார் என்று கேட்கலாம். இதே கேள்வியை டி.கே.சி.யே டாக்டர் அருண்டேலிடம் கேட்டார்.

''தமிழ்மொழி எனக்குத் தெரியாதுதான். அதனால் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நீங்கள் தமிழ்ப்பாடல் களைப் பாடும்போது உங்களுடைய இதயம் என்னுடைய இதயத்தோடு ஒட்டி எனக்குப் பொருளை விளக்கி விடுகிறது. உங்கள் குரல் மூலமும், முகப்பொலிவின் மூலமும் கவிதையின் உட்பொருளை நான் கண்டு கொண்டேன்'' என்று சொன்னார் டாக்டர் அருண் டேல்.

ஸ்காட்லண்ட் தேசத்துப் பாதிரியாரும் வினோபா பாவேயும், சோபியாவாடியாவும், டாக்டர் அருண் டேலும் தமிழ் தெரியாத அன்னியர்கள். ஆனாலும், டி.கே.சி.யின் இதயஒலி அவர்களுடைய இதயத்தை யெல்லாம் தொட்டுக் கரைத்துவிட்டது. தமிழ் தெரிந்த நம்முடைய தோற் செவிக்குள்ளேதான் அந்த ஒலி பிரவேசிக்க முடியவில்லை.

சில மாதங்களுக்குமுன் தமிழ்ப்பண்பாட்டைப் பற்றி புதுக்கோட்டை டவுன் ஹாலிலே ஒரு புலவர் சிகாமணி மேடை மேலேறிப் பேசினார். பரீக்ஷையெழுதி டாக்டர் பட்டம் பெற்ற தமிழ்ப்புலவர் அவர்.

"டி.கே.சி. ஒழிந்துவிட்டார்; இனிமேல் தமிழ்ப் பண்பாட்டுக்கும் தமிழுக்கும் யோகம்தான்" என்று அவர் கர்ஜித்தார். புலவர் நல்லவர்தான்; ஆனால், உண்மைப் பண்பாட்டை அறிவது அவ்வளவு கஷ்டமாயிருக்கிறது அவருக்கு. தமிழின் அருமைப்பாடுகள் அவருக்கு எட்டாத வஸ்துக்களாகப் போய் விட்டன. டி.கே.சி. கொடுக்கும் விளக்கமோ, அவருக்கு இருட்டடிப்பாகத் தோன்றுகிறது. டி.கே.சி. ஜாதகத்தில் இப்படி ஒரு கோளாறு விழுந்து விட்டது.

தமிழின் ஆழமும், தமிழின் எளிமையும், ஒன்று சேர்ந்து சூழ்ச்சி செய்து சில புலவர்களை வேண்டு மென்றே ஏமாற்றிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. போதாக்குறைக்கு, இந்தச் சூழ்ச்சியில் சேர்ந்து கொண்டது டி.கே.சி.யின் ஜாதகம்.

இந்தச் சதிக்குமுன் நாம் யார்!

# 3. சமயச் சடங்குகளும் டி.கே. சி.யும்*

ப்ரான்ஸ் நாட்டிலே பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஒரு டி.கே.சி. வாழ்ந்தார். அவருடைய பெயர் மல்லார்மே (Mallarme), மிகச் சிறந்த ரஸிகர்; கவியுங்கூட. "கவிதையே என்னுடைய சமயம்" என்று துணிந்து கூறியவர்: கவிதையின் உளப்பாட்டை உள்ளுணர்வோடு அறிந்த காரணத்தால் அவர் அப்படித் துணிந்து கூறினார். அதோடு நிற்கவில்லை. உணர்வற்றவர்கள் கவிதையோடு பழகும்போது கவிதா தேவிக்கே அபாயம் ஏற்படும் என்றுணர்ந்தவர் அவர். ஆகவேதான், அவர் சொன்னார்: "கவிதைக்கென்று தனிச்சடங்குகள் உண்டாக்கி அதை மூடாக்குப் போட்டுப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால், கவிதையுணர்வற்றவர்கள் கவிதையில் கை வைத்து அதைத் தீட்டுப்படுத்தி விடுவார்கள்," என்று.

உண்மைகளைக் கண்டு அனுபவித்த நம் முன்னோர்களுக்கும் மல்லார்மேக்கு ஏற்பட்ட அதே அச்சம் ஏற்பட்டது. புல்லர்கள் அவ்வுண்மைகளின் புனிதத் தன்மையை உணராமல் அவற்றை உதாசீனம் செய்து விடுவார்களே, அல்லது கேவலப்படுத்திவிடுவார்களே

---

*1970-இல் எழுதியது.

என்று பயந்தார்கள். ஆகவே, அவர்கள் அழகிய சடங்குகளைக் கற்பனை செய்து, அச்சடங்குகளுக்குள் உண்மைகளைப் பொதிந்து வைத்துக் காவந்து செய்திருக்கிறார்கள்.

ஆனால், நாளாவட்டத்தில், சடங்குகளின் பொருள் நமக்குப் புலப்படாமல் போய்விட்டது; சடங்குக்குள்ளிருக்கும் உண்மையையும் நாம் அனுபவிக்க இயலாமல் போய் விட்டோம். டி.கே சி.யைப் போன்ற ஞானிகள் அவற்றை விளக்கும் போதுதான் நமக்குச் சடங்குகளின் மர்மம் தெரிகிறது. தெரிந்ததும் தெளிவும் ஆனந்தமும் ஏற்படுகின்றன.

''நம்முடைய வீட்டுச் சடங்குகள், கோயில் வழிபாடுகள், சமயக் குறியீடுகள், இவைகளில் எல்லாம் (மக்கள் எவ்வளவு தவறாக எண்ணி நடந்த போதிலும்) ஒரு அடிப்படையான உண்மை, அதாவது, பயன் இருக்கவே செய்யும். காலதேசவர்த்தமானங்களுக்குரிய 'டிஸ்கவுண்டுகளை'க் கழித்துப் பார்த்தால் நம் முன்னோர்களைவிடக் கிடையாது என்றே ''சொல்லத் தோன்றும்,'' என்று டி.கே.சி. ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சமுதாய வளர்ச்சியிலே சடங்குகளுக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் உண்டு என்பதைக் கண்டவர்கள் டி.கே.சி. ஆனால், சடங்குகளின் பொருளை இழந்துவிட்டு சடங்குகளை மாத்திரம் உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு தொங்குகிற சமுதாயம் டி.கே.சி.யின் ஏளனத்துக்கு இலக்காகிறது. நண்பர் சதாசிவம் வீட்டிலே நடந்த ஒரு திருமணத்தைப் பற்றி டி.கே.சி. எழுதிய கடிதம் வருமாறு:—''இங்கே ஒரே கும்மாளிதான்.

எல்லாருமாகச் சேர்ந்து பெண்ணைத் தூக்குகிறது. மாப்பிள்ளையும் அதில் கலந்துகொள்வான். அப்படியே மாப்பிள்ளைக்கும் மண்டபப்படி நடக்கும். அதில் பெண் சேர்ந்து கொள்ளும். அப்படியானால், கும்மாளிக்குக் கேட்பானேன். இந்த வேடிக்கைகளைப் பார்க்க ரூ.5 கொடுத்து டிக்கட் வாங்கலாம். இப்படி எல்லாம் கோலாகலமாய் இருக்கிற சந்தர்ப்பத்தில், கரடியை பிராமண போஜனத்தில் விட்ட மாதிரி, பத்துப் புரோகிதர்கள் இன்று காலை வந்து மாப்பிள்ளைக்காக ஒரு கிரியை நடத்தினார்கள். ஓமம் வளர்த்தார்கள். காற்று வாக்கில் மாப்பிள்ளை, சதாசிவம், எம்.எஸ். மூன்று பேரையும் ஓம குண்டத்தை ஒட்டி உட்காரச் செய்தார்கள். ஓமாக்கினியும் புகையும் மூவரையும் வேண்டும் என்றே தாக்கின; அவைகளோடு வர்மம் நிற்கவில்லை. புரோகிதர் சம்ஸ்கிருதத்தில் மந்திரங்களை அசுரக்குரலில் உச்சரித்தார். அனேகமாய், ''இங்கே உட்காரு, எழுந்திரு உட்காரு, கையை நீட்டு, என் கையில் போடு, கிழக்கே பார்த்து உட்காரு, அவர் கையில் இதைப் போடு,'' என்பதாக மந்திரங்கள். வளைத்து, வளைத்துச் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். 2½ மணி நேரம் எல்லாரையும் பாடாய்ப் படுத்திவிட்டார்கள். பொருளோ இல்லை, மடக்கி மடக்கிச் சொல்லலாம், யாருக்கும் விளங்குவதில்லை. இப்படி ஒரு சமுதாயத்தைப் பல நூற்றாண்டுகளாக, ஹிம்சைக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். பிறகு, யோசனை ஏது? எல்லாம் கிளிப்பிள்ளை மயம். சம்ஸ்கிருதம் விட்ட பாக்கியை, இங்கிலீஷ் வந்து பூர்த்தி செய்துவிட்டது. ஆனால், சங்கநூல்கள் வந்து அவர்களை ஒன்றும் செய்யவில்லை. அவ்வளவுக்கு அவர்கள் தப்பினார்கள்.

நமக்கோ, ஒமகுண்டம், சம்ஸ்கிருதம், இங்கிலீஷ், சங்கத்தமிழ் நாலுமே வந்து குட்டிச்சுவர் அடித்து விட்டன.

உண்மையில்,—கிரியைகள் சந்தோஷத்தை உண்டு பண்ண வேண்டும். பொருள் இருக்க வேண்டும். எல்லாரும் அனுபவிக்க வேண்டும். இதற்கெல்லாம் நேர்மாறாக நம்மை ஹிம்சைக்கு உள்ளாக்குகின்றன.

கிரியைகள், அலங்காரமாய் ஆனந்தத்தை விளைக்கக் கூடியனவாய் இருந்துவிட்டால், நம்முடையவர்களுக்கு புத்தியே வந்துவிடும். எல்லாத் துறைகளிலும் நிபுணர்கள் ஆகிவிடுவார்கள். உண்மையோடு ஒட்டிப் பேசுவார்கள். தில்லை நடராஜர் கோவில் திருவாதிரை உத்ஸவத்தில் பக்த ஜனங்களுக்கு இரண்டு மணி நேரம் ஒரு ரிட்டயர்ட் ஜில்லா ஜட்ஜ் ஆங்கிலத்தில் பேசினார் என்ற அபவாதம் ஏற்படுமா!

அர்த்தமில்லாமல் பேசுகிறது என்பது அளவற்ற கேட்டுக்கு விளைநிலம்.

> ''நயனில சொல்லினும்
> சொல்லுக, சான்றோர்
> பயனில சொல்லாமை
> நன்று''

என்றார் குறளாசிரியர். இப்போது எங்கே பார்த்தாலும் பயனில் சொல்லைத்தானே காண்கிறோம். காரணம், மேலே சொன்னபடி மூன்று : வடமொழி, இங்கிலீஷ், செந்தமிழ்''

டி. கே. சி. சொன்னதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது மூன்று :—

(1) சடங்குகள் பொருள் பொதிந்தனவாயிருக்க வேண்டும்.

(2) கேட்பவர்களுக்குப் புரியக்கூடிய மொழியில் சடங்கு மந்திரங்கள் அமைய வேண்டும்.

(3) மேற்சொன்னவாறு சடங்குகள் அமைந்து விட்டால், சமுதாயத்தில் ஆனந்த வளம் பெருகும்: விஞ்ஞானம், தத்துவம், கலை, கல்வி எல்லாம் மேலோங்கி வளரும்.

''மொத்தத்தில் ஆனந்தத்தை வளர்ப்பதற்குரிய வழிகளையறிந்து பிராமணர்கள் தம் சமுதாயப் பழக்கங் களையும் சடங்குகளையும் அமைத்திருக்கிறார்கள். ஆனால், பிராமணரல்லாதாரோ, துன்பத்தை நீடிக்கச் செய்யும்வகையில் பல பழக்கங்களை மேற்கொண்டிருக் கிறார்கள்,'' என்று அடிக்கடி டி.கே.சி. சொல்லுவார்கள். ''உதாரணமாக, ஒரு பிராமணன் வீட்டிலே சாவு ஏற்பட்டால் உடனே பிரேதத்தை ரேழியில் இழுத்துக் கொண்டு வந்து போட்டு, அக்கம்பக்கத்தாரை எதிர் பார்க்காமல் தகன காரியங்களை முடித்துவிடுவான். ஆனால், பிராமணனல்லாதவன் இழவுச் சடங்கை 16 நாள் இழுத்துக்கடத்தி, தன்னைத் துன்புறுத்திக்கொள்வதோடு மற்றவர்களையும் துன்புறுத்துவான். கலியாண காரியம் ஆனந்தத்தைக் கொடுப்பதால் பிராமணன் அதை நாலைந்து நாள் நீட்டிவைத்து அனுபவிப்பான். ஆனால். ''நம்ம பயல்'' ஒரே நாளிலே அதை, சட்புட்டென்று முடித்துவிடுவான் என்று ஆற்றாமைப்படுவார்கள் டி.கே.சி.

ஆனால், சைவ மடங்களிலாவது ஆனந்தம் கொடுக்கும் சடங்குகளைக் காப்பாற்றி வருகிறார்களே

என்று டி.கே.சி. திருப்தியடைவார்கள். தருமபுரம் மடத்திலேயே தங்கியிருந்தபோது அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு :—''இரண்டு நாளாக மடத்தில் தங்கு கிறோம். தமிழ்நாட்டுப் பண்பாடு நிறைந்த நிலையத்தில் தங்குகிறோம். மகாசந்நிதானம் நடத்துகிற பூஜையும், பக்தியும் வெகு ரம்மியம் ஆனவை. சைவத்தின் அழகும், ஆனந்தமும் மனசுக்கு உவந்தவை. இத்தகைய சமயப் பண்பாட்டை வேறு எங்கும் காணமுடியாதுதான்.

சாந்திநிகேதனத்துக்குப் போய்த்தானிருக்கிறேன். சமயப்பண்பாடு என்றால், வறண்ட நிலைதான். கிறிஸ்து மார்க்கத்தின் சாயல்தான். பிரார்த்தனைக்கான இடத்தைச் சுற்றிக் கல்லறைகள் இல்லை. அவ்வளவு தான்.

இங்கோ, மூர்த்தி என்ன, தீபாராதனையின் அழகு என்ன, பாடல் என்ன, எல்லாம் கண்ணையும் மனசையும் கவர்ந்துவிடுகின்றன. சாந்திநிகேதனில் எல்லாம் லெக்சர்தான்.''

கவி ரவீந்திரநாத டாகூர் ஆனந்த அனுபவம் நிறைந்தவர்தான், ஆனாலும் அவருடைய ஆனந்தத்தை அவருக்குப் பின்வரும் சந்ததியாருக்கு அவரால் வழங்க முடியவில்லை. ஆகவேதான் சாந்திநிகேதனத்தில் எஞ்சி நிற்பதெல்லாம் விருதா லெக்சர்தான் என்பது டி.கே.சி.யின் கருத்து.

அப்படியானால், ஆனந்தத்தை ஒரு சமுதாய அனுபவமாக நிலை நிறுத்துவதற்கு வழியென்ன என்பதை ''சரஸ்வதி அல்லது மனோ தத்துவம்'' என்ற 'இதய ஒலி' கட்டுரையில் மிகுந்த நுணுக்கத்தோடும் கலைப் பாங்கோடும் டி.கே.சி. எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

அவர்களுடைய விளக்கத்தைச் சற்று காது கொடுத்துக் கேட்போம்.

டி.கே.சி. பேசுகிறார்கள் :—''இயற்கை தன் மடிக்குள் ஒளித்து வைத்திருக்கிற ஆதிசயங்களைக் கண்டுபிடிக்க முயல்வதிலும், கண்டு பிடிக்கிற திறத்திலும், கண்டு பிடித்தவுடன் உண்டாகும் ஆனந்தத்திலும், மனிதன் தனித்தே நிற்கிறான். இதோடு நிற்கவில்லை; அந்த ஆனந்தத்தை மற்ற மக்களுடன் கூடி அனுபவிப்பதிலும், தலைமுறை தலைமுறையாக மக்கள் சமுதாயம் அனுபவிக்கும்படியான விழாக்கள் ஏற்படுத்துவதிலும், நூல்கள் எழுதி வைப்பதிலும் அப்படியே தனித்து நிற்கிறான்......

சூரிய கிரகணம் பத்து நாழிகைக்கு ஆரம்பிக்கும் என்றால், ஒன்பதரை மணிக்கே முற்றத்திலும் தெருவிலும் வந்து அண்ணாந்து பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள்.

கிரகணம் பிடிக்க ஆரம்பித்தவுடன் ஐந்து வயதுப் பேரன் அறுபது வயது பாட்டனுக்குச் சுட்டிக் காட்டு கிறான். அப்படியே மாறிப் பாட்டன் பேரனுக்குக் காட்டிப் பரவசமாகிறான். பெண்டுகள் தாளிதத்தையே விட்டு விட்டு முற்றத்துக்கு ஓடிவந்து அண்ணாந்து பார்க்கிறார் கள். அடுத்த வீட்டு அக்காளையும் பாட்டியையும் உரக்கக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்லுகிறார்கள். அவர் களும் அண்ணாந்து பார்த்துக் கன்னத்தில் கை வைத்த வண்ணமாய் அதிசயித்து நிற்கிறார்கள். இவையெல்லாம் உண்மை ஒன்றைக் கண்டு கொள்ளுவதில் உண்டாகும் உவகையிலிருந்து நிகழ்கின்றன.

இப்படி உண்டாகிற சமுதாய உணர்ச்சியிலும் உத்ஸாகத்திலும் இருந்துதான் சூரிய கிரகணத்தையே

விழாவாக ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான வருஷங்களாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

சூரியன் தெற்கோரத்திலிருந்து வடக்கு முகமாகச் செல்ல ஆரம்பிக்கும் முறைமையைக் கண்டு அனுபவித்துச் சங்கராந்திக் கொண்டாட்டம் ஏற்பட்டது. அப்படியே, ஆடி மாதம் காவேரிக்கரையெல்லாம் பதினெட்டாம் பெருக்கின் விழாக் கொண்டாட்டம்.

ஆகவே, இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளில் பதுங்கிக் கிடக்கும் உண்மையைக் 'கண்டுகொண்ட மாத்திரத்தில் மக்களுக்கு மனம் பூரிக்கிறது......

மக்கள் ஒழிந்த மற்றப் பிராணிகளிடத்தில் முடியாத காரியம் இது. எந்த மாட்டு மந்தையாவது சூரிய கிரகணத்தை அண்ணாந்து பார்க்குமா? அண்ணாந்து பார்க்கத்தான் அதைச் செய்ய முடியுமா?

இவ்வாறு விளக்கம் கொடுத்துவிட்டு, சரஸ்வதியை வெண்தாமரை மலர்மேல் உட்கார்த்தி வைத்திருக்கிறோமே, அந்தச் சடங்கின் மர்மத்தை டி.கே.சி. சொல்லுகிறார்கள், "பேரண்டத்திலுள்ள பொருள் களிலெல்லாம் சிறந்த பொருள் மனிதன், மனிதனிடத்தில் உள்ள பொருள்களிலெல்லாம் சிறந்தது மனசு. இத்தகைய அதி அற்புதமான பொருள் மனசு—எப்படி உற்பத்தியாயிற்று, ஏன் மற்ற ஜீவராசிகளிடத்துக் காணப்படுதல் இல்லை என்றெல்லாம் மக்களில் சிலர் எண்ண ஆரம்பித்தனர். ஜடப்பொருளான நம் உடலுக்குள் மனசின் தத்துவங்கள் ஒன்றொன்றாக வளர்ந்து தெளிவடைந்து பிரகாசிப்பதை நோக்கும்போது, இருள் மயம் என்று சொல்லக்கூடிய தண்ணீர்த் தடாகத்தி லிருந்து முளைத்து எழுந்து மலர்ந்த வெண்தாமரை மலர்

ஞாபகத்துக்கு வருதல் இயல்பு, வெண்தாமரை ஒன்று பூப்பதில் எவ்வளவோ அற்புதம், எவ்வளவோ தெய்வீகத் தத்துவம். அப்படியே, உள்ளுணர்வு முளைத்தெழுந்து வளர்ந்து பிரகாசிப்பதிலும் எவ்வளவோ அதிசயமும் தெய்வீகத் தத்துவமும் நிறைந்து கிடக்கின்றன. இத்தகைய கருத்துக்களிலிருந்து சரஸ்வதி என்ற தெய்வத்தை உள்ளத்தில் பாவனை செய்யவும், அத்தெய்வத்தைச் சமரசப்படுத்தி அந்த வெண்தாமரை மலரின் மீதே ஏற்றி வைக்கவும் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் வெள்ளைக் கலையும், வெள்ளைப் பணியும் அவளுக்குக் கிடைத்தன.''

இப்படியாக, சமயக் குறியீடுகளுக்கும், அடையாளங் களுக்கும், சடங்குகளுக்கும் டி.கே,சி. வியாக்யானம் கொடுப்பார்கள். பிறைச்சந்திரனையும், கங்கையையும் சிவன் தலைமேலே ஏற்றி வைத்ததற்குள்ள காரணங் களைத் தெளிவு செய்வார்கள். நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடனத்தை விளக்கிவிட்டு, அவர் காலடியிலே முயலகனை இடைச்செருகலாகச் செருகிவிட்டார்கள் பிற்காலத்தார் என்று சொல்லிக் கண்டிப்பார்கள்.

ஒரு மரப்பொந்து கிடைத்துவிட்டால் போதும். அதற்கு மாணிக்கவாசகர் ஒரு திருவிழாவே நடத்தி விடுவார் என்று சொல்லுவார்கள். மருத மரத்தைப் பார்த்தாராம் திருவாசக ஆசிரியர். அந்த மரத்தில் கடவுள் தத்துவம் நிறைந்திருப்பதை யுணர்ந்தார். மருத மரத்தின் காம்பீரியமும் தொன்மையும் அவருக்குக் கடவுளை ஞாபகப்படுத்தின. அதுவும், பொந்து விழுந்த மிகத் தொன்மையான மரமாக இருந்தது. ஆகையால் தான், பழமைக்கும் பழமையான பழம்பொருளை அது நினைவுறுத்தியது. உடனே பாடுகிறார் :

"அந்த இடைமருதில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ!"

இப்படியாக, பொந்துக்கும், அறுகம் புல்லுக்கும் விழாக் கொண்டாடினார்கள் நம்முடைய மூதாதையர் என்பதை அடிக்கடி உணர்ச்சியோடு எடுத்துச் சொல்வார்கள் டி.கே.சி.

அவர்கள் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன் திருவாதிரையன்று காலை 5-30 மணிக்கு, சித்திரசபையிலிருந்து வரும் நாதஸ்வர இசையைக் கேட்டுக்கொண்டே டி.கே.சி. எழுதிய ஒரு கடிதத்தைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை முடித்துவிடுகிறேன்.

கடிதம் கீழ்க்கண்டவாறு பேசுகிறது :—"இன்று இங்கே அழகாக திருவாதிரை உத்ஸவம். சித்திர சபையில் நடராஜ மூர்த்தி பச்சை சாத்தி எழுந்தருளுகிறார். நடனதீபம் எல்லாம் வெகு அழகாய் இருக்கும். பக்த கோடிகளுக்கு என்றே அருவி ஓடி வந்து திம்திம் என்று விழுந்துகொண்டிருக்கிறது. நடனத்துக்கான தாளத்துடன் விழுகிறது.

"அம்பலத்தில் ஆடுகின்றார்
பாங்கிமாரே—அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன்
பாங்கிமாரே

இன்பவடி வாய்ச்சபையில்
பாங்கிமாரே—நடம்
இட்டவர்மேல் இட்டம் வைத்தேன்
பாங்கிமாரே

கற்பனைஎல் லாம்கடந்தார்
 பாங்கிமா ரே—என்தன்
கற்பனைக்குள் படுவாரோ
 பாங்கிமா ரே

கல்மனம்எல் லாம்கரைப்பார்
 பாங்கிமாரே—மனம்
கரையார்என் அளவிலே
 பாங்கிமா ரே''

மண்ணையும், விண்ணையும் சேர்த்து அனுபவிக்கிறார் ராமலிங்க சுவாமிகள்; பாடலும் விண்ணுக்கும் மண்ணுக்குமாய்த் துள்ளிப் பாய்கிறது.

சித்ரசபையிலிருந்து எழுந்தருளி கோயிலுக்கு இறங்குகிறார் நடராஜப் பெருமானார். காலை 5-30 மணி. மேள வாத்தியம் கேட்கிறது.''

# 4. "சீலம் சிறந்த சிதம்பரநாதன்"

ஒரு நாள் குற்றாலத்தில் ரசிகமணி டி.கே.சி. யோடு நான் சொல்லாக்கத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது டி.கே.சி. சொன்னார்கள்; "தமிழில் புதிய சொல் ஒன்றை உண்டாக்கி அதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வது என்பது கடினமான காரியந்தான். பாருங்கள். நாம் இத்தனை காலமாக ஒரு சொல்லைத் தானே உண்டாக்க முடிந்தது, "பண்பாடு" என்ற சொல்லை. அது பூர்விகமாக இருந்த சொல்லைப்போல நன்றாகத் தமிழோடு ஒட்டிக்கொண்டது, பண்பாடு என்றால் வெகு காலம் உள்ளம் பண்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட நாகரிகந்தானே. Culture என்ற ஆங்கிலச் சொல்லும் Cultivate (பண்படுத்துதல் அல்லது பயிரிடுதல்) என்ற சொல்லிலிருந்து வந்ததுதான். குற்றாலத்துக்கு அருகே கடவாய்க்காத்தி என்ற செழிப்பான நன்செய் நிலம் இருக்கிறது. 2000 அல்லது 3000 ஆண்டுகளாக உழுது பயிரிட்டு வந்த நிலம். ஆண்டுக்கு மூன்று போகம் விளையும். அவ்வளவு செழிப்பான மண் நல்ல உழவன் ஒருவன் அந்த மண்ணைக் கையில் அள்ளித் தொட்டுப் பார்த்தாலே சொல்லிவிடுவான், "இது 3000 ஆண்டுகள் பண்பட்ட நன்செய்" என்று. தமிழ்ப் பண்பாடு 30000 ஆண்டுகளாகப் பண்பட்டு வளர்ந்து வந்தது. ஒரு வெள்ளைக்காரனுக்கு அது என்னவென்று எளிதில் விளக்கிவிட முடியாது. கடவாய்க்காத்தி மண்ணை ஒருபிடி

அள்ளி அவன் வாயில் போட்டால் அதன் நயத்தைப்பற்றி அவனால் புரிந்துகொள்ளவா முடியும்?''

பண்பாடு என்பது என்ன என்று மேற்கண்டபடி விளக்கிய டி.கே.சி. அவர்கள் வாழ்க்கையில் பண்பாட்டுக்கே ஓர் அரிய எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள்.

கம்பனிடத்திலே டி.கே.சி.க்கு இருந்த பக்தி அளக்க முடியாதது. ஆனால், மக்களிடத்திலே அவர்களுக்கிருந்த மரியாதையும் மதிப்பும் கம்பன் மீதுள்ள பக்தியையும் மிஞ்சி நின்றன. டி.கே.சி.யின் இல்லத்துக்கு நான் ஒருநாள் போயிருந்தபோது அவர்கள் சொன்னார்கள்; ''நேற்று ராமசாமிப் பெரியார் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் வந்தபோது நான் 7, 8 நண்பர்களுக்குக் கம்பராமாயணத்திலுள்ள வாலி வதைப் படலப் பாடல்களை விளக்கிக் கொண்டிருந்தேன். ஆனால் பெரியாரைப் பார்த்ததும் கம்பராமாயணத்தை மூடிவைத்துவிட்டு. திருக்குறளில் பல பாடல்களை எடுத்துச் சொன்னேன். பெரியாருக்கு ஒரே ஆர்வமும் மகிழ்ச்சியும். சிலருக்கு வெண்டைக்காய் பிடிக்கும், பாவைக்காய் பிடிக்காது. அவர்களிடத்திலே பாவைக்காயையே போட்டுத் தாளித்துக்கொண்டிருப்பது பண்பாடு இல்லை. வெண்டைக்காய், முருங்கக்காய், புடலங்காய் என்று எத்தனை, எத்தனையோ பொது விஷயங்கள் இருக்கத்தானே செய்கின்றன. அவற்றைப் பற்றிப் பேசி ஆனந்தத்தை உண்டாக்கலாமல்லவா?''

இதைக் கேட்ட பிறகு, ''பிறர் மனங்கோணும்படியாக நாம் நடக்கக் கூடாது'' என்ற ஆசை. டி.கே.சி.க்குக் கம்பனிடமிருந்த ஆசையையும் வென்றுவிட்டது என்று தெரிந்தது. எல்லோரையும் மகிழ்விக்க வேண்டும்,

எல்லோரிடமும் இங்கிதமாக நடந்துகொள்ளவேண்டும் என்ற முனைப்பில் உண்மைப் பண்பாட்டின் ஆழத்தைக் காண்கிறோம்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் காரைக்குடிக் கம்பன் விழாவின் ஆதரவில் டி.கே.சி.யின் தலைமையில் பல புலவர்கள் பேசினார்கள். அப்புலவர் வரிசையில் குறிப்பிடத் தக்கவர் மகோபாத்யாய கதிரேசன் செட்டியார் அவர்கள் அவர் சிறந்த அறிவாளி. தமிழ் நாட்டிலும், சிறப்பாகச் செட்டி நாட்டிலும் அவருக்குப் பெருமதிப்பிருந்தது. அவர் டி கே.சி. தலைமையில் பேசும்போது மிகுந்த ஆங்காரத்தோடு டி.கே.சி. செய்து வந்த திருத்தங்களைப் பற்றி கண்டித்தார். டி.கே.சி.யோ சிரித்துக்கொண்டே பேச்சைக் கேட்டுக் கொண்டிருந் தார்கள். அவர்களுடைய சிரிப்பைப் பார்த்ததும் கதிரேசன் செட்டியாருக்குப் பெருஞ்சீற்றமே ஏற்பட்டு விட்டது. உடனே, அவர் டி.கே.சி யைப் பார்த்து, "ஏன் ஐயா, சிரிப்பு வேறு கேடா? உங்கள் அக்கிரமத்தை நான் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறேன், உடம்பிலே தைக்கவேயில்லையோ நான் சொல்லுவது? மானம் இருந்தால்தானே" என்று ஒரு போடு போட்டுவிட்டு அமர்ந்தார்; ஒரு பெரும் போர் விளையப்போகிறது என்று வந்திருந்தவர்கள் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். டி.கே.சி. எழுந்து நின்று, "அவையோர்களே, செட்டியார் அவர்கள் வெகு அழகாகப் பேசினார்கள்' என்று தொடங்கி, செட்டியார் பேச்சிலிருந்த நல்ல கருத்துக் களையெல்லாம் எடுத்துப் பாராட்டிப் பேசினார்கள். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும், "பெருந் தன்மையென்றால், இந்த மனிதனிடமல்லவா இருக் கிறது. பண்பாடு என்றால் இதுதான் பண்பாடு" என்று

டி.கே.சி.யைப் பலபடப் புகழ்ந்தார்கள். அந்த நாளிலிருந்து மகாமகோபாத்யாயரைக் சம்பர் விழாவுக்கு அழைப்பது என்பது அறவே நின்றுவிட்டது.

ராஜாஜி கவர்னர்—ஜெனரலாக இருந்தபோது, திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்தில் கல்நாட்டு விழாவுக்காக வந்தார். அப்போது பெரியார் மணியம்மையாரை மணக்கப் போவது குறித்து தமிழ்நாட்டில் பெரிய விவாதம் நடந்துகொண்டிருந்தது, தன் பழைய நண்பரான ராஜாஜியைக் கலந்து ஆலோசனை செய்து முடிவு கட்டப் போவதாகப் பெரியார் ஓர் அறிக்கை விட்டிருந்தார். ராஜாஜி இதைப் போன்ற காரியங்களில் மிகவும் கடுமையானவர். ஆனால், டி.கே.சி.யோ ஒருவருடைய சொந்த விஷயத்தில் மற்றவர்கள் குறுக்கிடக் கூடாது என்று கொள்கையுடையவர். திருமணம் செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்களையும், அரசியல் தேர்தலில் நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களையும் தடுப்பது தவறு. பயனில்லாதது என்று டி.கே.சி. சொல்லுவார்கள்.

திருவண்ணாமலை போகும் புகைவண்டியில் ஒரே பெட்டியில் ராஜாஜியோடு டி.கே.சி.யும் அவர்களுடைய செயலாளர்களும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். இடைவழியில் ஒரு புகைவண்டி நிலையத்திலே பெரியாரும் ராஜாஜி இருந்த பெட்டியில் ஏறிக் கொண்டார். ஏறியவுடனேயே, பெரியார் ராஜாஜியிடம் தன் சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார். ராஜாஜி தன் ஆலோசனையைச் சொல்லு முன்பே, டி.கே.சி. முந்திக் கொண்டு, "உங்கள் விருப்பம் அப்படி இருக்குமானால், திருமணத்தைச் செய்து

முடிப்பதே நல்லது'' என்று சொன்னார்கள். ராஜாஜியும் ''ஆமாம். அப்படிச் செய்வதே நலம்'' என்று சொல்லி விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். பெரியாரை ராஜாஜி கடுமையான சோதனைக்கு உள்ளாக்கிவிடக்கூடாதே என்று அஞ்சியே டி.கே.சி. மேற்கண்டவாறு செய்ததாக உடனிருந்தவர்கள் நினைக்கிறார்கள்.

1948 கோடை விடுமுறையில் என் குடும்பத்தார் எல்லோரும் தன்னோடு குற்றாலத்துக்கு வந்து தங்க வேண்டுமென்று டி. கே. சி. அழைத்திருந்தார்கள். எட்டறையில் டி.கே.சி.யிருந்தது முதல் இரண்டு அறைகளில். என் குடும்பம் தங்குவதற்கு நான்காவது அறையை டி.கே.சி.யே ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால், உணவெல்லாம் டி.கே.சி. இல்லத்தில் தான்.

ஒரு நாள் டி.கே.சி.யும் நானும் தனியாக இருந்தோம். அன்று எங்களுக்குள் ஒரு கடுமையான விவாதம் தொடங்கியது. ''சுவர்க்கம் நரகம் என்றெல்லாம் கிடையாது. இறந்தவுடன் எல்லா மனிதர்களும் இறைவனுடைய வஸ்துவிலே கலந்துவிடுகிறார்கள். மறுபிறப்பு என்பதே கிடையாது'' என்று டி.கே.சி. வாதாடினார்கள்.

நான் சொன்னேன் :—''நீங்கள் சொல்லும் கட்சியை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். கர்மத்துக்கு ஏற்ற பிறவி என்று சைவம் சொல்லுகிறது. Somerset Maugham என்ற புகழ் பெற்ற நாவலாசிரியர்கூட 'வேறு ஒரு சமயம் சொல்லாத ஒரு கொள்கையே இந்து மதம் மாத்திரம் சொல்லுகிறது. அதுதான் கர்மாவைப் பற்றிய கொள்கை. பிறவியிலே குருடர்களாகவும் மூடர்களாகவும் பலர் பிறக்கிறார்கள். ஏன்? கர்மாச்

கொள்கைப்படி, முன் பிறவியில் செய்த தீவினையினால் அவர்கள் ஊனமுற்றிருக்கிறார்கள். இந்தக் கொள்கையை மறுத்தால், இறைவன் அநீதியுள்ளவன், காரணமில்லாமல் மக்களுக்குத் துன்பம் கொடுக்கிறான் என்றல்லவா சொல்ல வேண்டும்' என்று சாமார்செட் மாம் தன் 'The Summing up' என்ற நூலில் எழுதியிருக்கிறார்'' என்று சொன்னேன்.

இதைக் கேட்ட டி.கே.சி, ''ஒரு பாட்டிலே சிவ வாக்கியரே என் கருத்தை உறுதிப்படுத்துகிறார். இதோ பாடல்:—

''கறந்த பால் முலை புகா,
கடைந்த வெண்ணெய் மோர் புகா,
இறந்தவர் பிறப்பதில்லை
இல்லை இல்லை இல்லையே.''

சிவவாக்கியரை ஆமோதிக்கிறார் ஜெர்மன் தத்துவ ஞானி ஷோப்பன்ஹாவர். அவர் சொல்லுவதைக் கேளுங்கள் :—''இறந்த பின் எல்லா மனிதர்களுமே பேரின்பத்தை யடைகிறார்கள். இந்த உண்மையை அறிந்தால் எத்தனையோ பேர் உடனடியாகத் தற்கொலை செய்துகொண்டு பேரின்பத்தை அடைவார்கள்.''

இதை கேட்டதும் எனக்குக் கோபம் தாங்கமுடிய வில்லை. ''உங்கள் கொள்கைப்படி அயோக்கியனும் இறந்தவுடன் பேரின்பத்தை யடைகிறான், யோக்கியனும் பேரின்பத்தை அடைகிறான். இந்தக் கொள்கையைக் கேட்கும் மனிதர்கள், ''இம்மையில் அயோக்கியர்களாக இருந்து என்ன அக்கிரமும் செய்யலாம்; மறுமையில் எப்படியும் பேரின்பம் நமக்குக் கிட்டுமே'' என்று தானே

நினைப்பார்கள்'' என்று டி.கே.சி.யிடம் சொல்லிவிட்டு மிக்க சீற்றத்தோடு எழுந்து வெளியேபோய் நான்காவது அறையில் உட்கார்ந்துகொண்டேன். அரை மணி நேரம் அங்கே மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அப்போது, நோய்வாய்ப்பட்டிருந்த டி.கே.சி. மெல்ல மெல்ல அங்கே நடந்துவந்து, ''என்ன! மணி 12-30 ஆச்சே. இலை போட்டாகிவிட்டது, சாப்பிட வாருங்கள்'' என்றார்கள். இதைக் கேட்ட பின்னும் நான் மௌனம் சாதித்தேன். ஆனால், ரஸிகமணியோ என் கையைப் பிடித்துத் தூக்கி, ''வாருங்கள், வாருங்கள்'' என்று கெஞ்சுங் குரலில் அழைத்தார்கள். என்னைக் காட்டிலும் 33 வயது மூத்திருந்த அவர்களுடைய சீலத்தைக் கண்டு நான் உருகிவிட்டேன். அவர்களுடைய குழந்தை உள்ளத்தைப் புண்படுத்திவிட்டோமே என்ற உணர்வு என்னை வருத்தியது. மறுவார்த்தை பேசாமலே அவர்கள் பின் சென்று அவர்கள் அளித்த உணவு விருந்தையும், கவிதை விருந்தையும் உண்டு களித்தேன். இத்தகைய டி.கே.சி.யின் அரிய பண்பாட்டை விதம் விதமான கோணங்களிலிருந்து அனுபவித்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. அந்த அனுபவம் கவிதையாக வடிவெடுக்கிறது :—

> ''சீலம் சிறந்த சிதம்பரநாத வள்ளால்,
> சால நீ வாழ்க தழைத்து.''

# 5. கம்பன் அறிமுகம்

எனக்குத் தமிழையும் கம்பனையும் அறிமுகப் படுத்தியவர் இருவர்; சொல்லின் செல்வர் ரா. பி சேதுப் பிள்ளையும் ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியாரும், முன்னவர் எனக்கு உறவினர்; பின்னவர் உறவினரைக் காட்டிலும் எனக்கு நெருங்கியவர்; என் இலக்கியத் தந்தை. இருவருடைய பேரன்புக்கும் பாத்திரமாகும் பேறு எனக்கு இந்த மண்ணுலக வாழ்வில் கிடைத்தது.

1921ல்—எனக்கு அப்போது வயது எட்டு—முதன் முதலாவதாகச் சேதுப்பிள்ளை அவர்களைச் சாத்தூரில் சைவ சபை மகாநாட்டுக் கூட்டத்தில் கேட்டேன், ஒயா மொழிப் புலவர்கள் மணிக்கணக்காக சுவையற்ற தமிழிலே பேசிக்கொண்டிருந்த காலம் அது. அன்றும் மேற்படி, மேற்படிதான். அந்தப் பேச்சுக்களையும் பொறுமையோடு காலையிலும் மாலையிலும் கேட்டுக் கொண்டிருந்தேன். இரவு எட்டுமணிக்கெல்லாம் ஓர் இளைஞர் மேடை மீது ஏறினார்; நல்ல கவர்ச்சியான தோற்றம்; புன்சிரிப்பும் அறிவுக்களையும் அவர் முகத்தில் தாண்டவமாடின. அவர் பேசத் தொடங்கியதும், மட்கிப் போயிருந்த கூட்டம் நிமிர்ந்து உட்கார்ந்தது. ஒரே கலகலப்பும் உற்சாகமுமாக இருந்தது பேச்சு. பேச்சைக் கேட்ட ஒவ்வொருவருக்கும் தமிழைப்பற்றிய கர்வம் ஓங்கி வளர்ந்தது. ''இவர்தாம் ரா. பி. சேதுப்பிள்ளை''யென்று ஒருவரோடொருவர் தாழ்ந்த குரலில் சொல்லிக் கொண்டார்கள். இந்தக் கன்னிப் பேச்சைக் கேட்ட என் இளம் இதயத்தில் தமிழ்க் காதல் மூண்டது.

''என்றுமுள தென்தமிழ்' என்று தமிழின் வாசியறிந்து ஆசி கூறினார் கம்பர். இத்தகைய இனிமை வாய்ந்த மொழியை—மூவாச் சாவா மொழியைப் பிறப்புரிமையாகப் பெற்ற பெருமை என்றும் தமிழருக்கு உண்டு. ஆயினும் தம் பெருமை தாமுணராத் தன்மையராய்த் தமிழர் இன்று தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள்'' என்று இனிய அடுக்கு மொழியிலே பேசி, என்னைத் தட்டி எழுப்பித் தமிழ் அமுதை ஊட்டியவர்கள் சொல்லின் செல்வர்,

1931 முதல் 1933 வரை நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. எஸ்ஸி. மாணவனாக இருந்த காலத்தில் ரா.பி.சே. அவர்கள் தமிழாசிரியராக அங்கு பணியாற்றினார்கள். அக்காலத்தில் அவர்களுடைய பேச்சுக்களை அடிக்கடி பொதுக்கூட்டங்களில் கேட்கும் வாய்ப்பும், அவர்களுடைய இனிய உரையாடல்களை மணிக்கணக்காக அவர்கள் இல்லத்தில் போயிருந்து கேட்கும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. ''கம்பன் பாடல்களிலே மூவாயிரம் பாடல்கள் எனக்கு மனப்பாடம்'' என்று அடிக்கடி சொல்லின் செல்வர் சொல்லுவார்கள். அவர்களுடைய உள் மனது கம்பன் கவிதையிலே ஊறி ஊறி, விம்மிப் பூரித்து நின்றது. ஆகவேதான் அவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் கம்பனுடைய கவிச்சொல் அடிக்கடி தெறித்து விழுந்துகொண்டிருக்கும்.

ஆங்கில மோகம் எங்களைப் பிடித்தாட்டிய காலம் அது; தமிழில் பேசுவது கண்ணியக் குறைவு என்று நாங்கள் நினைத்து வந்த காலம். அக்காலத்தில் தமிழில் பேசி வந்த பேச்சாளர்களில் பலர் உப்புச்சப்பில்லாமல் பேசுவார்கள்; அவர்கள் பேச்சில் புதுமையோ சுவையோ கலகலப்போ இருக்காது. ஆனால் அந்தக் காலத்தில் ஆங்கிலத்திலே பேசி ஜமாய்க்கிற பல ஜாம்பவான்கள்

இருந்தார்கள். ஸர் சி. ஆர். ரெட்டி, ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரியார், எஸ். சத்தியமூர்த்தி, ஏ. ராமசாமி முதலியார் ஆகியோர் ஆங்கிலத்தில் பெருமுழக்கம் செய்துவந்த காலம். அப்பேர்ப்பட்ட காலத்தில் ரா.பி சேதுப் பிள்ளையவர்கள் தமிழ் விரிவுரையாளராக அண்ணாமலை நகருக்கு வந்து சேர்ந்தார்கள். வந்த சில மாதங்களில், ஆங்கிலத்தின் கை தாழ்ந்து, தமிழின் கை யோங்கிவிட்டது. காரணம், பிள்ளையவர்களுடைய அபாரமான பேச்சுத் திறமைதான். ''நெல்லையில் பிறந்து தில்லையில் வாழ்கின்றேன்'' என்று பேச்சைத் தொடங்குவார்கள்—ஒரே கை தட்டும் கும்மாளமுமாக இருக்கும். தமிழ் மாணவர்கள் மாத்திரமல்ல, ஆந்திர மாணவர்கள், கேரள மாணவர்கள், கன்னடியர்கள்—எல்லோரும் கனம் சாஸ்திரியாரின் ஆங்கிலப் பேச்சைக் கூடக் கேட்காமல், பிள்ளையவர்களின் தமிழ்ப் பேச்சைக் கேட்கக் கூடிவிடுவார்கள். அவர்கள் பேச்சிலே அவ்வளவு குறுகுறுப்பும், மினுமினுப்பும், கண்ணியமும், ஆற்றலும், இனிமையும் ஒன்றுகூடிக் கொஞ்சி விளையாடும். மாணவர் சங்கத்தில் தலைவனாக நான் இருந்தபோது, ''Mr R. P. Sethu Pillai is the AG Gardiner of Tamil Litterature'' (திரு. ரா. பி, சேதுப்பிள்ளை தமிழ் இலக்கியத்துக்கு ஒரு ஏ, ஜி. கார்டினர்) என்று சொல்லி, அவர்களை வரவேற்றிருக்கிறேன். தமிழ் ஆங்கிலத்தைக் காட்டிலும் ஒரு வகையிலும் குறைந்ததல்ல, தமிழைக் கற்பதால் பெருமை யடையலாம் என்ற உணர்ச்சியை, என் காலத்து இளைஞர்களுக்கு ஊட்டியவர் சொல்லின் செல்வர். அதோடு, தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளுக்கும் சென்று கம்பனுடைய பெருமையையெல்லாம் செவியையும் உள்ளத்தையும் ஈர்க்கும் போதைத் தமிழில் பறைசாற்றியவர் ரா. பி. சே.

ஆகவேதான், சொல்லின் செல்வரை எனது இலக்கியத் தலைவராக ஏற்றுக் கொண்டேன். இலக்கியத்தின்பாலுள்ள பற்று காரணமாக எங்களிருவருக்கும் இடையேயிருந்த உறவு வளர்ந்தது. பிள்ளையவர்களுக்குக் குழந்தை கிடையாது. அவர்களுடைய சொத்து முழுவதையும், இனிமேல் வரப்போகும் ராயல்டியையும் திருநெல்வேலியிலுள்ள ஒரு பிரசவ ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவதற்காக 24-6-60ல் எழுதிய உயில் மூலம் ஒரு அறக்கட்டளை நிறுவினார்கள். இந்தப் புனிதமான அறக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக என்னை ஒரே நிறைவேற்றுநராக (Sole Executor) நியமித்தார்கள். அவர்களுடைய பவித்திரமான நம்பிக்கைக்குப் பாத்திரமானேனே என்று நினைக்கும் போதெல்லாம், ரசிகமணி டி.கே.சி. என்மீது வைத்திருந்த பேரன்பும் நினைவுக்கு வருகிறது.

இருவருமே உயர்ந்த குடும்பங்களில் தோன்றியவர்கள். பதினேழாவது நூற்றாண்டில் திருநெல்வேலிச் சீமையை ஆண்டுவந்த வடமலையப்ப பிள்ளையனுடைய வழித்தோன்றல் சொல்லின் செல்வர். பிள்ளையனுக்கு முன்னால் திருநெல்வேலிச் சீமையை ஆண்டுவந்த தளவாய் அரிய நாயக முதலியாருடைய வழித்தோன்றல் டி.கே.சி.

ரா.பி.சே. ராஜவல்லியபுரத்தில் பிறந்து, திருநெல்வேலியில் வழக்கறிஞராக இருந்து, பின்னர் அரசியலில் இறங்கி, அதன்பின் தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலை நகரிலும், அதன்பின் சென்னையிலும் சேவை செய்தவர்கள். டி.கே.சி. தென்காசிக்குப் பக்கமிருக்கும் களங்காட்டில் பிறந்து, திருநெல்வேலியில் வழக்கறிஞராக இருந்து, பின்னர் அரசியலில் இறங்கி, சட்டசபை அங்கத்

காட்டினார்கள். உண்மையும், உண்மையோடொட்டிய உணர்வும் நிறைந்த பேச்சு அது. அதுவரையிலும் என் உள்மனது எந்த லட்சியப் பேச்சைக் கேட்கவேண்டுமென்று பல காலமாக ஏங்கிக் கொண்டிருந்ததோ, அந்தப் பேச்சை டி.கே.சி.யிடமிருந்து அன்று கேட்டுவிட்ட திருப்தி அதற்கு ஏற்பட்டது. அது வெறும் சொற்களாலான பேச்சல்ல; சொல் மூலம் ஒரு புதிய, மறக்க முடியாத அனுபவத்தையே டி.கே.சி. எனக்கு ஊட்டி விட்டார்கள். கேவலம் சொல்லினால் வெளியிட முடியாததை வெளியிடும் அரிய சித்து டி.கே.சி.யிடமிருந்ததை என் இதயம் கண்டு கொண்டது. அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே கிடைத்தது. சட்டக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, நான் பாளையங்கோட்டை திரும்பியதும், டி.கே சி. இந்து அறநிலையக் கமிஷனராகச் சென்னையிலிருந்துவிட்டு வண்ணாரப்பேட்டை திரும்பியதும் 1935லேதான். 1935 முதல் 1938 வரை ஞாயிற்றுக்கிழமைதோறும் டி.கே.சி வீட்டில் நடந்த வட்டத் தொட்டிக் கூட்டத்திற்குச் சென்று டி.கே.சி. யின் அபூர்வ மேதையை அனுபவிக்கத் தொடங்கினேன். அவர்களுடைய கலையுணர்வு என் உணர்ச்சி தத்துவத்தில் போய்க் கலந்து, என்னை வேறு வஸ்துவாக்கி, எனக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டியது போன்ற உணர்வைக் கொடுத்தது. 1935 முதல் அவர்கள் மறைந்த தேதியான 16-2-1954 வரை அன்பும் ஆனந்தமும் கலந்த டி.கே.சி. யென்ற பேரருவியிலே குளித்துக் குளித்து என் உள்ளமும் ஆன்மாவும் நிர்மலமாயின. தாம் விழித்திருக்கும் நேரமெல்லாம் சமயத்தைப் பற்றியும் கலையைப்பற்றியும், கவிதையைப்பற்றியும் சிந்தனை செய்தும் பேசியும் வந்த டி.கே.சி.யைப் போன்று வேறொருவரையும் நான் கண்ட

தில்லை. கம்பனைப் போன்ற மகாகவி ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிறப்பான் என்று ரசிகமணி சொல்லுவார்கள். அந்தக் கூற்று முற்றிலும் உண்மை. ஆனால் டி.கே.சியைப் போன்ற உள்ளுணர்வும், மாசற்ற காட்சியும் பெற்ற ரசிகர் 2000 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிறக்கமுடியும், ரசிகமணி மறைந்து 23 ஆண்டுகளாகி விட்டன; அதாவது, ஒரு தலைமுறை கழிந்து விட்டது. சமகாலத்திலிருந்த விருப்புவெறுப்புகளையெல்லாம் மறந்துவிட்டு உணர்ச்சி வசப்படாமல் டி.கே.சியைத் தொலைநோக்கி மூலம் நோக்கி. நிதானத்தோடு தீர்ப்புச் சொல்வதற்கு நமக்குத் தகுதியேற்பட்டுவிட்டது. தூரத்திலிருந்து அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் மானிடச்சட்டை தாங்கி வந்த ஒரு அவதார புருஷர் என்று தெளிவாகத் தெரிகிறது. நம்மையெல்லாம் காட்டிலும் அகண்டமான அறிவும் நுண்ணிய உணர்வும் படைத்த ராஜாஜி, டி.கே.சி. மறைந்து பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்னால், 10-9-67 ''கல்கி''யில் ஒரு கட்டுரை எழுதினார்கள்; கிருஷ்ணன் அவதாரத்தை டி.கே.சி. அவதாரத்தோடு மிகுந்த துணிச்சலோடு ஒப்பு நோக்கி, இருவரையும் பாராட்டி எழுதிய கட்டுரை அது. கட்டுரை தொடங்குகிற தோரணையைப் பாருங்கள். ''சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்தநாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க்கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம், தமிழ் வசன நடையின் முன்னேற்றத்தின் ரகசியம், தாளமும் ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம், அன்பின் பரம மகிழ்ச்சி, வேஷங்களின் பொய்ம்மை அனைத்தும் நன்றாகக் கண்ட பூரண ரசிகமணி டி.கே.சி. பிறந்த நாளும் ஹரியின் பூரணாவதாரக் கண்ணனின் ஜன்ம நக்ஷத்திரமும், டி.கே.சியின் ஜன்ம நக்ஷத்திரமும் ஒன்றாய்ச் சேர்ந்த திருவிழாவை

மகிழ்ச்சியுடன் சென்ற திங்கட்கிழமை கொண்டாடி னோம். இந்தத் திருவிழாக்கள் ஞானமும் அன்பும் நாட்டில் வளரச் செய்யும்." இந்தக் கட்டுரையில், ராமன் மகா விஷ்ணுவின் நான்கில் ஒரு அம்சம், ஆனால் கிருஷ்ண பகவான் மகா விஷ்ணுவின் பூரண அவதாரம் என்னும் உண்மையைப் பலகாரணங்கள் தந்து ராஜாஜி விளக்கு கிறார்கள். சீதையை இழந்ததும் ராமன் துயரமடைந்து பிரலாபித்ததைக் குறிப்பிட்டுவிட்டு, கண்ணனுக்குத் துயரம் என்பதே கிடையாது. தான் சர்வேஸ்வரன் என்று உணர்ந்தவன் கண்ணன் என்பதைச் சுட்டிக்காட்டிவிட்டு, "மூடர்கள் கிளப்பிய அபவாதத்துக்குப் பயந்து ராமச் சந்திரன் சீதா தேவியைக் காட்டுக்கு அனுப்பிவிட்டான். கண்ணன் இப்படிச் செய்வானா? ஒருநாளும் செய்ய மாட்டான்......இது ராமச்சந்திரனுடைய பெருமையைக் குறைக்கிறது" என்று ராஜாஜி சொல்லுகிறார்கள். இவ்வாறாக, கண்ணனே குறைவற்ற தெய்வம், உலகத்துக்கு வழிகாட்டியவன் அவனே என்று நிலைநாட்டி விட்டு, அதே மூச்சிலே ராஜாஜி டி.கே.சியைப் பற்றிச் சொல்லுவதாவது :— "கண்ண பகவான் ரோகிணி நக்ஷத்திரத்தில் அவதரித்தான். அதே நக்ஷத்திரத்தில் மற்றொருவர் அவதரித்தார், தமிழ்க் கவிக்காதலர் என்று பெயரைப்பெற்ற **மகான்** சிதம்பரநாத முதலியார் அவர்கள்...ஸ்ரீ ஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள், டி.கே.சி. பிறந்தநாள், என்றும் தமிழர் கொண்டாடும் நாள்" என்று கட்டுரையை ராஜாஜி முடிக்கிறார்கள். எளிதில் யாரையும் புகழாத வாய் ராஜாஜியின் வாய்; நிதானத்தை ஒருக்காலும் இழக்காத இதயம் ராஜாஜியின் இதயம்; இந்தியத் தலைவர்கள் எல்லோரும் பீஷ்மருக்குப் பின்னர் அறிவிலும் விவேகத்திலும் உறுதியிலும் சிறந்து நிற்கும் இந்தியர் ராஜாஜியே என்று பாராட்டுகிறார்கள்.

இதற்கெல்லாம் மேலாக, வைணவ பக்தி நிறைந்தவர் ராஜாஜி. அப்பேர்ப்பட்டவர், 'பூரண டி.கே.சி.யும் பூரண ஹரியும்' என்ற தலைப்பின் மூலம் இரு அவதாரங்களுக்கும் சம அந்தஸ்து கொடுத்து, இருவரையும் ஒரு மூச்சிலே பாராட்டியிருக்கிறார் என்றால், டி.கே.சி.யைக் குறை கூறிக்கொண்டிருந்த தமிழறிஞர்கள், இனிமேலாவது டி.கே.சி.யின் பூரணத்துவத்தையறிந்து டி.கே.சி. காட்டிய இலக்கியப் பாதையில் நடந்து பார்ப்பார்களாக!

கம்பனை எப்படி டி.கே.சி. அனுபவித்தார்கள், என்னைப் போன்ற மற்றவர்களையும் எப்படி அனுபவிக்கச் செய்தார்கள் என்பதை, ரத்தின வியாபாரிகள் ரத்தினத்தை எப்படி அனுபவிப்பார்கள், என்று டி.கே.சி. வருணித்த தமிழிலேயே சொல்லலாம், "இருபது முப்பது வருஷத்துக்கு முன் காயல் பட்டணத்து காக்காய்கள் (சாய்புகள்) ரத்ன வியாபாரம் செய்தார்கள். முக்கியமாக சிவப்பு வியாபாரந்தான்; வைரம் அந்தக் காலத்தில் அவ்வளவாக மதிப்புக்கு வரவில்லை. மேலே சொன்ன காக்காய்கள் மாணிக்கங்களைப் பரிசோதிப்பார்கள், விலையிடுவார்கள். எங்கள் வீட்டில் அவர்களை அடிக்கடி பார்க்கலாம். ஒரு நல்ல சிவப்பை அவர்கள் கண்டுவிட்டார்களானால், அவர்களுக்கு உண்டாகிற ஆவேசம் அப்படி இப்படியல்ல. இடது கண்ணிட்டுப் பார்ப்பார்கள். பிறகு வலது கண்ணிட்டுப் பார்ப்பார்கள். திண்ணைக்கு ஓடிப்போய்ப் பார்ப்பார்கள். முற்றத்துக்குக் கொண்டுபோய்ப் பார்ப்பார்கள். எப்படியெல்லாமோ குனிந்தும் நிமிர்ந்தும் சாய்ந்தும் பார்ப்பார்கள். என்ன பூரிப்பு! என்ன பழுப்பு! இதல்லவா மாணிக்கம், தின்று விடுவோமா அல்லது கண்ணுக்குள்ளேயே திணித்து விடுவோமா என்றெல்லாம் சொல்லுவார்கள்." டி.கே.சி.

யும் கம்பன் பாடல் ஒவ்வொன்றையும், ஏன் நல்ல தமிழ்ப் பாடல் ஒவ்வொன்றையுமே இப்படியெல்லாம் அனுபவிப்பார்கள். குனிந்தும் நிமிர்ந்தும் சாய்ந்தும், பற்பல கோணங்களிலிருந்து பார்த்தும் அனுபவிப்பார்கள், நம்மையும் அனுபவிக்கச் செய்வார்கள். ''தமிழ்க் கவி மக்களைக் கஷ்டப்படுத்த வந்த கருவி அல்ல. ஆனால், மக்களை ஆனந்தமயத்தில் ஊறவைக்க வந்த தேவாமிர்தம்'' என்று டி.கே.சி. அடிக்கடி சொல்லுவார்கள். ஆணவத்தை உதறித் தள்ளிவிட்டு, டி.கே.சி.யோடு கவிதையில்'கரையத் தெரிந்த ஒரு சிலருக்கு, அவர்களுடைய கூற்று முழுக்க முழுக்க உண்மை என்று தெரியும்.

மற்றப் புலவர்கள் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும் வேகத்தில் கவிதையையும் படித்துத் தீர்த்து விடுவார்கள். ஆனால், டி.கே.சி.யோ பாடல்களில் தம் உள்ளத்தை மணிக்கணக்கில் நிலைநிறுத்தி, அவற்றை மிக்க பொறுப்போடும் நுணுக்கத்தோடும் ரத்தினப் பரீக்ஷை செய்து, எது கவிதை, எது கவிதையில்லை, எதில் கம்பனுடைய முத்திரை இருக்கிறது, எதில் அந்த முத்திரை இல்லை என்பதைத் தெளியும் உள்ளுணர்வு பெற்றிருந்தார்கள். அந்த உள்ளுணர்வை நாள்தோறும் பெருக்கி வந்தார்கள், ஏறக்குறைய 40 ஆண்டுகளாகப் பெருக்கி வந்தார்கள். ஆகவேதான், கம்ப ராமாயணத்திலுள்ள போலிப்பாட்டுகளை எடுத்த எடுப்பிலேயே இனங் கண்டுகொள்ள அவர்களால் முடிந்தது. இந்த அரிய உள்ளுணர்வை முயன்று பெறாதவர்கள், கவிதையைப் பொறுத்த மட்டில், விழி கண் குருடர்கள் தாம்; அவர்கள் கவிதையைப் பற்றிக் கூறும் கருத்துக்களெல்லாம் மயிலைக் கையினால் தடவிப் பார்த்துவிட்டு,

"அடடா! எவ்வளவு அழகாய் இருக்கிறது" என்று குருடன் சொல்லும் கணக்குத்தான். கூர்மையோடு பார்க்கும் கண்களும் மாசற்ற உள்ளுணர்வும் நீண்ட காலக் கவிப்பயிற்சியும் கொண்ட டி.கே.சி.க்கல்லவா கவிமயிலைக் கண்டு அனுபவித்து, அதன் வர்ண ஜாலங்களைப்பற்றித் தீர்ப்புச் சொல்லும் தகுதியிருக்க முடியும்!

ராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகப்போகிறதை எதிர் நோக்கி ஒரே ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறார்கள் மக்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பட்டாபிஷேகத்தை எண்ணி அனுபவிக்கிறார்கள். வயது முதிர்ந்த மாதர்கள் கோசலையின் மனநிலையிலிருந்து அனுபவித்தார்கள். வேதியர்கள் வசிட்டன் மன நிலையிலிருந்து பட்டாபிஷேகத்தை எண்ணி அனுபவித்தார்கள். வேறுள மகளிர் எல்லாம், அதாவது, சீதையையொத்த வயதுள்ள பெண்களெல்லாம், சீதையின் மனத்தை யொட்டி அவளுடைய ஆனந்தத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். சீதையோ லக்ஷ்மி தேவியையே ஒத்திருந்தாள். பரலோக சாதனத்தில் மனதை ஈடுபடுத்திய முதியவர்கள் தசரதனை ஒத்திருந்தார்கள். இம் மன நிலைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறது ஓரரிய கம்பன் பாடல். ஆனால், அந்தப் பாட்டிலே ஒரு பிழை விழுந்துவிட்டது. மற்றவர்கள் கண்ணுக்குப் படாத அப் பிழை டி.கே.சி. கண்ணுக்குப் பட்டுவிட்டது. "மாதர்கள் வயதின் மிக்கார், கோசலை மனத்தை ஒத்தார்" என்பதற்குப் பதில், "மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்" என்றிருந்தது பாடம். கற்பினால் மிக்க பெண்கள் எல்லாம் கோசலையையொத்தார்கள் என்று சொல்லிவிட்டு, மற்றுள மாதரெல்லாம் சீதையையொத்தார் என்று சொன்னால், கற்பில்லாத மாதரெல்லாம்

சீதையையொத்தார் என்று அபத்தமான பொருளல்லவா ஏற்பட்டுவிடும். கம்பன் இதயத்தையுணர்ந்த டி.கே.சி அவர் இப்படிப் பாடியிருக்க முடியாது என்று கண்டு, 'கற்பின் மிக்கார்' என்ற சொற்றொடரை ''வயதின் மிக்கார்'' என்று திருத்தினார்கள். கம்பனைக் கொளுத்த வேண்டும் என்று சொன்னவர்கள்கூட, டி.கே.சி. கம்பனைத் திருத்தியது தவறு என்று கண்டித்தார்கள்.

இவ்வாறு டி.கே.சி. திருத்திய சில ஆண்டுகளுக்குப் பின், பாலசரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார் என்ற புலவர் வைத்திருந்த பழைய கம்பராமாயண ஓலைச்சுவடியில், ''மாதர்கள் ஆண்டின் மிக்கார்'' என்ற பாடபேதம் இருப்பது தெரிய வந்தது. இதைப் பார்த்தபிறகு பல தமிழ்ப் புலவர்கள் டி.கே.சி. செய்த திருத்தம் எவ்வளவு பொருத்தமானது என்று கண்டு பாராட்டினார்கள். டி.கே.சி.யும் 'வயதில் மிக்கார்' என்பதை மாற்றி, ''ஆண்டின் மிக்கார்'' என்று ஓலைச் சுவடிக்கிணங்கத் தம் பதிப்பில் பாடலைத் திருத்திக் கொண்டார்கள். திருத்திய பாடல் கீழ்வருமாறு:-

**மாதர்கள் ஆண்டின் மிக்கார்**
**கோசலை மனத்தை ஒத்தார்;**
**வேதியர் வசிட்டன் ஒத்தார்;**
**வேறுள மகளிர் எல்லாம்**
**சீதையை ஒத்தார்; அன்னாள்**
**திருவினை ஒத்தாள்; அவ்வூர்**
**சாதன மாந்தர் எல்லாம்**
**தயரதன் தன்னை ஒத்தார்.**

இப்படியாகப் பல பாடல்களைத் திருத்தினார்கள் டி.கே.சி. இவ்வாறு திருத்தியதற்குக் காரணம் அகம்பாவம்

அல்ல, ஈடுபாடுதான். தாம்அடைந்த இன்பத்தை மற்றவர்களும் அடையட்டுமே என்ற பரிவு காரணமாக இப்படியெல்லாம் செய்தார்கள். ஆனால் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் உட்பட எல்லாப் புலவர்களும் டி.கே.சி.யைக் கண்டனம் செய்தார்கள். வேடிக்கை யென்னவென்றால். கம்பராமாயணத்தைப் பொசுக்கவேண்டும் என்று பிரச்சாரம் செய்தவர்களும், "டி.கே.சி. எப்படிக் கம்பனைத் திருத்தலாம்?" என்று சீறியெழுந்தார்கள். "கம்பரை எரித்துப் பெரிய தீ வளர்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறவர்களுக்கு, எரிதுரும்பு குறைந்துவிட்டதே என்று வருந்துவதில் பொருள் இருக்கத்தானே செய்கிறது" என்று சொல்லி, டி.கே.சி. கம்பன் எதிரிகளுடைய கோபத்துக்கு மேலும் எரியூட்டினார்கள். கம்பன் பக்தர்களுடைய கோபத்துக்கு டி.கே.சி. சொன்ன சமாதானம் இன்னும் சுவையானது: "மலையாளத்து அப்பளம் வாயிலே போட வேண்டியது—பல்லைத் தொட வேண்டியது, அப்படியே பொருபொரு என்று தூளாய்ப் போய்விடும். 50 அப்பளத்தையும் தீர்த்துவிடலாம் என்று படும். நம்மிடம் வஞ்சம் இல்லை, போடுவார் இல்லை என்பதுதான். போட்டால் மாயமாய்ப் போய்விடும். அப்பேர்ப்பட்ட அப்பளத்தில் இரண்டொரு மணலைத் தூவிவிட வேண்டும். அப்பளத்தைக் கடிக்கும்போது, இதோ இருக்கிறேன் நான் என்று கல் சொல்லிவிடும். பல்லின் பாட்டைச் சொல்லவேண்டுமா; வேண்டாம். அப்பளக் கூடையில் வறுத்து வைத்த அப்பளம் அப்படியே இருந்துவிடும். மிச்சந்தான். கம்பன் பாடல்களும் அப்பளம் போலத்தான். பிழைபட்ட பாடல் இருந்தால் பாடல் மிச்சம்தானே. 'கல்லை எப்படி எடுக்கலாம் நீ' என்று கோபிக்கிறார்கள்."

கவிச் சக்ரவர்த்திக்கு நேர்ந்த விபத்துகளை நினைந்து ரஸிகசக்கரவர்த்தி இப்படியெல்லாம் ஏங்கினார்கள். அவ்வாறு ஏங்கி ஏங்கித் தன்னந்தனியாக இருந்த காலத்திலே, டி.கே.சி.யோடு உளங்கலந்து அவர்களுக்கு இலக்கிய நட்பை நல்கியவர்கள் வெகு சிலரே. ராஜாஜி, கல்கி, பாஸ்கரத் தொண்டைமான், எனது தமக்கையார் வேலம்மாள், நான், சோமு, ல. ஷண்முகசுந்தரம் முதலியோர். டி.கே.சி யின் இறுதிக் காலத்தில் என்னுடைய துணை தமக்கு இருக்க வேண்டுமென்றே உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி ராஜமன்னாரிடம் சென்று என்னைத் தென்காசியில் முன்சீப்பாகப் போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சொந்த ஊரில் நான் நீதிபதியாக இருக்கக்கூடாது என்பது விதி. இந்த விதியைத் தளர்த்தி என்னைத் தென்காசியில் முன்சீப்பாகப் போட்டார்கள். 1949 முதல் 1952 வரை அநேகமாக நாள் தோறும் தென்காசியிலிருந்து நான் குற்றாலம் சென்று, டி.கே.சி. யோடு மணிக்கணக்காக உரையாடிக் கொண்டிருக்கும் பேறு பெற்றேன். மூன்று ஆண்டுகள் மூன்று கணமாக விரைந்தோடின; காலம் என்ற தத்துவம் தங்கச் சக்கரம் பூண்டு வெள்ளித் தண்டவாளத்தில் விரைந்தோடியது.

1950-ல் ஒருநாள் திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை அவர்களோடும் டி.கே.சி. யோடும் ஐந்தருவிச் சாலையிலே நான் உலாவிக் கொண்டிருந்தேன். திடீரென்று டி.கே.சி நின்றார்கள். ஒரு சாலை மாணாக்கராகிய திவான் பகதூரைப் பார்த்து, "ஆவுடையப்ப பிள்ளையவாள்! நான் மகராஜனுக்கு ஒரு உயில் எழுதி வைத்துவிட்டேன்" என்று சொன்னார்கள். 'அப்படியா, அப்படியா, என்ன அது?' என்று அதிசயத்தோடு

கேட்டார்கள் ஆவுடையப்ப பிள்ளை. "நமது தமிழ்க் கவிதை, பண்பாடு, சமயம் எல்லாவற்றையும் மகராஜனுக்கு உயில் எழுதி வைத்துவிட்டேன். இனிக் கவலையில்லை" என்றார்கள் ரசிகமணி. இதே அன்பையும் அருமைப்பாட்டையும் 6—6—48ல் ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து எனக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்ட சொற்களில் டி.கே.சி. வெளியிட்டார்கள்:- "ஒருவனுக்குக் கை நிறைய வைரங்கள் கிடைத்தன. அவைகளை வைக்கும் பெட்டகம் இல்லை, வீடில்லை. கடைசியாக, அவைகள் கிடைத்தன. அப்படியானால் அவனுக்கு எவ்வளவு ஆறுதலாய் இருக்கும். அதேபோல நானும் தமிழில் அற்புதமான பாடல்களைக் கண்டேன். கை நிறையவே இருக்கின்றன. வைக்க இடமில்லாமல் திண்டாடினேன். தாங்களும் வேலம்மாளும் ஒப்படைப்பதற்கு இருக்கிறீர்கள். எனக்கு எவ்வளவு ஆறுதல் என்று சொல்வானேன்."

ரசிகமணியின் வாய்மொழி உயிலையும், சொல்லின் செல்வரின் எழுத்துவழி உயிலையும் பெற்ற நான், அவர்களிருவருக்கும் இடையேயுள்ள மனக்கசப்பை நீக்குவதற்குப் பல ஆண்டுகள் முயன்றேன். "பி.ஸ்ரீ. ஆச்சார்யா என்னோடு ஒட்டியிருந்தவர்கள். சில காரணங்களால் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டார்கள். அவரைத் திருக்குற்றாலத்துக்கு அழைத்து என்னோடு மறுபடியும் ஒட்டும்படி செய்து விட்டீர்கள். அதனால் எனக்கு ஏற்பட்ட சந்தோஷம் இப்படி, அப்படி என்று சொல்ல முடியாது. ஆனால், ரா. பி. சேதுப்பிள்ளை என்னோடு ஒரு காலத்திலும் ஒட்டியிருந்ததில்லை. நான் ஒரு கோமாளி என்று நினைக்கிறவர்கள் அவர்கள். நீங்கள் ஒட்டி வைத்தாலும் அவர்கள் ஒட்டமாட்டார்கள்" என்று டி.கே.சி. என்னிடம் அடிக்கடி சொல்லுவார்கள். "இல்லை,

தமிழின் நலத்துக்காக நீங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்'' என்று நான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

1951ல் 'தளவாய்ஹவுஸ்' என்ற விடுதியிலே, குற்றாலத்தில் தங்கியிருந்தார்கள் சொல்லின் செல்வர். இரட்டை மாட்டு வண்டியிலே தென்காசியை நோக்கி அவசரமாகப் போய்க் கொண்டிருந்த ரசிகமணியைப் பார்த்து, ''அண்ணாத்தை, எங்கே இவ்வளவு அவசர மாகப் போகிறீர்கள்'' என்று கேட்டார்கள் ரா.பி.சே. ''இல்லை, மூன்று நாட்களாக மகராஜனுக்குக் காய்ச்சல்; படுக்கையிலிருக்கிறார்கள்; அவர்களைப் பார்க்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு, டி.கே.சி. தென் காசிக்கு விரைந்து வந்து விட்டார்கள். என்னோடு இரண்டு மூன்று மணி நேரம் அளவளாவிவிட்டு டி.கே.சி. குற்றாலம் போனார்கள். அவர்கள் போன சில நிமிஷங் களில் ரா.பி.சே. என் இல்லத்துக்கு வந்து, ''டி.கே.சி.க்கு உம்மிடத்திலேயிருக்கிற பிரியத்தைப் பார்த்தேன். உடனே எனக்கு அவர்களிடத்திலிருந்த கசப்பெல்லாம் மாறிவிட்டது. அவர்கள்மீது அன்பு பெருகத் தொடங்கி விட்டது. காரணம் நம்முடைய மகராஜனிடத்திலே டி.கே சி. க்கு இவ்வளவு அன்பிருக்கிறதே என்பதுதான்'' என்று சொல்லி, அன்பு வளரும் மர்மத்தை ரா.பி.சே. எனக்கு விளக்கினார்கள்.

இருபதாவது நூற்றாண்டில், கம்பனுக்காகவும் தமிழுக்காகவும் அரும்பாடுபட்ட இரண்டு பெரும் மேதை கள், என்னிடத்திலிருந்த அன்பின் காரணமாக, கருத்து வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டார்கள் என்ற நிகழ்ச்சி என்றென்றும் எனக்கு விம்மிதத்தையும் பூரிப்பை யும் கொடுத்துக் கொண்டிருக்கும்.

சொல்லின் செல்வர் மறைந்தது 1961ல்; ஆனால் ரசிகமணி 1954-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் பதினாறாம் தேதியிலேயே மறைந்து விட்டார்கள். இந்தச் செய்தியைக் கேட்டவுடனே, சென்னை அனைத்திந்திய வானொலி நிலையத்தின் மூலம் சொல்லின் செல்வர் ரசிகமணியைப் பற்றிப் பேசிய பேச்சு கீழ்க்கண்டவாறு முடிகிறது: ''குற்றாலத்தின் பெருமையையெல்லாம் தன் பெருமையாக்கிக்கொண்ட ரசிகமணி இன்று நம்மை விட்டுப் போய்விட்டார்கள். அவர்களோடு நெருங்கிப் பழகிய இலக்கிய நண்பர்களுக்கு இப்போது குற்றாலம் ஆவியகன்ற கூடு போலவே தோன்றும். மலையிருந்தென்ன! மந்த மாருத மிருந்தென்ன! அருவிதான் இருந்தென்ன! அறிவுக் களஞ்சியத்தை இழந்து விட்டோம்! அருமையாகத் தமிழின் பெருமையை உணர்த்தும் அறிஞரை இழந்து விட்டோம்! பண்பாட்டின் நிலையமாகிய பெரியாரை இழந்து விட்டோம், டி.கே.சி. அவர்கள் நம் கண்ணுக்கு மறைந்தாலும் கருத்துக்கு ஒருநாளும் மறைவாரல்லர் என்பது ஒன்றே நமக்கு ஆறுதல் அளிக்கின்றது.'' இவ்வாறு பேசிய குரலும் மறைந்துவிட்டது. மறைந்து போனாலும் தமிழையும் கம்பனையும் எனக்கும் இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் இனங்காட்டிய இருவருடைய உயிர்த் தத்துவங்களும் கம்பன் கவியைப் போலவும் என்றும் உள செந்தமிழைப் போலவும் ஊழூழிக் காலம் நிலைத்து நிற்குமாக.

## 6. ரஸிகமணி டி. கே. சி.

ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் இம்மண்ணுலகில் வாழ்ந்த காலம் 71 ஆண்டுகள் 6 மாதங்கள். 1950-ல் கண்ணப்ப சுவாமிகள் என்ற ஒரு ஞானியை அழைத்துக் கொண்டு டி.கே.சி.யைப் பார்க்கச் சென்றேன். குற்றாலத்தில் ஐந்தருவிச் சாலையிலேயுள்ள அவர்கள் இல்லத்திலே 3 மணி நேரம் டி.கே.சி.யோடு உரையாடி விட்டுத் தென்காசிக்குத் திரும்பினோம். திரும்பும்போது, ''டி.கே.சி. கந்தர்வ லோகத்தைச் சேர்ந்தவர். வழிதப்பி மண்ணுலகுக்கு வந்து சோந்துவிட்டார்'' என்று கண்ணப்ப சுவாமிகள் என்னிடம் சொன்னார்.

அவ்வாறு வழிதப்பி மண்ணுலகுக்கு டி.கே.சி. வந்த காலம் 1882-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம். தென்காசிக்கு அருகேயுள்ள களங்காடு என்ற கிராமத்தில் தீர்த்தாரப்ப முதலியார் என்ற ஒரு பண்ணையாருடைய மகனாகப் பிறந்தார்கள் ரஸிகமணி.

சிறு வயதிலே ஓடியாடி நல்ல உடற்பயிற்சி செய்தார்கள்; திருக்குற்றாலத்துக்குப் போய் அங்குள்ள அருவியில் குளிக்காமல், அருவி விழுந்து பொங்கி வரும் பொங்குமாங்கடலிலே அடிக்கடி அந்தரடித்துக் குதித்துக் குளிப்பார்கள். பொங்குமாங் கடலில் அடித்தரை வரையிலும் சென்று அங்குள்ள மண்ணைக் கையிலே கௌவிக் கொண்டு வருவார்கள். இத்தகைய விளையாட்டு

களெல்லாம் அவர்களுடைய பொன்மேனிக்கு வன்மையை யும் உறுதியையும் அழகையும் தந்தன. வயதான பின்னர் பொங்குமாங் கடலில் 'அந்தரடித்துக் குளிப்பதை நிறுத்தி விட்டார்கள். ஆனால், இலக்கியத்திலும் கலையிலும் சமயத்திலும் இருக்கும் ஆழமான பொங்குமாங் கடல் களில் துணிச்சலோடு அவர்கள் குதிப்பார்கள்; குதித்து அங்குள்ள அரிய முத்துக்களைக் கையிலேந்தி வந்து தமிழர்களுக்கு வழங்குவார்கள்.

திருநெல்வேலியில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, திருச்சி செயின்ட் ஜோஸப் கல்லூரியில் எப்.ஏ. படிப்பையும், பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி.ஏ. படிப்பையும் படித்து முடித்தார்கள். பள்ளிப் படிப்பு சுவையற்றதாக இருந்தது. ஆகவே, பாடப் புத்தகங்களை ஒதுக்கிவிட்டு, தமக்குப் பிடித்தமாக உள்ள நூல்களைப் படித்தார்கள். சிறப்பாக உயிரியல் (Biology) பற்றிய நூல்களைப் படித்தார்கள். Darwin, Tyndall, Julian Huxley முதலிய விஞ்ஞானி களுடைய நூல்களையும், Herbert Spencer எழுதிய தத்துவ நூல்களையும், ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகங் களையும், Robert Burns, Keats முதலியோருடைய கவிதை களையும் ஊன்றிப் படித்தார்கள். ஆங்கில வசன கர்த்தாக்களில் A. G. Gardiner உடைய நூல்களே டி.கே.சி.க்கு மிகமிக விருப்பமானவை. உரைநடை யென்றால் Gardiner உடைய நடை போலிருக்க வேண்டும் என்று அடிக்கடி டி.கே.சி. சொல்லுவார்கள். இந்த மாதிரி நூல்களைப் படித்ததன் விளைவாக, டி.கே.சி.யின் உள்ளம் நன்றாகப் பண்பட்டது. எதையும் விஞ்ஞான அடிப்படையில் அணுகும் திறனும், உணர்ச்சியோடும் உண்மையோடும் ஒட்டிப்பழகும் பாங்கும், அனுபவத்

துக்கும் உண்மைக்கும் ஒவ்வாத எதையும் ஒதுக்கித் தள்ளும் துணிச்சலும் அவர்களுக்கு ஏற்பட்டன. ரவீந்திரநாததாகூரின் கருத்துக்கள் டி.கே.சி.யின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன.

சென்னையில் பி.எல். பட்டம் பெற்ற பின்னர், 1915-ல் திருநெல்வேலியில் வழக்கறிஞராக வேலை பயிலத் தொடங்கினார்கள். 1927-ல் சென்னை மேல் சட்டசபை உறுப்பினராகத் தேர்தலில் வெற்றி பெறும்வரை, அதாவது, 12 ஆண்டுகள், வழக்கறிஞர் போர்டு அவர்கள் வீட்டு முகப்பில் தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் தமிழருடைய அதிர்ஷ்டம், வழக்கறிஞர் தொழிலில் அவர்கள் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. காரணம், கடுமையான மலேரியா ஜுரம் அவர்களைத் தாக்கிப் படுக்கையிலே இருத்தி வைத்து விட்டது.

''மலேரியா ஜுரத்தால் கஷ்டப்பட்ட 12 ஆண்டுகளிலும் எனக்குத் துணையாக இருந்தவை இரண்டு:—கம்பராமாயணமும் ஒரு பச்சைக் கம்பளியும்'' என்று டி.கே.சி.யே அடிக்கடி சொல்லுவார்கள். திருநெல்வேலி கைலாசபுரத்தில் வழக்கறிஞராக இருந்த எம். எஸ். சுப்பையா முதலியார் என்பவரே டி.கே.சி.யைக் கம்பனிடத்திலே ஆற்றுப்படுத்தியவர். 'கங்கைப் படலம்' முதலிய முக்கியமான படலங்களை டி.கே.சி.க்கு வாசித்துக் காட்டி, கம்பனுடைய பெருமையைப் பற்றி அடிக்கடி டி.கே.சி.க்குச் சொல்லிவந்தவர் சுப்பையா முதலியார். அவருடைய தூண்டுதலின் பேரில் டி.கே.சி. கம்பராமாயணம் முழுவதையும் படித்து முடித்தார்கள். அப்படிப் படித்துக் கொண்டிருக்கும்போதுதான் டி.கே.சி. கீழ்க் கண்ட உண்மைகளைக் கண்டுபிடித்தார்கள்:—12,000 பாடல்களுக்கு மேலுள்ள கம்பராமாயணப் புத்தகத்தில்

சில கட்டங்கள் மிக உயர்வாக இருக்கும். உலக இலக்கியத்திலேயே இவ்வளவு உயர்வான, உன்னதமான சிகரங்கள் கிடையாது என்று சொல்லும்படியிருக்கும். கம்பனுடைய கவிதைச் சிகரங்களில் நின்று அவனை மெச்சிக்கொண்டிருக்கும் நம்மை, திடீரென்று சில இலைச்சுப்போன பாடல்கள் வந்து அதல பாதாளத்தில் தள்ளிவிடும். குகன், கும்பகர்ணன் போன்ற பாத்திரங்களை அற்புதமாகப் படைத்திருப்பான் கம்பன். வான்மீகி அந்தப் பாத்திரங்களை வார்த்த வார்ப்பு வேறு; கம்பன் அவற்றை வார்த்த வார்ப்பு வேறு. இதையறியாமல், சிலர் வான்மீகியின் பாடல்களைத் தமிழில் அப்படி அப்படியே மொழி பெயர்த்து, அப்பாடல்களையும் இடைச் செருகலாக ஏட்டில் செருகியிருப்பார்கள். அந்தப் பாடல்கள் கம்பனுடைய பாத்திரங்களின் தனித்த சிறப்பைக் கெடுத்துவிடும். இடைச் செருகல்களைக் களைந்துவிட்டுப் பார்த்தால், கம்பனுடைய பாத்திர சிருஷ்டி பளிங்கில் வைத்துக் காட்டின மாதிரி தெரியும். நான்கு வரிகள் கொண்ட சில பாடல்களில் மூன்று வரிகள் பிரமாதமாக இருக்கும், ஒரு வரி மாத்திரம் அபஸ்வரம் போல மற்ற வரிகளோடு இணங்காமல் பிய்ந்து தொங்கிக்கொண்டு நிற்கும். கவித்துவ இதயம் படைத்த டி.கே.சி., கம்பன் இதயத்தோடு பழகிப்பழகித் தம்மையே கம்பனுடைய மேதாவிலாஸத்தில் கரைத்துக் கொண்ட டி.கே.சி., மணிக்கணக்காகக் கம்பன் பாட்டைச் சொல்லிச் சொல்லிச் சமாதி நிலையை யடையவல்ல டி.கே.சி., மிகுந்த கவலையோடும் பக்தி சிரத்தையோடும் பிழை எப்படி ஏற்பட்டது என்று ஆய்ந்து அறிந்து பிழையைத் திருத்துவார்கள். உடனே, அதுவரையிலும் அபத்தமாக இருந்த கம்பன் பாடல் ஒரு புதிய பொருளும் ஒளியும் பெற்று மிளிரத் தொடங்கிவிடும்.

1927 முதல் 1930 வரை டி.கே.சி. சென்னை மேல் சட்டசபை உறுப்பினராக இருந்தார்கள். சட்டசபைக் கூட்டத்துக்குப் போகும்போதுகூட டி.கே.சி. கையில் கம்பராமாயணப் புத்தகம் இருக்கும். ''என்ன சார், சட்டசபைக்குப் போகும்போதுகூடவா கம்பராமாயணம்?'' என்று ஒரு நண்பர் கேட்டாராம். ''சரி, இனிமேல் அட்டை போடாமல் கம்பனைப் படிப்பதில்லை'' என்று டி.கே.சி. ஒரு சபதம் செய்து கொண்டார்களாம்.

1930 முதல் 1935 வரை இந்துமத பரிபாலன போர்டின் கமிஷனராக டி.கே.சி. வேலை பார்த்தார்கள். இந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் நாட்டிலுள்ள மடங்கள், கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள், சமயச் சடங்குகள் ஆகியவற்றையெல்லாம் டி.கே.சி. கூர்ந்து கவனித்தார்கள் அவற்றின் உட்பொருளை உவந்து அனுபவித்தார்கள். அவர்களுடைய அனுபவங்களை உணர்ச்சியும் ஆனந்தமும் மிக்க தமிழிலே தமிழர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். ''புது டில்லியை 100 கோடி ரூபாய் செலவழித்துக் கட்டியிருக்கிறார்கள். எல்லாம் செங்கல்லும் சுண்ணாம்புந் தான். இயற்கை அழகு என்பது ரொம்ப ரொம்பக் குறைவு. குத்தப்மினார், செங்கோட்டை மாளிகை எல்லாம் பார்த்தேன். மனுஷனையும் அவனது ஆணவத்தையும் சிறப்பித்துக் காட்டுபவை அவை. கடவுளைச் சுட்டிக்காட்ட வேண்டுமானால் தமிழ் நாட்டுக் கோயில்களைத்தான் பார்க்க வேண்டும்'' என்று டி.கே.சி. சொல்லுவார்கள். தமிழ் இசையும், சிற்பமும், ஓவியமும், பரத நாட்டியமும், சமய ஞானமும், தமிழ்க் கவிதையும்—எல்லாம் கோயிலைச் சுற்றியே வளர்ந்து வந்தவை. தமிழர் வாழ்க்கையும் சமயமும் ஒன்றோடொன்று விரவிக் கலந்தவை; ஆணவத்தை அகற்றி ஆனந்தத்தை

விளைவிப்பவை. இந்த அரிய பண்பாட்டைச் சீதனமாகத் தமிழர்கள் உலகத்துக்கே கொடுக்கலாம் என்று டி.கே.சி. சொல்லுவார்கள்.

1935-ல் கமிஷனர் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், டி.கே.சி., திருநெல்வேலியில் ஒரு பகுதியான வண்ணார் பேட்டைக்கு வந்தார்கள். வந்தவுடன் வட்டத் தொட்டியை அவர்கள் இல்லத்திலேயே தொடங்கினார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கூட்டம் நடக்கும். பல அரிய விஷயங்களைப் பற்றித் தெளிவோடும் உறுதியோடும் டி.கே.சி. பேசுவார்கள். பிற்காலத்திலே சிறந்த எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், நாவலாசிரியர்களாகவும் பெயர் வாங்கப் போகிற பலர் டி.கே.சி.யால் உருவாக்கப்பட்டார்கள். ராஜாஜி, பி. ஸ்ரீ. ஆச்சார்யா, ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், மகரபூஷணம், ஆவுடையப்ப பிள்ளை, கல்கி, பாஸ்கரத் தொண்டைமான், பேராசிரியர் சீனிவாசராகவன், ஆ. முத்துசிவம், நான், சுந்தா, சோமு, சுகி, மாறன், ல. ஷண்முக சுந்தரம், துறைவன் முதலியோர் வட்டத் தொட்டியின் உறுப்பினர்கள். ஆங்கிலம் படித்த மேதைகள் பலர் டி.கே.சி. மூலமும் டி.கே.சி.யின் வட்டத்தொட்டிச் சீடர்கள் மூலமும் தமிழ்க் கவிதையின் சிறப்பையும் தமிழ்ப் பண்பாட்டின், சிறப்பையும் உணர்ந்து தமிழ்க் காதலர்களானார்கள். அதுமாத்திரமல்ல, (Literary taste) இலக்கியச் சுவையைத் தமிழ்நாட்டில் வளர்ப்பதற்கும், கவிதையையும் கலைகளையும் தமிழர்கள் உணர்ந்து அனுபவிப்பதற்கும் டி.கே.சி.யின் பள்ளிக்கூடம் டி.கே.சி.யின் தலைமையில் மகத்தான சேவை செய்திருக்கிறது. 1935 முதல் 1954 வரையில் டி.கே.சி. எழுதிய நூல்கள்: 'இதய ஒலி', 'கம்பர் தரும் ராமாயணம்', 'கம்பர் யார்?',

'முத்தொள்ளாயிரம்', 'தமிழ்க் களஞ்சியம்' ஆகியவை.

பெரும்பாணாற்றுப்படையை உயர்ந்த கவிதை நூல் என்று பலர் அந்தக் காலத்தில் உச்சிமேல் வைத்து ஆடுவார்கள். ''அது கவிதையல்ல. முத்தொள்ளாயிரம், குறள், தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், கலிங்கத்துப் பரணி, நந்திக் கலம்பகம், குற்றாலக் குறவஞ்சி, ராமலிங்கர் பாடல்கள், பாரதி பாடல்கள், தேசிக விநாயகம் பிள்ளை பாடல்கள்— இவற்றிலேதான் கவிதையிருக்கிறது, அதை அனுபவியுங்கள்'' என்று டி.கே.சி. சொல்லுவார்கள். ஆனால், பெரும்பாணாற்றுப் படை, காஞ்சி புராணம் முதலியவற்றையே கவிதையென்று நினைத்து மயங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு, டி.கே.சி. சுட்டிக்காட்டிய உண்மைக் கவிதையிலே ருசி காண முடியவில்லை. அவர்களைப் பார்த்துக் கழிபேரிரக்கத்தோடு டி.கே.சி. சொல்லுவார்கள் :— ''கருப்பஞ்சாறு ஆறாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதை விட்டுவிட்டுச் சோளத்தட்டையைச் சுவை போட்டுக் கொண்டிருக்கிறீர்களே'' என்று. ''எலும்பைக் கடித்துப் பழகியபின் கரும்பு இளைத்துத்தானே இருக்கும்'' என்று சொல்லி பழக்கத்தால் வந்த கொடுமையை ரஸிகமணி விளக்குவார்கள்.

''கலையுலகம் பாழ்பட்ட உலகம் என்று சொல்லலாம். தமிழ்க் கவியை எடுத்துக்கொண்டால் தணிகைப் புராணம், காஞ்சி புராணம், வில்லிபுத்தூரார் எல்லாரும் போட்ட கூப்பாட்டில் கம்பர் போன இடம் தெரியாமல் போய்விட்டது. காளமேகத்துக்கு முன்னால் பட்டினத்தாரும் திருமூலரும் ஓட்டம் பிடித்தார்கள்...கவி என்பது அற்புத ஒளிவிடும் ரத்னம். அந்த ஒளியைக் காண்பது

எளிதல்ல. கண்ணுக்குப் புலப்பட்டு விட்டால், முடி வில்லாத ஒளி ஊற்றாக அது இருக்கும். ஆனால், அதைப் பிரகாசிக்க யார் இடம் கொடுக்கிறார்கள்? கீல் எண்ணெய், மோட்டார் மசகெண்ணெய் இரண்டையும் குழப்பி கவிதா தெய்வத்தின்மேல் அபிஷேகம் செய்து கொண்டே இருக்கிறார்கள்! பிறகு யார் காண அந்தத் தெய்வ ஒளியை?' என்று எனக்கு எழுதிய கடிதத்தில் டி.கே.சி. வருந்தியிருக்கிறார்கள்.

டி.கே சி. கம்பன் பாடல் இல்லை என்று விட்ட பாடல்களைச் சில புலவர்கள் வேண்டுமென்றே எடுத்து "ஆஹா, ஒஹோ, இப்படியுண்டா!" என்று வியாக்யானம் செய்வார்கள். இந்தக் காட்சிகளைக் கண்ட டி.கே.சி.க்குக் கம்பனிடத்திலே இரக்கமே ஏற்பட்டுவிடும். "இப்படி யெல்லாம் வைக்கோல் புரிகளைக் கம்பன் தலையில் சரிகைத் தலைப்பா என்று கட்டுகிறார்களே" என்று இரங்குவார்கள்.

வட்டத்தொட்டியிலே கவிதையைப் பற்றி மாத்திர மல்ல, பரத நாட்டியத்தைப்பற்றியும், சங்கீதத்தைப்பற்றி யும், சிற்பத்தைப்பற்றியும் டி.கே.சி. விளக்குவார்கள். பால சரஸ்வதியையும் கவி தேசிகவிநாயகம் பிள்ளையையும் முத்தொள்ளாயிரத்தையும் கண்டெடுத்துப் போற்றி உலகமெல்லாம் ஒப்புக்கொள்ளச் செய்தது டி.கே.சி. தான்.

டி.கே.சி. கவிதையைப் படிக்கக் கூடாது, ராகத்தோடு பாடவேண்டும் என்று வற்புறுத்துவார்கள். தமிழ்ப் பாடல்களை வஸந்தா, காவேரி, நாதநாமக்கிரியை, சங்க ராபரணம் முதலிய அவர்களுக்குப் பிரியமான ராகங்களில் டி.கே.சி. உணர்ச்சியில் நின்று பாடும்போது, தேவாமிர் தத்தை நமக்கு ஊட்டுவது போலிருக்கும். அவர்களுடைய

வாழ்க்கை ஆனந்தம் நிறைந்த வாழ்க்கை. அவர்களோடிருந்தவர்களுக்கு டி.கே சி. ஆனந்தத்தை வாரி, வாரி வழங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் மறைந்தது 16.2.54ல். மறைவதற்கு முன்னால் அவர்கள் பேசிய கடைசி வார்த்தைகள் இவை :— "ஒரு ஆனந்த லோகத்துக்கு என்னை இழுத்துக்கொண்டு போகிறது என் மனசு. ஆகையினால்தான் உங்களோடெல்லாம் பேச முடியவில்லை."

டி.கே.சி.யே சொல்லுவார்கள் :— "சென்ற 40, 50 ஆண்டுகளாக நான் தமிழ்க் கவிதையைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும் தெளிவாகப் பேசி வந்திருக்கிறேன். ஆனால், என்னைப் புரிந்து கொண்டவர்கள் அரை டஜன் பேர்தான். அவர்களிலும் சிலர் என் முன்னிலையில் புரிந்துகொண்டதுபோல இருப்பார்கள். என்னைவிட்டுப் போன பின், பழைய இருட்டடிப்புதான்.

"சூரியனாலேயே இருட்டை ஒரேயடியாக ஒழிக்க முடியவில்லையே; நம்மாலே எப்படி முடியும்?" என்று டி.கே.சி. தமக்கே சமாதானம் சொல்லிக்கொள்வார்கள்.

"சூரியன் தினம் தினம் வருகிறான். ஏன் ஒரேயடியாய் இருட்டை ஒழிக்க முடியவில்லை அவனுக்கு? அப்பாவி, என்ன செய்வான்! வந்து தொலைகிறான். மாலை 6 மணிக்கு மறைகிறான், அந்த க்ஷணமே இருள் மூடிக் கொள்கிறது" என்பது டி.கே.சி.யின் விளக்கம்.

தமிழ் இலக்கிய வானில் டி.கே.சி. என்ற ஸ்தூல சூரியன் 16.2.54ல் மறைந்துவிட்டபோதிலும் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் உள்ளத்திலே டி.கே:சி. என்ற சூக்ஷ்ம சூரியன் ஒளி வீசிக்கொண்டே நிற்கும்.

# 7. டி.கே.சி.யும் அழகுணர்ச்சியும்

கவிஞர்கள் அழகுக் காட்சிகளைப் படைத்ததோடு நின்றுவிடாமல், அந்தக் காட்சிகளை அனுபவிப்பதற்கு வசதியான கண்களையும் வாசகர்களுக்குக் கொடுக்க வேண்டும். இது கவிஞர்களுடைய கடமை. இந்தக் கடமையில் கவிஞர்கள் தவறும்போது டி.கே.சி.யைப் போன்ற ரசிகமணிகள் தம்முடைய கவிக்கண்களை நமக்கு நல்கிக் கவிக்காட்சிகளை நாம் அனுபவிக்கும்படி உதவுகிறார்கள்.

நகரை நீங்கி வனத்தில் தங்கியிருக்கும் ராமனைச் சுமந்திரன் அயோத்திக்கு வரவேண்டும் என்று கெஞ்சிக் கேட்கிறான். அயோத்தி வர மறுத்துவிட்டு பதில் சொல்லுகிறான் ராமன் :— ''என்னைப் பெற்றெடுத்த தாயார் மூவர்க்கும் என் நெடுவணக்கத்தைக் கூறு. பரத னுடைய துயர் துடைத்து அவன் பக்கத்திலேயிரு'' இப்படி அன்பு கனியச் சொன்னவன் யார் என்று கம்பர் சொல்லுகிறார் :

**'மறைகளை மறைந்து போய்**
**வனத்துள் வைகுவான்'**

இறைவனாகிய இராமன் வேதங்களிலிருந்து மறைந்துபோய், வனத்துக்குள்ளே உட்கார்ந்து கொண் டானாம். இந்தக் கருத்தைப் புரிய வைக்கிறார்கள். டி.கே.சி :— 'கடவுளைக் காணுவதற்கு ஆணவம்

நம்மை விட்டு நீங்கவேண்டும். நாட்டுக்குள்ளும் நகரத்துக் குள்ளும் நாம் இருக்கும்போது, ''நான் இந்தக் கட்டடத்தைக் கட்டினேன், எங்கள் தாத்தா அந்த வயலைத் திருத்தினார்' என்றுதான் சொல்லத் தோன்றும். காரணம், வீடு, வயல் எல்லாம் மனுஷனுடைய செயலால் விளைவது. வனத்துக்குள் போய்விட்டாலோ, ஓங்கி உயர்ந்த மரங்களைப் பார்க்கிறோம். பச்சையிலேயே 200 விதமான பச்சைகள். மனிதச் செயல் என்று சொல்லக்கூடிய பொருள் ஒன்றுமில்லை வனத்திலே. எல்லாம் இறைவனுடைய செயல் என்ற எண்ணம் வனத்திலே நமக்கு ஏற்படுகிறது. நம்முடைய ஆணவச் செயல் பம்முகிறது. இதைத்தான் கம்பர் சொன்னார்:

**'மறைகளை மறைந்து போய்**
**வனத்துள் வைகுவான்'**

இறைவனாகிய இராமன் என்று.

இப்படியாக டி.கே.சி. விளக்கும் போதுதான் ஒரு புதிய காட்சி நமக்குக் கிட்டுகிறது.

ஒரு நாள் ஆற்றங்கரைப் படுகையில் உட்கார்ந்திருந் தான் ராமன். அங்கே ஒரு காட்சி. அன்னமொன்று வந்து ராமன் பக்கமாக அசைந்து அசைந்து போயிற்று. அந்த நடையைப் பார்த்த ராமன் தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த சீதையின் குழைந்து நெளிந்து நடக்கும் நடையை உற்றுப் பார்த்து சிறியதோர் முறுவல் செய்தான். சீதையென்ன செய்தாள்? அங்குவந்து தண்ணீரைக் குடித்து விட்டுப் போய்க்கொண்டிருந்த கம்பீரமான ஆண் யானையொன்றின் நடையை நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள். இவ்வாறு பேசுகிறது ஒரு கம்பர் பாடல்;

**ஓதிமம் ஒதுங்கக் கண்ட**
**உத்தமன், உழையளாகும்**
**சீதைதன் நடையை நோக்கிச்**
**சிறியதோர் முறுவல்செய் தான்—**

**மாதவள் தானும், ஆண்டு**
**வந்துநீர் உண்டுமீளும்**
**போதகம் நடப்பநோக்கிப்**
**புதியதோர் முறுவல்பூத்தாள்**

இதற்கு டி.கே.சி. கொடுக்கும் விளக்கம் இது:—''உலகத்தில் நமக்கு உவந்த பொருளின் செயல் எல்லாம் அழகாய் இருக்கிறது. அந்தச் செயல்களோடு ஒத்து வேறொரு பொருளின் செயல் நிகழுமானால், அந்தச் செயலுக்குள்ளும் அழகு ஏறிவிடுகிறது. அதன்பிறகு மாறி, மாறி அழகு அந்தப் பொருள்களிடத்தில் பாய்கிறது. பெண்களின் நடை அழகாக இருக்கிற காரணத்தால், அதை ஒத்து நடக்கும் அன்னத்தின் நடையும் அழகாயிருக்கிறது. பிறகு, அன்னத்தின் நடையை மனதில் வைத்துக் கொண்டு, பெண்ணின் நடையைப் பார்ப்போமானால், முன் கண்ட அழகைவிட, அதிகமான அழகைப் பெண்ணின் நடையில் காண்கிறோம். இந்தவிதமாக அழகு மாறிமாறிப் பாய்ந்து பெண்ணின் நடையிலும், அன்னத்தின் நடையிலும் வளர்ந்தேறும் ரசத்தைப் பார்க்கிறோம். இது அழகு தத்துவத்தில் காணும் ஒரு அரிய உண்மை.''

இப்படியாக அழகு விளக்கம் கொடுத்து, கண்டறியாதனவற்றைக் காணச் செய்வார்கள் ரசிகமணி.

## 8. டி.கே.சி.யின் உள்ளுணர்வு

தன் மார்பிலே தைத்தது ராமபாணம் என்று தெரிந்தவுடன், வாலி, ராமனைப் பார்த்துப் பேசுகிறான்: "அரச தர்மம் உங்கள் குலத்திலே தோன்றியவர்களுக்கெல்லாம் உடைமையல்லவா. ஆனால் நீ லக்ஷியத்தை விட்டுத் தவறி விட்டாயே" என்று கூறுகிறான். அப்படிக் கூறிக்கொண்டிருக்கும்போதே, ராமனுடைய நீலமயமான திருமேனியில் வாலி ஈடுபடுகிறான். இதைக் கம்பர் ஓர் அரிய பாட்டில் எடுத்துச் சொல்லுகிறார்:

**கோவியல் தருமம் நுங்கள்**
**குலத்துதித் தோர்கட் கெல்லாம்**
**ஓவியத்(து) எழுதவொண்ணா**
**உருவத்தாய் உடைமையன்றோ**
**ஆவியைச் சனகன் பெற்ற**
**அன்னத்தை அமிழ்தின்வந்த**
**தேவியைப் பிரிந்த பின்னைத்**
**திகைத்தனை போலும் செய்கை**

என்பது கம்பர் பாடல்.

இதிலே 'ஓவியத் தெழுத வொண்ணா உருவத்தாய்' என்ற வாசகத்துக்கு எல்லா உரையாசிரியர்களுமே மேலெழுந்த வாரியாக உரை சொல்லுவார்கள். ஆனால் ரஸிகமணி ஓவியக் கலையின் நுட்பத்தை யுணர்ந்தவர்

களாகையால், அவர்களுடைய உரை உள்ளுணர்வோடு பேசுகிறது. எப்படி?

"பொதுவாக ஒருவர் முகத்திலும் உடல் அமைப்பிலும் அழகின் அம்சங்கள் ஆங்காங்கு சிதறிக்கிடக்கும். சாமான்யமாகப் பார்ப்பவர்களுக்கு அவை தென்படாமல் போய்விடலாம். ஆனால் சித்திரக்காரன் என்ன செய்கிறான்? அந்த அம்சங்களை மாத்திரம் எடுத்து, அவைகளுக்கு அழுத்தம் கொடுத்துவிடுகிறான். இந்தத் தெளித்தல் காரணமாக இயற்கையில் உள்ள அழகைவிட சித்திரத்தில் அழகு அதிகமாகி விடுகிறது. ஆனால் ராமனிடத்திலோ எல்லா அம்சங்களும் அழகுடன் நிற்கின்றன. தெளிப்பதற்கு இடமில்லை. சித்திரக்கலை தெளிப்பதனாலேயே குறைபட்டு விடுகிறது. இராமனது இயற்கையழகு அவ்வளவு பூரணமாக இருக்கிறது என்று பொருள். ஆகவேதான் "ஓவியத்தெழுத வொண்ணா உருவத்தாய்" என்று கம்பர் ராமனுடைய அழகை வருணிக்கிறார்."

இப்படியாக டி.கே.சி. விளக்கம் உள்ளுணர்விலிருந்து வந்து உண்மைக்கு மத்தாப்பூப் போட்டுக் காட்டும்.

'ஆதி தேவர் அவர்
எம்அறிவி னுக்கறிவ
ரோ'

என்று இறைவன் இருக்குமிடத்தைத் தொட்டுக் காட்டுகிறார் கம்பர். ஆனால் அது என்னவென்று நமக்குப் புரிவதில்லை. டி.கே.சி. விளக்கம் அற்புதமாக அதைத் தெளிவுபடுத்துகிறது. சொல்லுகிறார்கள் டி.கே.சி.:— "ஒரு புஸ்தகத்தை எடுத்து வாசிக்கிறோம். எழுத்துக்கள் தெளிவாய் இல்லை. கண்ணாடியைப் போட்டுப் பார்க்

கிறோம். எழுத்துக்கள் தெளிவாகி விடுகின்றன. அப்போது கண்ணின் பார்வைக்குக் கண்ணாடி கருவியாக இருக்கிறது. கண்ணாடிக்குக் கர்த்தாவாக இருப்பது கண். இன்னும் உள்ளே சென்று பார்த்தால், கண்ணும் ஒரு கருவியே என்று தோன்றும். கண்ணைக் கருவியாக வைத்துப் பார்ப்பது நமது அறிவு. இந்த முறையில் ஆராய்ந்து அறிவு தத்துவத்துக்குப் போவோமானால், நம்முடைய அறிவு ஒரு கருவிதான் என்று தெரியும். அந்த அறிவாகிய கருவியை உபயோகிப்பது எது? எங்கும் நிறைந்த அறிவு மயமாயிருக்கிற கடவுள்தான். ஆகவே கண்ணுக்கு எப்படி நம் ஆணவ அறிவு கர்த்தாவாக அமைந்திருக்கிறதோ, அப்படியேதான் நம்முடைய ஆணவ அறிவுக்குக் கடவுளாகிய பேரறிவு கர்த்தாவாக அமைந்திருக்கிறது. இப்படியாக, அறிவினுக்கறிவரோ என்ற கம்ப சூத்திரத்தின் உட்பொருளை டி.கே.சி.யின் விளக்கம் நமக்கு எப்படியோ உணர்த்தி விடுகிறது.

'ஆதி தேவர் அவர்
எம்அறிவி னுக்கறிவ
ரோ'

# 9. கவிமணியும் ரஸிகமணியும்*

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களைத் திருநெல்வேலியில் சந்தித்தேன். அப்பொழுது அவர்கள் கல்வெட்டு ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து, ''கல்வெட்டு ஆராய்ச்சிக்கு எத்தனையோ பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். தாங்களோ அபூர்வப் பிறவி; கவி எழுதுவதற்காகவே பிறவி எடுத்திருக்கிறீர்கள்; ஆகையால், கல்வெட்டு ஆராய்ச்சியையெல்லாம் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, தாங்கள் அடிக்கடி கவி எழுத வேண்டும்; கவி எழுதித் தமிழுக்கு உதவ வேண்டும்'', என்று விண்ணப்பம் செய்து கொண்டேன். இதைக் கேட்டுக்கொண்டிருந்த கவிஞர், 'சரேல்' என்று சிரித்து விட்டார்கள். பிறகு, அவர்களுக்கே உரிய பரிவோடும் இரக்கத்தோடும் என்னைப் பார்த்து, ''நீரிழிவு நோய் என்னைக் கொஞ்ச காலமாக அல்லற் படுத்தி வருகிறது. ஒரு வெண்பாவை நான் எழுதி முடிப்பதற்குள், நீரில் இனிப்பு மிகுந்துவிடுகிறது. ஆகவேதான், கவி எழுதும் தொழிலை நான் மட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறேன்'', என்று சொன்னார்கள், அப்பொழுதுதான் தெரிந்தது, உண்மையான, உணர்ச்சிமிக்க கவி ஒன்று நமக்குக் கிடைக்க வேண்டுமென்றால், கவிஞன் தன்

---

* 1970-ல் எழுதியது.

உடம்பையும் உயிரையுமே பிழிந்து அதில் கொட்ட வேண்டியிருக்கிறது என்று.

சிலந்திப்பூச்சி தனக்கு வீடு கட்டுகிறது என்றால், கடைக்குப் போய்ச் சுண்ணாம்பும் செங்கல்லும் வாங்கியா வீடு கட்டுகிறது! தன் உடம்பினுள்ளிருந்து ஒரு பிசினைப் பிதுக்குகிறது; அதைக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக ஒரு அற்புத வலையைப் பின்னுகிறது. பசுவின் பால் நமக்குச் சுவையாக இருக்கிறது. ஆனால், தன் இரத்தத்திலிருந்தல்லவா பாலைப் பசு நமக்கு உற்பத்தி செய்து கொடுக்கிறது. அதைப் போலவே, நமக்கு ஆனந்தம் கொடுப்பதற்காகக் கவிஞன் தன் உடல் சத்தையும் உயிர்ச் சத்தையுமே தன் கவிதையில் பெய்து வைக்கிறான்.

கவியென்பது பலசரக்குக் கடையில் வாங்கக்கூடிய பொருளல்ல; சப்பாத்திக்கள்ளியில் படரக்கூடிய பொருளுமல்ல. இதைக் கருத்தில்கொண்டே போதெலெயர் (Baudelaire) என்ற ஃப்ரெஞ்ச் கவி சொன்னார்:- "ஒரு உருவமற்ற கருத்துக்குக் கலையுருவம் கொடுப்பதற்குள் கலைஞன் உடம்பையும் உள்ளத்தையும் வருத்தி வேலை வாங்க வேண்டியிருக்கிறது" என்று.

ஆனால், கவியை அல்லது கலையைத் துய்க்கும் ரஸிகனுக்குக் கிடைப்பதெல்லாம் கலப்படமில்லாத ஆனந்தம். வேதனை என்பது அவன் ஏட்டிலேயே கிடையாது.

ரஸிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கும் கவிமணியைப்போலே, நீரிழிவு நோய் இருக்கத் தான் செய்தது. ஆனால், அவர்கள் கவியை யனுபவிக்கத் தொடங்கிவிட்டால் அவர்களைப் பற்றியிருந்த நோய்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடிவிடும். ஒருநாள் அவர்களுக்குக் கடுமையான காய்ச்சல்

அடித்துக் கொண்டிருந்தபோது, அவர்களைப் பார்க்கக் குற்றாலம் போயிருந்தேன். என்னைக் கண்டதும் அவர்கள் படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்துகொண்டார்கள். நாக்கிலே தெர்மாமீட்டரை வைத்துப் பார்த்தேன்; 103 டிகிரி இருந்தது. "உடம்பை அலட்டிக்கொள்ள வேண்டாம். நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்", என்று சொல்லி, மெல்ல நழுவப் பார்த்தேன்; ஆனால், அவர்கள் விடுவதாக இல்லை. "கவியை அனுபவிக்கும்போது நான் என்னை மறந்துவிடுகிறேன். நோயும் என்னை மறந்துவிடுகிறது. உங்களோடு சேர்ந்து அனுபவிக்கும்போது கவிதை எனக்கு ஒரு டானிக்காகவே இருக்கிறது. ஆகையால், இருங்கள், ஒரு பாடலைக் கேளுங்கள்", என்று சொல்லி, தேசிக விநாயகம் பிள்ளையவர்களுடைய கவி ஒன்றை எடுத்துப் பாடினார்கள். பாட்டைப் பாடப் பாட அவர்கள் முகத்திலே ஒரு பொலிவு தோன்றியது, சோர்வு பறந்தோடிவிட்டது.

**"தில்லைப் பதியுடையான் சிற்றம் பலந்தன்னில்**
**அல்லும் பகலும்நின் றாடுகின்றான்—எல்லைக்கண்**
**அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்**
**கண்ணாரக் கண்டு களித்து."**

என்ற பாடலை விளக்கினார்கள். "அண்ணா ஆ ஆ ஆ மலைமன்' என்ற வாய் நிறைந்த சொல்லை எப்படிக் கவிஞர் அனுபவித்துவிட்டார். பாருங்கள்!" என்று சொல்லிப் பல முறை பாடலை ஆர்வத்தோடு பாடிக் காட்டினார்கள். பாடலுக்கு விளக்கம் ஒரு மணி நேரம் கிடைத்தது. விளக்கம் முடிந்ததும், காய்ச்சலைப் பற்றிய நினைவு எனக்கு வந்தது. மறுபடியும் தெர்மா மீட்டரை எடுத்து அவர்களுடைய நாக்கடியில் வைத்துப் பார்த்தேன். 98.45 டிக்ரிக்கு இறங்கிவிட்டது சூடு.

ஒத்த உணர்ச்சியோடு டி.கே.சி யைப் போல் அனுபவிக்கக் கூடிய ரஸிகனுக்காகவே தவங்கிடக்கிறான் கவிஞன். அப்படி ஒரு ரஸிகன் கிடைப்பதற்குப் பல நூற்றாண்டுகள் ஆகலாம். கம்பனைப் போன்ற ஒரு ரஸிகன் கிடைப்பதற்கு வள்ளுவர் எழுநூறு ஆண்டுகள் காத்திருந்தார். டி. கே. சி. யைப் போன்ற ஒரு ரஸிகன் கிடைப்பதற்குக் கம்பன் ஆயிரம் ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், கவிமணிக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டம் என்னவென்றால், தம் வாழ்நாளிலேயே அத்தகைய ரஸிகனைப் பெற்று, அந்த ரஸிகனோடு நெருங்கி உறவாடும் வாய்ப்பையும் பெற்றார்கள். இவ்வாறு ஒரு ரஸிகன் கிடைத்த மாத்திரத்தில் கவிஞனுக்குப் பிறவிப் பெரும்பயனே கிட்டிவிடுகிறது; படைக்கும்போது கூட இல்லாத ஆனந்தம், ஸஹிருதயனைப் பெற்றவுடன் கவிஞனுக்குக் கிடைத்துவிடுகிறது. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் நிலைபேற்றை அடைந்து விடுகிறான் அவன்.

**1944**-இல் தென்காசி திருவள்ளுவர் கழகத்தில் கவிமணிக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. விழாவுக்குத் தலைமை வகித்தது டி. கே. சி. கவிமணிக்கு ஒரு பொன்னாடையைப் போர்த்தி, அவர்களை ஏற இறங்கப் பார்த்து அனுபவித்துக் கொண்டேயிருந்தார்கள். டி.கே. சி. பாராட்டுரை "கவிஞரேறே" என்ற சொல்லோடு தொடங்கியது. 'ரே றே' என்ற ஒலிகளில் ஒரு அழுத்தம் கொடுத்து, கவிஞரோடு தமக்கிருக்கும் தோழமையை ரஸிகமணி வெளியிட்டார்கள். பிறகு, கவிமணியின் பாடல்களைப் பாடிக் காட்டினார்கள். கவிஞருடைய இதயத்தோடு ஒட்டிப் பாடலோடு கரைந்துவிட்டார்கள். பேசியது டி.கே.சி.யா. கவிமணியா என்று தெரியாத வகையில்உணர்ச்சி வசப்பட்டுப் பேசி முடித்தார்கள்.

பாராட்டுரையைக் கேட்டுக்கொண்டிருந்த கவிமணி அப்படியே உருகிவிட்டார்கள். "என்னைப் போன்ற கவிஞனுக்கு உயிர் மூச்சைக் கொடுப்பது பாராட்டுத் தான். ஏதோ, எத்தனையோ கவிக்குழந்தைகளை நான் பெற்றுப் போட்டுவிட்டேன். அவைகளின் அருமை எனக்குத் தெரியாமலிருந்தது. ஆனால், டி.கே.சி. அந்தக் குழந்தைகளையெடுத்துக் குளிப்பாட்டி, உச்சிமோந்து, தலை சீவி, பொட்டிட்டு, முத்தமிட்டுக் கொஞ்சிக்குலாவும் போது தான், நான் பெற்ற பிள்ளைகளுக்கும் இவ்வளவு அழகிருக்கிறதா என்று உணர்ந்தேன்," என்று சொல்லி வியப்பும் களிப்பும் அடைந்தார்கள் கவிமணி.

நல்லதொன்றைக் கண்டுவிட்டால் தலைமேல் வைத்துக் கூத்தாடும் வஞ்சகமற்ற குழந்தையுள்ளம் படைத்தவர்கள் டி.கே.சி. "கண்ணாரக் காண்பதற்கு ஒரு கவிஞர் நமக்குக் கிடைத்துவிட்டார்," என்று கவிமணியைப் பற்றி ஊர் ஊராய்ப் பிரச்சாரம் செய்தார்கள் டி.கே.சி. பால சரஸ்வதியின் அற்புதமான அபிநயக்கலையையும் வியந்து வியந்து பாராட்டி உலகெலாமறியச் செய்தார்கள். இவ்விரண்டு கலைஞர்களையும் கண்டெடுத்தவர்கள் டி.கே.சி. என்று சொல்ல வேண்டும்.

இந்த அபூர்வமான சீலத்தை உடனிருந்து உணர்ந்து அனுபவித்த கவிமணி பாடினார்கள்:—

"என்னருமை நண்பா! இனிய கலைரசிகா!
தென்னர் தமிழ் வளர்த்த தேசிகா?—நன்னயச்
சீலம் சிறந்த சிதம்பர நாதவள்ளால்
சாலநீ வாழ்க தழைத்து"

என்ற மேற்கண்ட வெண்பாவிலிருக்கும் எளிமையும், அருமைப்பாடும், நன்றியுணர்வும், நிறைவும் அபூர்வமானவை. பாடலை எழுதிய கவிமணியும் பாட்டுடைத் தலைவரான ரஸிகமணியும் மறைந்துவிட்டார்கள். ஆனால், கவிஞனுக்கும் ரஸிகனுக்கும் இருந்த, இருக்க வேண்டிய ஆனந்தப் பேருறவை, பாடல் என்றென்றும் உணர்த்திக் கொண்டு நிற்கும்.

# 10. திருந்தத் திருத்திய கை*

"கவிஞனைப் பார்த்து 'கவிதைக்கு இலக்கணம் கூறு', என்று கேட்பது எப்படி இருக்கிறதென்றால், பூனையைப் பார்த்து, 'எலிக்கு இலக்கணம் கூறு', என்று கேட்ட கணக்குத்தான். எலியைக் கண்டால் பூனைக்கு எவ்வளவு கொண்டாட்டமோ, அவ்வளவு கொண்டாட்டமும் கவியைக் கண்டவுடன் கவிஞனாகிய எனக்கு ஏற்படுகிறது. ஆனால், எங்கள் இருவருக்குமே நாங்கள் அனுபவிக்கும் பொருளுக்கு இலக்கணம் கூறத் தெரியாது, என்றாலும், அப்பொருளை இனம் கண்டுகொள்ளத் தெரியும்", என்று சொன்னார் ஓர் ஆங்கிலக் கவிஞர்.

எலியைக் கண்டவுடன் பூனைக்கும், கவிதையைக் கண்டவுடன் கவிஞனுக்கும் ஆர்வம் பொங்குகிறது, உள்ளம் உவக்கிறது, உரோமம் சிலிர்க்கிறது. இந்த நிகழ்ச்சிகளையும், மெய்ப்பாடுகளையும் கொண்டு தம் முன்னிருப்பது முறையே எலி அல்லது கவிதை என்பதை இருவரும் எளிதில் ஊகித்துக்கொள்கிறார்கள். ஆனால், அறிவியல் அடிப்படையில், இந்த ஊகத்துக்குக் காரணம் சொல்லுவது எளிதல்ல.

ரஸிகமணியோ கவிதையின் உயிர்நிலையிருக்குமிடத்தை எப்படி எப்படியோ தொட்டுக் காட்டிவிடுவார்

---

*1960 செப்டம்பர் 4ம் தேதி குற்றாலத்தில் ரஸிகமணி நினைவு விழாவில் பேசியது.

ர.—6

கள். கவியோடு பல வியாழ வட்டங்களாக உருண்டு புரண்டு, கவிதையை உள்ளுணர்வோடு ஊன்றிக் கவனித்த காரணத்தால் கவிஞனாலும் செயற்கரிய செயலை டி.கே.சி. செய்து காட்ட முடிந்தது.

கவியின் உயிர்நிலை அதன் வடிவத்தில்தான் இருக்கிறது, அதன் பொருளில் இல்லை என்பதை டி.கே.சி. அடிக்கடி வலியுறுத்தினார்கள். இந்த வடிவத்தை உருவாக்குவதும் உணர்ச்சியே, பொருள் அல்ல. ஓர் உண்மையான உணர்ச்சி ஒரு கவிஞனுடைய இதயத்தை ஆட்கொண்டுவிட்டால், அவன் அதற்குமேல் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை; அவனுடைய தாய்மொழி அவனது இதயத்தில் பாய்ந்து, அந்த உணர்ச்சியை ஆவிச் சேர்த்துக் கட்டி, அதை ஒரு கவியாக உறைத்துவிடுகிறது. கவிஞனுக்கும் கவிக்கும் இதற்கு மேல் சம்பந்தம் இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம். உண்மையான, வளமான ஓர் உணர்ச்சியை அவன் பெறவேண்டும், அவ்வளவுதான்; அவனது உள் மனம் அந்த உணர்ச்சிக்குக் கவி உருவம் கொடுத்துவிடும்; தேன் இறுகி, இறுகிக் கற்கண்டாவது போல, உணர்ச்சி இறுகி இறுகிக் கவியாக வடிவெடுத்து விடும்.

கவிஞனுடைய உள் மனத்திலே அவன் கற்ற யாப்பிலக்கண அறிவு, மொழி அறிவு, அனுபவ அறிவு— எல்லாம் படிந்து கிடக்கின்றன. உண்மை உணர்ச்சி இந்த அறிவையெல்லாம், கவிஞனைக் கேட்காமலேயே, பயன் படுத்திக்கொண்டு, கவியுருவத்தை உண்டாக்குகிறது.

உரைநடையிலிருந்து கவிதையை வேறுபடுத்திக் காட்டுவது ரீதம் அல்லது தாளம். இந்தத் தாளம் தமிழ்க் கவிதையில் அமைவது போல் ஆங்கிலக் கவிதையில் அவ்வளவாக அமைவதில்லை என்று டி.கே.சி. கூறுவார்

கள். தாளக் கருவிகளாய் அமைந்திருப்பவை எதுகையும் மோனையும். ஆங்கிலக் கவிதையில், அடியின் கடைசியிலேயே எதுகை வரும். தட்டுப்பொறியில் (Type-Writer) ஒரு வரி முடியும்போது 'டிங்' என்று மணியடித்துவிடும். சொல் முடிந்துவிட்டதா என்பதைப் பற்றி அந்த மணி கவலைப்படுவதில்லை பாதிச் சொல்லை அடித்துக் கொண்டிருக்கும்போதே தாட்சண்யமில்லாமல் தட்டுப் பொறி டிங்' அடித்துவிடும். சொல்லை முடிப்பதற்கு வேண்டிய மிச்சமிருக்கும் எழுத்துக்களை அடுத்த வரியில் தான் அடித்துத் தொலைக்க வேண்டும். அதைப்போலவே ஆங்கிலக் கவியின் இறுதியில் வரும் எதுகை வசங்கெட்ட இடத்தில் 'டிங்' அடித்து, இயல்பான தாளத்தைக் கெடுப்பதாய் அமைந்துவிடுகிறது. ஆனால், தமிழ்க் கவிதையிலோ, வரியின் தொடக்கத்திலேயே எதுகை அமைந்துவிடுகிறது. இதன் காரணமாக ஆங்கிலக் கவிதையில் இல்லாத வசதி தமிழ்க்கவிதைக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வசதியை உளவறிந்து பயன்படுத்திய தமிழ்க்கவிஞர்கள் கம்பர் போன்ற வெகு சிலரே.

உதாரணமாகக் கீழ்க்கண்ட கம்பராமாயணப் பாடலை டி.கே.சி. அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்கள் :

**"கானாள நிலமகளைக்**
**கைவிட்டுப் போனவனைக்**
**காத்துப் பின்பு**
**போனானும் ஒருதம்பி,**
**போனவர்கள் வரும்அவதி**
**போயிற்றென் னா**
**ஆனாத உயிர்விட என்(று)**
**அமைவானும் ஒருதம்பி,-**
**அயலோ னா(து)**

**யானாம்இவ் அரசாள்வென்!**
**என்னேஇவ் அரசாட்சி!**
**இனிதேஅம் மா!'**[5]

பூனை பதி போட்டுப் பாய்வது போல, முந்தின வரியில் கவிதை பதி போட்டு, அடுத்த வரியிலுள்ள எதுகையில் பாயும்போது, உணர்ச்சிக்கு அதிக வேகமும் அழுத்தமும் ஏற்பட்டுவிடுகிறது. இவ்வாறு எதுகையாலும் மோனையாலும் சொற்கட்டுகளாலும் ஏற்படும் 'ரிதம்' அல்லது தாளம் கவிதைக்கு உயிராக அமைந்திருக்கிறது என்று டி.கே.சி. விளக்குவார்கள்.

அலையில்லாது அமைதியாயிருக்கும் ஒரு குளத்தின் நீர்ப்பரப்பிலே ஒரு தட்டையான ஓட்டுச் சல்லியை வீசினால், அது தவளையைப் போலத் தத்தித் தத்திச் சென்று சுமார் ஐம்பது அடிக்கு அப்பால் தண்ணீருக்குள் மூழ்கிவிடும். அலை வீசிக்கொண்டிருக்கும் குளத்தில் 'தவளை' விட்டால், 'தவளை' அலைமேல் சவாரி செய்து கொண்டே 150 அடி தூரங்கூடப் போகும். ஏன்? அலையின் உச்சியில் பட்டதும், வேகம் குறைந்த ஓட்டுக்குப் புது வேகத்தைக் கொடுக்கிறது அலை. ஓட்டுக்கு அலை புது வேகத்தைக் கொடுப்பது போல, தாளத்தோடு கூடிய எதுகையும் மோனையும் உணர்ச்சிக்குப் புது வேகத்தைக் கொடுக்கின்றன என்று டி.கே.சி. சொல்லுவார்கள்......

ஆனால், கூர்ந்து கவனிப்பவர்களுக்கு மட்டுமே கவிதையில் தாளம் அல்லது ரிதம் செய்கிற வேலை என்ன என்பது புலப்படும். சென்னைப் பட்டணத்தையும், போலீஸ்காரர்களையும் பார்த்திராத ஒரு பத்தாம்பசலிப் பட்டிக்காட்டானைத் திடீரென்று சென்னை மவுண்ட்

ரோட்டில் நிறுத்திவிட்டால், அவன் காணும் காட்சி எவ்வளவு திகைப்பாயிருக்கும்! "கிழக்கும் மேற்குமாகவும், வடக்கும் தெற்குமாகவும் கார்களும் லாரிகளும் சாரி சாரியாகப் போய்க்கொண்டிருக்கும் ஒரு சந்தியிலே நின்று கொண்டு ஒருவன் கையை நீட்டுவதும், மடக்குவதுமாக இருக்கிறானே! என்ன பைத்தியக்காரத்தனம் இது!" என்று எண்ணுவான் பட்டிக்காட்டான். ஆனால் நமக்குத் தெரியும், அந்த ஆள் போலீஸ்காரன் என்றும், அவன் அங்கு நின்றுகொண்டு சமிக்கை காட்டாமலிருந்தால், காரோடு கார் மோதி, எத்தனையோ விபத்துக்கள் ஏற்பட்டுவிடும் என்றும்.

இதைப் போலவேதான், எதுகையும், மோனையும் கவிச்சந்திகளிலே நின்றுகொண்டு சொற்களை ஆண்டும் அடக்கியும், அவைகளுக்குத் தேவையான உணர்ச்சியையும் அழகையும் ஊட்டிக்கொண்டும் இருக்கின்றன. அவைகள் இவ்வாறு அதிகாரம் செய்யவில்லையென்றால், தாளம் தப்பிவிடும்; தாளம் தப்பினால், கவிக்கூளமே மிஞ்சும். இவ்வாறெல்லாம் டி.கே.சி. பல உதாரணங்கள் கொடுத்து விளக்கினாலும், கவியின் அந்தரங்கம் நமக்குப் பிடிபடுவதில்லை.

கவிநயம் குறைந்த பாடல் ஒன்று டி.கே.சி. திருத்திய பின் எப்படிக் கவித்துவத்தால் நிறைந்துவிடுகிறது என்பதற்கு ஓர் உதாரணம் காட்டினால், டி.கே.சி.யின் கருத்து தெளிவாகிவிடும். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன், "செட்டி நாடு" என்ற பத்திரிகையில் ஒரு வெண்பா வெளி வந்தது. இயற்றியவர் பெயர் வெளிவரவில்லை. வெண்பாவைப் படித்ததும், "இதோ, தமிழுக்கு ஒரு கவி கிடைத்துவிட்டது!" என்று டி.கே.சி. முழங்கினார்கள். முருகனைப் பற்றிய கவி அது.

கவியில் இரண்டு திருத்தங்கள் செய்தார்கள் ரசிகமணி. திருத்துவதற்கு முன் அப்பாடலின் உருவம் கீழ்க் கண்டவாறு :

"மன்றல் கமழ்குழல்சேர் வள்ளிக்கு வாய்த்தானை
வென்றி மயிலேறும் வித்தகனை—ஒன்றின்
முளையானை, யாவர்க்கும் மூத்தானை, யானைக்கு
இளையானை, நெஞ்சமே, ஏத்து"

ரஸிகமணியின் திருந்திய கைபட்ட பிறகு பாடல் கீழ்க்கண்டவாறு திருத்தம் பெற்றது :

"மன்றல் குழல்கமழும் வள்ளிக்கு வாய்த்தவனை
வென்றி மயிலேறும் வித்தகனை—ஒன்றின்
முளையானை, யாவர்க்கும் மூத்தானை, யானைக்கு
இளையானை, நெஞ்சமே, ஏத்து"

திருந்திய பாடல் தாள லயத்தில் சிறந்து நிற்கிறது என்பதை நாம் உணர்கிறோம். ஆனால், சிறப்புக்குக் காரணம் என்னவென்று நம்மால் சுட்டிக்காட்ட முடியவில்லை.

ஒரு கடிதத்தில் டி.கே.சி.யே காரணத்தை விளக்குகிறார்கள் :

"முதலடியில் பாடம் 'மன்றல் கமழ்குழல்சேர்' என்றிருந்தது. இதில் 'சேர்' என்று வார்த்தை பிய்ஞ்சு தொங்குகிற மாதிரி இருக்கிறது. 'வள்ளி'யோடு அங்கமாய்ப் பொருந்தவில்லை. 'குழல் கமழும் வள்ளி' என்று சொல்லும்போது, அங்கமாய்ப் பொருந்தி நிற்கிறது. இது ஒரு சிறு திருத்தந்தான்.

ஆனால்,

'வாய்த்தவனை' என்ற திருத்தந்தான் முக்கியமான திருத்தம். பத்திரிகையில், 'வாய்த்தானை' என்று இருக்கிறது. இது 'வித்தகனை' என்ற இரண்டாம் அடியில் வரும் இளக்கமான இலக்கணப் பாங்குக்கு மேலாய்ப் போய்விடுகிறது.

**வாய்த்தவனை**
**வித் தகனை**

இரண்டும் இளக்கமான நீண்டு செல்லும் ஓசை. ஆனால்,

**முளையானை**
**மூத்தானை**
**இளையானை**

என்னும் உருவங்கள் எழுத்துக் குறுகி, வேகத்தோடு ஒலிப்பன. இந்த வேகத்தைக் கெடுத்துவிடுகிறது.

**'வாய்த்தானை'**

என்று முதலடியில் வரும் வேகம் கொண்ட உருவம்; மூன்றாவது நான்காவது அடிகளில் வரும் அற்புதமான, பொருள் பொதிந்த வேகத்தைக் கெடுத்துவிடுகிறது. கெடுக்காமல் இருப்பதற்காகவே திருத்தம்.

மறுபடியும் வெண்பாவைத் திருத்தத்துடன் சொல்லிப் பார்க்கலாம்.

**"மன்றல் குழல்கமழும் வள்ளிக்கு வாய்த்தவனை**
**வென்றி மயிலேறும் வித்தகனை—ஒன்றின்**
**முளையானை, யாவர்க்கும் மூத்தானை, யானைக்கு**
**இளையானை, நெஞ்சமே, ஏத்து."**

[மன்றல் குழல்-புஷ்ப மாலை சூடிய கூந்தல்; ஒன்றின் முளையானை-அநாதியான வஸ்து, வேறொரு வஸ்துவிலிருந்து வராத தத்துவம்; யாவர்க்கும் மூத்தானை-அவனுக்கு முன் யாரும் இருந்ததில்லை.]

கவியில் விஷயம், வேகம், ஓசை எல்லாம் அமைந்திருக்கின்றன.''

பாட்டின் வடிவினை முடியக் கண்டவர்கள்தான் முதலடியில் உள்ள ஓசை எவ்வாறு மூன்றாவது, நான்காவது அடிகளின் இங்கிதத்தையும் வேகத்தையும் கெடுக்கிறது என்று கண்டுகொள்ள முடியும்.

பாடலை வெறும் சொற்குப்பையாகப் பார்க்காமல், உயிர்த்துடிப்போடும் உணர்ச்சியோடும் நடனமாடும் ஒரு மங்கையாகக் கண்டார்கள் டி.கே.சி. ''அபிநயக் கலையில் கண்ணும் இதழும் கையும்காலும் எப்படி அங்கங்களாகயிருந்து உணர்ச்சிகளைக் காட்டுகின்றனவோ, அப்படியே கவியிலுள்ள சீர், மோனை, எதுகை ஆகிய எல்லாம் அங்கங்களாக இருந்து உணர்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்க்கவி என்றால் மேலே சொன்ன மாதிரி உணர்ச்சிகளை எடுத்துக் காட்ட வேண்டும். அப்படி உணர்ச்சிகளைக் காட்டாதபடி ஏதோ அலங்காரத்துக்காக எதுகை, மோனை, சீர்களை உபயோகப்படுத்தினால், அது கவியல்ல. அதனிடத்தில் உணர்ச்சியையோ, உண்மையையோ காணமுடியாது. பாவம் இல்லை, ரஸம் இல்லை என்று சொல்லிவிட நேரும். ஏதோ சொல்லை வைத்து விளையாடிய வெறும் செய்யுளாகத்தான் இருக்கும். அவைகளை அனுபவிக்க முடியாது. அவைகளை வாசிப்பதெல்லாம் ஆயாசந்தான், தொந்தரவுதான்'' என்பதே ரஸிகமணியின் தெளிந்த முடிவு.

மாசற்ற காட்சி படைத்திருந்த காரணத்தாலும், கவிதையின் வளைவு நெளிவுகளையெல்லாம் நுண்ணறிவோடு பார்க்கும் திறம் பெற்றிருந்த காரணத்தாலும், செருகு கவிகளையும், போலிப் பாடல்களையும் உடனடியாகக் கண்டுபிடித்து, அவற்றை ஈவிரக்கமில்லாமல் களைந்தெறியும் துணிச்சல் ரஸிகமணியிடம் இருந்தது.

# 11. டி.கே.சி.யும் மேற்கோள்களும்*

புனலூர் பேப்பர் மில்லுக்குப் பல ஆண்டுகளுக்கு முன் போயிருந்தேன். அங்கு நான் கண்ட காட்சி என் கண்ணுக்குள்ளேயே இன்னும் நின்றுகொண்டிருக்கிறது. வைக்கோல் சண்டு, கந்தல் துணி, கூளம் முதலியவற்றை ஒரு தொட்டியில் கொட்டுவார்கள். இந்தக் குப்பை குழாய்கள் வழியாகப் பல யந்திரங்களுக்குள்ளே புகுந்து சில நிமிஷங்களில் வெளியே வந்து விழும். வெளியில் வருகிறதென்றால், குப்பையாக வராது; வெள்ளை, வெளேர் என்ற பேப்பராக வரும், ரீம்ரீமாக குபுகுபு என்று இன்னொரு தொட்டியில் வந்து விழும். அழுக்கு நிறைந்த கந்தலும் கூளமும் சில நிமிஷங்களில் நிர்மல மான பேப்பராக மாறி, கண்ணைக் கவரும் வெள்ளி அருவியைப் போல வெளியே வந்து பாயும் காட்சியை அனுபவித்துக்கொண்டே இருக்கலாம்; கண் கொள்ளாத காட்சி அது.

ரஸிகமணியோடு நான் பழகிக்கொண்டிருந்த 20 ஆண்டுகளிலும், மேற்சொன்ன விந்தை எனக்கு அடிக்கடி நினைவுக்கு வரும். நான் அரைகுறையாகப் புரிந்திருந்த ஆங்கில மேற்கோள்களை அவர்களிடம் சமர்ப்பணம் செய்வேன். அவற்றை அவர்கள் உள்ளத்தினுள் வாங்கி,

---

* 1972-ல் சென்னை பாஸ்கர நிலையத்தில் ரஸிகமணி யின் பிறந்தநாள் விழாவில் பேசியது.

அசுவாரசியமாயிருக்கிற உலகத்தில் இந்தக் காட்சி நமக்குக் கிடைக்கிறதல்லவா?

"தங்கள் மேற்கோள் வெகு ரஸமாய் உண்மையை எடுத்துச் சொல்லுகிறது. Sense of humour was given to Man to console him for what he is.

"மேலே சொன்ன காட்சியைப் பார்க்கிறதென்றும் ஏற்பட்டு, சிரிக்கவும் முடியாது போயிருந்தால், நம்முடைய பாடு எப்படி இருந்திருக்கும்! விதியின் கருணையை நாம் ரொம்பவும் பாராட்ட வேண்டும்."

மேற்கோள் டி.கே.சியின் உள்ளத்தில் புகுந்து புதிய வீச்சோடு வெளிவருகிறது.

Truth is Beauty என்று Keats சொன்ன சூத்திரத்தை அந்தக் காலத்தில் எங்கள் ஆசிரியர்கள் எங்களுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்கள்; கிளிப்பிள்ளை போலச் சொல்லுவார்கள். நாங்களும் பொருள் விளங்கி விட்டது போன்ற மயக்கத்தில் இருப்போம். அந்தச் சூத்திரத்தினுள்ளிருக்கும் நீள, அகல, ஆழங்களை அனுபவ ரீதியாக நாங்கள் கண்டுகொள்ளவில்லை. என் தமக்கையாருக்கு எழுதிய கடிதத்தில் டி.கே.சி. மேற்படி சூத்திரத்தை எப்படி விளக்குகிறார்கள் என்று பார்ப்போம் :—

"Truth is Beauty" என்று ஒரு பெரிய உண்மையை Keats என்ற கவிஞர் சிறு பிராயத்திலேயே எப்படியோ கண்டுவிட்டார். அழகாயும் அழுத்தமாயும் வெளியிட்டு விட்டார். ஆனால், புரொபஸர்கள் பாடும் மாணவர்கள் பாடும் கஷ்டமாய்ப் போய்விட்டது. இன்றைக்கும் விளங்காத காரியந்தான். Truth என்பதை என்றைக்காவது

கண்டிருந்தால் அல்லவா Beauty என்பதைக் காண முடியும். இரண்டையும் காணாத சௌகரியமான நிலையிலேயே இருக்கிறார்கள் அவர்கள்.

கலிங்கத்துப்பரணி ஆசிரியர் சிங்காரச் சுவைபடப் பாடுவதில் வெகு சமர்த்தர். ஆனாலும் பேய்களையும் அவற்றின் கோர ஸ்வரூபங்களையும் வர்ணிப்பதில் அவரை இணை இல்லாதவர் என்றே சொல்லிவிடலாம். அவ்வளவு அழகாய் இருக்கும் கோர வர்ணனை.

**கோம்பி பாம்பிடைக்**
**கோத்தணி தாலிய**

[கோம்பி: பச்சோந்தி]

தாலியை எப்படி அற்புதமாக வர்ணித்துவிட்டார்!

"மனக்கண்ணால் பேயையும் தாலியையும் பார்த்தார். அந்த உண்மையைப் பாடிவிட்டார். Truth is Beauty. சந்தேகமே இல்லை.

"Keats சொல்லிய வாக்கியம் காலேஜ்காரருக்கும் யுனிவெர்சிடிக்காரருக்கும் புதிர்தான் என்று தங்களுக்குத் தெரியாது; தம்பிக்குத் தெரிந்த காரியந்தான்.

"அருமைச் சுப்பு பேபியைப் பற்றி உண்மைகளையே கொட்டுவாள். அவளுடைய வார்த்தைகள்தான் உண்மை பொதிந்தன, அழகு வாய்ந்தன. சந்தேகமே இல்லை, என்னுடைய வார்த்தைகளும் அப்படிப்பட்டவைதான்; ஆனால், நானே எப்படிச் சொல்லிக்கொள்ளுவது, அங்கேதான் கஷ்டம்."

டி.கே.சிக்குத் தன்னுடைய சத்திய தரிசனத்திலுள்ள நம்பிக்கையை நினைக்கும்போது, நமக்கு உடம்பில் புல்லரிக்கிறது.

Einstein சொன்ன கூற்றை மேற்கோள் காட்டியிருந்தேன் ஒரு கடிதத்தில். ''The emotional condition which fits a Scientist for his task is akin to that of a devotee or a lover'' என்று சொன்னார் Einstein. புதுக் கண்டுபிடிப்புகளை நோக்கி ஆர்வத்தோடு விரைந்து கொண்டிருக்கும் விஞ்ஞானியின் உளப்பாங்கு ஒரு பக்தனுடைய அல்லது காதலனுடைய உளப்பாங்கை ஒத்திருக்கிறது என்று சொன்னார். இதைப் படித்துவிட்டு டி.கே.சி. எனக்கெழுதிய பதில் கீழ்வருமாறு :—

''ஏது, ஐன்ஸ்டைனுக்குப் பக்தி இன்னது என்று தெரிகிறது! அதோடு, காதல்கூட அல்லவா தெரிகிறது! தமிழே தெரியுமோ அவருக்கு!

''பக்திப் பாட்டும் காதல் பாட்டும் தமிழில்தானே இருக்கிறது. தமிழில் இருக்கும் 'form' ஆங்கிலத்தில் இல்லை, வங்காளத்தில் இல்லை, வடமொழியில் இல்லை, என்று உறுதியாகச் சொல்கிறார்கள் ஆர்.வி. சாஸ்திரிகள்.''

கடைசியாக, ஒரு மேற்கோள். 'Perennial Philosophy' என்ற தலைப்பில் ஆல்டஸ் ஹக்ஸ்லி எழுதிய நூலைப் படித்துவிட்டு, அதில் உள்ள ஆழமான வாசகம் ஒன்றை எடுத்து டி.கே சிக்கு எழுதியிருந்தேன். ''Knowledge is a function of being'' என்பது வாசகம். ''அறிவு என்பது வாழ்வின் செயற்பாடு'' என்பது அதன் பொருள். செறிவு நிறைந்த கூற்று அது. அதன் முழு உண்மையையும் நான் புரிந்துகொள்ள முடியவில்லை. டி.கே.சி.யிடம் அதைச் சொல்லி, அவர்களுடைய நுண்ணிய கலையுள்ளம் அதை எப்படி வாங்கிக் கொள்ளுகிறது என்பதை அறிந்து கொள்வதற்காகவே, மேற்படி வாசகத்தை எழுதி

அனுப்பி, அவர்களுடைய கருத்தென்ன என்று கேட்டிருந்தேன்.

அவர்களுடைய அற்புதமான பதில் பின் வருமாறு :—

''ஆல்டஸ் ஹக்ஸ்லி சொன்னது—Knowledge is a function of being—மிக அடிப்படையான உண்மையைத் தழுவி நிற்கிறது.

''ஒரு குழந்தையை அறிகிற காரியத்தைப் பார்த்தால், ஆடவர் அறிகிறது ஒரு விதம், பெண்டிர் அறிகிறது முற்றிலும் வேறு விதம். சம்பந்தமே இல்லை என்று சொல்லலாம்.

''நாம் நம்முடைய அமைப்பில் விநாடிதோறும் மாறுகிறோம்; acid, alKali முதலான தாதுக்களின் அளவு மாறுகிறது. ஆகவே, உணர்ச்சி மாறும், அறிகிற புலனும் மாறவே செய்யும்.

''நேற்று ஒரு செய்யுளை அனுபவித்தேன். அதை இன்று அனுபவிப்பது வேறு விதத்தில்தான்.

''ஒரு மனுஷனுடைய அறிவே அப்படி வேறுபடும் போது, மனுஷர்கள் தோறும் அறிவு மாறுபடும். ஆனாலும், நாம் சேர்ந்து ஒரு கலை உருவத்தை, கவியை, சங்கீதத்தை ஒத்து அறிகிறோம். அது பெரிய காரியம். அவ்வளவுக்கு நாம் அந்த பிரம்மனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

''கலையாவது ஒரு ஏகதேசமான அளவுகோலை நமக்கு அளித்திருக்கிறதே! மிக்க சந்தோஷம்.

''தமிழ் ஸ்காலர்களுக்கும் நமக்கும் ஸ்நானப்ராப்தி இல்லை என்ற கணக்கில்,—நாம் எல்லோருமே இருந்து விட்டால், காரியம் என்ன ஆகும்?

''ஒரு வாரத்துக்கு முன் T.M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களைப் பார்க்கப் போயிருந்தேன். நடராஜனும் பலராமும் உடன் வந்திருந்தார்கள்.

திருப்புகழ் மணியிடம்,

''மன்றல் குழல்கமழும்
வள்ளிக்கு நாயகனை
வென்றி மயிலேறும்
வித்தகனை,—ஒன்றின்
முளையானை, யாவர்க்கும்
மூத்தானை, யானைக்(கு)
இளையானை நெஞ்சமே
ஏத்து''

என்ற பாடலைப் பாடிக்காட்டினேன். அவர்கள் முகத்தில் ஒரு அரிய ஆனந்தம்வந்து விம்மிவிட்டது.

''பாடலை எழுதிக் கொடுக்கச் சொன்னார்கள், எழுதிக் கொடுத்தேன். பிறகு, நடராஜனைப் பார்த்து, ''ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் தாத்தா விடம் ஒரு காகிதத்தைக் கொடு ஒரு பாடலை எழுதச் சொல்லு. அதை அப்படியே எனக்குப் போஸ்டில் அனுப்பிவிடு'' என்று ஆர்வத்தோடு சொன்னார்கள்.

திருப்புகழ்மணியும் தன்னுடைய அமைப்புக்குத் தக்கபடி பாடலை அறிந்தார்கள், அதாவது அனுபவித் தார்கள், அப்படிக் கிடக்கிறது ஹக்ஸ்லியின் வாக்கியத் தின் பொருள். ஹக்ஸ்லி சொன்ன வாக்கியத்தை ஆராய, ஆராய அனுபவம் விரிந்துகொண்டே போகும், நல்ல ரஸமான ஆராய்ச்சி.''

இப்படியாக டி.கே.சி.யோடு இலக்கியக் கொடுக்கல் வாங்கல் செய்தவர்களுடைய அனுபவமும் விரிந்து கொண்டே போகும்.

# 12. கடித இலக்கியம்

ரஸிகமணி மாணவனாக இருந்த காலம் சுமார் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன், அந்தக் காலத்துத் தமிழ் வசன நடை, ரொம்பப் படித்தவர்கள் கையிலகப் பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த வழக்கொழிந்த தமிழ்ச் சொல்லில், நவநாகரிகக் காட்சிகளை வருணித்துக் கொண் டிருந்தார்கள், நாவலாசிரியர்கள் கூட.

தங்கசாலை வீதியிலே நடக்கும் காதல் காட்சியை, சங்க இலக்கியத்தைக் கரைத்துக் குடித்த முது பெரும் புலவர் ஒருவர், கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார்:—

"அவ் வீட்டின் மாடத்தும்பர், ஓர் அறையின் கண்ணேயின்னிசைப் பாட்டும், மன்னிசைக் கல்வியும் வல்லளாய், எழிலும் குணமுமியைந்த பூங்கொம்பராய் மிளிர் தரும் ஓர் இளம் பருவத்துப் பெண் தனாது வார் குழல் கோதி முடித்துக் கொண்டு நின்றாள். அப் போழ்தத்து, கரிய மாலனைய காளை யொருவன் அவட்குப் பின்புறல் போந்து, அவடன் விழிகளிரண்டை யும் தன்னிருகையாலிறுகப் புதைத்துக்கொண்டு நின்றான்.

---

1955 'கல்கி' டி.கே.சி. நினைவு மலருக்கு எழுதிய கட்டுரை.

அன்னணம் ஒருவன் கண் புதைத்த துணர்ந்த அந்நங்கை, 'நீ என்னைத் தொடற்பாலையல்லை' என்றனள்.''

இப்பேர்ப்பட்ட கரடுமுரடான, விறைத்துப் போன பாஷையிலே நாடோடி சம்பவங்களைத் தமிழாசிரியர்கள் விஸ்தரித்து வந்தார்கள். பிரம்மாண்டமான சர்க்கஸ் யானை, ஐம்பொறிகளையும் அடக்கி ஒரு முகப்படுத்திக் கீழே கிடக்கும் பட்டாணிக் கடலையை எடுப்பதில் முக்கி முனைந்து எப்படித் திக்குமுக்காடுமோ அப்படி அவஸ்தைப் பட்டார்கள் அந்தக் காலத்துத் தமிழ் எழுத்தாளர்கள். கருத்துக்கு ஒவ்வாத வார்த்தைப் படாடோபமும், திருகுமுருகலும், சுவையற்ற கோணல்த் தமிழும் புலமை வேஷம் போட்டுக் கொண்டு நடமாடிய காலம் அது.

அந்தக் காலத்தில் பள்ளி மாணவனாக இருந்த ரஸிக மணிக்கு இந்தக் கொடுங்கோன்மையெல்லாம் தாங்க முடியவில்லை; உரைநடை எப்படியிருக்க வேண்டும் என்ற ஆராய்ச்சியில் இறங்கி, சில முடிவுகளுக்கு வந்தார்கள். எடுத்துக் கொண்ட விஷயத்தை உண்மையோடும். நேருக்கு நேர் சொல்ல கற்றுக் கொள்ள வேண்டும். கருத்தும், சொல்லும் சுகமாய்க் கலந்து கைகோத்து நடக்கவேண்டும். அடுப்பங்கரையில் பெண்கள் பேசுகிற தமிழிலே எவ்வளவு ஆற்றலும், உணர்ச்சியும் இருக்கின்றன. நாட்டுப்புறத்திலே பட்டிக்காட்டான் பேசுகிற தமிழிலே வகை வகையான சுவையிருக்கிறதே. விஷயத்தைக் குறிபார்த்து அடித்த மாதிரியல்லவா, அவன் சொல்லிவிடுகிறான். இதையெல்லாம் சிரத்தையோடு தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்து கொச்சையை அகற்றி விட்டு, நாடோடித் தமிழிலுள்ள ரஸத்தைப் பிழிந்து தமிழ் வசனத்தில் பெய்துவிட வேண்டும். அப்போது

தான் தமிழ் எழுத்துக்கு வல்லமையும், வளமும் ஏற்படும் என்று டி.கே.சி. வற்புறுத்தி வந்தார்கள். பேச்சுத் தமிழின் வளைவு, நெளிவுகளோடும், பம்மல் பாய்ச்சல் களோடும் பழகினால்தான் ஒரு எழுத்தாளனுடைய தனித் தத்துவம், அவனுக்கே உரிய நடையில் வெளிப் படும். நடை என்றால் என்ன என்பதை அபூர்வமான தெளிவோடும் அதிகாரத்தோடும் ரஸிகமணியின் கடிதம் கீழ்க்கண்டவாறு விளக்குகிறது.

"ஆங்கில ஆசிரியர்கள் 'ஸ்டைலை"ப் பற்றி என்ன எல்லாமோ எழுதுகிறார்கள். எழுத்தில் முக்கியமான காரியம் அதுதான் என்று சொல்லுவார்கள். ஆனால், அது எளிதில் அமைகிறதில்லை என்றும் சொல்லுவார்கள். ஆங்கில ஆசிரியர்களது ஸ்டைல் இன்னது, இப்படி இருக்கிறது' என்றும் நமக்கு எளிதில் தெரிகிறதில்லை. ஏதோ தெரிகிறது—இருட்டுக்குள் ஆளை இனங்காணுகிற கணக்கில்தான்.

ஆனால் தமிழுக்கு வந்தால் (பண்டித உலகத்தை விட்டு வெளியேதான்) இன்னது ஸ்டைல் என்று லகுவாய்த் தெரிகிறது. ஏன், அன்னம்மாள் தங்கம் மாளுக்கு எழுதிய கடிதத்தில் அவளுடைய தனித் தத்துவம் வெகு ஜோராய்த் துள்ளி ஓடுகிறது. கருத்தும் சொல்லும் சுகமாய்க் கலந்து கை கோத்து நடக்கின்றன. பெண் குழந்தைகளைப் பார்த்து நாம் பயப்பட வேண்டிய தாய்த்தான் இருக்கிறது.

கவி என்பதற்கு வந்தால் கம்பரிடத்தில்த்தான் ஸ்டைல் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. தற்காலத் துக் கவியில் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களது கவியில்த்தான் ஸ்டைல் இருக்கிறது. கவியில் அவர்களது எளிய தூய உள்ளம் பளிங்கில் வைத்தமாதிரி தெரிகிறது.

ஆனாலும் இந்த ஸ்டைலில் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது எழுதுகிறவர்க்கு அது தெரியாது என்று சொல்லலாம். ஏனென்றால் அவருக்கே தெரியாமல் அநாயாசமாய் வருவது அது. நாம் தெருவிலோ, ரோட்டிலோ நடந்து போகிறோம் (மிலிட்டரி மார்ச் அல்ல.) இயல்பாக நடக்கிறோம். அந்த நடையில் நூற்றுக்கணக்கான அம்சங்கள் இருக்கின்றன. ஏன் இருக்காது. உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையும் எத்தனையோ எலும்புக் கட்டுகள், தசைகள், நரம்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு கணக்குப்படி ஒத்து வேலை செய் கின்றன. நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லலாம்.

ஆனால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் நடையின் தனிப் பண்பை உடனே கண்டு கொள்ளுகிறார்கள். ஆயிரம் பேர் நடந்து போய்க் கொண்டிருக்கலாம். ஆனாலும், நம் முகத்தைப் பாராமலே, நம்முடைய நடையை இனம் கண்டு கொள்ளுகிறார்கள். நடையில் (உடம்பு சம்பந்தமாகத்தான்) எல்லாருக்கும் ஸ்டைல் வந்துவிடுகிறது. காரணம் என்ன? பாடமாக வைத்துப் பள்ளிக்கூடத்தில் நடையைக் கற்பிப்பதில்லை. ஆனால், எழுத்தில் ஸ்டைல் வரமாட்டேன் என்று சாதிக்கிறது. பள்ளிக்கூடத்துப் பயிற்சிதான் காரணம். மனுஷ தத்துவத்தை எடுத்துவிட்டு, எந்திர தத்துவத்தை மாணவர்களுக்குள் புகுத்திவிடுகிறது. இந்த எந்திர தத்துவத்தின் கோளாறுகள், ''முத்தி, முத்தி''க் கடைசியில் பரிமேலழகர், நச்சினார்க்கினியர்களாக முடிகின்றன.

நடையில் ஸ்டைல் இருக்கவேண்டும் என்றால் (கால் இருந்தால் போதாது) உடலுக்குள் உயிர் இருக்க வேண்டும். அது போல எழுத்தில் ஸ்டைல் இருக்க

வேண்டும் என்றால் (வார்த்தைகள் இருந்தால் போதாது) உள்ளத்தில் உயிர், அதாவது உண்மை உணர்ச்சி இருக்க வேண்டும்.

ஏதோ "டைம்ஸ் சப்ளிமென்டுக்கு"க் கட்டுரை எழுதுவது போல் எழுத்து நீண்டுவிட்டது. பிள்ளையார் இப்படி ஆயிற்று. இருக்கட்டும். தாங்கள் இருக்கும் போது, எந்தக் கஷ்டமான விஷயத்தையும் தைரியமாய் எழுதத் தோன்றுகிறது. பேசக்கூடத் தோன்றும் அல்லவா? அப்படியே எழுதவும் தோன்றுகிறது."

மேற்கண்ட கடிதத்தைப் படிக்கும்போது, பேச்சைக் கேட்பது போன்ற பிரமை நமக்கு ஏற்படுகிறது. ஆனால் பேச்சுத் தமிழை அப்படி அப்படியே காகிதத்தில் எழுதி விட்டால் சுவையுமிருக்காது; ஸ்டைலும் இருக்காது. டி,கே.சி. கடிதத்திலுள்ள ஒவ்வொரு சொல்லிலும், எழுத்திலுமே பொருள் முட்டித் ததும்பிக் கொண்டு நிற்கிறது. அபாரமான தெளிவும், உணர்ச்சியும் ஒளியும் இருக்கிறது. வெறும் கொச்சைப் பேச்சை வைத்துக் கொண்டு இந்த மாதிரி ஜால வித்தைகள் பண்ணிவிட முடியாது. வருஷக் கணக்கிலே, பேச்சுத் தமிழின் உயிர் நிலையை ஆராய்ந்து, அதன் மர்ம ஸ்தானத்தை உணர்ந்து அனுபவித்து, இந்த அனுபவத்தால் பெற்ற மொழி அறிவைக் கலைப் பாங்கோடு கையாளக் கற்றுக் கொண்டால்தான் டி.கே.சி.யைப் போல, பேச்சுத் தமிழுக்கு எழுதும் வண்மையைக் கொடுக்க முடியும்.

தமிழர்கள், கடிதம் எழுதுவதென்றால், விஷயத்துக் காகத்தான் எழுதுவார்கள். "இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமத்துக்குப் பதில் எழுதவும்", "ஊருக்குச் சௌக்கியமாக வந்து சேர்ந்தேன்" "புண்ணாக்கு விலை

ஏறிக் கொண்டிருக்கிறது. நெல் விலை எப்படி இருக்கிறது?'' என்னும் அரிய விஷயங்களைப் பற்றித்தான் எழுதுவார்கள். வந்த உடனேயே கடிதத்தைக் கிழித்தெறிந்து விடலாம். 'பைன்ட்' பண்ணிப் பாதுகாக்க வேண்டிய அவசியமே கிடையாது.

ஆனால் டி.கே.சி. கடிதங்கள் எல்லாம் கலை அந்தஸ்து பெற்றவை; ஒரே ஹாஸ்யமும், உல்லாசமும் உணர்ச்சியுமாயிருக்கும். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இலக்கிய ரத்தினங்கள் அவை. டி.கே.சி. கடிதம் எழுதுவதைக் கைக்கொண்ட பின்தான் கடித இலக்கியம் என்று ஒன்று தமிழ் நாட்டில் பிறந்தது.

ஒவ்வொரு கடிதமும், நேருக்கு நேர் நின்று பேசும். உடல்நிலை மோசமாயிருப்பது கேட்டு வருந்தி எழுதியிருந்தேன். அடுத்த தபாலில் கீழ்க்கண்ட பதில் வந்தது:- ''என் உடலைப் பற்றித் தாங்கள் மிக்க கவலை கொள்வதாகத் தெரிகிறது. அது வேண்டாம். உடம்பு சரியாகத் தானிருக்கிறது. இன்ஸுலின் (Insulin) இன்ஜெக்ஷன் கிடையாது. மற்ற குத்துகளும் இல்லை. மலை ஏற முடியாது, மரம் ஏற முடியாது. அவ்வளவுதான்.''

* * *

நீரிழிவும், காச நோயும் டி.கே.சி.யின் உடலைத் தாக்கி முற்றுகை போட்டன. ஆனால் கடைசி வரையில், அவர்கள் உள்ளத்திலேயுள்ள ஹாஸ்யத்தையும், உல்லாஸத்தையும் அவை பாதிக்க முடியவில்லை. வாய்க்கு ருசியான ஆகாரங்களை அவர்கள் தள்ளிக் கொண்டே வந்தார்கள். இப்படியும் கடும் பத்தியம் போடலாமா என்று கேட்டு எழுதியிருந்தேன். ஆறுதலுக்காக வந்த கடிதம் இது—''உளுந்துத் தோசை, ருக்மணி அம்மாள்

அனுப்பிய நார்த்தங்காய் ஊறுகாய், இட்டலி, தயிர் எல்லாம் சேர்ந்து வாய்க்கு ருசியான ஆகாரம் ஆகிவிடு கிறது. போதும்தானே. மற்றவர்கள் என்னத்தைச் சாப்பிட்டால், நமக்கென்ன? ரஸம், மோர்க் குழம்பு, மாம்பழம், பலாப்பழம் எல்லாவற்றையும் சாப்பிட்டால் சாப்பிடட்டும். அது நம்மைப் பாதிப்பானேன்? எருமை கோரைப் புல்லை, லவக்கு, லவக்கு என்று தின்று குதப்பு கிறது. அதைப் பார்த்து, ஐயோ, கோரையைத் தின்ன முடியவில்லையே என்று ஒப்பாரி வைப்பார் உண்டோ? வள்ளுவரும் இந்த அபிப்பிராயம் கொண்டவர்தான்.

**"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்"**

டி. கே. சி. தமிழின் எளிமையைப் பார்க்கும்போது 'அடே, நாம் கூட இப்படியெல்லாம் வெளுத்து வாங்கி விடலாம்' என்று தோன்றும். ஆனால், உட்கார்ந்து எழுதிப் பார்த்தால், அது நமக்குக் கை வராது என்று தெரியும். எளிய தமிழ் என்றால் வெள்ளைத் தமிழல்ல மொட்டைத் தமிழும் அல்ல. நமக்கு எட்டாத ஆழத் திலும் தெளிவிலுமிருந்து உருவான எளிமை அது. பரிணாம நெறியை ஒட்டிப் பார்த்தால்தான் எளிமை யைப் பற்றி டி,கே.சி. இப்படியெல்லாம் ஏன் பிரமாதப் படுத்தினார்கள் என்று விளங்கும், இயற்கை அன்னை, விதம் விதமான பிராணிகளை உண்டாக்கி வந்திருக் கிறாள். நாளா வட்டத்தில் உருவங்களைச் செய்து செய்து, அவள் கை திருந்திக் கொண்டே வந்திருக்கிறது. பத்து கால், மூன்று கண் உள்ள பிராணிகளை உண்டாக் கினாள். அவைகள் வசதியோடும் புத்தியோடும் வாழ முடியவில்லை. அவைகளை அழித்துப் புது உருவங்களை உண்டு பண்ணிப் பார்த்தாள். இப்படி எத்தனை,

எத்தனையோ திருத்தங்களைச் செய்து, கடைசியாக மனித உருவத்தைக் கண்டு பிடித்தாள். இரண்டே கால் போதும். பத்து கால்கள் வேண்டியதில்லை; இரண்டே கண் போதும், மூன்று கண் வேண்டியதில்லை என்று இயற்கை தேவி கண்டு பிடிப்பதற்கே லக்ஷக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன. உயிருள்ள வஸ்துகளுக்குள், மனித உருவம் ரொம்ப எளிமை வாய்ந்ததுதான். ஆனால் அந்த எளிமை கை வருவதற்குள் இயற்கை அன்னை எத்தனை பாடுபட்டிருக்கிறாள்!

கலையுலகத்தில் எளிமையேற்பட்ட கதையும், கிட்டத்தட்ட மேற்சொன்ன மாதிரிதான். இந்த உண்மையையெல்லாம் பரிணாம நெறியையொட்டி உணர்ந்து அனுபவித்தார்கள் டி.கே.சி. ஆகையால், எந்தத் துறையில் எளிமையைக் கண்டாலும் அதை அபாரமாக அனுபவித்து வந்தார்கள்.

ஒரு நாள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். முற்றத்திலே மாப்பொடியினால் கோலம் போட்டிருந்தது. அதைப் பார்த்துப் பார்த்து ஒரு மணி நேரம் ரஸித்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் குருட்டுக் கண்ணுக்கு, அவர்கள் எடுத்துச் சொன்ன பிறகு தான், கோலத்தின் அழகு தெரிய வந்தது. ஊருக்குப் போன பிறகு, ஒரு கடிதம் எழுதினார்கள்:— ''இங்கேயும் வீடுகளில் எத்தனையோ கோலங்கள் போடத்தான் செய்கிறார்கள். நூற்றுக்கணக்கான பொட்டுகள்; நூற்றுக்கணக்கான கோடுகள். எல்லாம் சேர்ந்து ஒரே கசாபுசா. அம்மாள் ரகத்தில் எளிமையும், கருத்தழகும் சேர்ந்து கலையாய் விளங்கும். அந்தக் கலையை உணருவதற்கு மற்றக் கோலங்களையும் பார்க்க வேண்டும். கம்பர் செய்யுளின் எளிமையை அனுபவிப்பதற்கு. கந்த புராணச் செய்யுள்களையும்,

சீவக சிந்தாமணிச் செய்யுள்களையும் பார்க்கவேண்டும் பாரதியும், தேசிகவிநாயகம் பிள்ளையும் கவிஞர் ஆன தால் எளிமையைக் கையாண்டிருக்கிறார்கள். விஷயத்தை இப்படிச் சொல்லுவதை விட்டு விட்டு, எல்லாருக்கும் விளங்குவதற்காக லேசாய் எழுதியிருக்கிறார்கள் என்று மாறாய்ச் சொல்லுகிறார்கள். கவிஞர்கள், தங்களுக்கே விளங்க வேண்டும் அல்லவா; அதற்காக எளிமையைக் கையாளுகிறார்கள் என்று சொன்னால்ப் பொருத்தமாக இருக்கும்.

''பூண்டுகள் கூட காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக எளிமையைக் கையாண்டிருக்கின்றன''

''எட்டுத் திசையிலிருந்தும், பதினாறு கோணத்திலிருந்தும் மகரந்தத்தூள்களை வண்டுகள் கொண்டு வர வேண்டும். அதற்காகப் பதினாறு இதழ்களையா விரிக்கிறது? ஐந்து இதழ் போதும் என்றுதானே வைத்துக் கொண்டது. Radial symmetry ஐந்து பட்டங்களால் ஆய் விடுகிறது. பல அடுக்குப் பூக்கள் எல்லாம் கஷ்டப்படுகிற பூக்கள்தான். கோலத்தை எளிமையுடன் போடவில்லை அவைகள்.''

இப்படியாக. கோலத்திலிருந்து கவிதைக்கும், கவிதையிலிருந்து சிருஷ்டி தத்துவத்துக்குமே டி.கே.சி. யின் எளிமைக் கடிதங்கள் நம்மை இழுத்துச் சென்று விடுகின்றன; சில்லறை விஷயங்களைப் பற்றிக் கடிதம் விளக்கிக் கொண்டிருக்கும் போதே, அரிய உண்மைகள் எல்லாம், அந்த ஒளியிலே, தெளிவாகி விடும்; விஞ்ஞானம் சமயம், கடவுட் தத்துவம்,—எல்லாவற்றைப் பற்றியுமே மத்தாப்பூ போட்டுவிடும் அந்தக் கடிதங்கள்,

பேரறிஞர்கள் பலரைப் பார்த்திருக்கிறோம். அரசியல், பொருளாதாரம், சமூக இயல், விஞ்ஞானம், இலக்கியம், சங்கீதம், கலை, சமயம்—ஆகிய ஒவ்வொரு துறையிலும் அவர்கள் ஒரு முடிவு கட்டி வைத்திருப் பார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் ஒரு துறையில் ஒரு கொள்கையிருக்கும். இந்தக் கொள்கைகளுக் கிடையே அடிப்படையான ஒற்றுமையிருக்காது; பெரும் பாலும் முரண்பாடு தான் ஆனால் ரஸிகமணி காரியம் அப்படியல்ல, எந்தத் துறையானாலும் சரி, அடிப்படை யான ஒரே கோணத்திலிருந்துதான் விஷயங்களைக் கண்டு முடிவு கட்டுவார்கள். கிளைகள் எத்தனையா யிருந்தால்தான் என்ன, ஒரே கொப்பிலிருந்து முளைத் தெழுந்த கிளைகள்தான்.

தென்காசியிலிருந்து ரயிலிலே சென்னைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள் டி.கே.சி., ரயிலடியிலாவது சந்திக்கலாம் என்று போயிருந்தோம். சந்தித்து இரண்டு வார்த்தை பேசுவதற்குள், சீவில்லிப்புத்தூர் ஸ்டேஷனை விட்டு ரயில் நகண்டு விட்டது. ஒரே ஏமாற்றம்! சென்னை யிலிருந்து வந்த டி.கே.சி. யின் கடிதம், கீழ்க்கண்டவாறு ஏமாற்றத்தைத் தெரிவிக்கிறது:— "எவ்வளவோ ஆத்திரத்தோடு, தாங்கள் வந்தீர்கள்; ஓடியே வந்தீர்கள். ஆனால், ரயிலும், கால தேவதையும் ரொம்பக் கேலி பண்ணி விட்டன. இரண்டு வார்த்தை பேசுவதற்குள் வாய்க் குருவியை (Whistle) ஊதிவிட்டான்...வெறும் இருட்டிலிருந்து இந்த உலகத்துக்கு வருகிறோம். கண்ணைத் துடைக்கவே, பத்திருபது வருஷம் (நிமிஷந் தான்) ஆகிறது. அதைக் கொஞ்சம் பார்க்கிறோம். இதைக் கொஞ்சம் பார்க்கிறோம். ஏதோ குருடன் தடவிப் பார்க்கிற கணக்குத்தான். ஆனால் ஒன்று தெரி

கிறது. எவ்வளவோ பார்க்க வேண்டியிருக்கிறதே, எவ்வளவோ அறிய வேண்டியிருக்கிறதே என்பதாக, கற்றதும் ஒன்றும் இல்லையே என்ற திகைப்பும் ஏற்படு கிறது. அப்போது உலக—ஓட்டி, சங்கை ஊதி விடுகிறான். அடாடா, உலகத்தோடு ஒன்றும் பேசவில்லையே என்று தோன்றுகிறது.''

இருபது வருஷங்கள் டி.கே.சி.யோடு பழகிய பிறகு இன்னும் எவ்வளவோ அவர்களிடம் அறிய வேண்டி யிருக்கிறதே என்று பட்டது. அதற்குள்ளாக, உலக ஓட்டி சங்கை ஊதிவிட்டான். டி.கே.சி. தத்துவம் மறைந்து விட்டது. திகைப்புத்தான் மிஞ்சுகிறது!

# 13. ரசிகமணி டி.கே.சி. நூற்றாண்டு விழா

மாண்புமிகு டாக்டர் ம.பொ.சி. அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களே,
முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர்
ஜஸ்டிஸ் இஸ்மாயில் அவர்களே,
மற்றும் இங்கு கூடியிருக்கும் பெரியோர்களே,

ரசிகமணி நூற்றாண்டு விழாவை இன்று தமிழக அரசே மேற்கொண்டு நடத்தத் தொடங்கி இருக்கிறதென்றால் இது வெறும் ஆடம்பரம் அல்ல. ரசிகமணி வாழ்க்கையில் உள்ள அருமைப்பாடுகளை நன்றாக உணர்ந்த காரணத்தினால்தான் தமிழக அரசு இந்தக் கொண்டாட்டத்தில் ஆர்வத்தோடு பங்கெடுத்துக் கொள்ளுகிறது. தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ரசிகமணியை எவ்வளவு தூரம் ரசித்து இருக்கிறார்கள் என்பது அவர்களுடைய பேச்சுக்களிலிருந்து நன்றாகத் துலங்குகிறது. இரண்டாண்டுகளுக்கு முன்னால் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் முதல்வரவர்கள் பேசும்போது, "ரசிகமணி டி.கே.சி. கல்கியில் பல ஆண்டுகள் கம்பராமாயணத்தின் அழகுகளை எடுத்துச் சொல்லாமல் இருந்திருந்தால் கம்பராமாயணம் இருந்த இடம் தெரியாமல் போயிருந்

---

*1981ல் குற்றாலத்தில் நடைபெற்ற ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் வழங்கிய வாழ்த்துரை.*

சென்ற 40—50 ஆண்டுகளாகத் தமிழின் பெருமையைப் பற்றியும், கம்பர் கவிதையின் மேன்மையைப் பற்றியும் தமிழ் மக்களுக்கு எடுத்துச்சொல்லி வந்திருக்கிறேன். ஆனாலும் ? தமிழ் மக்கள் நான் சொன்னதைச் செவி மடுத்துக் கேட்டதாகத் தெரியவில்லை. ஏதோ என்னோடு நெருங்கிப் பழகிய 5—6 பேர்கள்தான் நான் சொல்லி வந்ததை ஓரளவு உணர்ந்து கொண்டார்கள். அவர்களும் என் கூற்றைப் பூரணமாக உணர்ந்துவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆகையால் உங்களை நான் வேண்டிக் கொள்ளுகிறேன். நீங்கள் தமிழ் மக்களிடம் இதைச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். எதை? டி.கே.சி. என்ற ஒருவன் இருந்தான். அவன் சொல்லுவான்: 'தமிழைப் போன்ற உயர்ந்த மொழி உலகத்திலேயே கிடையாது. கம்பனைப் போன்ற உயர்ந்த கவிஞன் உலக இலக்கியத்திலே கிடையாது என்று டி.கே.சி. சொல்லு வான்' என்பதை நீங்கள் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். மற்றவர்களையும் சொல்லச் செய்ய வேண்டும். 500 ஆண்டுகள் அல்லது 1000 ஆண்டுகள் கழிந்த பின்னாவது நான் சொன்னதை உண்மை என்று உலகமே ஒப்புக்கொள்ளும்.'' ரசிகமணி கட்டளைப்படி அவர்கள் வேண்டுகோளை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த வேண்டுகோளுக்குப் பின் இருக்கிற உறுதிப்பாடுதான் எப்பேர்ப்பட்டது? பன்மொழி ஞானமும், கவிதா ரசனையும் உள்ள ஒரு பேரறிஞருடைய அசைக்க முடியாத நம்பிக்கையை அல்லவா இந்த வேண்டுகோள் காட்டுகிறது. 'தமில் வால்க' என்று கூப்பாடு போடுகிறவர்களுடைய கூச்சலுக் கும், அறிஞர்களால் குற்றால முனிவர் என்று பாராட்டப் படுகிற ரசிகமணியின் தீர்ப்புக்கும் வேறுபாடு தெரிந்த பேரவை இது. ஆகவேதான் கடைசிக்காலத்தில் ரசிகமணி

என்னிடம் விடுத்தவேண்டுகோளை உங்களுக்கு நினை ஊட்டி அதை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு டி.கே.சி. வட்டத் தொட்டியின் சார்பிலே என்னுடைய சொந்த வேண்டுகோள் ஒன்றைத் தமிழக அரசுக்குச் சமர்ப்பிக்கிறேன். ரசிகமணி பல ஆண்டுகள் வாழ்ந்து புனிதப்படுத்திய இரண்டு வீடுகளும் குற்றாலம் ஐந்தருவிச் சாலையில் இருக்கின்றன, அவை இரண்டும் எளிமையான ஓடு போட்ட வீடுகள். அந்த வீடுகளில் தான் எத்தனை எத்தனையோ பெரியார்கள் ரசிகமணி யோடு உரையாடி விருந்துண்டு அவர்கள் பரப்பிய ஆனந்தத்தை மாந்தி மாந்திச் சென்றிருக்கிறார்கள். கவர்னர் ஜெனரல் ராஜாஜியும், ராமசாமிப் பெரியாரும், ருக்மணி தேவியும், டாக்டர் அருண்டேலும், ஜஸ்டிஸ் என். சோமசுந்தரம் அவர்களும், பெருந்தலைவர் காமராஜ் அவர்களும், என். எஸ். கிருஷ்ணன்—மதுரம் அவர்களும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர் களும், ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர் களும், கவர்னர் ஸ்ரீ. பிரகாசா அவர்களும், சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்களும், திவான் பஹதூர் ஆவுடையப்பப் பிள்ளை அவர்களும். தெருத் தெருவாக அலைந்து, வீடு வீடாகச் சென்று பொருள்களை விற்று வந்த Buy Indan League கிருஷ்ண அய்யர் அவர்களும் ஃபாதர் தனிநாயகம் அவர்களும், Hotel waiter ராம அய்யங்கார் அவர்களும், கல்கியும், எம். எஸ். ஸும் ஜெயம்மாளும், பாலசரஸ்வதியும், பண்டிதர்களும், பாமரர்களும் அந்த இரு வீடுகளில் தான் டி கே.சியோடு அளவளாவி அவர்களுடைய விருந்தோம்பலோடு கவிதை யையும், கலையையும் ரசித்து நிறைவு பெற்றிருக்கிறார் கள். அந்த வீடுகளின் முன் வாசலில் ஒரு நாள் ரசிகமணி

நின்று கொண்டு குற்றால மலையையும் அருவியையும் அண்ணாந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தூத்துக்குடி வழக்குரைஞரும் சிறந்த அறிஞரு மான ஏ. சி. பால் நாடார் அவர்கள் ரெவரெண்ட் கெய்த்தான் என்ற அமெரிக்க மிஷனரியை டி.கே சி.யிடம் அறிமுகப்படுத்துவதற்கு அழைத்து வந்தார்கள். ஐந்தருவிச் சாலையில் அவர்கள் ஏறி நடந்து வரும்போது ஏறக்குறைய 100 அடிக்கு அப்பால் நின்று கொண்டிருந்த அமெரிக்கரான கெய்த்தான், இது யார் என்று பால் நாடாரிடம் கேட்டார். இதுதான் ரசிகமணி டி கே.சி. என்று பதில்உரைத்தார்கள் பால் நாடார் அவர்கள். உடனே அந்த அமெரிக்கர் ஸ்தம்பித்துப் போய் ஒரு நிமிஷம் நின்றார். பிறகு சொன்னார் : You cannot see a face like that in the whole of Europe or America'' ஐரோப்பா அல்லது அமெரிக்கா பூராவும் தேடிப் பார்த்தாலும் இப்படி ஒரு முகத்தைப் பார்க்க முடியாது என்று சொல்லி அதிசயத்தில் மூழ்கினார். ரசிகமணியின் பாதங்கள் பட்டுப் புனிதமான வீடுகள், அவர்களுடைய கவிதையின் இன்ப நாதத்தை எதிரொலித்துக் கொண் டிருக்கும் அவ்வீடுகள் இரண்டுமே திருக்குற்றால தேவஸ் தானத்திற்குப் பாத்தியப் பட்டவை. அவற்றைத் தமிழக அரசு தேவஸ்தானத்திடமிருந்து விலைக்கு வாங்கி அவற்றை டி.கே.சி.யின் நினைவு இல்லங்களாக அல்லது நூல் நிலையங்களாக அமைத்துச் சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டத்திற்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் வந்திருக்கிறார்கள், இந்த வேண்டுகோளை அரசின் சார்பிலே அவர்களை ஏற்றுக் கொள்ளும்படியும் வேண்டுகிறேன்.

வாழ்க டி.கே.சி.யின் நாமம்! வாழ்க தமிழும் கம்பனும்!

## 14. ராஜாஜியும் டி. கே. சி.யும்

ராஜாஜியோடும் டி.கே.சி.யோடும் நெருங்கிப்பழகும் பேற்றைப் பெற்றவர்களுக்கு அறிவு வளத்தின் கொடுமுடியையும் இதயவளத்தின் கொடுமுடியையும் ஒருங்கே தொடும் பேறு கிட்டியது.

ராஜாஜியோடு கொஞ்ச நேரம் உரையாடிக்கொண்டிருந்தால் போதும், அவர்களுடைய அறிவின் வீச்சு எவ்வளவு பிரம்மாண்டமானது என்று தெரிந்துகொள்ளலாம். எல்லையில்லாத ஒரு சமுத்திரத்தையோ, ஓங்கி உயர்ந்து வானத்தை முட்டிக்கொண்டு நிற்கும் ஒரு மலையையோ, பார்க்கும்போது நம் உள்ளத்திலே ஏற்படுகிற அகண்ட உணர்ச்சி ராஜாஜியின் அறிவுத் தத்துவத்தின் நீள அகல ஆழங்களை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருக்கும்போது நமக்கு உண்டாகும். ஒருநாள் மணிக்கணக்காக ராஜாஜியோடு பேசிவிட்டு அவர்களை விட்டுப் பிரியும் போது நான் சொன்னேன்:—"கடவுள் இல்லையென்று சொல்லுகிறவர்கள் உங்களுடைய அறிவின் கூர்மையையும் வன்மையையும் ஆய்ந்து பார்த்தார்களேயானால், கடவுள் என்று ஒருவர் இருக்கவே செய்கிறார் என்றும் அவரைத் தவிர வேறொருவராலும் அதிசயிக்கத்தக்க உங்கள் அறிவைப் படைத்திருக்க முடியாது என்றும் உணர்வார்கள்" என்று. இதைக் கேட்ட ராஜாஜி ஒரு புன்முறுவல் செய்துவிட்டு மௌனமாக இருந்தார்கள்.

டி. கே. சி.யோடு பழகும்போதோ, அவர்களுடைய எல்லையற்ற இதயத்தின் கதகதப்பு நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும். நாம் தலையை நீட்டினால்போதும். குற்றாலத்து அருவியைப் போல, டி. கே. சி.யின் பேரன்பு நம்மை அப்படியே குளிப்பாட்டி விட்டுவிடும். என்னுடைய 66 ஆண்டு மண்ணுலக வாழ்வில் டி. கே. சி.யிடத்தில் நான் கண்ட அன்பில் நூற்றில் ஒரு பங்கைக்கூட வேறொருவரிடமும் நான் கண்டதில்லை. திருக்குற்றாலம் ஐந்தருவிச் சாலையிலுள்ள டி. கே. சி. வீட்டில் ஒரு நாள் நானும் டி. கே. சி.யும் மறுபிறவியைப் பற்றி வெகுநேரம் கொஞ்சம் சூடாகவே, விவாதித்துக் கொண்டிருந்தோம். "மனிதனுக்கு ஒரே பிறவிதான் உண்டு. அவன் இறந்ததும் இறைத் தத்துவத்தோடு அவன் இரண்டறக் கலந்து விடுகிறான்" என்று உறுதியோடு சொன்னார்கள் டி. கே. சி. எனக்கு இந்தக் கூற்றைத் தாங்க முடியவில்லை. "நீங்கள் சொல்வது உண்மையானால், அயோக்கியனும் செத்தவுடன் இறைவனடியைச் சேருவான், யோக்கியனும் அப்படியே இறைவனடியைச் சேருவான். அவரவர்களுடைய கர்ம பலனை அனுபவிக்காமலே எல்லோருக்கும் பேரின்பம் கிடைத்து விடும். இப்படி ஒரு நம்பிக்கையை வளர்த்தோமேயானால், உலகத்தில் அக்கிரமம்தான் தாண்டவமாடும்" என்று சொல்லி ஆத்திரத்தோடு எழுந்து, டி. கே. சி. வீட்டுக்கு அடுத்த வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டேன். ஒரே கோபாவேசத்தில் இருந்த என்னைச் சமாதானம் செய்வதற்காக, அரை மணி நேரம் கழித்து அங்கு வந்து, மிகுந்த பரிவோடு வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி, என் கையைப் பிடித்துக்கொண்டு தம் வீட்டுக்கு அழைத்து வந்து ஆயிரம் உபசாரம் செய்தார்கள் டி. கே. சி. என்னைக் காட்டிலும் 32வயதுக்கு மூத்தவர்கள் ரசிகமணி.

அப்படியிருந்தும் என் சிறுமையைப் பொருட்படுத்தாமல் எனக்காகக் கீழே இறங்கி வந்து என்மீது அன்பைப் பொழிந்தவர்கள் அவர்கள்.

டி. கே. சி. என்ற இதயத் தத்துவத்தையும் ராஜாஜி என்ற அறிவுத் தத்துவத்தையும் இணைத்து வைத்தவர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி. இந்த இணைப்பினால் இலக்கியம், இசை, கலை, அரசியல் ஆகிய துறைகளில் வரலாற்றுப் புகழ்ப்பெற்ற பல விளைவுகள் விளைந்தன. ராஜாஜியின் நட்பினால் டி. கே. சி.க்குப் பெரியவர்களுடைய அங்கீகாரம் கிடைத்தது. காந்திஜி, வினோபாஜி, நேருஜி போன்ற சான்றோர்கள் டி. கே. சி.யை நேரில் சந்தித்து மதிக்கத் தொடங்கினார்கள்; உயர்ந்த பதவிகளிலுள்ள ஐ. சி. எஸ். அதிகாரிகள், அமைச்சர்கள், நீதிபதிகள் ஆகியோர் டி. கே. சி.யோடு பழகுவதே தமக்கு ஒரு பெருமையென்று நினைத்தார்கள்; பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்ற புலவர்களுடைய வசவுக்கு ஆளாகிப் புண்பட்டுப் போயிருந்த டி. கே. சி.க்கு அரசியல் செல்வாக்கும், சாகாப் புகழும் பெற்றிருந்த ராஜாஜியின் நட்பும், ராஜாஜி குழாத்தின் நட்பும் இதயத்துக்கு இங்கிதமாக இருந்தது.

டி. கே. சி.யின் நட்பினால் ராஜாஜிக்கு ஆன்ம அமைதியும் ஆனந்தமும் கிடைத்தன. அரசியல் பரபரப்பிலே வேஷதாரிகளுக்கும் ஆஷாடபூதிகளுக்குமிடையே பெற்ற சொல்லொணாத வேதனையையெல்லாம் ராஜாஜி, டி. கே. சி. என்ற அன்பு தத்துவத்தில் மூழ்கி, மூழ்கி மறக்கக் கற்றுக்கொண்டார்கள். அரசியல் அஞ்ஞாத வாசத்தில் இருந்த நாட்களையெல்லாம் இருபதாவது நூற்றாண்டு பீஷ்மராகிய ராஜாஜி,

ராஜாஜி கீழ்க்கண்டவாறு சொன்னார்கள் :— "நாம் ஒரு தப்புப் பண்ணிவிட்டோம், சானட்டோஜனில் நல்ல ப்ரோட்டீன் சத்து இருக்கிறது. இதை நாம் டி.கே.சி.க்குக் கொடுத்திருக்க வேண்டும், கொடுத்திருந்தால் இன்னும் ஐந்தாண்டு காலம் அவர் நம்மோடு வாழ்ந்திருப்பார்." அவ்வாறு சொல்லும்போது ராஜாஜியின் தொண்டை உணர்ச்சி மிகுதியால் அடைத்துக்கொண்டது. இந்தச் சோகமான கட்டத்தைச் சமாளிப்பதற்காக, "நீங்கள் சானட்டோஜன் சாப்பிடுகிறீர்கள். நானும் சாப்பிடுகிறேன் உடம்புக்கு நன்றாகத்தான் இருக்கிறது" என்று அசட்டுத்தனமாக நான் சொல்லிவைத்தேன். இதைக் கேட்ட ராஜாஜி மிகுந்த பரபரப்போடு, "நீங்களும் நானும் அதைச் சாப்பிட்டு என்னத்துக்கு?" என்று ஒரு போடு போட்டார்கள். அந்தக் கேள்விக்குள்ளிருந்து பொத்துக்கொண்டு வந்த வேதனையும் துன்பமும் என்னைத் தூக்கிவாரிப் போட்டன.

டி.கே.சி. மறைந்த ஓராண்டுக்குப் பின், ரஸிகமணி எழுதிய 'கம்பர் தரும் ராமாயணத்'தின் மூன்றாம் பாகம் வெளிவந்தது. அதற்கு எழுதிய முன்னுரையில் ராஜாஜிக்கு டி.கே.சி. யிடமிருந்த அன்பும், டி.கே.சி. மறைந்ததால் அவர்களுக்கு ஏற்பட்ட ஏக்கமும் சோகமும் பீறிட்டுக் கொண்டு வருவதைப் பார்க்கலாம். இதோ ராஜாஜியின் வாசகம் :- "டி.கே.சி அவர்கள் கம்பனுடைய உள்ளத்தில் புகுந்து அதன் அந்தரங்கத்தை அறிந்து, கம்பன் பாடல்களைப் பாடி, கவிவானம் உண்டாக்கி அமுதமழை பொழியச் செய்வார்; அதை நேரில் அனுபவித்தவர்கள், நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அறிவார்கள் அதன் மகிழ்ச்சியை; எழுத்தில் ஓரளவுதான் தொனிக்கும். ஆனால், இப்போது டி.கே.சி. ஊனுடலை

விட்டுப் போய் விட்டார். நிற்பது என்னைப் போன்ற பித்தரின் உள்ளத்தில் இருக்கும் நினைவுகளும் இந்த நூலும்.'' ராஜாஜி தம் ஆற்றாமையை அறிவினால் எவ்வளவு அடக்கிப் பார்த்தாலும் அது அத்து மீறிக் கொண்டு எப்படியெல்லாம் கொந்தளிக்கிறது என்பதை இந்த வாசகத்தின் வாயிலாக நாம் கண்கூடாகக் காணலாம்.

உணர்ச்சிகளை அடக்கியும் ஒடுக்கியும் அமுக்கியும் வைக்க வேண்டும் என்பது ராஜாஜியின் கொள்கை. ஆனால், டி.கே.சி.யின் கொள்கையோ இதற்கு நேர் மாறானது. உணர்ச்சிகளுக்குப் போக்குவிடவில்லை யென்றால் அவை உள்மனத்தில் புதைந்து உட்கார்ந்து கொண்டு பல திருகுமுறுகல்களையும் முண்டு முடிச்சுகளை யும் (Inhilibions) உண்டாக்கும் என்பது டி.கே.சி யின் கருத்து; நல்லதொன்றைக் கண்டுவிட்டால் அதை மனசுக் குள்ளே அமுக்கி வைத்துக் கொண்டிருக்க முடியாது டி.கே.சி.க்கு ''பலே'' ''பேஷ்'' ''சபாஷ்''. ''அப்படிச் சொல்லுங்கள்'' ''அடேடே'' என்றெல்லாம் கூறி ஆர்வ மூட்டுவார்கள். கல்கி இவ்விருவருக்குமிடையே உள்ள வேறுபாட்டை பொருத்தில் அடித்தமாதிரி, எடுத்துச் சொன்னார்கள் :—நான் என்ன செய்தாலும் அதிலுள்ள குற்றத்தை எடுத்து சொல்லி என்னைக் கண்டித்து வளர்த்தவர் ராஜாஜி. நான் என்ன செய்தா லும் அதிலுள்ள நல்ல அம்சங்களை எடுத்து பாராட்டி எனக்கு உற்சாக மூட்டி வளர்த்தவர் டி.கே.சி.

ஆனந்தத்தை எப்படி, எப்படியெல்லாம் வளர்க்க முடியுமோ அப்படி, அப்படியெல்லாம் அதை வளர்த்து வந்தார்கள் டி.கே.சி. ஆனந்தமே இறைவன், ஆனந்தம் எங்கே இருக்கிறதோ அங்கே இறைவன் இருக்கிறான்

என்று உணர்ந்தவர்கள் டி.கே.சி. புலன்களை அடக்கியும் கடுமையான பிரம்மச்சரியத்தை அனுஷ்டித்தும், மலை கலங்கிலும் மனங்கலங்காத துறவு நிலையில் நின்றவர்கள் ராஜாஜி. இப்படிக் கண்டிப்பான துறவு நிலையிலுள்ளவர் களுக்கு ஆனந்தத்தை அனுபவிப்பதிலே தயக்கமேற்படுவது இயல்பு. திருக்குற்றாலத்தில் பெரிய,பெரிய உண்மைகளை யெல்லாம் பற்றி உள்ளுணர்வோடு டி.கே.சி. பேசிக் கொண்டிருப்பார்கள். அப்போது ராஜாஜியின் மேதை யைப் பற்றியும் சான்றாண்மையை தசரதனோடு சமமாக வைத்துப் பாராட்டுவார்கள். அப்படி பாராட்டிக்கொண் டிருக்கும் போதே, துறவிகளுக்குண்டான சங்கடங்களைப் பற்றியும் பேசுவார்கள். "பாலசரஸ்வதியின் அபிநயத்தைப் போல உலகத்திலேயே ஒரு அதிசயத்தை பார்க்க முடியாது, நீங்கள் அதைப் பார்க்க வேண்டுமென்று ராஜாஜியிடம் சொல்லி வந்தேன். ஆனால் ராஜாஜி அதைக் காது கொடுத்துக் கேட்டதாக இல்லை. கடைசி யாக 1934-ல் சென்னையில் நான் இருந்தபோது ராஜாஜிக் கென்றே பாலசரஸ்வதியின் அபிநயக் கச்சேரியை என் வீட்டில் ஏற்பாடு செய்திருந்தேன். ராஜாஜியும் வேண்டா வெறுப்பாகக் கச்சேரிக்கு வந்தார்கள். "தாயே யசோதா" "தெருவில் வாரானோ" முதலிய பதங்களை ஜெயம்மாள் பாட பாலசரஸ்வதி அற்புதமாக அபிநயம் பிடித்தார். மண்ணுலகை விட்டு எங்களையெல்லாம், ராஜாஜியையும் சேர்த்தே, ஒரு ஆனந்த லோகத்துக்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டது அபிநயக்கலை. ஒரு மணி நேரம் தம்மை மறந்து கச்சேரியை அனுபவித்துக் கொண்டிருந்த ராஜா ஜிக்கு ஆனந்தத்தை அனுபவித்து ஒரு பாவத்தைச் செய்து விட்டோமோ என்ற நினைப்பு வந்துவிட்டது. காந்திஜி யும் அப்படித்தானே பெரிய மகான்தான். ஆனாலும் ஆனந்தத்தை அனுபவிக்கக்கூடாது என்ற கொள்கை

யுடையவர். நல்ல சாப்பாடு சாப்பிடுவதற்கு முன்னால் வேப்பிலையைச் சாப்பிடச் சொல்லுவார். ருசியான பொருள்களை அனுபவித்துவிடக்கூடாது. அதற்காக எல்லாவற்றையுமே கசப்பாக்க வேண்டுமென்ற ஆத்திரம். பிரம்மச்சரியத்திலிருப்பவரல்லவா காந்திஜி, யாராவது ஒரு பெண் அவருடைய ஆஸ்மரத்தில் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்பினால், அவளுக்குத் தலையலங்காரம் கூடாது. மொட்டை அடித்தால்தான் ஆஸ்ரமத்தில் இருக்கலாம் என்று சொல்லுவார். அவரோடு பழகிய தோஷத்தால் ராஜாஜியும் ஆனந்தத்தை அவ்வளவாக விரும்புவதில்லை. ஆகவே பாலசரஸ்வதியின் பரத நாட்டியக் கச்சேரி 3 மணி நேரம் நடக்க வேண்டியதை ஒரு மணி நேரமானதும் ''உடனே நிறுத்தவேண்டும்'' என்று சொல்லிவிட்டார்கள் ராஜாஜி. வந்திருந்தவர்களுக்கெல்லாம் 'பக்'கென்றிருந்தது. என்ன செய்ய? கச்சேரியைத் திடீரென்று நிறுத்தும்படி சொன்னேன். ஜெயம்மாளும் பாலசரஸ்வதியும் கலைத்தெய்வங்கள். ஆனால் அவர்களுடைய அற்புதக்கலைக் கச்சேரியை முழுமையாக அன்று அனுபவிக்க முடியவில்லை. கட்டாயப் படுத்தியல்லவா அவர்களை நிறுத்திவிட்டேன். அதன் பிறகு ''உலகத்திலேயே இப்படி ஒரு கலையில்லை. ஆனந்தத்தின் மூலமாக இறைவனுடைய சந்நிதானத்துக்கே அது நம்மை இழுத்துக்கொண்டு சென்றுவிடும்'' என்று பல ஆண்டுகளாகப் பல முறை ராஜாஜியிடம் சொல்லி வந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களும் நம்முடைய கட்சியை ஏற்றுக் கொண்டார்கள், வங்காள கவர்னராக இருந்தபோது ராஜாஜி பாலசரஸ்வதியைக் கல்கத்தாவுக்கு அழைத்து பரத நாட்டியக் கச்சேரியே செய்யச் சொன்னார்கள். அதோடு தாமே அந்த கச்சேரிக்குத் தலைமை வகித்

தார்கள். தலைமையுரையிலே, வந்திருந்த வங்காளி களுக்குப் பாலசரஸ்வதி யார் என்று இனங்காட்டினார் கள்: Balasaraswati has come here as the Cultural Ambassador of the South" (தென்னாட்டின் பண் பாட்டுத் தூதராக வங்காளத்துக்கு வந்திருக்கிறார் பால சரஸ்வதி) என்று சொல்லிப் பாராட்டினார்கள். இப்படி யாகத் தமிழ்நாட்டுப் பரதநாட்டியக் கலைக்குத் துணையாக ராஜாஜியின் உன்னதமான செல்வாக்கு நமக்குக் கிடைத்தது" என்று டி.கே.சி அடிக்கடி சொல்லி மகிழ்வார்கள்,

*17*ஆவது, *18*ஆவது நூற்றாண்டுகளில் ஃப்ரான்ஸ் நாட்டிலே பெரிய சீமாட்டிகள் நாட்டின் சிறந்த அறிஞர் களையும் கலைஞர்களையும் தம் மாளிகைகளுக்கு அழைத்து வளமான விருந்துகள் அளித்து உபசாரம் செய்து அவர்களுடைய உரையாடல்களைக் கேட்டு மகிழ்வார்கள் இந்த மாளிகைகளுக்கு ஸலோன்ஸ் (Salons) என்று பெயர். ப்ரெஞ் இலக்கியத்தையும் கலை யையும் இந்த ஸலோன்களிலேயே ப்ரெஞ்சுகாரர்கள் வளர்த்தார்கள். தமிழ்நாட்டில் அப்படி விருந்தோம்ப லோடு கலைகளையும் இலக்கியதையும் ஓம்பி வளர்க்கும் குழுவை நடத்தியது சடையப்ப வள்ளலுக்குப் பின் டி.கே.சி. தான் என்று சொல்ல வேண்டும். கலைஞர் கள், கவிஞர்கள், நடிகர்கள் அரசியல்வாதிகள், மாபெரும் புலவர்கள் வழக்குரைஞர்கள் நீதிபதிகள் அயல்நாட்டு மேதைகள் சாமாணிய மக்கள் இப்படியாகப் பல திறப்பட்டவர்கள் டி. கே. சி. இல்லத்தில் பல நாட்கள் விருந்தாளிகளாக இருந்து டி.கே.சி. யின் ஆனந்த வாழ்க்கையிலும் கவிதை நிஷ்டைகளிலும் பங்குகொண்டு தம்மை மறந்த வயந்தன்னில்ந்திருந்திருக்

கிறார்கள். அவ்வாறு வரும் விருந்தாளிகளில் எல்லாம் மிக்க சரித்திரப் புகழ் பெற்ற மேதை ராஜாஜி என்றே சொல்ல வேண்டும்.

ராஜாஜியும் டி.கே.சி. யும் ஒருவருக்கொருவர் மிக்க பக்தியோடு நடந்துகொள்ளுவார்கள். ஆனால், சில சமயங்களில் உறவு நெருக்கத்தை ஒருவருக்கொருவர் கிண்டல் செய்து காட்டிகொள்வதுமுண்டு. ராஜாஜி சைவ பரிபாஷையையும், டி.கே.சி. வைணவ பரிபாஷையையும் மரியாதையோடு நையாண்டி செய்வார்கள். இருவருக்கு மிடையே வாதப் பிரதிவாதங்கள் அபூர்வமாக நடக்கும். பக்கத்திலிருப்பவர்களுக்கு இரண்டு பெரிய ஜாம்பவான் கள் மோதிக் கொள்ளும் போதுள்ள பரபரப்பும் சுவையும் ஏற்படும்.

1943ல் இருவருக்கும் ஒரு சர்ச்சை நடக்கும் போது நானும் எனது பேராசிரியர் சீநிவாசராகவனும் சில நண்பர்களும் கூட இருந்து அனுபவித்துக்கொண்டிருந் தோம். "சத்தியவேட்கைக்கு அடிப்படையாக இருப்பது உணர்ச்சிதான், அறிவில்லை. நல்ல கவிதையெழுது வதற்கு எவ்வளவு உணர்ச்சி அவசியமோ, அவ்வளவு உணர்ச்சி விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் அவசியம்" என்று சொன்னார்கள் டி.கே சி. இதைக் கேட்டுக்கொண் டிருந்த ராஜாஜி, "விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு அவசியமாக இருப்பது நுண்ணறிவுதான். உணர்ச்சி அல்ல. டி.கே சி. கணக்குக்குக்கூட உணர்ச்சி அவசியம் என்று சொல்லுவார்" என்று ஒரு போடு போட்டார் கள். இந்த வாதத்தை மறுத்து டி.கே.சி. சொன்னார்கள்: "அப்படியல்ல. அறிவு நல்ல முறையில் இயங்குவதற்குத் தூண்டுதலாக இருப்பது அன்புதான், உண்மையைக் காண்பதிலே அன்பும் ஆர்வமுமில்லையென்றால் விஞ்

ஞானிகள் புதுக்கண்டுபிடிப்புகளைக் காண முடியாது" என்று. இப்படியாக வாதப்பிரதிவாதங்கள் வெகுநேரம் நடந்தன. சில ஆண்டுகளுக்குப் பின்னால் ஐன்ஸ்டைன் சொன்ன கீழ்க்கண்ட கூற்றை ஹாவ்லக் எல்லிஸ் (Havelloek Ellis) தம் நூல் ஒன்றில் மேற்கோளாகக் கொடுத்திருந்தார்:—"The attitude of the Scientist towards Truth is akin to that of a devotee or a lover." (ஒரு விஞ்ஞானி உண்மையை ஆர்வத்தோடு பார்க்கும் பார்வை ஒரு பக்தன் இறைவனைப் பார்க்கும் பார்வையையும் ஒரு காதலிதன் காதலனைப் பார்க்கும் பார்வையையும் ஒத்திருக்கிறது.) இந்த மேற்கோளைப் படித்தவுடன் நான் டி. கே. சி.க்கு எழுதினேன்:—"பல ஆண்டுகளுக்கு முன்னால் உங்களுக்கும் ராஜாஜிக்கும் ஒரு தர்க்கம் நடந்தது. அதில் ராஜாஜி அறிவுக் கட்சிக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார்கள். நீங்கள் உணர்ச்சிக் கட்சிக்காக வாதாடினீர்கள். இப்போது ஐன்ஸ்டைன் உங்கள் கட்சியை ஆதரித்துவிட்டார்" என்று சொல்லி ஐன்ஸ்டைன் சொன்ன கூற்றையும் மேற்கோள் காட்டினேன். அதோடு நிற்காமல் திரு ஈ. ஆர். கோவிந்தன் நடத்தி வந்த 'Free India' என்ற வாரப் பத்திரிகையில் "T. K. C., the Man of Letters" என்ற கட்டுரையை 'Incognito' என்ற புனைப் பெயரில் வெளியிட்டேன். அதில் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டேன். இந்தப் பத்திரிகையை டி. கே. சி.க்கும் ராஜாஜிக்கும் அனுப்பி விட்டார் பத்திரிகை ஆசிரியர். அப்போது ராஜாஜி வங்காள கவர்னராக இருந்தார்கள். கட்டுரையை படித்து விட்டு. ராஜாஜி டி. கே. சி.க்கு ஒரு கடிதம் எழுதினார்கள்:—"ஏதோ தர்க்கத்துக்காக நான் எப்போதோ சொன்ன வாதத்தை இப்படி ஒரு பத்திரிகையில் எழுதி விளம்பரம் செய்திருக்க வேண்டாம்" என்று. உடனே

டி. கே. சி. ராஜாஜிக்கு 5-4-48ல் ஒரு கடிதம் எழுதினார்கள்:—'Free India'ல் என்னைப் பற்றி எழுதியவர் மகராஜ பிள்ளை (சீவில்லிபுத்தூர் டிஸ்ட்ரிக்ட் முன்ஸீபு): தங்களுக்கு நன்றாய்த் தெரிந்தவர்தான். வி. வி. சீனிவாசய்யங்கார் அவர்களிடத்திலும், தங்களிடத்திலும் மிக்க மதிப்புள்ளவர். இலக்கியக் கவண் வீசும்போது கொஞ்சம் அதிகமாகவே போய்விடும் லக்ஷ்யம். ஏதோ தர்க்கத்து முறையில் உணர்ச்சியைப் பற்றியும் அறிவைப் பற்றியும் பேசிக்கொண்டிருப்பது வழக்கந்தானே நமக்கு. அந்தத் தர்க்க விளையாட்டை, தன்னுடைய இலக்கிய வீச்சுக்குக் கொஞ்சம் உபயோகித்துக் கொண்டார். அவ்வளவுதான். உண்மையில் நம்முடைய லக்ஷ்யங்களில் ஒன்றாகக் கலந்து அனுபவிக்கிறவர் அவர் ஒருவர்தான் என்றால் மிகையாகாது. அவர் போன, இடமெல்லாம்......'' இதற்கு மேலே ஒரு பக்கம் என் மேலுள்ள அன்பைக் கொட்டிய எழுத்துக்கள். இப்படி என்னைப் பற்றி ஒரு கடிதம் எழுதியதை எனக்குத் தெரிவிப்பதில் டி. கே. சி. கொஞ்சம் தயங்கியிருக்கிறார்கள். ஆனால், 18-4-48ல் மேற்சொன்ன கடிதத்துக்கு ஒரு நகலை எனக்கு அனுப்பி, அதற்கான, காரணத்தையும் எனக்குக் கீழ்க் கண்டபடி விளக்கினார்கள்:—''ராஜாஜிக்கு நான் எழுதிய கடிதத்துக்கு நகல் இத்துடன். என் அபிப்ராயத்தை, அல்ல, அல்ல, என் உணர்ச்சியைக் கடிதம் விளக்கும்...... அரசியல் நிர்வாகத்தில் மனம் புண்பட்டு இருக்கிறவர்களுக்குப் பழைய, கழிந்த விவகாரங்களை ஞாபகப்படுத்துவதில் மனத்தளர்ச்சி ஏற்படுவது இயல்பு. அது காரணமாகக் கொஞ்சம் தைலம் தேய்த்து இதம் செய்திருக்கிறேன். அப்படியெல்லாம் செய்ய வேண்டியதும் தொண்டுதானே. கடிதத்தில் அத்தகைய தொண்டு கொஞ்சம் செய்திருக்கிறேன் அவ்வளவுதான்.''

தமக்கு வேண்டியவர்களுக்கிடையேயுள்ள நல்லுறவை முறியாமல் பார்த்துக் கொள்வதிலே டி. கே. சி க்கு அவ்வளவு அக்கறை. பி. ஸ்ரீ. ஆச்சார்யாவும் டி. கே. சி.யும் நெருங்கிய நண்பர்கள், மனமொருமித்திருந்தவர்கள். ஏதோ சில காரணங்களால் அவர்களுக்கிடையே மனக் கசப்பு ஏற்பட்டது. ஆகவே, பல ஆண்டுகளாக இருவரும் ஒருவரையொருவர் சந்திக்காமலே இருந்தார்கள். பிரிவாற்றாமையால் டி.கே.சி.க்கு ஏற்பட்ட வேதனை அப்படி இப்படியென்று சொல்ல முடியாது. இதையுணர்ந்த நான் 1952ல் தென்காசி திருவள்ளுவர் கழகத்துப் பொன் விழாவுக்கு பி.ஸ்ரீ.யை அழைத்து மூன்று நாட்கள் டி.கே.சி.யோடு திருக்குற்றாலத்தில் தங்கும்படி ஏற்பாடுசெய்தேன். டி.கே.சி. தமக்கு ஏற்பட்ட ஆனந்தத்தைக் குழந்தையுள்ளத்தோடு எனக்கு விவரித்தார்கள்:— "மகாரஜ பிள்ளைவாள், (பிள்ளைப் பட்டத்தை நான் விரும்புவதில்லை என்று எத்தனை முறை சொன்னாலும் டி.கே.சி.க்கு நான் சொல்வது காதில் விழுவதில்லை) மகராஜ பிள்ளைவாள், நெருங்கிய நண்பர்களைப் பிரித்து வைப்பதில்தான் உலகத்திலுள்ள பலருக்குச் சந்தோஷம் உண்டாகிறது. ஆனால், பிரிந்திருந்த என்னையும் பி.ஸ்ரீ.யையும் நீங்கள் சேர்த்து வைத்தீர்களே, இதனால் என் வாழ்க்கையிலேயே ஒரு பெரிய ஆனந்தம் கிடைத்துவிட்டது. மறக்க முடியாத ஆனந்தம்."

* * *

டி.கே.சி.க்கும் ராஜாஜிக்கும் இடையே நடந்த இன்னொரு சுவையான உரையாடல் நினைவுக்கு வருகிறது.

**கன்னல் எனும் கருங்குருவி**
**ககன மழைக் காற்றாது**
**மின்னல் எனும் புழுவெடுத்து**
**விளக்கேற்றும் கார்காலம்**

என்ற தனிப்பாடலை டி.கே.சி. பாடி விளக்கிக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

தூக்கணாங்குருவி இருட்காலத்தில் மின்மினிப் பூச்சியைத் தன் கூட்டில் சொருகி விளக்கேற்றி வைக்குமாம். இதை நினைவில் வைத்திருந்த கவிஞர் இருட்டையே (கன்னலையே) ஒரு கருங்குருவியாகக் கற்பனை செய்கிறார். மாரிக் காலத்து மழைக்கு ஆற்றாமல் கன்னல் என்ற அந்தக் கருங்குருவி என்ன செய்கிறது?

மின்னல் என்ற புழுவை (மின்மினிப் பூச்சியை) எடுத்து தன் கூட்டில் சொருகி விளக்கேற்றுகிறதாம். இந்தக் கருத்தை அவர்களுக்கு உரிய பாணியில் டி.கே.சி. விளக்கிவிட்டு, ராஜாஜியைப் பார்த்து, "தமிழ் லெக்ஸிக்கனில் 'கன்னல்' என்ற சொல்லுக்கு அர்த்தம் போட்டிருப்பதைப் பார்த்தீர்களா!" என்று சொல்லிக் கொண்டே தமிழ் அகராதியை ராஜாஜி கையில் கொடுத்தார்கள். அதில் "கன்னல் என்றால் ஒரு வகைக் குருவி" என்று சொல்லியிருந்தது! அதோடு இந்த அநர்த்தத்துக்கு உதாரணமாக 'கன்னல் எனும் கருங்குருவி' என்ற தனிப் பாடலை உதாரணமாக காட்டியிருந்தது. இதைப் பார்த்துவிட்டு ராஜாஜி இந்தப்பிழையிலுள்ள ரஸத்தைச் சிரிடா சிரி என்று சிரித்து அனுபவித்தார்கள். அப்போது, நான் "மின்னல்" என்ற சொல்லுக்கு லெக்சிக்கனில் என்ன பொருள் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் பார்க்க

வேண்டுமே" என்றேன். ராஜாஜி, "எதற்காக?" என்று கேட்டார்கள். "இல்லை, மின்னல் என்பது ஒரு வகைப் புழு" என்று பொருள் கூறி, உதாரணத்துக்கு, "மின்னல் எனும் புழுவெடுத்து" என்ற வரியை மேற்கோள் கூறியிருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும்" என்று சொன்னேன். இதைக் கேட்ட டி.கே.சி. "பலே, பலே. நல்ல போடு போட்டீர்கள்" என்று சொல்லிக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள்.

இப்படியாக ராஜாஜி—டி. கே. சி. சங்கத்தில் கழித்த நாட்கள் பலப்பல; அவர்கள் முன்னிலையில் காலம் என்ற தத்துவம் தங்கச்சக்கரம் பூண்டு வெள்ளித் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருக்கும் என்று நான் அவர்களிடமே சொல்லுவதுண்டு. அவர்களும் அதை முழு மனதோடு ஆமோதிப்பார்கள். இதய நாடிகள் சுருதி சேர்ந்து பேசும்போது காலத்தத்துவத்தையே கடந்து விடுகிறோம். அதாவது காலனை உதைத்துத் தள்ளி விடுகிறோம்.

சென்னை காரணேஸவரன் கோயில் தெரு வீட்டில் நண்பர் மீ.பா. சோமசுந்தரம் (சோமு) இருந்தபோது, ராஜாஜி வாரந்தோறும் ஒரு நாள் சோமு வீட்டுக்கு வந்து மணிக்கணக்கிலே அங்கிருந்து பல அரிய விஷயங்களைப் பேசிக்கொண்டிருப்பார்கள். 4-10-65ல் நான் புதுவை பிரதம நீதிபதியாயிருந்தபோது சென்னைக்கு வந்து சோமு வீட்டில் தங்கியிருந்தேன். அன்று மாலை சுமார் 6 மணிக்கு ராஜாஜி அங்கு வந்தார்கள். என்னைக் கண்டவுடன், ராஜாஜி My week is incomplete without meeting Somu on Sundays." (ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் சோமுவைச் சந்திக்கவில்லையென்றால் அந்த வாரம் எனக்குப் பூர்த்தியாவதில்லை) என்று சொல்லித் தமக்கும் சோமுவுக்கும் உள்ள அரிய இலக்கிய நட்பை

மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்கள். பிறகு, சமயத்தைப் பற்றி மூவருமே பேசிக் கொண்டிருந்தோம். ராஜாஜி அன்று கீழ்க்கண்ட கருத்தை வற்புறுத்திக்கொண்டிருந் தார்கள்:—"எல்லா சமயங்களும் சரிசமானமானவையே என்று பலர் சொல்லி வருகிறார்கள். இது ஒரு விளக்கெண்ணெய் சமரசம். தத்தம் சமயத்தில் நம்பிக்கை யில்லாதவர்களே இப்படிப் பேசி வருகிறார்கள். இது தவறு. கிறிஸ்தவன் கிறிஸ்தவத்திலே ஊன்றி நிற்க வேண்டும். முஸ்லிம் இஸ்லாமில் உறுதியோடு நிற்க வேண்டும். வைஷ்ணவன் அப்படியே வைஷ்ணவத்திலும், சைவன் அப்படியே சைவத்திலும் ஊன்றி நிற்க வேண்டும்." இதைக் கேட்டுக்கொண்டிருந்த நான், "தாங்கள் சொல்லுவது முழுவதும் உண்மை. ஆனால் தாங்கள் சொல்லுகிற முறை சமயப்பூசலுக்கு இடங் கொடுக்குமோ என்று அஞ்சுகிறேன்" என்று சொன்னேன். உடனே ராஜாஜி, "அப்படியானால், எப்படி இந்த உண்மையைச் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறீர் கள்?" என்று கேட்டார்கள். "திருமூலர் இந்த உண்மையை வேறுவிதமாகச் சொல்லுகிறார்; கடவுள் ஒருவன்தான். அவனுக்கு மக்கள் பல நாம ரூபங்களைக் கொடுக்கிறார் கள், அவரவர்களுக்குரிய பக்குவத்துக்கு ஒத்தபடி. அந்த இறைவன் என்னிடம் வந்து ஒரு உபதேசம் செய்தான். எனக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. அத்தனை நாமங்களை யும் பிடித்துத் தொங்காதே. ஏதாவது ஒரு நாமத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள். அந்த நாமத்தில் முங்கி முழுகி விளையாடு. அப்படிச் செய்தால் என்னுடைய அருள் முழுவதும் உனக்குக் கிடைக்கும்" என்று உபதேசம் செய்தான்.

பேராயிரமுடைப் பெம்மான்
பேரொன்றினில்
ஆரா அருட்கடல்
ஆடுகின்றானே

என்று விளக்கம் கொடுக்கிறார். தாங்கள் சுட்டிய உண்மையை இப்படிச் சொல்லும்போது, சமயங்களுக்கிடையேயுள்ள பூசல்கள் தீரும்'' என்று சொன்னேன்.

''அடடா, என்ன அருமையான திருமந்திரம் அது!'' என்று பாட்டை வியந்து போற்றினார்கள் ராஜாஜி. அன்று ராஜாஜி எங்களை விட்டுப் போகும்போது இரவு மணி 12-15.

அடுத்த நாள் காலை தமிழக அரசின் நீதித் துறைச் செயலாளரும் எனது அருமை நண்பருமான திரு வெங்கடரமணனை (ஐ. ஏ. எஸ்.)ச் சந்தித்தேன். முந்தின இரவு 6 மணி நேர உரையாடலைப் பற்றி அவரிடம் குறிப்பிட்டபோது, அவர், ''அடேயப்பா! ஆறு மணி நேரமா! அமெரிக்கத் தூதர் ராஜாஜியோடு அரை மணி நேரம் பேட்டி காண வேண்டும் என்று மிகவும் விரும்பினார். அவர் சார்பில் நான் ராஜாஜியிடம் தொடர்பு கொண்டேன். 15 நிமிஷத்துக்கு மேல் பேட்டி கொடுக்க முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் ராஜாஜி. நேற்று உங்களோடு செலவழித்த 6 மணி நேரத்தில் 15 நிமிஷத்தை ஒதுக்கி அமெரிக்கத் தூதருக்குக் கொடுத்திருக்கலாகாதா?'' என்றார். நான் சொன்னேன்: ''அமெரிக்கத் தூதரிடம் அரசியல் பேசுவதென்றால் எவ்வளவு எச்சரிக்கையாகப் பேச வேண்டும். கணக்கறிந்து பேசுகிறவர் ராஜாஜி. ராஜாஜியின் உரையை உலகத்திலுள்ள பத்திரிகைகள்

எல்லாம் வெளியிடும். அதனால் இந்திய அரசுக்கே சங்கடங்கள் உண்டாகலாம். ஆனால், சமயத்தைப் பற்றிப் பேசுவது ஆத்ம சாந்தியைக் கொடுக்கும். எச்சரிக்கைக்கு அவசியமில்லை.'' இதைக் கேட்ட பிறகும், "என்ன இருந்தாலும், கூடப் பதினைந்து நிமிஷம் ராஜாஜி கொடுத்திருக்கலாம்'' என்று சொல்லி, சடைத்துக் கொண்டார் நண்பர் வெங்கடரமணன்.

அமெரிக்கத் தூதர் மாத்திரமல்ல, நம்மவர்களுமே ராஜாஜியைப் பேட்டி காண்பது அவ்வளவு எளிதல்ல என்று முணுமுணுப்பார்கள். ஆனால், டி.கே சி, மறைந்த பின் டி.கே.சி. யின் சீடர்களைச் சந்திப்பதிலும் அவர்கள் மீது அன்பைப் பொழிவதிலும் தனி அக்கறை காட்டினார்கள் ராஜாஜி. 1957ல் சென்னையில் ராஜாஜியின் 77ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் நவரத்னராமராவின் தலைமையில் மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபாவில் நடந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். நான் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு இதற்காகவே வந்திருந்தேன். சோமுவும் நானும் ஒன்றாகக் கூட்டத்திற்குப் போனோம், மேடையிலே அமர்ந்திருந்த ராஜாஜி எங்களைப் பார்த்ததும் எங்களையும் மேடையில் வந்து அமரும்படி சொன்னார்கள். மேடையிலே ஒரு பட்டு, பட்ட பெரியவர் உட்கார்ந்திருந்தார்; அவர் இந்தியாவிலே பல உயர்ந்த பதவிகளையெல்லாம் வகித்திருந்து ஓய்வு பெற்றவர். அவரிடத்திலே என்னை ராஜாஜி அறிமுகப்படுத்தினார்கள் :— "இவர் தான் மகராஜன். புதுக்கோட்டை சப் ஜட்ஜாக இருக்கிறார்'' என்று ராஜாஜி சொல்லியும் அந்தப் பெரியவர் 'உம்' என்றுகூடக் கேட்கவில்லை. மறுபடியும் அறிமுகப் படுத்தினார்கள் ராஜாஜி. அந்தப் பெரியவர் என்னை ஒரு

உருப்படியாகவே எண்ணவில்லை. அவர் வகித்து வந்த பதவிகளோடு ஒத்துப் பார்க்கும்போது, சப் ஜட்ஜெல்லாம் ஒரு சுண்டைக்காய்க்குச் சமானம். இருந்தாலும் மனுஷத் தரத்துக்கு மதிப்பு வைத்து ''அப்படியா'' என்று சொல்லித் தலையையாட்டியிருக்கலாம் அந்தப் பெரியவர். அப்படிச் செய்யவில்லையென்று எனக்குக் கொஞ்சம் வருத்தந்தான். கருப்புக்கண்ணாடி மறைத்துக் கொண்டிருந்ததால், ராஜாஜிக்கு என்னைக் காட்டிலும் வருத்தம் என்பதை உடனே நான் தெரிந்துகொள்ள வில்லை. கூட்டம் விமரிசையாக இரண்டு மணி நேரம் நடந்தது. அதன் பிறகு அந்தப் பெரியவரும் மற்றவர் களும் புடை சூழ ராஜாஜி மேடையிலிருந்து இறங்கி சபையின் வாசலையடைந்தார்கள், கூட்டத்தில் நான் பின் தங்கி விட்டேன். தம்முடைய காருக்குப் பக்கம் போனதும் ராஜாஜி ''மகராஜனை எங்கே? மகராஜனை எங்கே?'' என்று கேட்டார்கள். உடனே பலர் ஓடோடியும் வந்து என்னை ராஜாஜியிருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். என்னை லக்ஷியம் செய்யாமலிருந்த பெரியவர் அங்கு நின்று கொண்டிருந்தார். அவரும் இப்போது என்னைக் கவனிக்கத் தொடங்கினார். ராஜாஜியின் ஃபியட் காரில் பின் சீட்டில் வலது ஓரத்தில் ராஜாஜி அமர்வதற்காக என்று ஒரு பலகைச் சட்டமும் அதில் ஒரு திண்டும் இருந்தன. ராஜாஜி காரின் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு என்னைப் பார்த்து, ''மகராஜன். நீங்கள் அந்தச் சீட்டில் உட்கார வேண்டும்'' என்றார்கள். நான், தாங்கள் உட்கார வேண்டிய சீட்டல்லவா அது. நான் இடது ஓரத்தில் உட்காரு கிறேன்'' என்று சொன்னேன். ''இல்லை. நான் இருக்கும் ஆசனத்தில்தான் நீங்கள் உட்காரவேண்டும்'' என்று என்னைக் கட்டாயப்படுத்தி அங்கே அமரச் செய்துவிட்டு,

தாம் காரின் பின்புறமாகச் சுற்றி வந்து, கதவைத் திறந்து, இடது ஓரத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். கார் 'கல்கி' அலுவலகத்துக்குச் சென்றது. அங்கே சுமார் 50 பேருக்கு அன்று விருந்து. ஒரு மேஜையைச் சுற்றி நான்கு நாற்காலிகள் போட்டு நால்வர் அமர்ந்து உண்பதற்காக ஏற்பாடு செய்திருந்தார்கள். மற்றவர்கள் எல்லோரும் தரையில் விரித்திருந்த பாயில் உட்கார்ந்து சாப்பிட வேண்டியது, ராஜாஜி சதாசிவம் காதில் ஏதோ ரகசியமாகச்சொன்னார்கள். உடனே,சதாசிவம் ராஜாஜி, நவரத்னராமராவ், மாணிக்கா பெல்டன் (Monica Felton) ஒரு ஆங்கிலப் பெண், நான் ஆகிய நால்வரையும் அந்த நாற்காலியில் அமரும்படி செய்தார். என்னை ராஜாஜி அறிமுகப்படுத்தியும் பராமுகமாக இருந்தாரே. அந்தப் பெரியவர்தான் அன்று நியாயமாக நாற்காலியில் உட்கார்ந்து சாப்பிட வேண்டியவர். ஆனால், அவரைக் கீழேயே உட்கார்த்தி வைத்து விட்டார்கள், என்னை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் காட்டிலும் என்னை அவமதித்தவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணமே ராஜாஜியின் உள்ளத்தில் மேலோங்கி நின்றது. இப்படியெல்லாம் அமரர் டி. கே. சி. யின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தினார்கள் ராஜாஜி.

'கல்கி' யில் ராஜாஜி எழுதிய கட்டுரையொன்றைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதியிருந்தேன். "தங்கப்பதக்கம் போன்ற தங்கள் கடிதம் கிடைத்தது" என்று பதில் வந்தது. அந்த வாக்கியத்துக்குள்ளேதான் எவ்வளவு செறிவு! ராஜாஜிக்குத் தமிழில் பெரும் புலமையிருந்தது என்று சொல்ல முடியாது. ஆனால் அவர்களுடைய அறிவின் மேதா விலாசமானது தமிழ் மொழியைப் புதுக் குரலோடு பேசச் செய்தது.

ராஜாஜியின் அறிவு எப்போதும் விழிப்பு நிலையிலிருக்கும்; அதோடு, மின்னல்வெட்டும் வேகத்தில் அதுஇயங்கும். 1959ல் நான் வடஆர்காடு மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாக இருந்தேன். அப்போது உள்நாட்டுத்துறை அமைச்சராக இருந்த திரு. பக்தவத்ஸலம் அவர்கள் சென்னை கம்பன் கழகத்தில் நிரந்தரத் தலைவராக இருந்தார்கள். அவர்கள் அனுப்பிய அழைப்பின் பேரில் இரண்டு நாள் கம்பன் விழாவுக்குத் தலைமை தாங்குவதற்காக நான் சென்னைக்கு வந்திருந்தேன். விழா ராஜாஜி ஹாலில் நடந்தது. கூட்டம் ஹால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. 2ஆவது நாள் விழாவில் பேசிய ஒரு நல்லறிஞர் கும்பகர்ணனுடைய குணாதிசயங்களைப் பற்றிப் புகழ்ந்து பேசி, கும்பகர்ணனையே தமிழர் சமுதாயத்துக்கு ஒரு லக்ஷிய வீரனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். என்னுடைய முடிவுரையில் நான் சொன்னேன்;—"கும்பகர்ணனை மெச்சத்தக்க பாத்திரமாகக் கம்பர் படைத்து விட்டார், உண்மைதான். ஆனால், அவனைக் காட்டிலும் போற்றத்தக்க பாத்திரமாக விபீஷணனைப் படைத்திருக்கிறார். லக்ஷியம் என்று எடுத்துக்கொண்டால் விபீஷணனே கும்பகர்ணனைக் காட்டிலும் ஓங்கி உயர்ந்து நிற்கிறான். அறத்துக்கு ஏதாவது ஆபத்து வந்தால் அதைப் பாதுகாப்பதற்காக எதையும் தியாகம் செய்ய முடிந்தது அவனால், தன் அண்ணன், தம்பி, குடும்பம், ஏன், தன் இனத்தையே தியாகம் செய்தான். நம்முடைய குற்றங்குறைகள், ஆசாபாசங்கள் எல்லாம் கும்பகர்ணனிடத்திலிருப்பதால், அவனிடத்தில் நமக்குப் பரிவு ஏற்படுகிறது. விபீஷணனோ நமக்கு எட்டாத உயரத்தில் இருக்கிறான். ஆகையால் அவனிடத்தில் நமக்குக் கோபமே உண்டாகிறது. இருந்தாலும் தமிழ் சமுதாயத்

துக்கு லக்ஷிய வீரனாக ஒருவனை நாம் ஏற்றுக் கொள்வதா யிருந்தால், அது கும்பகர்ணனாக இருக்கக் கூடாது. விபீஷணனாகவே இருக்க வேண்டும்" இவ்வாறு நான் பேசிக் கொண்டிருக்கும்போதே கும்பகர்ணனைப் போற்றிப் பேசிய அறிஞர் என் பேச்சிலே குறுக்கிட்டு, "நீங்கள் சொல்லுவது தவறு. இதைப் பற்றி விவாதம் நடத்த வேண்டும் என்று உங்களுக்குச் சாவல் விடுகிறேன்" என்று முழங்கினார். அவர் சவாலை ஏற்று எனக்குத் தெரிந்த பதிலைச் சொன்னேன். இந்த நிகழ்ச்சியால் கூட்டத்தில் பெருத்த பரபரப்பு உண்டாயிற்று. அடுத்த நாள் காலையில் 'தினச்செய்தி' என்ற பத்திரிகையில் இந்தக் கூட்டத்தில் நடந்ததைக் கொட்டையெழுத்தில் வெளியிட்டிருந்தார்கள்.

காமராஜர் முதலமைச்சராக இருந்த காலம் அது; ராஜாஜி காமராஜரையும் காங்கிரசையும் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்த காலம். விழாவுக்கு அடுத்த நாள் முற்பகல் 11 மணிக்கு நானும் சோமுவும் ராஜாஜி யைச் சந்திக்கச் சென்றிருந்தோம். விழாவில் நடந்த சர்ச்சையைப் பற்றி ராஜாஜி குறிப்பிட்டுவிட்டு, சோமுவைப் பார்த்து, "கும்பகர்ணனுக்குப் பகிர்ந்து பேசினாரே, அவர் என்ன வேலை பார்க்கிறார்?" என்று கேட்டார்கள். சோமு, "தமிழக அரசாங்கத்திலே உயர்ந்த வேலையில் இருக்கிறார் அவர்" என்று சொன்னதும், ராஜாஜி "ஓ! அப்படியா? ராவண தர்பாரிலேயே அவர் வேலை பார்க்கிறாரா?" என்று கொஞ்சம் ஆங்காரம் கலந்த சிரிப்போடு கேட்டார்கள். இப்படியாக அவர்களுடைய பயங்கர அறிவு மண்ணுக்கும் விண்ணுக்கும் மின்னல் பாய்ச்சலில் பாய்ந்துகொண்டே யிருக்கும்.

ரசிகமணி மறைந்து 13 ஆண்டுகளுக்குப் பின்னால், ராஜாஜி 10-9-67 'கல்கி' மலரில் ''பூரண ஹரியும் பூரண ரசிகமணியும்'' என்ற தலைப்பில் கட்டுரை எழுதியிருந் தார்கள். ராமாவதாரம் பூரண அவதாரம் இல்லை யென்றும் கிருஷ்ணாவதாரமே பூரண அவதாரம் என்றும் அக்கட்டுரை விளக்குகிறது. அவ்வாறு விளக்கிவிட்டு டி.கே.சி.யையும் கண்ணனையும் ஒரே பீடத்தில் அமர்த்தி வைக்கிறது அக்கட்டுரை. கட்டுரையின் தொடக்க வாசகம் இது:—''சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்தநாள்: அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க்கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம், தமிழ் வசன நடை முன்னேற்றத்தின் ரகசியம், தாளமும் ராகமும் சேர்த்த நல்லிசையின் ரகசியம், அன்பின் பரமமகிழ்ச்சி, வேஷங்களின் பொய்ம்மை, அனைத்தும் நன்றாகக் கண்ட பூரண ரசிகமணி டி.கே.சி. பிறந்த நாளும்.''

ராஜாஜி தம் கட்டுரையில் கண்ணபகவான் ரோகிணி நக்ஷத்திரத்தில் அவதரித்தான் என்றும் ரோகிணி நட்சத் திரக் கூட்டம் வண்டியைப் போல் இருப்பதாலும், வண்டி யின் முக்கிய பாகம் அச்சுமரமாகையாலும், கண்ணனை ''அதோக்ஷஜ!'' அல்லது அச்சுமரத்தடியில் அவதரித்தவன் என்று சொல்லுவதுண்டென்றும் கூறிவிட்டு. கட்டுரை யைக் கீழ்க்கண்டபடி முடிக்கிறார்கள்:— ''இந்த அச்சு மரத்தடியில் மற்றொருவர் அவதரித்தார். தமிழ்க் கவிக் காதலர் டி.கே.சி. என்று பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார் அவர்கள். இவர்தான் 'கல்கி' கூட்டத்தின் குலபதியாக இருந்து பல்லாண்டு அந்தப் பத்திரிகையையும் அதை நடத்தியவர்களையும் அதைப் படிப்பவர்களையும் ஆசீர்வதித்து வந்தார். அவரைக் 'கல்கி' மறக்க முடியுமா? ஸ்ரீஜயந்தி என்றால் கண்ணன்

பிறந்த நாள், டி.கே.சி. பிறந்த நாள், என்றும் தமிழர் கொண்டாட வேண்டிய நாள்."

கண்ணனோடு டி.கே.சி.யை இணைத்து எழுதிய பரமபாகவதரான ராஜாஜியின் துணிச்சலைப் பாராட்டி, தாங்கள் பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்தி நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்குப் பதிலாக ராஜாஜியிடமிருந்து வந்த கடிதம் இதோ:—'

'தங்களுடைய கடிதம் படித்து, அமிர்தம் குடித்த தேவர்கள் போல், மத்தும் ஏறி, என்ன எழுதுவதென்று தெரியாமல் திகைக்கிறேன். மகராஜனுக்கு பல்லாண்டு.

இராசகோபாலாச்சாரி.'

இந்தக் கடிதத்தில் ஒரு பிற்குறிப்பும் இருந்தது :—

"தாங்கள் கடிதத்தை சோமுவும் பார்த்து ஆனந்தம் பொங்கி மகிழ்ந்தார்."

இவ்வாறெல்லாம் எழுதியருளிய ராஜாஜியும், டி.கே.சி.யைப் போல, அமரத்துவம் அடைந்து விட்டார்கள். ஆனந்தத்தோடு அறிவு கலந்துவிட்டது, சௌந்தரியத்தோடு சத்தியம் கலந்தது போல, ராஜாஜி நூற்றாண்டு விழாவில் இந்த இனிய உணர்வு நமது இதயத்தைப் புனிதப்படுத்துமாக.

# 15. டி.கே.சி.யும் எழிலியலும்

(Aesthetics) எழிலியலில் உள்ளத்தைப் பறி கொடுத்தவர்கள் ரஸிகமணி டி.கே.சி. நேர்கோட்டில் அழகு அவ்வளவு இருப்பதில்லை. ஆனால், வளை கோட்டில் அழகு அதிகம் இருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆனால், நேர் கோடு நேர்மையையும் அசையாமையையும் குறிக்கிறது. ஒரு கோபுரத்தில் அல்லது நெடுஞ்சுவரில் உள்ள நேர்கோடோ என்றுமே அசைக்க முடியாததோ என்ற எண்ணத்தை நமக்குக் கொடுக்கும் என்பார்கள் டி.கே.சி. உதாரணத்துக்காக, ஒன்றை எடுத்துச் சொல்லுவார்கள்:—இலங்கைத் தீவில் கோட்டை மதிலும் கோபுரமுமாக எழுந்து நிற்கின்றன. எங்கே நிற்கின்றன? சமுத்திரக் கரையோரத்தில் நீருக்குள் இருந்தே எழுந்து நிற்கின்றன. பெரும் பெரும் அலைகள் வந்து மதில்கள் மீதும் கோபுரத்தின் அடியிலும் மோதுகின்றன. அப்படி மோதுவதைப் பார்த்தால். ஏதோ ''நிலையாமை, நிலையாமை'' என்று சொல்லுகிறார்களே அதற்கெல்லாம் மாறாக, ''என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மையை இதோ பார்க்கிறோமே கல் மதிலிலும் கோபுரத்திலும்'' என்று சொல்லத் தோன்றும்.

நிலைகிடந்த நெடுமதிட் கோபுரத்து
அலைகிடந்த இலங்கையின் அண்ணலை
(நிலைகிடந்த அழியாத நிலைத்த தத்துவம் கிடந்த)

ஆனால், பனை மரம் நேர்கோடாகத்தான் நிற்கிறது. அதை நம்மால் நெடுநேரம் பார்த்து அனுபவிக்க முடிய வில்லை, ஏன்? நம் கண்ணும் மனசும் அதில் நின்று நிலைத்து அனுபவிப்பதற்கு அதில் வசதிகள் வைக்க வில்லை. முண்டும் முடிச்சுமாக இருக்கும் மஞ்சணத்தி மரம் எத்தனையோ கோணல்களோடு நிற்கிறது அந்தக் கோணல்களில் நின்று. தங்கி அனுபவிப்பதற்கு நம் மனசுக்கு முடிகிறது. அதன் முண்டு முடிச்சுகளை மணிக் கணக்காக நம் கண் பார்த்துக்கொண்டேயிருக்கிறது. கண்ணை மேலுங் கீழுமாகவும், இடப்புறமும் வலப்புறமு மாகவும் புரட்டிப் பொருளின் அளவை நிதானித்துக் கொள்கிறோம். பார்க்கும் பொருள் பார்க்கப்படும் பொருளை ஊடுருவிப் பார்க்கிறது; பார்ப்பதெது. பார்க்கப்படுவதெது, பார்வையெது என்ற பேதங்களின்றி ஒரு காட்சி கிடைக்கும்போது ஆனந்தம் கிடைக்கிறது. கலையின் மூலமாக இந்த இன்பநிலையை அடையலாம் என்று கண்டவர்கள் நம் முன்னோர்கள்.

ஒரு பொருளை நினைக்கும்போது அதன் குணங்கள் சில வேறு சில பொருள்களை நினைவுபடுத்திவிடும். ஆகவே, நினைவு-ஈர்ப்பினால் ஏற்படும் பொருளும் அந்தப் பொருளுக்கு ஏற்பட்டு விடுகிறது. சொல்லுகிறார்கள் டி. கே. சி. "ஒரு மரத்தில் கடவுள் தத்துவம் நிறைந்திருக் கிறது. மருதமரத்தின் காம்பீரியம், தொன்மை எல்லாம் கடவுளை ஞாபகப்படுத்துகின்றன. பொந்து விழுந்த பழைய மரமாய் இருந்து விட்டால் அதை அனுபவியாமல் இருக்க முடியாது. மாணிக்கவாசகர் அபாரமாய் அனுபவித்தார். அத்தகைய தொன்மையான பொந்து விழுந்த மருதமரத்தை பாடினார்.

எனக்குத் தந்தைதான் கடவுள், தாய் சுற்றத்தார் தான், செல்வம் எல்லாந்தான். என்னுடைய பாண்டி மன்னன்தான் அந்தக் கடவுள். இப்படி அனுபவிக்கிறார் கடவுளை. கடவுளை அனுபவிக்கிற காரியமோ பேரானந்தந்தான். (ஆனந்தத் தேன்தான்)

"எந்தை! என் தாய்! சுற்றம்!
மற்றும் எல்லாம்! என்னுடைய
(பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட) பாண்டிப்பிரான்,
அந்த இடைமருகில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவி நாம்
பூவல்லி கொய்யாமோ."

சதுரத்தைக் காட்டிலும் அமைதி நிறைந்தது வட்டம். வட்டத்தோடு ஆழமும் சேர்ந்து விட்டாலோ, அதை ஆனந்தத் தேனிருந்த பொந்தாக, இறைவனாகவே பரவி மகிழலாம். மகிழ்கிறார் மணிவாசகர்.

டி. கே. சி. கவியை உள்ளுணர்வோடு பார்ப்பவர்கள். ராஜாஜி 'கம்பர் தரும் ராமாயணம்' என்ற நூலின் முன்னுரையில் சொல்லுவது போல,'டி. கே. சி. அவர்கள் கம்பனுடைய உள்ளத்தில் புகுந்து அதன் அந்தரங்கத்தை அறிந்து, கம்பன் பாடல்களைப் பாடி கவி வானம் உண்டாக்கி அமுத மழை பொழியச் செய்வார்கள். அதை நேரில் அனுபவித்தவர்கள், நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அறிவார்கள் அதன் மகிழ்ச்சியை; எழுத்தில் ஓரளவுதான் தொனிக்கும். ஆனால், இப்போது டி. கே. சி. ஊனுடலை விட்டுப்போய் விட்டார்; நிற்பது என்னைப் போன்ற பித்தரின் உள்ளத்திலிருக்கும் நினைவுகளும் இந்த நூலும்."

இப்படி ஒரு ரஸிக மகரிஷியைப் பார்க்க முடியாதே என்ற ஆற்றாமையில் ராஜாஜி சொன்ன கூற்று இது.

ஒரு கவியை விளக்கும்போது, டி. கே. சி. தம்மை மறந்து, கூடு விட்டுக் கூடு பாய்ந்து, கவிஞனுடைய கவிதைப் பட்டறையில் இருந்துகொண்டு அவனுடைய படைப்பாற்றலையும் உள்ளுணர்வையும் கண்டு அவற்றை நாம் புரியும் மொழியிலே எடுத்துச் சொல்லுவார்கள்.

மாதிரிக்கு ஒரு கம்பன் பாடல்.

நேரம் நடுநிசி. அசோகவனம் நிசப்தமாயிருக்கிறது. யாரும் விழித்திருக்கமாட்டார்கள். ஆகவே இப்போதே சென்று சீதையைக் காண்போம் என்று எண்ணுகிறான் மரத்தில் அமர்ந்திருக்கும் அனுமன்.

**"காண்டற்கு ஒத்த**
**காலமும் ஈதே"**

அடுத்தாற்போல் கொஞ்சம் கீழேயுள்ள கிளையில் இறங்கிப் பார்க்கிறான். சீதையைச் சுற்றி வட்டமிட்டுப் பல அரக்கிகள் உட்கார்ந்திருக்கிறார்கள். எச்சரிக்கையோடு விழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சுதாரிப்பாக இருப்பதைப் பார்த்தால், காவலுக் கென்று ஓர் அதிதேவதையுண்டே, அந்தத் தேவதைக்குக் கொஞ்சம் அயர்ந்து தூக்கம் வந்தால், அதை ஒரு அடி அடித்து, "ஏய், என்ன தூக்கம்!" என்று சொல்லித் தூண்டி விடுவார்களாம் அந்த அரக்கிகள். அவர்கள் முகத்திலோ கண்களிலோ சோர்வு கொஞ்சமும் இல்லை யாம். அவர்களைப் பார்த்ததும் அனுமனுக்கு மனம் சோர்ந்து விட்டது.

தெறுகாவல்
தூண்டற்கொத்த
சிந்தையினாரோ துயில்கில்லார்!

ஆனாலும், அச்சமயத்தில் தன்னுடைய மந்திர சக்தி (Mass Hypnotism) அனுமனுக்கு நினைவுக்கு வந்தது. உடனே அவனுக்குச் சிரிப்பு வந்தது. "இந்த அரக்கிகளுக்கு நான் ஒருவேண்டுகோள் விட்டால், தூங்கவா செய்வார்கள்!" என்று நினைத்துச் சிரித்துக்கொண்டு ஒரு மந்திரத்தை ஜபித்தான். உடனே அரக்கியரெல்லாம் மாண்டவர்கள் போன்று ஒரு பேருறக்கத்தில் சாய்ந்து விட்டார்கள்.

வேண்டத் துஞ்சார்
என்றொரு விஞ்சை
வினை செய்தான்.

காண்டற்கொத்த காலமும் ஈதே;—தெறுகாவல்
தூண்டற்கொத்த சிந்தையினாரோ துயில்கில்லார்;
வேண்டத்துஞ்சார்; என்றொரு விஞ்சை வினைசெய்தான்;
மாண்டற்குற்றாராம் என எல்லாம் மயர்வுற்றார்.

இந்தப் பாட்டிலே "தெறுகாவல் தூண்டற்கொத்த சிந்தையினாரோ துயில்கில்லார்" என்ற வரிக்கு உரை தெரியவில்லை ஒருரையாசிரியருக்கும். டி.கே.சி. கம்பனுடைய உள்ளத்தோடு ஒத்திருந்து பார்க்கும் உள்ளுணர்வு பெற்றிருந்த காரணத்தால், அவர்கள் 'தெறுகாவல்' என்றால் என்ன என்று விளக்கினார்கள். காளி கோயில் முன்பு வாசலில் இரண்டு பயங்கரமான பெருத்த உருவங்கள் செய்து வைத்திருக்கும். பயத்தை உண்டாக்க வேண்டுமல்லவா? கையில் பெரிய வாள் ஒன்றை ஏந்தி

ஓங்கிய வண்ணமாயிருக்கும். இவைகள்தான் காவலுக்கு அதிதேவதைகளின் சிலை உருவங்கள். மீறிச் செல்பவர்களை வாள் கொண்டு வெட்டி விடும் (—தெறும்) என்பது குறிப்பு. அத்தகைய காவல் தெய்வத்தை, தூண்டற்கொத்த சிந்தையினாரோ - தூண்டி ஜாக்கிரதை பண்ணக்கூடிய அரக்கிகளோ, துயில்கில்லார் - தூங்கவே மாட்டார். இவ்வாறு சொல்லி இந்தச் சொற்றொடரைப் புரிய வைத்தவர்கள் டி.கே.சி.

புராணக் கதைகளை நாம் கேட்கும்போது, சொல்லுக்குச் சொல் என்ன பொருள் என்று கண்டு பிடிக்கிறோம். We are cursed with curse of literalness—என்று சொல்லுவார் தாகூர். ஆனால், கதைகளின் உட்பொருளை நாம் தெரிந்து கொண்டால் அதன் பலனைப் பெறலாம். ரசிகமணி இப்பேர்ப்பட்ட கதைகளைப் பகுத்தறிவில் மாத்திரம் நம்பிக்கையுடையவர்களும் ஏற்றுக் கொள்ளும்படி எடுத்துச் சொல்லிவிடுவார்கள். மாதிரிக்கு ஒரு கதை. அவுணர்கள் என்ற வேண்டாத வர்க்கத்தவர் இருந்தார்கள். அவர்கள் உலகத்திலுள்ள அரிய வஸ்துக்களையெடுத்துக்கொண்டு போய் சமுத்திரத்துக்குள் ஒளித்து வைத்துவிட்டார்கள். தேவர்கள் போய் அகத்திய முனிவரிடம் குறையிரந்தார்கள். விஷயத்தைத் தெரிந்து கொண்டு, சமுத்திரத்தை உள்ளங்கையில் வாரி முகந்து அப்படியே உண்டு விட்டார் அகஸ்தியர். தேவர்கள் உமிழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவரும் உமிழ்ந்தார். உலகத்துக்குச் சிறந்த பொருள் எல்லாம் கிடைத்தன. அதாவது உயர்ந்த கலைகள் மக்களுக்கு மீண்டும் வந்தன. இதைக் கம்பர் பாடல் சொல்லுகிறது:—

"பண் (டு) அவுணர் மூழ்கினர் படார் என வானோர்
எண்தவ! எமக்கருள்" எனக் குறை இரந்தார்
கண்(டு) ஒருகை வாரினன் முகந்த கடல் எல்லாம்
உண்டு, அவர்கள் பின் "உமிழ்க" என்றதும் உமிழ்ந்தான்.

இந்தக் கதையின் உட்கருத்தென்ன என்பதை டி.கே.சி. இவ்வாறு விளக்குகிறார்கள் : இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு கிரேக்கர்கள் மிக உயர்ந்த பாணியில் கலைகளையும் இலக்கியங்களையும் அமைத்து வைத்திருந்தார்கள். அவர்களுடைய ரசிகத்தன்மை அபூர்வமாயிருந்தது. பிற்காலத்தில் ரோமாபுரியிலுள்ளவர்கள் கிரேக்கக் கலைகளைக் கற்கத் தொடங்கினார்கள். ஆனால், அந்தக் கலைகளின் உண்மைத் தத்துவமும் ரஸமும் அவர்களுக்குப் பிடிபடவில்லை. அது காரணமாக இலக்கண கர்த்தாக்களும் வியாக்கியானக் கர்த்தாக்களும் அவதரித்துவிட்டார்கள். புற்றீசல்போல் அவதரித்து விட்டார்கள். உண்மை உணர்ச்சி குறையக் குறைய வியாக்கியான கர்த்தாக்களின் ஆதிக்கம் அதிகமாய்ப் போய்விட்டது. கலைக்கு அவர்கள் எல்லாம் அசுரர்களே ஆனார்கள். அவர்கள் எழுதியுள்ள கணக்கில்லாத வியாக்கியானங்களுக்குள் உண்மைக் கலையை இருக்கிற இடம் தெரியாதபடி புதைந்து விட்டார்கள். உண்மைக் கலையொன்று இருப்பதாக அவர்களுக்குச் சொல்ல முடியாமலே போயிற்று.

இந்த நிலையில் பெரியார் ஒருவர் வியாக்கியான கர்த்தாக்களையும் அவர்களது படாடோபங்களையும் கண்டித்து ஒதுக்கத் தலைப்பட்டார். அதற்காக எவ்வளவோ நூல்களை எத்தனையோ ஆண்டுகளாக ஆராய்ந்தார். ஆராய்ந்ததன் பலனை உலகத்துக்கு

எடுத்துச் சொன்னார். மறைந்து போன பூர்வக்கலை அவரால் மக்களுக்கு உதவ வந்தது. (இது நடந்து 500 வருஷங்கள் ஆகிவிட்டன)—சவனரோலா என்பது அவருடைய பெயர்.

உயர்ந்த பண்பாடுகள் மறைந்து போகவும் மறுபடி அவர்களை மீட்கவும் ஏற்பட்டது கம்பர் காலத்திலேயே. ஆதிபூர்வமான காலத்திலும் அப்படியே கதைகள் மறைய வும் அகத்திய முனிவர் அவைகளை விரிந்த ஆராய்ச்சியி னால் மீட்டு உலகத்துக்கு உதவினார்.

இதையே கம்பர் அடையாள மொழியிலே புராண உருவத்திலே கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார் :—

**பண்டவுணர் மூழ்கினர் படார் என வானோர்**
**"என் தவ! எமக்கருள்" எனக் குறையிரந்தார்**
**கண்(டு) ஒருகை வாரினன் முகந்த கடல் எல்லாம்**
**உண்(டு) அவர்கள்பின் உமிழ்க என்றலும் உமிழ்ந்தான்.**

இந்த அற்புதமான விளக்கம் பகுத்தறிவாளருக்குக் கூட ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கிறது.

# 15. டி. கே. சி. யுடன் என் அனுபவம்*

பண்பில் சிறந்த தமிழ் மக்களுக்கு,

வணக்கம்.

ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் என்னுடைய தமக்கையார் வேலம்மாளுக்கும் எனக்கும் எழுதிய கடிதங்களை நூலாக வெளியிட்டு, அவை நல்கும் அபூர்வமான இலக்கிய இன்பத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழர்கள் கடிதம் எழுதுவது என்றால் வெறும் செய்திக்காகத்தான் எழுதுவார்கள். "இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமத்திற்குப் பதில் எழுதவும்". "ஊருக்கு சௌக்கியமாக வந்து சேர்ந்தேன்," "புண்ணாக்கு விலை யேறிக் கொண்டிருக்கிறது. நெல் விலை எப்படியிருக்கிறது?" என்னும் அரிய விஷயங்களைப் பற்றித்தான் எழுதுவார்கள். வந்தவுடனேயே கடிதங்களைக் கிழித் தெறிந்துவிடலாம். 'பைண்ட்' பண்ணி பாதுகாக்க வேண்டிய அவசியமே கிடையாது.

ஆனால், டி.கே.சி. கடிதங்களோ கலை அந்தஸ்து பெற்றவை. ஒரே ஹாஸ்யமும் உல்லாசமும், உணர்ச்சியுமா யிருக்கும். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இலக்கிய ரத்தி னங்கள் அவை. டி.கே.சி. கடிதம் எழுதுவதைக் கைக்

---

* ரசிகமணி கடிதங்கள் என்ற புத்தகத்தின் முன்னுரை.

கொண்டபின்தான் கடித இலக்கியம் என்று ஒன்று தமிழ் நாட்டில் பிறந்தது.

ஆனால், ஐரோப்பிய நாடுகளில், சிறப்பாக ஃப்ரான்சிலும் இங்லண்டிலும் கடிதங்கள் வாயிலாகவே இலக்கியத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள்.

அழகான முகமுடையவர்களாக இருப்பவர்களை, காமிராவுக்கு முன்னால் புகைப்படம் எடுப்பதற்காக நிற்கச் சொன்னால், உடனே அவர்களுடைய முகத்திலே ஒரு கோணலும் விறைப்பும் வந்துவிடும். அதைப்போலவே இயல்பான இனிய தமிழில் பேசிக் கொண்டிருப்பவர்கள் பலர் பேனாவைக் கையில் எடுத்தவுடனே அல்லது மேடை மீது பிரசங்கம் செய்யத் தொடங்கியவுடனே அஷ்ட கோண மகரிஷிகளாக ஆகிவிடுவார்கள்; அவர்களுடைய இயல்பான தமிழ் திரிந்துபோய் செயற்கைத் தமிழாக மாறிவிடும்.

ஆனால், கடிதங்களை எழுதும்போது எளிதில் இயல்பாக இருக்கமுடிகிறது; இயல்பாக எழுதவும் முடிகிறது; உள்ளத்தில் உள்ள முண்டு முடிச்சுகளும், திருகு முறுகல்களும் நம்மைப் பாதிப்பதில்லை. ஆகையினாலே தான் ஃப்ரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் கடிதங் கள் மூலமாக இயல்பான மொழியை வளர்க்கலாம் என்று கண்டு கொண்டார்கள். உண்மையில் ஃபிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் உள்ள உயர்ந்த இலக்கியங்கள், கடிதங் கள் எழுதி எழுதியே பழுத்தவை யென்று இலக்கிய மேதைகள் சொல்வார்கள்.

இலக்கிய மணம் வீசுகின்ற, புகழ் பெற்ற ஃப்ரெஞ்சுக் கடிதங்களையும் ஆங்கிலக் கடிதங்களையும் நான் ஆழ்ந்து படித்து அனுபவித்திருக்கிறேன். ஆனாலும், ரசிகமணியின்

கடிதங்களில் உள்ள எளிமையும் நுணுக்கமும், உல்லாசமும், நகைச்சுவையும், கலைப்பாங்கும் தத்துவ ஆழமும், ஆனந்தமும் நான் ஃப்ரெஞ்சு அல்லது ஆங்கிலக் கடிதங்களில் கண்டதில்லை.

ரசிகமணியின் கடிதங்கள் ஒவ்வொன்றும் நேருக்கு நேர் நின்று பேசும். யாருக்கு எழுதுகிறார்களோ அந்த ஆளைத் தம் கண்முன் நன்றாய் இருத்தி வைத்துக் கொண்டு ரசிகமணி அவரோடு இயல்பாக உரையாடுவார்கள். ஆகவே, அவர்களுடைய கடிதங்கள் அற்புதமாக அமைந்துவிட்டன. உண்மையில், நானே அவர்களிடம் அடிக்கடி சொல்வதுண்டு, ''நீங்கள் பல தமிழ் நூல்களை எழுதியிருக்கிறீர்கள்; ஆனால், உங்கள் உணர்வுகளின் ஆழ அகல உயரங்களையும், உங்கள் ஆளுமையையும் (Personality) உங்கள் கடிதங்கள் காட்டுவதுபோல் நீங்கள் எழுதிய நூல்கள் காட்டவில்லை'' என்று.

உண்மையில், இப்போது வெளியிடும் இந்தக் கடிதங்களைப் படித்தால் அவர்கள் உயிருடன் இருந்து, நம்மோடு உறவாடிக்கொண்டும், உரையாடிக்கொண்டும் இருப்பது போன்ற பிரமை நமக்கு ஏற்படுகிறது. டி.கே.சி. கடிதங்களில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் எழுத்திலுமே பொருள் முட்டித் ததும்பிக்கொண்டு நிற்கிறது; அபாரமான தெளிவும் உணர்ச்சியும் ஒளியும் இருக்கின்றன. வெறும் கொச்சைப் பேச்சை வைத்துக்கொண்டு இந்த மாதிரி ஜாலவித்தைகள் பண்ணிவிட முடியாது. ஆண்டுக் கணக்கிலே பேச்சுத்தமிழின் உயிர்நிலையை அறிந்து, அதன் மர்மஸ்தானத்தை உணர்ந்து, அனுபவித்து, அந்த அனுபவத்தால் பெற்ற மொழியறிவைக் கலைப்பாங்கோடு கையாளக் கற்றுக்கொண்டதால்தான் டி.கே.சி.யினுடைய எழுத்துத் தமிழுக்கு, பேச்சுத் தமிழின் இயல்பான சீலமும், வன்மையும், உயிர்த்துடிப்பும் கிட்டியிருக்கின்றன.

அதோடு டி. கே. சி.க்குத் தம்மிடம் ஒத்த உள்ளம் படைத்த அன்பர்களிடம் கவிதையையும் சமயத்தையும் பற்றிப் பேசுவதிலே எவ்வளவு ஆனந்தம் இருந்ததோ அவ்வளவு ஆனந்தம் அவர்களுக்குக் கடிதம் எழுதுவதி லேயும் இருந்தது.

ஒரு பருவத்தில், மூச்சு விடுவது எவ்வளவு அவசியமோ கடிதம் எழுதுவதும் அவ்வளவு அவசியமாக ஏற்பட்டுவிட்டது அவர்களுக்கு. அவர்களே ஒரு கடிதத்தில், ''நாளுக்குநாள் என்ன படுகிறது என்றால் —ஆகாரம், காற்று, தண்ணீர் இவைகளைப் போலவே கடிதங்களும் இன்றியமையாத காரியம் என்பதாக'' என்று சொல்லியிருக்கிறார்கள். தனிமையில் இருக்கும் போதும் உறக்கம் வராதபோதும், காலை 3-30 மணிக்குக் கூட சஹிருதயர்களுக்குக் கடிதம் எழுதி, மன நிறைவு பெற்றார்கள், இந் நூலிலுள்ள 78-ஆவது கடிதம் கீழ்க் கண்டவாறு முடிகிறது.—

> ''என்னுடன் இருந்த நண்பர்களும் எல்லாரு மாக நேற்றுப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். தங்கள் அண்ணியும் குற்றாலமும் ஆழ்வார் குறிச் சிக்குப் போயிருக்கிறார்கள். தங்கம் தென்காசி; ஆகவே, நான் இனிது இனிது ஏகாந்தம் இனிது என்று, சிவமே என்றிருக்கிறேன். பலராமும் துணைக்கு இருக்கிறார். அருவிச் சத்தம் ஒன்று மட்டும் கேட்டுக் கொண்டிருக்கிறது. மற்றப்படி நிசப்தம். மணி காலை 3.30.''

பத்து அல்லது இருபது பக்கங்கள் கொண்ட நீண்ட கடிதங்களைக் குற்றாலத்தில் இருந்துகொண்டு எழுதும் வாய்ப்பு ரசிகமணிக்கு இருந்தது. வேலையினால் அலை

மோதிக் கொண்டிருந்த எனக்கோ அந்தக் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுத வாய்ப்பு கிடைப்பதில்லை. இதைப் பற்றி 21-9-1949-ல் டி. கே. சி. சீவில்லிபுத்தூருக்கு எனக்கு எழுதிய கடிதம் பேசுகிறது:—

"கள்ளுக்கடைகளை அடைத்துவிட்டார்கள். ஆனால், அன்பைப் பகிஷ்கரிக்கவில்லை. கம்பர் சொல்லுகிறபடி, கள்ளும் அன்பும் ஒரே தன்மையானவைதான். அவைகளுடன் பழகுவது பிசகு, விட முடியாத பழக்கமாய்விடுகிறது.

சீவில்லிபுத்தூரிலிருந்து கடிதம் வந்து கொண்டே இருக்க வேண்டும். அல்லாத பக்ஷம் நாள் வெறித் தோடிப் போகிறது. ஆனால், ஆசைக்கும் ஒரு அளவு வேண்டும்."

கலையையும் கவிதையையும் நட்பையும் வளர்ப்பதற்கு நெருங்கிப் பழகுவது அவசியம் என்ற உண்மையைக் கண்டவர்கள் ரசிகமணி. ஆனால், வள்ளுவரோ, "பழகுவதுகூட அவ்வளவு அவசியம் அல்ல. உள்ளத்தினால், உணர்ச்சியினால் ஒன்றுபட்டு இருந்தாலே நட்பு வளரும்" என்று ஒரு குறளில் சொல்லியிருக்கிறார். இந்தக் கருத்தைச் சொன்ன வள்ளுவர் மீது அன்போடு சாடுகிறது டி. கே. சி. 16-12-49-ல் எனக்கு எழுதிய கடிதம்:—

"திருவள்ளுவர்,— அன்பு உண்டாவதற்கோ வளர்வதற்கோ நெருங்கிப் பழகுதலோ, உறவாடுதலோ வேண்டாம், ஒத்த உணர்ச்சி இருந்தால்ப் போதும், என்று பேசுவார்.

**"புணர்ச்சி பழகுதல்**
**வேண்டா, உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை**
**தரும்"**

என்பதாகப் பேசினார். சௌடால்த்தனமாகத் தான் பேசினார்.

அப்பா குதிருக்குள் இல்லை என்ற கதைதான் அப்படிச் சொன்னது.

சினேகிதர்களோடு ரொம்ப ரொம்ப உறவாடி இருக்கிறார். ஜமா, ஜமா என்று ஜமாய்த்திருக் கிறார். அல்லாத பக்ஷம்.

**"பெரிதினிது பேதையார்**
**கேண்மை, பிரிவின்கண்**
**பீழை தருவ(து) ஒன்(று)**
**இல்."**

என்று சொல்லுவாரோ?

ஏன், ஒத்த உணர்ச்சிதான் இருக்கிறதே, பிரிவைப் பற்றி ஏன் தொந்தரவு பண்ணிக்கொள்ள வேண்டும் என்று அமைதியாய் இருந்து விடலாமே. அப்படி இருந்துவிடவில்லையே. *வண்டி போட்டு, வண்டியிலேறி — ரயிலடிக்கல்லவா வந்து விடு கிறார்."

---

* நான் சீவிலிபுத்தூரில் முனிசீபாக இருந்தபோது டி.கே.சி. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் சென்னைக்குப் போகும்போதும், திரும்பி குற்றாலத்திற்கு வரும்போதும் சீவிலிபுத்தூர் ரயிலடிக்கு என்னுடைய தமக்கையார் வேலம்மாளுடன் ஒற்றை மாட்டு வண்டியில் சென்று ரசிகமணியைச் சந்திப்பது வழக்கம்.

ராஜாஜியின் தலைமையில் 31-10-53ல் குற்றாலத்தில் ரசிகமணி எழுதிய 'கம்பர் தரும் ராமாயணம்' என்ற நூல் வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்ட இரண்டு, மூன்று மாதங்களில் ரசிகமணி காலமாகி விட்டார்கள். காலமாவதற்கு முன்னால் இதயங் கனிந்து விழாவைப் பாராட்டியிருந்த என்னுடைய தமக்கையாருடைய கடிதத்தைப் பற்றி எனக்கு 11-11-53ல் டி.கே.சி. கடிதம் எழுதியிருந்தார்கள் :

''அக்காளுடைய அழகான கர்கிதம் வந்திருக்கிறது. பொழுது போகவில்லையே என்று நான் கஷ்டப்படவேண்டாம். சீட்டாட்டம் கிடையாது தான். தெள்ளத் தெளிந்த வேலம்மாள் கடிதத்தைப் படித்துப் படித்துப் பொழுது போக்கிக் கொண்டிருக்கலாம். தமிழ்பாஷை பெண்டுகளாகச் சேர்ந்து உண்டாக்கிய பாஷையோ என்று சொல்லத் தோன்றுகிறது. அவர்களுக்குத் தானாக வருகிறது தமிழ்.

இங்கிலீஷ்காரர், கடிதங்கள் கடிதங்கள் என்று பிரமாதப்படுத்திக் கொண்டிருப்பார்கள். உள்ளக் கிடை தெரியாததால் ஒன்றும் விளங்கவில்லை நமக்கு. இப்போது நம்முடைய பெண்மணிகள் எழுதுகிற கடிதங்களைப் பார்த்த பிறகுதான், அப்படியா, கடிதங்கள் என்றால் இதயத்தோடு ஒட்டிக்கொள்வது என்பது தெரியவருகிறது.''

கலப்படம் இல்லாத அன்பைப் பொழிவதிலே ரசிகமணி போன்ற ஒரு சான்றோரை என்னுடைய 67 வயது வாழ்க்கையிலே நான் கண்டதில்லை. குற்றாலத்து அருவியிலே நாம் தலையை நீட்டினால் போதும். நாம்

ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அது நம்மை அப்படியே குளிப்பாட்டி விட்டுவிடும். ரசிகமணியின் அன்பும் ஆனந்தமும் அப்பேர்ப்பட்டவை.

தமிழிலுள்ள அரிய அற்புதமான பாடல்களை டி.கே.சி. விளக்கிக் கொண்டிருப்பார்கள். அக்காளும் நானும் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருப்போம். இதை டி.கே.சி. அனுபவிப்பது எனக்கு அதிசயமாக இருக்கும். அவர்கள் சொல்வார்கள் :—

''எனக்குப் பல இலக்கிய அன்பர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். சிறந்த அறிவாளிகள் அவர்கள். இருந்தாலும், நான் ஒரு பாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது திடீரென்று அவர்களுக்கு அரசியல் ஞாபகம் உண்டாகிவிடும். ஆகையால், பாட்டின் முழுப் பயனையும் அவர்களால் பெற முடியாது. வேறு சிலர், நான் பாட்டை விளக்கிக் கொண்டிருக்கும்போது, குறிப்பு எழுதிக் கொண்டிருப்பார்கள். எதற்காக? நான் சொல்வதை வைத்துக்கொண்டு எத்தனை கட்டுரைகள் எழுதலாம், எத்தனை பிரசங்கங்கள் செய்யலாம் என்ற எண்ணத்தோடே அவர்கள் என் விளக்கத்தைக் கேட்பார்கள். அதனால், அவர்களால் முழுப்பயன் அடைய முடியவில்லை. ஆனால், உங்கள் இருவருக்குமோ அரசியல் கிடையாது. நான் சொல்வதை வைத்து ஒரு புஸ்தகம் போடலாமே என்ற நினைப்பும் கிடையாது. ஆகையால், உங்கள் இதயங்களை அப்படியே என் கையில் நிபந்தனையற்றுக் கொடுத்து விடுகிறீர்கள். கலை உலகத்தில் மிகவும் ஆழமான பொங்குமாங்கடல்கள் பல இருக்கின்றன. நான் எந்த ஆழத்திற்குப் போனாலும் நீங்கள் இருவரும்

என் கையை இறுகப் பிடித்துக்கொண்டு நம்பிக்கையோடு எந்த ஆழத்திற்கும் வரத் தயாராக இருக்கிறீர்கள்.''

எங்களிடத்தில் நேரில் விளக்கிய பாடல்களையெல்லாம் தம் கையாலேயே எழுதி எங்களுக்கு அனுப்புவார்கள். அவ்வாறு அனுப்பியபோது எழுதிய கடிதம் கீழ்க்கண்டவாறு பேசுகிறது.

''ஒருவனுக்குக் கை நிறைய வைரங்கள் கிடைத்தன. அவைகளை வைக்கப் பெட்டகம் இல்லை, வீடில்லை. கடைசியில் அவைகள் கிடைத்தன. அப்படியானால் அவனுக்கு எவ்வளவு ஆறுதலாய் இருக்கும். அதேபோல் நானும் தமிழில் அரிய அற்புதமான பாடல்களைக் கண்டேன். கை நிறையவே இருக்கின்றன. வைக்க இடமில்லாமல் திண்டாடினேன். தாங்களும் வேலம்மாளும் ஒப்படைப்பதற்கு இருக்கிறீர்கள். எனக்கு எவ்வளவு ஆறுதல் என்று சொல்வானேன். ஒப்படைத்த பாடல் சில இத்துடன்.''

டி. கே. சி.யின் ஏக்கம் இன்னொரு கடிதத்தில் சொல்லுருவம் பெறுகிறது.

''உடனிருந்து அனுபவிக்க 24,000 மைல் சுற்றளவு உள்ள உலகத்தில் யாரும் இல்லையே—நீங்களும் தம்பியும் தவிர.''

ஒத்து உணர்வதற்குத் தமக்கு நண்பர்கள் வேண்டும் என்பதை 1-2-49 தேதியிட்ட கடிதத்தில் டி.கே.சி கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கிறார்கள் :—

"கடவுள் பாடே கஷ்டமாய்ப்போய், மனுஷர்களைப் படைத்துக்கொண்டார் என்று சொல்ல வேண்டும். வரனைப் படைத்தார், மானைப்படைத்தார். மலையைப் படைத்தார், மயிலைப் படைத்தார், படைத்த பிறகு அவைகள் ரொம்ப அழகாக இருக்கவும் கண்டார். இவைகளை அனுபவித்து மெச்சட்டுமே என்று மக்களையும் படைத்தார் இதில் கடவுளுக்குத் திருப்திதான், ஆனாலும், இப்போது கொஞ்சம் கையை நெரித்துக் கொண்டுதான் இருக்கிறார். மக்கள் வர்க்கத்துக்குள் தமிழ்ப் பண்டிதர்களும் புகுந்துகொண்டார்கள் அல்லவா? 'கடவுளாவது ஒன்றாவது, கடவுளைப்பற்றி ஏதேனும் சொல்லி இருந்தால் அந்த நூலைக்கொளுத்து' என்று பாடம் கற்பிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

அந்த அசுரன் கதை நல்ல கதைதான். தொட்டதெல்லாம் பஸ்மீகரணம் ஆக வேண்டும் என்று வரம் கேட்டான். சிவபெருமான் கொடுத்தருளினார். சிவபெருமான் தலையிலேயே கை வைக்க ஆரம்பித்தான் அசுரன். கடவுள் பாடு அப்படி இருக்கிறது.

கதை இருக்கட்டும். கடவுளோடு ஒத்து அனுபவிக்க அவருக்கு ஆள் வேண்டுமாம், அப்படியானால் என்னோடு உண்மைகளை ஒத்து அனுபவிக்கத் தம்பியும் தாங்களும் வேண்டும் என்பதில் அதிசயம் ஒன்றும் இல்லைதானே."

*10-11-48*ல் டி. கே. சி. எழுதிய கடிதம், கலையை உணர்ந்து அனுபவிப்பதற்கு பாவம் எவ்வளவு அவசியம் என்பதைக் கூறுகிறது :—

"இங்கே கர்னாடக ராகங்கள், பதங்கள், நந்தனார் கீர்த்தனங்கள் எல்லாம் அருவியோடு போட்டி போட்டுப் பொழிந்து கொண்டிருக்கின்றன. சாஸ்திரி அம்மாளை சங்கீத உலகம் அறியாது. பத்திரிகை உலகம் (ஒரு வக்கீல் நண்பர் குறிப்பிட்டது) எப்படியேனும் போகட்டும். சங்கீத உலகம் தெரியாமல் இருக்கிறது, செவிடாய்த்தான் இருக்கிறது. எந்த இதயக் கல்லையும் கரைக்கக்கூடியதாக இருக்கிறது அவர்கள் பாடும்போது. பாகவதர்கள் பாடும்போது எந்த இளகிய இதயமும் கல்லாய்ப் போய்விடும். குண்டுக் கல்லுகள் தான். சுவர் எடுக்கலாம்.

"இங்கே எத்தனையோ அற்புதமான பாடல்களை முக்கியமாகக் கம்பரது பாடல்களை சாஸ்திரி அம்மாளும் நானுமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அனுபவிக்கும் போதெல்லாம் வேலம்மாளும் தம்பியும் இங்கில்லையே அனுபவிக்க. என்று சொல்லிக்கொள்ளுவோம். கம்பர் அப்படி அநாதையாகத்தானே இருக்கிறார்."

ரசிகமணியின் கடிதங்களில் நகைச்சுவை நெளிந்து நெளிந்து ஓடிக்கொண்டிருக்கும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் இருமல் தொந்தரவினால் மாதக் கணக்காகத் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தேன். இதையறிந்த டி.கே.சி. தம்முடைய புகழ்பெற்ற 'பச்சைத் தண்ணீர் வைத்தியத்தை' மேற் கொள்ளும்படி ஆலோசனை கூறியிருந்தார்கள். அதன்படி நடந்தேன். ஒரே நாளில் குணமாகிவிட்டது. அவர்கள் வைத்தியத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேனோ என்ற ஐயம் அப்போது டி.கே சி.க்கு இருந்திருக்கிறது. 3-9-1947ல் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் உள்ள வாசகம்:—

"1-9-47 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. உடம்பைப் பற்றியும் நோயைப் பற்றியும் எழுதிய குறிப்பு வெகு அழகாய் இருக்கிறது. ஆனால், நோய் அவ்வளவு அழகாய் இருக்கிறது என்று சொல்ல முடியாது.

இரவில் படுக்கப் போகும்போது ஈரத்துணி ஒன்றைக் கழுத்தில் சுற்றி அதற்கு மேல் பிளானலையோ பட்டையோ சுற்றிக் கொள்ள வேண்டியது. அவ்வளவுதான். நன்றாகத் தூக்கம் வந்துவிடும். அநேகமாய்த் தொண்டையிலுள்ள புண் ஆறிவிடும். இது சொந்த அனுபவம். ஒரு பத்து நாள் தொடர்ந்து செய்தால் முற்றிலும் குணம் உண்டாய்விடும்.

இந்த வைத்தியத்துக்கு ஒரே ஆக்ஷேபணைதான் இருக்கக்கூடும். அதாவது, செலவு இல்லாத காரியமாக இருக்கிறது என்பதுதான்.

செலவில்லாமல்ப்போனால் நமக்கு நஷ்டந்தான். ஆனால், வியாதிக்கு அந்த விஷயம் தெரியாதல்லவா? ஏதோ ரொம்பச் செலவு செய்துதான் காரியம் நடந்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டு பயந்து விலகிவிடும்.

உலகம் அப்படி இருக்கிறது!"

இந்த வாசகத்துக்கு உள்ளே இருக்கும் ஆழ்ந்த உளநூல் புலமையும் நுணுக்கமான நையாண்டியும் உணர்ந்து மெச்சத்தக்கவை.

டி. கே. சி. யின் உடல்நிலை மோசமாய் இருந்தது என்று கேட்டு வருந்தி ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அடுத்த தபாலில் கீழ்க்கண்ட பதில் வந்தது:—

"என் உடம்பைப் பற்றித் தாங்கள் மிக்க கவலை கொள்ளுவதாகத் தெரிகிறது. அது வேண்டாம். உடம்பு சரியாகத்தான் இருக்கிறது. இன்ஸுலின் இன்ஜெக்ஷன் கிடையாது. மற்றக் குத்துகளும் இல்லை. மலை ஏற முடியாது. மரம் ஏற முடியாது. அவ்வளவுதான்."

நீரழிவும் காச நோயும் டி. கே. சி. யின் உடலைத் தாக்கி முற்றுகை போட்டன. ஆனால், கடைசி வரையில் அவர்கள் உள்ளத்திலே உள்ள ஹாஸ்யத்தையும் உல்லாசத்தையும் அவைகளால் பாதிக்க முடியவில்லை.

அவர்களுக்குக் காலில் புண் வந்து பல மாதங்கள் தொல்லைப் படுத்திவிட்டது. அதைப் பற்றி நான் விசாரித்து எழுதிய கடிதத்திற்குப் பதில் வருமாறு:—

''என்னுடைய காலில் புண் கொஞ்சம் குணத்துக்கு வருகிறது. அதற்கு என்ன உபசாரம் எல்லாமோ செய்தாகிறது, நாலைந்து நாளில் குணமாய்விடும் என்று ஏகோபித்துச் சொல்லுகிறார்கள். புண்ணின் காதில் அந்த வார்த்தை விழும் என்று எண்ணுகிறேன்."

புண்ணைப் பற்றி இன்னொரு கடிதம்:—

''இடது காலில் இருந்த புண் முற்றிலும் குணமாய் விட்டது. குணமாகிறது என்று ஒன்று அதற்கு இருக்கிறதே, அதிசயந்தான். வலது கால் விஷயம் கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் சௌகரியப் பட்டு வருகிறது. ஆனாலும், வேண்டும்போது சேஷ்டை பண்ணி விடுகிறது. எல்லாவற்றிற்கும் நாளாக வேண்டி இருக்கிறது. என்ன செய்யும்,

அப்பாவி உடல்! ஏதோ அதனால்க் கூடியமட்டும் அங்கங்கே பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறது. அதன் மேல் குற்றமில்லை.''

தம்முடைய உடலுக்கு அப்பால் இருந்து தம்முடைய உடலைப் பார்த்தே கேலி பண்ணும் ஆற்றல் டி. கே. சி. என்ற ஞானிக்குக் கைவந்த கலை.

ருசியான ஆகாரங்களை எல்லாம் தள்ளி வைத்து விட்டுக் கடும் பத்தியத்தில் இருந்தார்கள் . டி. கே. சி. தாங்கள் இப்படியும் இருக்கலாமா என்று நான் கேட்டு எழுதியிருந்தேன். ஆறுதலுக்கு வந்த கடிதம் இது:—

''உளுந்து தோசை, ருக்மணி அம்மாள் (கல்கியின் மனைவி) அனுப்பிய நார்த்தங்காய் ஊறுகாய், இட்டலி, தயிர் எல்லாம் சேர்ந்து வாய்க்கு ருசியான ஆகாரமாக ஆகிவிடுகிறது. போதும்தானே.

மற்றவர்கள் என்னத்தைச் சாப்பிட்டால் நமக்கென்ன? சாம்பார், ரஸம், மோர்க்குழம்பு, மாம்பழம், பலாப்பழம் எல்லாவற்றையும் சாப்பிட்டால் சாப்பிடட்டும். அது நம்மை பாதிப்பானேன்? எருமை கோரையை லவக்கு லவக்கு என்று தின்று குதக்குகிறது. அதைப் பார்த்து ஐயோ கோரையைத் தின்ன முடியவில்லையே என்று ஒப்பாரி வைப்பார் உண்டோ?

திருவள்ளுவர் இந்த அபிப்பிராயம் கொண்டவர் தான்.

''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.''

உடம்பின் நோய்களைப் பார்த்துச் சிரிக்கும் ஆற்றல், கலையில் ஆழ்ந்து தோய்ந்திருந்ததால்தான் அவர்களுக்கு வந்திருக்கிறது என்று ஒரு கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன். அதற்கு டி. கே. சி.யின் பதில் :—

''என்னைப்பற்றி அபாரமான அன்போடும் பரிவோடும் தாங்கள் குறிப்பு எழுதியிருக்கிறீர்கள். 'உடம்பு செய்கிற சேஷ்டைகளைக் கலையின் உதவி கொண்டு ஒரு கை பார்த்து விட்டீர்கள்' என்று அருமையாய் எழுதியிருக்கிறீர்கள். ராஜாஜியும் அப்படியேதான் சொல்லுவார்கள். அப்படி சொல்லுவதில் உண்மை இருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. தமிழும் கம்பரும் கலையின் உச்ச நிலைகளைக் காட்டுகின்றன. அவைகளை அனுபவிக்க ஒருவாறு முடிகிறதுதான். அவ்வளவுக்குக் கொடுத்து வைத்தவன்தான் நான்.

ஆனால், அதிர்ஷ்ட தசை எங்கே உச்சத்தில் இருக்கிறதென்றால் இந்த வயசில்க் கிடைத்த நட்பு வளந்தான். என்னோடு ஒன்றிய நண்பர்கள் எத்தனையோ பேர் கிடைத்திருக்கிறார்கள். சதா என்னுடைய க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். தாங்களும் அக்காளும் கொட்டுகிற பேரன்பு ஒருவனுக்கு எளிதில் இருபது வருஷ ஆயுள் கொடுத்துவிடும். எனக்கு ஏதோ இருபது வருஷ ஒத்தி கிடைத்ததாகவே தோன்றுகிறது.

கலையில் எல்லாம் கலை. அன்பை அனுபவிக்கிற கலைதான். இந்தக் கலையில் ''ரசிகமணிதான்'' நான்.

சத்சங்கம் என்றால் டி. கே. சி.க்கு அளவில்லாத ஆனந்தம். சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் ரசிகமணியுடன் தமிழ்ப் பாடல்களைக் கேட்டு அனுபவிக்கவேண்டுமென்று அவர்களைக் கோயம்புத்தூருக்கு அழைத்து, சில நாட்கள் தம்மோடு தங்கும்படி செய்தார்கள். அப்படி ரசிகமணி அவர்கள் கோவை சென்றிருந்தபோது, 33 தமிழ் பாடல்களின் பட்டியல் ஒன்றை அனுப்பி, அந்தப் பாடல்களை ரசிகமணியிடமிருந்து கேட்டு இன்புறுங்கள் என்று ஷண்முகம் செட்டியாருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அந்தப் பட்டியலைப் பார்த்துவிட்டு, **14**-10-50ல் கோவையிலிருந்து எனக்கு டி. கே. சி. எழுதிய கடிதம் இது:

"33 பாட்டில் தமிழ்ப் பண்பாட்டுக்குள் போகும் வழிகள் இருக்கின்றனவே என்று நானே வியக்கிறேன். அப்படி ஆங்கிலம் சம்பந்தமாக நாம் சொல்ல முடியுமா? முடியவே முடியாது. எல்லாம் "ததாஸ்துப்" போடுகிற காரியமாகத்தான் இருக்கும்.

ஜாஸ்தி போனால் அந்தந்தப் பாடலைப் பார்த்தோம் என்று ஆகுமே ஒழிய ஒரு பாட்டுக்குள் ஒரு விஸ்தாரமான பண்பாட்டைப் பார்க்கிறோம் என்று சொல்ல முடியுமா, முடியாது.

"திங்கள் மாலை வெண்குடையான்" என்ற பாட்டுக்குள் கூர்ந்து பார்க்கும்போது எட்டாத தூரத்திலுள்ள, முப்பதினாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ள காரியத்தையே பார்க்கிறோம். பார்க்க முடிகிறது. ஊடலாம் காவேரியாம் கங்கையாம் குமரியாம் நடுகை விழாவாம் குரவைப் பாட்டாம்.

இதெல்லாம் எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கின்றன.

தாங்கள் குறித்திருந்தீர்கள், "திங்கள் மாலை" பாட்டைச் சொல்லுங்களேன், என்றார்கள். சொன்னேன். ஒரே அதிசயந்தான். யாரும் பொருள் சொன்னதில்லைதானே."

இப்பேர்பட்ட சத்சங்கத்தில் ஏற்படுகிற இன்பத்தை ரசிகமணி மிகமிகத் துய்த்தார்கள்:—

"வயசாக வயசாக ஒத்த உணர்ச்சி ஒன்று போதும், வேறொன்றுமே வேண்டாம் என்று சொல்லத் தோன்றுகிறது. சாப்பாடுகூட வேண்டாமோ என்று சொல்லத் தோன்றியது வள்ளுவருக்கு.

டாக்டர் ஜான்ஸன் என்ற ஆசிரியருக்கும் அப்படித்தான் தோன்றியது. அவர் நல்ல மேதாவிகளான சங்கத்தோடு தினம் தினம் பழகிவந்தார்.

ஒருநாள் ஒருவர் அவரைக் கேட்டார். 'அயல் நாடுகளுக்குப் போய்ச் சுற்றுப்பயணம் செய்து வந்தால் அறிவு தெளிவடையும் அல்லவா' என்று கேட்டார்.

அதற்கு ஜான்ஸன் பதில் சொன்னார் : 'அதெல்லாம் ஒன்றும் இல்லை. பலர் பிரயாணம் செய்யத்தான் செய்கிறார்கள். அவர்கள் கருத்துக்களையோ கொள்கைகளையோ மாற்றுகிறார்களோ, கிடையவே கிடையாது. அவர்கள் மாற்றுவதெல்லாம் நாணயத்தைத்தான். பிரான்ஸுக்குப் போனால் பிரெஞ்சு நாணயமாக இங்கிலீஷ் நாணயத்தை மாற்றிக்

கொண்டு வந்த காபியைக் கொடுத்துவிட்டு இறங்கியபின், டி.கே.சி. என்னைப் பார்த்து, 'விருதுநகர் வரையிலும் என்னோடு கூட வாருங்கள்'' என்று சொன்னார்கள். அதற்குள்ளே ரயில் நகர்ந்துவிட்டது.

'டிக்கட்டைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். விருது நகர் வரைக்கும் உங்களுக்கு டிக்கட்டு வாங்கி வைத்து விட்டேன்' என்று டி.கே.சி. சொன்னார்கள். உடனே அவர்களோடு அமர்ந்து இலக்கிய சல்லாபம் செய்துகொண்டிருந்தேன். அவர்கள் கவிதைகளைச் சொல்லுவதும் அதை நான் மனம் ஒருமித்து அனுபவிப்பதுமாக இருந்த நிலையில் ஒரு நொடியில் வந்ததுபோல் விருதுநகர் வந்து விட்டது.

உடனே டி.கே.சி. என்னைப் பார்த்து, 'திருமங்கலம் வரையிலும் வாருங்களேன்' என்று சொன்னார்கள். நானும் கீழே இறங்கி டிக்கட் பரிசோதகரிடம் திருமங்கலத்திற்கு டிக்கட் வாங்கிக்கொண்டு, மீண்டும் ரயிலேறி, ரசிகமணியின் கவிதை ஆனந்தக்கடலிலே முங்கி முழுகித் தப்பளம் கொட்டிக்கொண்டிருந்தேன். அதற்குள்ளாகத் திருமங்கலம் வந்துவிட்டது.

உடனே டி.கே.சி. 'மதுரை வரையிலும் வந்து விடுங்கள்' என்று சொன்னார்கள். நான் மதுரைக்கு டிக்கட் வாங்கிவந்தேன். உட்கார்ந்து கவிதைகளை அனுபவிக்கத் தொடங்கினோம். ஒருசில வினாடிகளில் மதுரையும் வந்து விட்டது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த குமாரசாமிராஜா அவர்கள், என்னைப் பார்த்து, 'நீங்கள் ஏதேதோ கவிதைகளைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தீர்கள். எங்கள் இருவருக்கும் அதெல்லாம் புரியவில்லை. ஆனால், ரசிகமணியின் முகத்தில் இருந்த ஆனந்தத்தையும் அவர்களுடைய கவிதைகளைக் கேட்கும்

போது உங்கள் முகத்தில் இருந்த ஆனந்தத்தையும் கண்டு நாங்கள் இருவரும் களித்தோம். ஆகையினாலே சென்னைக்கே வந்து விடுங்கள்'' என்று தமாஷாகச் சொன்னார்கள்.

''எனக்கு விருப்பம்தான். ஆனால், நாளை கோர்ட்டு வேலை இருக்கிறதே'' என்று அவர்களிடம் என் ஏலாமையை சொன்னேன்.

சென்னைக்குச் சென்ற பின் 6-12-48 தேதியில் டி.கே.சி. எழுதிய கடிதம் இது :—

''தம்பியும் தாங்களும் ரயிலுக்கு வந்தது எவ்வளவோ ஆறுதலாய் இருந்தது. என்ன என்ன பாடல்களை எல்லாமோ படித்து மிஸஸ் சாஸ்திரிகளும் நானுமாக அனுபவித்துக் கொண்டிருப்போம். அப்போதெல்லாம் இதை எல்லாம் அனுபவிக்க உடனில்லை வேலம்மாளும் மகராஜனும் என்று சொல்லிக் கொள்ளுவோம்.

''இத்தனை பின்அணிகளுடனேதான் தாங்கள் ரயில் வண்டியில் ஏறி எனக்குக் காப்பி கொண்டுவந்து கொடுத்தீர்கள். அவசரம் அவசரமாக ஏதோ சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு 'இறங்குங்கள்' என்றும் சொல்ல நேர்ந்தது. குழந்தை அவ்வையை வழிப்பாதையில் விட்டுவிட்டுப் பிரயாணம் போன பெற்றோர் நினைவு வந்தது. அன்பு, அருமை, பண்பாடு எல்லாம் கலந்த உருவம் ரயிலில் உடன் வந்தது, மானஸமாகத்தான்.

தம்பியாவது உடன் வந்தார்களே. மிக்க திருப்தி. அனேக வரவு செலவு (பண்பாட்டு) கணக்குகளைத் தீர்த்துக் கொண்டேன்.

வண்டியில் இருந்த இரண்டு ராஜபாளையத்து நண்பர்களும் எல்லாவற்றையும் பார்த்து, சந்தோஷமாக உத்ஸாகப்படுத்திக் கொண்டுவந்தார்கள்.

விருதுநகர் வந்தது, கடைசியில் மதுரையும் வந்தது. அந்த நண்பர்களுக்கு ஒரே வேடிக்கை. 'சென்னைக்கு வந்துவிடுங்களேன்,' என்று வேடிக்கையும் ஆசையும் கலந்தவாறாகவே சொன்னார்கள். ஆனால் கோர்ட், கட்சிக்காரர், வக்கீல் என்ற காரியம் இருக்க அல்லவா செய்கிறது. மதுரைவரை அது ஒன்றும் இல்லை.

ஆகவே, மதுரையில் இறங்கி விட்டார்கள் தம்பி.

இத்தனை விஷயங்களையும் எண்ணிக் கொண்டே இரவு பிரயாணம் தொடர்ந்தது. தூக்கம் அப்படி அப்படித்தான்.''

உணர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில் பெண்கள் ஆடவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்பதை டி.கே.சி.யின் கடிதங்கள் பல வற்புறுத்துகின்றன. ஒரு கடிதம் இதை வெகு அழகாக எடுத்துச் சொல்கிறது :—

''உணர்ச்சி அவர்களிடம் (பெண்களிடம்) அளவில்லாமல் இருக்கிறது. அந்த உணர்ச்சியின் அளவையும் வேகத்தையுமே ஆடவர் கண்டதில்லை.

கரும்பும் நாணலும் ஒன்றுதான். பாட்டனிபடி ஓர் இனந்தான். நாணலை என்ன பிழி பிழிஞ்சால் தான் என்ன? சாறு வந்துவிடுமா? வந்தாலும் எவ்வளவுதான் வந்துவிடும். காய்ச்சிச் சர்க்கரை எடுப்பதோ முடியவே முடியாது.

ஆனால் கரும்பு என்றால் வேறு விஷயம். ஒரு கரும்பை ஆலையில் கொடுத்துவிட்டால் ஆலை பிழிந்து கொடுக்கிற சாறு ஓர் உழக்கு. அதாவது கால்ப் பக்காப்படி.

நாணலுக்கும் கரும்புக்கும் உள்ள சம்பந்தந்தான் ஆடவருக்கும் பெண்டிர்க்கும்—உணர்ச்சி சம்பந்தப் பட்ட மட்டில்."

பெண்ணியலை அறியாத பரிமேலழகரைத் தாக்கு கிறது ஒரு கடிதம் :—

"சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பதற்குப் பரிமேலழகர் சொன்ன அதிகப்பிரசங்கம் தான் தெரியுமே. "தாய் பெண்பாலானது பற்றி கல்வி கேள்வி அறிவு இவை இல்லை என்பதாயிற்று. ஆகையால் கேட்டுத்தானே அறிய வேண்டும் சான்றாண்மையை என்பது பெறப்பட்டது" என்றார் புத்திசாலி. பரிமேழகர் ஆடவரே."

பள்ளிக்கூடத்துப் படிப்பினால் வந்த கேட்டையும், அந்தக் காலத்துப் பண்டித உலகத்தின் நிலையையும் பல கோணங்களில் விமரிசனம் செய்கின்றன டி. கே. சி.யின் கடிதங்கள். "பள்ளிக்கூடங்களில் உண்மைகளை நேரடியாகப் பார்ப்பதில்லை. வெறும் புஸ்தகங்களை வைத்து மாரடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் பண்பாடு வளரவில்லை" என்பது டி.கே.சி.யின் கருத்து.

11.5.52ல் அக்காளுக்கு டி. கே. சி. எழுதிய கடிதம் இது:—

"கலியாண வேலை சம்பந்தமான உத்ஸாகங்களைத் தாங்கள் நன்கு உணர்ந்து அனுபவித்திருக்கிறீர்கள். வேலை செய்வதில் எப்படி உத்ஸாகம் இருக்

கும் என்றுதான் கேட்பார்கள் தற்காலத்துப் பள்ளிக்கூடம் போகும் பெண்கள். புஸ்தகத்தையும் கடுதாசியையும் கொண்டுதான் உத்ஸாகத்தை எடுத்து விடுகிறார்களே பள்ளிக்கூடத்தில்!

கடவுள் தனக்கு உத்ஸாகம் வேண்டும் என்று தானே சதா சிருஷ்டித் தொழில் செய்துகொண்டிருக்கிறார். புல்லிலிருந்து ஆலமரம் வரையும் எவ்வளவு வேலை. அதைவிட ஜாஸ்தி வேலை பூனையிலிருந்து யானை வரைக்கும் செய்து முடிக்கிற வேலை. நம்முடைய உடல் உயிர் உணர்ச்சிகளுக்காக அவரை நாமும் எவ்வளவோ வேலை வாங்குகிறோம். எல்லாவற்றிலும் அவருக்கு ஆனந்தந்தான்.''

ஆகவே, பள்ளிக்கூடங்களில் வேலையும் இல்லை. ஆனந்தமும் இல்லை என்ற காரணத்தினால் மாணவர்கள் கெட்டுப் போகிறார்கள். ''ஐந்து மணி நேரம் ஆனந்தமே இல்லாத வகுப்பறையில் ஓடியாடி அலைய வேண்டிய இளைஞர்கள் எல்லாம் கட்டுண்டு பொறுமையோடு இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், மாலை 5.30 மணிக்கு ஒரு ஹாக்கி மாட்ச் நடக்கப் போகிறது. அதைப் பார்க்கவேண்டும் என்ற ஒரே ஆத்திரம்தான்'' என்று டி.கே.சி. சொல்லுவார்கள்.

3-9-48-ல் சென்னையிலிருந்து எழுதிய கடிதம் இந்தக் கருத்தை நன்றாகத் தெளிவுபடுத்துகிறது:—

''பள்ளிக்கூடத்தில் அவர்களைக் (குழந்தைகளைக்) கொஞ்சம் கருணையோடு நடத்தினால் உடம்பாவது நன்றாய் இருக்கும். பள்ளிக்கூடம் சீராவதற்குமுன் உலகமே பெரும் புரட்சி அடைய

வேண்டும். நாளுக்கு நாள் எனக்கு என்ன படுகிற தென்றால், உலகத்திலுள்ள மூடக்கொள்கைகளுக் கெல்லாம். வறண்ட வாழ்க்கைக்கெல்லாம், நம் முடைய அழகிய பண்பாட்டை விட்டு ஆடவர் பெண்டிர் சிலர் விலகிப் போவதற்கு எல்லாம் காரணம், பள்ளிக்கூடத்துப் படிப்புத்தான் என்று சொல்லத் தோன்றுகிறது.

பிள்ளையார் குட்டைக் கண்ணிலே குட்டிக் கொண்ட மாதிரி, விஷயம் அல்லாத, விளங்காத பாடங்களைக் குழந்தைகள் உள்ளத்துக்குள் புகுத்தி விடுகிறோம். பிறகு சவலை நோய்தான். ஒரு உண் மையும் உள்ளத்தோடு சேர்ந்து ஐக்கியம் ஆவதில்லை, நேற்று இரவுகூட சவலைப் பிள்ளைகளை ஒரு மாபெருங் கூட்டத்தில் பார்க்க நேர்ந்தது. செட்டி நாட்டு ராஜா. காலம் ஆய்விட்டதைக் குறித்து அனுதாபக் கூட்டம்—கூட்டம் பெரிய கூட்டம். அனுதாபத்துடனேயே சபையோர் வந்திருந்தார் கள். ஆனால். பேசியவர்கள் படே படே பிரமுகர் கள்-கவர்னர், ஹைகோர்ட் ஜட்ஜ், மேயர், மாஜி மந்திரி, நடப்பு மந்திரி. யுனிவெர்சிட்டி வைஸ்சான் ஸலர் இப்படியாகப் பெரிய பெரிய ஆசாமிகள்: ஆனால், விஷயமோ உணர்ச்சியோ முற்றிலும் சூனியம், படியாத நாட்டுப்புறத்தார் பத்துப்பேரை உட்காரச் சொல்லி விஷயத்தை ஞாபகப்படுத்தி விட்டாலோ மனசைச் செலுத்தி உணர்ச்சியோடு பேசிவிடுவார்கள். ராஜா ஸர் எவ்வளவு பெரிய மனுஷர் என்னும் விஷயம் தெளிவுபட்டு விடும், நேற்று இரவு அப்படி ஒரு தெளிவும் பிறந்துவிட வில்லை. பள்ளிக்கூட விஷயம் போதுமே''

கவிஞர் அனுபவித்த அனுபவத்தைக் கொஞ்சமாவது ஒட்டி உணர்ந்திருந்தால்தானே கவியையுணரவும் கூத்தாடவும் முடியும். இதை முதல் கடிதம் விளக்குகிறது.

"பள்ளிக்கூடங்களில் இந்த உண்மையைச் சிறிதும் கவனிக்கிறதில்லை. ஷேக்ஸ்பியர் வகுப்பிலானாலும் சரி, கம்பர் வகுப்பிலானாலும் சரி, கவனிக்கிறதில்லை; பிறகு கவி அனுபவம் என்பதேது?

"இதில் ஒரு பெரும் கேடு. மாணவர்களது உள்ளம் வறண்டுபோகிறது ஒன்று, அதைவிட வறண்டுபோகிறது ஆசிரியர்களது உள்ளம். இது முற்றிலும் உண்மை. உலகம் எங்குமே கண்ட உண்மை. "பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது" என்றார்கள். அதைவிடக் காரமாய் "ஏட்டுச் சுரக் காய்" என்றும் சொன்னார்கள். மேல்நாட்டார் 'academic', 'Scholasticism' 'Pedagogue'—என்ற வார்த்தைகளை வேண்டிய மட்டும் உபயோகப் படுத்தத்தான் செய்கிறார்கள். ஆனாலும் சீக்கு குணத்துக்கு வரவில்லை.

"வைத்திய சாஸ்த்திரத்திலும் குணத்துக்கு வராத சீக்குகள் என்ற ஒரு பட்டியல் உண்டு. அந்தப் பட்டியலுக்குள் வந்ததுதான் 'கல்வி'யும்."

நமது கல்வி முறையில் கை வேலைக்கு அதிக இடம் இல்லாமற் போவதால் மாணவர்கள் அதை வெறுக்கிறார்கள் என்பதை சென்னை திரு. சதாசிவம் வீட்டிலிருந்து எழுதிய இன்னொரு கடிதம் (3-3-49) அழகாக எடுத்துச் சொல்கிறது :—

"சுப்பு சௌகரியமாய் இருக்கிறாள் அல்லவா? வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டிருப்பாள் என்று எண்ணுகிறேன். அப்படி வேலை

செய்துகொண்டிருப்பது மனசுக்கு நல்லது. பிரவர்த்தியில்த்தான் மனசு தன் இயல்பான தன்மையைக் காணுகிறது. பள்ளிக்கூடத்திலப் பிரவர்த்தி இல்லை. மனசு சுகமான நிலையில் இருப்பதில்லை. உபாத்தியாயர் ஒன்று சொல்லுவார்; பாடப் புஸ்தகம் வேறொன்றைச் சொல்லும்; மனசு வேறொன்றை நாடி ஓடும். ஆகவே, மனசில் குழப்பம், நாலா பக்கத்திலும் இழுப்புண்டு சங்கடப்படுகிறது மனசு. மனசு நரம்பைப் பாதிக்கிறது. நரம்பு எல்லா உறுப்புக்களையும் பாதிக்கிறது. உடம்புக்கு அசௌக்கியம். எல்லாம் பள்ளிக்கூடத்தில்தான்.

ஆனால், வீட்டு வேலையில் அப்படி அலட்டுதல் கிடையாது. வஸ்துக்களோடு உடல் தொழில்படுகிறது, மனசும் தொழில்படுகிறது.

காப்பி போடுகிறது என்றால்,—அடுப்பு, பாத்திரம், தண்ணீர், காப்பிப்பொடி, சர்க்கரை, பால், வாசம், சாப்பிடுபவர்களுடைய உத்ஸாகம் எல்லாம் உடலோடும் உள்ளத்தோடும் கலந்து கொள்கின்றன.

இந்த உண்மையை இப்போது (காலை 5-45 மணி)—இங்கே பார்க்கிறேன். பரிசாரகர் கிருஷ்ணய்யர் (பாலக்காட்டு ஆசாமி) மிக்க அக்கறை உத்ஸாகம் ஆனந்தம் எல்லாவற்றோடும் காப்பி கொண்டுவந்து இரண்டு தம்ளரில் ஆற்றிக் கொண்டு நிற்கிறார்.

கடிதம் எழுதிக்கொண்டிருக்கிற எனக்குத்தான் "விளா பூசை", அதாவது முதல் உபசாரம். இதில் எனக்குச் சந்தோஷம். அவருக்கும் சந்தோஷம்.

உதாரணத்துக்காகச் சொல்கிறேன் இதை. வீட்டு வேலையில் மனசுக்கு உத்ஸாகம் இருக்கவே செய்கிறது. தற்காலத்து ஆங்கிலப் பயிற்சி காரணமாக உத்ஸாகம் எப்படி இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கலாம். அது வேண்டாத சந்தேகம்.

ஆங்கிலம் வந்து எத்தனையோ விதத்தில் நம்மைப் பைத்தியக்காரர்களாக ஆக்கிவிட்டது.''

எனது அருமை நண்பரும் காரைக்குடியில் தமிழ்ப் பேராசிரியருமாய் இருந்த சிறந்த புலவர் காலஞ்சென்ற ஆ. முத்துசிவனை, கோடை விடுமுறையில் என்னோடு தென்காசிக்கு வந்து தங்க வேண்டுமென்றும், அப்படித் தங்கும்போது கல்வி, கேள்வி, கலை, தத்துவம் முதலிய பொருள்களைப் பற்றிய டி. கே. சி. யின் கருத்துக்களைக் கேட்கவேண்டும்மென்றும் அழைத்திருந்தேன். இரண்டு வாரம் என்னொடு குற்றாலத்திலுள்ள டி.கே.சி. வீட்டுக்கு வந்து, மணிக்கணக்காக அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார். இரண்டு வாரத்திற்குப் பின்னால் அவர் என்னிடம் சொன்னதாவது:—

''இந்த இரண்டு வாரத்திலும் நான் டி.கே.சி. யிடம். கேட்ட செய்திகளிலிருந்து ஒன்று உறுதியாகத் தெரிகிறது. நான் இவ்வளவு நாளும் படித்த படிப்பும் மாணவர்களுக்குக் கற்பித்த பாடங்களும் உண்மையற்றவை பொருளற்றவை என்று தெரிந்துகொண்டேன். ஆனாலும் டி. கே. சி.யை விட்டு விலகி வந்தபிறகு, பழைய வாசனை வந்து ஒட்டிக்கொள்ளுகிறது. ஆயிரம் மேடைகளில் நான் பிரசங்கம் செய்து பல அபத்தங்கள் என் மண்டைக்குள்ளே நின்றுகொண்டிருக்கின்றன. அவை பொய் என்று டி. கே. சி. வாயிலாகவே தெரிந்த பிறகும்

அவற்றைத் தூக்கி எறிய முடியவில்லையே'' என்று சொல்லி அங்கலாய்த்தார்.

இதைப் போலவேதான் பல பண்டிதர்கள் டி. கே. சி. யின் முன்னிலையிலேயே தாங்கள் படித்ததெல்லாம் வீண் என்ற உண்மையைத் தெரிந்துகோண்டு பெருங்குழப்பத்திற்கு உள்ளானார்கள். அப்படி குழப்பத்திற்கு உள்ளான ஒரு புலவரைப் பற்றி 22-9-53ல் டி.கே.சி. எழுதிய கடிதம் பேசுகிறது:—

''இரண்டு நாளைக்கு முன்பு அருணாசலம் கவுண்டருக்குத் தெரிந்த ஒரு புலவர் சிகாமணி அண்ணாமலை யுனிவெர்ஸிடியில் இருந்து வந்தார். சாயங்காலம் இரண்டு மூன்று மணிநேரம் தமிழ் சம்பந்தமான பாடல்களையும் விஷயங்களையும் காதில் வாங்கிக்கொண்டார். காதுக்கு அப்பால் ஒன்றுமே போகவில்லை. ஏதோ களிமண்ணால்ச் செய்த உருவம் போல் இருந்தார், அப்பாவி.

இரவு தூக்கம் வரவில்லையாம்; விடிந்து அருவியில் குளித்தார். அருவித் தண்ணீர் அடித்த அடியில் இறுகிப் போயிருந்த பல காரியங்கள் இளகிவிட்டன. மனுஷனாய் விட்டார். அண்ணாமலை யுனிவெர்ஸிடி ஒரு வகையாய்க் கரைய ஆரம்பித்தது. சிரிக்கக்கூடச் செய்தார். எனக்கு நம்ப முடியவில்லை. 'சிரிக்கிறதும் உண்டா' என்று கேட்டேன். ''இன்றைக்குத்தான் சிரிக்க முடிகிறது. நேற்றெல்லாம் வாழ்க்கையும் படிப்பும் வீணாய்ப் போய்விட்டதே என்ற ஆற்றாமையில் அறிவே திணறிப் போய்விட்டது'' என்று சொன்னார். இதையெல்லாம் போய் கவுண்டரிடத்தில்ச் சொல்லியிருக்கிறார்.

தமிழ்தான் உலகத்திலேயே எளிமையான பாஷை. மக்களை எவ்வளவு கஷ்டப்படுத்தி இருக்கிறது பாருங்கள் அது!''

இது சம்பந்தமான இன்னொரு நிகழ்ச்சியை 29.6.48ல் எழுதிய கடிதம் குறிப்பிடுகிறது.

> ''சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று (27-6-48) திருவல்லிக்கேணியில் நடராஜா கல்விச் சங்கம் என்ற இடத்தில் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களது படத் திறப்புக்காக என்னை அழைத்தார்கள்; தேசிக விநாயகம் பிள்ளை அவர்களது பாடல் ஐந்தாறு பாடிக் காட்டினேன். ஆடவர் பெண்டிர் எல்லாரும் அபாரமாய் அனுபவித்தார்கள். அவர் களும் வாயில் வைத்துக் கவிகளை என்னுடன் சுவைத்துக் கொண்டிருந்தார்கள். தலைமை வகித்த Lady Willingdon College தமிழ் ஆசிரியைக்கு ஒரே அதிசயமாய்ப் போய்விட்டது. ''தெரிந்துகொண் டேன், தமிழ்ப் பாடலைக் கற்பிக்கும் முறையை. இனி அப்படியே கற்பிக்க முயலுகிறேன்'' என்று சொன்னார். ஆனால் கிளாசுக்குள் நுழைந்தவுடன் என்ன ஆகுமோ? பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, அதிகப்பிரசங்க உரை எல்லாம் வந்து விடும். தொன்றுதொட்டு வந்த அமாவாசைதான். காலேஜ் 2-7-48ல்தான் திறக்கிறார்கள். அதன் பிறகல்லவா தமிழ்ப் புலவரா அறிஞரா என்று பார்க்கவேண்டும்.''

இந்தக் காலத்துத் தமிழ்ப் புலவர்கள் விரிந்த மனப் பான்மையுடையவர்கள். ஆனால், டி.கே.சி. காலத்தில் இருந்த பெரும்பாலோர் மடிசஞ்சிகள், அவர்களைப்

பற்றிய ஆங்காரமும் பரிவும் டி.கே.சி.யின் கடிதங்களில் பல இடங்களில் காணலாம். உதாரணமாக :—

"16வ மயிலத்தில் சைவக் கூட்டம். பெரிய கூட்டந்தான். சா. கணேசன், முத்துசிவன், நான் மூவருமாகப் பேசிய பேச்சில் தமிழ் ஆசிரியர்களுக்கு ஒரு பெருங் கலக்கம் உண்டாய்விட்டது. வந்தனோ பசாரம் சொல்ல வந்த பண்டிதத் தலைவர் தன்னிடம் சப்பணம் போட்டு உட்கார்ந்திருந்த பரிமேலழகரையும் நச்சினார்க்கினியரையும் கல்த்தாக் கொடுத்து வெளியே தள்ளிவிட்டுத் தமிழிலேயே பேசினார். நன்றாய்ப் பேசினார், உண்மையோடும், உணர்ச்சியோடும் பேசினார். அவருக்கே சந்தேக மாய்ப் போய்விட்டது 'நான்தானா பேசுகிறேன்.' என்பதாக."

மாதிரிக்கு இன்னொரு கடிதம் :—

"இன்று காலையில்கூட ஒரு தமிழ்ப் பண்டிதர் வந்தார். அவருக்குத் தமிழ்ச் சங்கம் கூட்டி ஜனங் களை உத்ஸாகப்படுத்துவதில் ஒரு பிரியம்.

அவரிடம் கேட்டேன்—தமிழ் ஸ்காலர்களுக்குத் தமிழில் நம்பிக்கை உண்டா என்பதாக. கிடையவே கிடையாது என்று உறுதியாய்ச் சொல்ல முடியும் என்றார். தமிழில் என்ன ஸார் இருக்கிறது என்று எளிதில் கேட்டுவிடுவார்களாம்.

சையன்ஸ் இருக்கிறதா என்றும் கேட்பார் களாம், ஆனால், சையன்ஸ் இங்கிலீஷிலா இருக் கிறது. இல்லை. அஸ்ட்ரானமி வானத்தில் இருக் கிறது; ஜியாலஜி பூமிக்குள் இருக்கிறது; பாட்டனி காட்டில் இருக்கிறது; பிஸியாலஜி நம் தேகத்தில்

இருக்கிறது; ஸைக்காலஜி நம் உள்ளத்தில் இருக்கிறது. இங்கிலீஷ் பாஷையில் எப்படி இருக்கும் என்று அந்தப் படாடோபிகளைக் கேளுங்கள் என்றேன்.

சையன்ஸ் புஸ்தகத்தில் இருக்கிறது என்ற மூடபக்தி ஒழிந்தால்ஒழிய நம்முடைய கல்வி, முக்கியமாகத் தமிழ் உருப்படப் போவது கிடையாது.

கல்யாணம் பண்ண விரும்புகிற ஒருவனுக்கு, பெண் பாடசாலை ஒன்றின் ஆஜர் அட்டவணையைக் (Attendance Register) கொடுத்துப் புரட்டிப் பார் என்று சொன்ன கணக்குத்தான்.''

கவிதையை உணர்வதற்கு அபூர்வமான உள்ளுணர்வு வேண்டும். அது நம்மவர்களில் பலருக்கு இல்லையே என்று டி.கே.சி. அடிக்கடி வருந்துவார்கள். இது பற்றி அவர்கள் 7-4-50ல் எழுதிய கடிதம் பின்வருமாறு கூறுகிறது :—

''கவி என்பது அற்புத ஒளிவிடும் ரத்னம். அந்த ஒளியைக் காண்பது எளிதல்ல. கண்ணுக்குப் புலப்பட்டுவிட்டால் முடிவில்லா ஒளிஊற்றாய் இருக்கும். ஆனால், அதைப் பிரகாசிக்க ஆர் இடங் கொடுக்கிறார்கள்?

கீல் எண்ணெய், மோட்டார் மசகெண்ணெய் இரண்டையும் குழப்பிக் கவிதா தெய்வத்தின் மேல் அபிஷேகம் செய்துகொண்டே இருக்கிறார்கள். பிறகு யார் காண அந்த தெய்வ ஒளியை?

இப்படி இருக்கிறது கம்பர் விழாவின் காரியம். செலவுதான் என்ன! கூட்டந்தான் என்ன! சங்கீதம் பரத நாட்டியம் வேறு.

மனுஷன் காக்கைப் பிறவியாய்ப் போய் விட்டான். வேம்பன்றோ காக்கை விரும்பும் கனி.

தமிழர் கம்பரின் பெருமையைக் காண இன்னும் 200 வருஷம் ஆகும் என்றார்கள், ஆவுடையப்ப பிள்ளை அவர்கள். அவசரப்பட்டு விட்டார்கள் பிள்ளை அவர்கள். இரண்டாயிரம் வருஷம் ஆகும் என்று சொல்ல வேண்டியிருக்கிறது"

'ஹாம்லெட்' என்ற ஆங்கில சினிமாப் படத்தைப் பார்த்துவிட்டு, தற்கால ஆங்கிலேயருக்கும் கவிதையை மதிக்கத் தெரியவில்லை என்பதை 8-3-49 தேதியிட்ட கடிதத்தில் டி. கே. சி. சொல்கிறார்கள்.

"முந்நூறு வருஷத்துக்கு முன் உள்ள இங்கி லீஷை செய்யுளில் அமைத்தார் ஷேக்ஸ்பியர். அப்படி அமைத்ததை, ரயிலைப் பிடிப்போமா மாட்டோமா என்ற வேகத்தில் சொன்னால் பாஷையின் பாடு என்ன ஆகும்! ஆகட்டுமே என்று நினைத்து விட்டார்கள் தற்காலத்திய ஆங்கிலேயர்.

தாமரைப் பூவை எடுத்து மடங்க மடங்க இஸ்திரி போட்டுவிட்டார்கள். சுடச்சுட ஷேக்ஸ் பியரையும் இஸ்திரி போடுகிறார்கள்.

ஆகவே, நாங்கள் இரண்டு சோக நாடகங் களைப் பார்த்தோம். பாத்திரங்கள் எல்லாம் மாண்டன. ஷேக்ஸ்பியரும் மாண்டார்."

* * *

"அகடவிகட சாமர்த்தியம் செய்யக்கூடிய ஆங்கிலேயர் காரியம் இப்படி என்றால், நம்முடைய தமிழ் ஸ்காலர்களைப் பற்றிச் சொல்லவாவேணும்.

கண்களை மூடிக்கொள்கிறார்கள். வெண்ணெய் தின்கிறோம், வெண்ணெய் தின்கிறோம் என்று சொல்லிக்கொண்டு களிமண்ணை உருட்டி உருட்டி வாயில் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அடடா களிமண்ணை ஏன் தின்கிறீர்கள் என்று சொன்னால்.

'கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி' என்று நம்மை இகழ்வார்கள். இது ஒரு 'Hamlet Tragedy.'

உலகமே கவிக்குச் சமாதிச் கட்டுகிறது. நாம் மாத்திரம் தமிழ்க் கவிக்குக் கட்டக்கூடாது என்றால் யார் கேட்பார்கள். கவியின் காரியம் அப்படி இருக்கட்டும்.''

* * *

டி.கே.சி.க்குக் கம்பர் கவிதையிலும் தமிழ் மொழியிலும் இருந்த பக்தியானது வெறித்தனத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல; ஆழ்ந்த நிதானத்தையும் உள்ளுணர்வையும் மொழி நுணுக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் மரணப் படுக்கையில் இருந்தபோது, என்னை அழைத்து, ''உங்களிடம் ஒரு வரம் கேட்கிறேன் நீங்கள் ஒன்றைச் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். தமிழர்களையும் சொல்ல வைத்துக்கொண்டே இருக்கவேண்டும். எதைச் சொல்ல வேண்டும்? 'டி.கே.சி. என்று ஒருவன் இருந்தான். அவன் சொல்வான், உலகத்திலேயே தமிழைப் போன்ற உயர்ந்த மொழி வேறு ஒன்றும் இல்லை. உலகத்திலேயே கம்பனைப் போன்ற உயர்ந்த கவிஞன் வேறு ஒருவரும் இல்லை' என்று சொல்லுவான். இதைத் தமிழர்கள் சொல்லிக் கொண்டே இருக்கட்டும். 500 ஆண்டுகள் அல்லது 1000 ஆண்டுகள் கழித்தாவது உலகமெல்லாம் இதை

ஒப்புக் கொள்ளும்'' என்று சொன்னார்கள். அவர்களுடைய அசைக்கமுடியாத நம்பிக்கையை ஒரு கடிதம் (25-1-50) கீழ்வருமாறு எடுத்துச் சொல்கிறது:—

''வருகிற வழியில் விருதுநகர், மதுரை, திண்டுக்கல் முதலிய ஸ்டேஷன்களில் இளைஞர்கள் ''ஆட்டகிராப்'' நோட்புஸ்தகங்ளையோ, வாங்கிய புதுப் புஸ்தகங்களையோ கொண்டுவந்து என் பெயரை எழுதச் சொன்னார்கள். எல்லாவற்றிலும் என் அனுபவதத்தை எழுதிக்கொடுத்தேன்.

தமிழனுக்குத்
தமிழே
துணை

என்பதைத்தான் எழுதினேன்.''

*  *  *

''தமிழனுக்குத் தமிழே துணை—ஏதோ படாடோபச் சொல் என்றுகூட எண்ணிவிடலாம். இது உண்மைதான் என்பதை அறிந்து கொள்வதற்கு (26-1-50) இன்று ஒரு நல்ல சந்தர்ப்பம்.

பத்திரிக்கை ஒவ்வொன்றும் ''சுதந்திர மலர்'' என்று துலாக் கணக்கில் கடுதாசிக் கட்டுகளை வெளியிட்டிருக்கின்றன. அவ்வளவும் இப்போது இங்கே என் மேஜையை நெளித்துக்கொண்டிருக்கின்றன. இவ்வளவும் ஒரு மனுஷனது மூளைக்குள் செல்லுமானால், மூளை கெட்டுவிடும். அதோடு தேகமும் கெட்டுவிடும். பிறகு தெரியவரும் தமிழ்தான் துணை என்கிற காரியம்.''

சமுதாய இயலைப் பற்றியும் ரசிகமணி ஆழ்ந்து சிந்தித்தார்கள். சமுதாயச் சடங்குகளில் பொதிந்துள்ள உண்மைகளையும் அழகுகளையும் டி. கே. சி. மிகவும் ரசித்தார்கள் :—

''தைச் சங்கராந்தி என்றால் பெண்களுக்கு ரொம்ப ரொம்ப வேலை. பெண்டுகளைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். சங்கராந்தி வராதிருந்தால் நல்லது அல்லவா என்றுகூட நினைக்கத் தோன்றும்

ஆனாலும், சங்கராந்தி அன்று சூரியன் உதிப்பது ஒரு தனி அழகு. எல்லாவற்றையும் தங்கமுலாம் பூசிவிடுகிறது.

குத்துவிளக்கு, ஆரம், அதற்கான விபூதி, குங்குமம், கரும்பு, மஞ்சள்த் தோகை, குழந்தை, பெண்டுகள் அவர்களுடைய அழகான உடைகள், அடுப்புகள், சுவாலைகள் எல்லாவற்றுக்குமே ஒரு தங்கமுலாம். மக்கள் உள்ளத்தில் தனியான புத்துணர்ச்சி. வருஷத்தில் ஒரு நாளாவது இந்த சந்தோஷத்தை அனுபவிப்பதற்காக வந்து போகிறதே என்று வியக்க வேண்டியிருக்கிறது.

அங்கே செல்லம்மாள், குழந்தைகள் எல்லாருமாகப் பொங்கலைக் கொண்டாட்டமாகக் கொண்டாடி இருப்பார்கள்.

இங்கேயும் தங்கம் கொஞ்சங்கூட மிச்சம் கிச்சம் வைக்காமல்ப் பொங்கலை நடத்திவிட்டாள். வீடெல்லாம் மாக்கோலம், அழகான கோலங்கள். தாங்கள்தான் கலையான் கோலம் போடச் சொல்லி

கொடுத்துவிட்டீர்களே. அவளுக்கு ரொம்ப சந்தோஷம் அதிலே. மூன்று பானை வைத்துப் பொங்கல் பொங்கச் செய்துவிட்டாள். ஒரே சந்தோஷம். அந்த சந்தோஷம் கதையோ, பாட்டோ, கவியோ ஒன்றிலும் வராது. இதைத் தெரிந்துகொண்டால் வாழ்க்கைக்கு ஒரு விளக்குக் கிடைத்தது என்று சொல்லலாம்.''

நவராத்திரி பற்றி 3-10-49 கடிதம் பேசுகிறது :—

''வந்தது முதல் சென்னையில் நவராத்திரிக் கொண்டாட்டத்தின் கோலாகலம் நிறைந்திருக்கிறது. இங்குள்ள பெண்மணிகள் பத்து வீட்டுக்காவது போய்க் கொலுவில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. அப்படியே மற்றப் பெண்கள் வந்தால் அவர்களை வரவேற்றுத் தாம்பூலம் கொடுக்கிறார்கள் இங்குள்ளவர்கள். ஒன்பது நாளும் பெண்களுக்கும் நல்ல பிரவர்த்தி. பலரோடும் பழகும் பயிற்சியும், அதனால் வரும் பண்பாடும் கிடைத்துவிடுகிறது.

சித்திரக்கலை, சிற்பக்கலை, கோலக்கலை, சங்கீதக்கலை ஆகிய கலைகள் வீட்டுக்குள் வந்து ஊடாடுவதற்கு வாய்ப்பான விழா, நவராத்திரி விழா.''

21-2-48 தேதியிட்ட இன்னொரு கடிதம் சடங்குகளைப்பற்றிச் சொல்வதாவது :—

''நம்முடைய வீட்டுச் சடங்குகள், கோயில் வழிபாடுகள், சமயக் குறியீடுகள் இவைகளில் எல்

லாம் (மக்கள் எவ்வளவு தவறாக எண்ணி நடந்த போதிலும்) ஒரு அடிப்படையான உண்மை, அதாவது, பயன் இருக்கவே செய்யும். கால தேச வர்த்தமானங்களுக்குரிய டிஸ்கவுண்டுகளைக் கழித்துப் பார்த்தால் நம் முன்னோர்களைவிட அறிவாளிகள் கிடையாது என்றே சொல்லத் தோன்றும்.''

''உண்மையில்க் கிரியைகள் சந்தோஷத்தை உண்டு பண்ணவேண்டும். பொருள் இருக்க வேண்டும். எல்லாரும் அனுபவிக்க வேண்டும். இதற்கெல்லாம் நேர்மாறாக நம்மை ஹிம்சைக்கு உள்ளாக்குகின்றன.

கிரியைகள் அலங்காரமாய் ஆனந்தத்தை விளைவிக்கக் கூடியனவாய் இருந்துவிட்டால் நம்முடையவர்களுக்குப் புத்தியே வந்துவிடும். எல்லாத் துறைகளிலும் நிபுணர்கள் ஆகிவிடுவார்கள். உண்மையோடு ஒட்டிப் பேசுவார்கள். தில்லை நடராஜர் கோவில்த் திருவாதிரை உத்ஸவத்தில் பக்த ஜனங்களுக்கு இங்கிலீஷில் இரண்டு மணி நேரம் ஒரு ரிட்டையர்டு ஜில்லா ஜட்ஜ் பேசினார் என்ற அபவாதம் ஏற்படுமா!

அர்த்தமில்லாமல் பேசுகிறது என்பது அளவற்ற கேட்டுக்கு விளைநிலம்.

நயனில சொல்லினும் சொல்லுக, சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

என்றார் குறளாசிரியர்.''

இவ்வாறாக, ரசிகமணி அவர்கள் உலகத்தில் உள்ள குருட்டுப் பழக்கங்கள் எல்லாவற்றையுமே கண்டித்து வந்தார்கள். "உலகம் முழுவதுமே நூலாம்படை படர்ந்திருக்கிறது. துடைப்பம் ரொம்ப வேண்டும். தமிழ் நாட்டுக்கு மாத்திரம் துடைப்பம் தயாரித்தால் போதாது" என்று சொல்கிறது இன்னொரு கடிதம்.

டி.கே.சி. ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வந்திருந்த போது அக்காள் முற்றத்திலே மாப்பொடியினால் போட்ட கோலத்தைப் பார்த்துப் பார்த்து ஒரு மணி நேரம் ரசித்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் குருட்டுக் கண்களுக்கு அவர்கள் எடுத்துச் சொன்ன பிறகுதான் கோலத்தின் அழகு தெரியவந்தது. அந்தக் கோலத்திலிலுள்ள எளிமை டி.கே.சி.யின் உள்ளத்தை ஈர்த்துவிட்டது. பரிணாம நெறியை ஒட்டிப் பார்த்தால்தான் எளிமையைப் பற்றி டி.கே.சி. இப்படி எல்லாம் ஏன் பிரமாதப்படுத்தினார்கள் என்று விளங்கும். இயற்கை அன்னை, விதம் விதமான பிராணிகளை உண்டாக்கி வந்திருக்கிறாள். உருவங்களைச் செய்து செய்து நாளாவட்டத்தில் அவள் கை திருந்திக் கொண்டே வந்திருக்கிறது. பத்து கால், மூன்றுகண் உள்ள பிராணிகளை உண்டாக்கினாள். அவைகள் வசதியோடும் புத்தியோடும் வாழமுடியவில்லை. அவைகளை அழித்துப் புது உருவங்களை உண்டுபண்ணிப் பார்த்தாள். இப்படி எத்தனை எத்தனையோ திருத்தங்களைச் செய்து கடைசியாக மனித உருவத்தைக் கண்டு பிடித்தாள். இரண்டே கண் போதும் மூன்று கண் வேண்டியதில்லை என்று இயற்கை அன்னை கண்டு பிடிப்பதற்கே கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன. உயிருள்ள வஸ்துக்களுள், மனித உருவம் மிகவும் எளிமை வாய்ந்ததுதான். ஆனால்; அந்த எளிமை வருவதற்குள் இயற்கையன்னை எத்தனை பாடுபட்டிருக்கிறாள்!

கலையுலகத்தில் எளிமை ஏற்பட்ட கதையும், கிட்டத்தட்ட மேற்சொன்ன மாதிரிதான். ஆகையால், எந்தத் துறையில் எளிமையைக் கண்டாலும் அதை டி.கே.சி. அபாரமாக அனுபவித்தார்கள்.

முற்றத்திலே மாப்பொடியினால் போடப்பட்டிருந்த கோலத்தைப் பற்றி ஊருக்குப் போனபிறகு டி.கே.சி. ஒரு கடிதம் எழுதினார்கள்.

> "இங்கேயும் வீடுகளில் கோலம் போடத்தான் செய்கிறார்கள். நூற்றுக்கணக்கான பொட்டுகள், நூற்றுக்கணக்கான கோடுகள். எல்லாம் சேர்ந்து ஒரே கசாபுசா. வேலம்மாள் ரகத்தில் எளிமையும் கருத்தழகும் சேர்ந்து கலையாய் விளங்கும். அந்தக் கலையை உணருவதற்கு மற்றக் கோலங்களையும் பார்க்கவேண்டும். கம்பர் செய்யுளின் எளிமையை அனுபவிப்பதற்குக் கந்தபுராணச் செய்யுள்களையும் சீவக சிந்தாமணிச் செய்யுள்களையும் பார்க்க வேண்டும். பாரதியும் தேசிக விநாயகம் பிள்ளையும் கவிஞர் ஆனதால் எளிமையைக் கையாண்டிருக்கிறார்கள். விஷயத்தை இப்படிச் சொல்வதை விட்டுவிட்டு எல்லோருக்கும் விளங்குவதற்காக லேசாய் எழுதியிருக்கிறார்கள் என்று மாறாய்ச் சொல்லுகிறார்கள். கவிஞர்கள், தங்களுக்கே விளங்கவேண்டும் அல்லவா, அதற்காக எளிமையைக் கையாளுகிறார்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்
>
> "பூண்டுகள்கூட காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக எளிமையைக் கையாண்டிருக்கின்றன."

"எட்டுத் திசைகளிலிருந்தும், பதினாறு கோணத்திலிருந்தும் மகரந்தத் தூள்களை வண்டுகள் கொண்டுவர வேண்டும். அதற்காகப் பதினாறு இதழ்களையா விரிக்கிறது? ஐந்து இதழ்கள் போதும் என்று தானே வைத்துக்கொண்டது. Radial Symmetry ஐந்து பட்டங்களால் ஆய்விடுகிறது. பல அடுக்குப் பூக்கள் எல்லாம் கஷ்டப்படுகிற பூக்கள் தான். கோலத்தை எளிமையுடன் போடவில்லை அவைகள்."

இப்படியாகக் கோலத்திலிருந்து கவிதைக்கும், கவிதையிலிருந்து சிருஷ்டி தத்துவத்துக்குமே டி.கே.சி.யின் எளிமைக் கடிதங்கள் நம்மை இழுத்துச் சென்று விடுகின்றன. சில்லறை விஷயங்களைப் பற்றிக் கடிதங்கள் விளக்கிக் கொண்டிருக்கும்போதே அரிய உண்மைகள் எல்லாம், அந்த ஒளியிலே, தெளிவாகிவிடும். விஞ்ஞானம், சமயம், கடவுள் தத்துவம்—எல்லாவற்றைப் பற்றியுமே, மத்தாப்பூ போட்டு விடும் அந்தக் கடிதங்கள்.

கோலத்தை அனுபவித்தது போலவே முறுக்குச் சுற்றுவதையும் ரசிகமணி ஆர்வத்தோடு அனுபவித்தார்கள். என் தமக்கையார் குற்றாலத்தில் இருந்தபோது அவர்களுக்குத் தாம் கொடுத்த வேலையைப் பற்றி 16-12-49 தேதியிட்ட கடிதத்தில் சொல்கிறார்கள் டி. கே. சி.

"குற்றாலத்தில் வேலம்மாளுக்குக் கடுத்த வேலை கொடுத்துவிட்டேன். ஒருநாள் பூராவும் முறுக்குச் சுற்றும் வேலையைக் கொடுத்தேன். ஆனால், அந்த அருங் கலையைப் பக்கத்திலிருந்து

பார்த்து அனுபவித்துக்கொண்டே இருந்தேன். பொழுது நன்றாகப் போயிற்று.

தங்கமும் கொஞ்சம் அந்தக் கலையைக் கற்றுக் கொண்டாள். இங்கே எம்.எஸ்., சதாசிவம், குழந்தைகள் எல்லாருக்கும் முறுக்கின்மேல் ரொம்ப ஆசை. இது மாதிரி முறுக்கே கிடையாது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். எல்லாம் வேலம்மாளின் கை லாகவம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

இதெல்லாம் உண்மை என்று தெரிந்துகொள்ள சீவிலிப்புத்தூரில் முறுக்குச் செய்ய ஆரம்பிக்க வேண்டியதுதான். பக்கத்திலிருந்து பார்த்தால் நான் சொன்னதின் பொருள் தெரியவரும்.

தமிழ்நாட்டுப் பண்பாட்டில் சாம்பார், ரஸம், அவியல், இட்டலி, முறுக்கு என்று அடுக்க வேண்டியது தான்.''

குற்றாலத்தில் செய்த முறுக்கையும் தோசையையும் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி எப்படி அனுபவித்தார்கள் என்பதைச் சொல்லுகிறது ஒரு கடிதம் :—

''முறுக்கும் தோசையும் கவர்னர் ஜெனரல் அவர்கள் (C.R.) ஏறிப்போன விமானத்தில் வைத்து வழி அனுப்பினோம். விமானத்தில் பறந்து போகும் போது எழுதுகிறார்கள் :

"இன்று தோசையும் துவையல்களும் முறுக்கும் 'கண்டோம்' என்றே சொல்லவேண்டும். தோசை எல்லாம் தோசை ஆகுமா? முறுக்கெல்லாம்

முறுக்கா? இல்லை. குற்றாலத்துத் தோசையே தோசை. முறுக்கே முறுக்கு. கூட இருக்கும் அனை வருக்கும் கொடுத்து, 'பாருங்கள்' என்று பெருமை யுடன் வழங்கி மகிழ்ச்சியைப் பன்மடங்குப் பெருகச் செய்தேன். பாப்பா (குமாரத்தி) தோசையைச் சாப்பிட்டு வியப்பில் மூழ்கிப் போனாள்." பாப்பா அம்மாள்தான் அண்ணியிடம் தோசை வேண்டும் என்று சொன்னது. அவள் செய்து அனுப்பியதுதான் தோசை.

முறுக்கைப் பற்றி எவ்வளவோ ராஜாஜியிடம் சொல்லியிருப்பேன். தங்கள் கலை என்றும் சொல்லியிருப்பேன். அதற்கு இங்கே நேரம் இல்லை. அரசியல்வாதிகளாகிய நரமாம்ஸ பக்ஷிணிகள் கவர்னர் ஜெனரலைச் சதா சுற்றி மொய்த்துக் கொண்டிருந்தார்கள். சாப்பிடவே நேரம் இல்லை தான். அதில் முறுக்கைத் தின்கிறதாவது! முறுக்கைப் பற்றிப் பேசுவதாவது!

ஆனால், இங்குள்ளவர்களிடம் தங்கள் கலை யைப் பற்றி "லெக்சர்" பண்ணிக்கொண்டேதான் இருக்கிறேன்."

முறுக்கை நமக்குத் தின்னத்தெரியுமே ஒழிய அதைப் பற்றிச் சுவையாகப் பேசத் தெரியாது.

வில்லுப்பாட்டையும் அந்தக் காலத்தில் பலருக்கு மதிக்கத் தெரியவில்லை. அதன் ஆற்றலைப் பற்றி **14-10-49**ல் டி.கே.சி. எழுதிய கடிதம் வர்ணிக்கிறது:—

"வில்லுப்பாட்டில் வசனம் வரும். அது ஒரு பாடலுக்கு அஸ்திவாரம் போடும். நாமும் எதிர்

பார்த்துக் கொண்டிருப்போம். பலவிதத் தாளக் கருவிகளுக்கிடையே எழுந்து வரும் கவி நிமிர்ந்து கொண்டே வரும். கடைசியில் முத்தாய்ப்புடன் ஒரு நடனம் ஆடி நிறுத்தும்.

இதை லகுவில்ச் சாதித்துவிடுகிறது வில்லுப் பாட்டு.

லகுவான தமிழில் லகுவான "ரிதும்" கொண்டு கதையை ஆசிரியர் சோடித்திருக்கிறார்.

ஆசிரியர் பெயர் பிச்சுக்குட்டி. பையன்கள் அற்புதமாய்ப் பாடுகிறார்கள். அத்தனை பேரையும் உள்ளுணர்ச்சி ஆட்டிக்கொண்டிருக்கும். அந்த ஆட்டம் நம்மையும் ஆட்டும்.

சீவிலிப்புத்தூரிலும் வைக்கலாம்—சௌகரியப் பட்டால், அனுபவித்துப் பாராட்ட வேண்டிய காரியம் அது.

* * *

முந்தாநாள் N.S. கிருஷ்ணனது வில்லுப்பாட்டு இங்கே நடந்தது. "Lyrics" வாய்ப்பாய் இருந்தன. வில்லுப்பாட்டுக்கான வேகம் குறைவுதான். பிரசார தொனி கொஞ்சம் அதிகமாகவே வந்து கலந்துவிடும். ஆனாலும், எல்லாரும் அனுபவிக்கக்கூடியதாகவே இருக்கும்.

கலைகளை எல்லாம் நம்முடைய தோட்டத்து மண்ணிலேயே வித்திட்டு விருத்தி செய்யவேண்டும். மண் தொட்டி, பீங்கான் தொட்டி, வெள்ளித் தொட்டி இதெல்லாம் செடியையும் பூவையும்

கொஞ்சம் அமிழ்த்தத்தான் செய்யும். தொட்டி தான் முன்னுக்கு வந்து நிற்கும். வந்து பார்த்துப் போனவர்கள் மனசில் தொட்டியைத்தான் பதித் திருக்கும்.

நமக்கெல்லாம் சாத்தூர்ப் பள்ளிக்கூடத்து வில்லுப்பாட்டே போதுமானதாய் இருக்கும்.''

பல அரிய உண்மைகளை டி.கே.சி. சொல்லிக் கொண்டே இருந்தாலும், அவற்றைக் கவனிப்பார் இல்லையே என்ற ஏமாற்றம் அவர்களுக்கு இருந்தது. 27-4-49 தேதியிட்ட கடிதம் இந்த ஏமாற்றத்தைக் கீழ்க் கண்டவாறு சொல்லிச் சமாளிக்கிறது:—

''சூரியன் தினம் தினம் வருகிறான். ஏன் ஒரேயடியாய் இருட்டை ஒழிக்க முடியவில்லை— அவனுக்கு. அப்பாவி என்ன செய்வான். வந்து தொலைக்கிறான். மாலை ஆறு மணிக்கு மறை கிறான். அந்த க்ஷணமே இருள் மூடிக்கொள்கிறது.''

ரசிகமணியின் கவிதைப் பார்வையில் தத்துவப் பார்வையும் விஞ்ஞானப் பார்வையும் சமயப் பார்வையும் கலந்திருந்தன. 1948-ல் ஒரு நீண்ட வால்வெள்ளியை நாங்கள் சீவிலிப்புத்தூரில் பார்த்தோம். இந்த அரிய காட்சியை அக்காள் ரசிகமணிக்குத் தெரிவித்ததன் பேரில், கீழ்க்கண்ட அற்புதமான கடிதம் 19-1 -48-ல் வந்தது:—

''வால் வெள்ளியைப் பார்த்துக் கொண்டீர்கள். ரொம்ப சந்தோஷம். இங்கே மழை மேகமாய் இருப்பதால் நான் இன்னும் பார்க்கவில்லை. விபரங்கள் ஒரு வகையாய்ப் பத்திரிகையில் வந்திருக் கின்றன. ஆனாலும், வான சாஸ்திரிகளுக்கும், இது

பழையதொரு வால் வெள்ளியா அல்லது புதிதாகக் காணுவதா என்ற விபரம் தெரியவில்லை.

வால் வெள்ளிகள் எத்தனையோ இருக்கின்றன. ஆயிரக்கணக்காகவே இருக்கலாம். ஆனால், நமக்குப் புலனாவது சில வெள்ளிகளே.

1910-ம் வருஷம் Halley's Comet என்ற வால் வெள்ளியைத் தெளிவாய்ப் பார்த்தோம்.

*        *        *        *

சூரியனைச் சுற்றி எத்தனையோ பிரம்மாண்டமான வஸ்துக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

பூமியும் சூரியனைச் சுற்றிப் பிரதக்ஷிணம் வருகிறது. ஒரு வருஷத்தில் ஒரு பிரதக்ஷிணம். சனிக்கு 30 வருஷம் ஆகிறது. Halley's Comet என்ற வால் வெள்ளிக்கு 75 வருஷம் ஆகிறது. இப்போது தெரிகிற வெள்ளிக்கும் 75 அல்லது மேற்பட்ட வருஷங்கள் ஆகலாம். ஏன், 200 வருஷம் ஆகிறது என்று இருந்தாலும் இருக்கலாம்.

சூரியனுக்கும், பூமிக்கும் தூரம் 9 கோடி மைல். அப்படிப் பார்க்கும்போது பூமியின் பிராகாரம் 54 கோடி மைல்.

ஒரு வருஷத்தில் சுற்றி வருகிற பிராகாரம் 54 கோடி மைல் என்றால், 75 அல்லது 200 வருஷத்தில் சுற்றி வருகிற பிரகாரம் எத்தனையோ "54 கோடி" மைல் இருக்குமே.

இந்த விதமாகப் பிரம்மாண்டமான அண்டங்கள், எட்டாத தூரம் துரத்தப்பட்டு, மறுபடியும்

சூரியனிடம் வருகின்றன. எல்லாம் கணக்குப்படி தான். நியதிக்கும் கணக்குக்கும் விரோதமாக அண்டத்திலும் நடப்பதில்லை, அணுவுக்குள்ளும் நடப்பதில்லை. அப்படி நடப்பதெல்லாம் நம்முடைய அண்ணாத்தைகளின் மூளைக்குள்தான். அந்த மூளைக்குள் எப்படித்தான் அந்த பிரம்மன் நியதிக்கு மாறான அசட்டுத்தனத்தைத் திணித் தானோ தெரியவில்லை. தமிழில் ஒன்றும் இல்லை என்று சொல்லும்படி ஒரு அற்புதத்தை அல்லவா திணித்துவிட்டான் பிரமன். அவன் காரியம் எப்படியோ போகட்டும்.

எத்தனையோ அண்டங்கள், பிரமாண்டங்கள் எட்டாத வெட்டவெளியில், ஒரு நியதியின்படி மனோவேகத்தைத் தாண்டியதாய்ச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன.

இதுதானே இறைவனது உருவம் (நியதி). நடனம். வால் வெள்ளியைக் கொண்டு ஒரு சிறு பாகத்தை நாம் தெரிசிக்கும்படி அருள் செய்கிறார். இறைவன் முழு உருவத்தை நமக்குக் காட்டவா செய்வார். ஞானிகளுக்குக் காட்டுவார்.''

''அண்டர் அண்டம்
யாவும், நீ
கொண்டு நின்ற
கோல மே!
தொண்டர் கண்டு
சொரிகண் ணீர்
கண்ட நெஞ்சு
கரை யுமே''

—தாயுமானவர்

> "ஞானிகள் அறிந்து அனுபவித்து ஆனந்தக் கண்ணீர் விடுவார்களே, அதுதான் உன் அழகிய கோலம்" என்கிறார் தாயுமானவர். வால் வெள்ளி களும் அவைகளைவிடக் கோடானுகோடி மடங்கு பெரிய நட்சத்திரங்களும் அவைகளின் அற்புதமான இயக்கங்களும் எல்லாம் சேர்ந்ததுதான் இறைவனது அழகிய உருவம்.
>
> நடராஜப் பெருமானது உருவத்தைக்—"கோலத்தை" அப்படியல்லவா பார்க்கிறார்கள் நம்மவர்கள். அறியாமை இல்லை, மூடபக்தி இல்லை. இருட்டடிப்பு இல்லை. எல்லாம் காட்சி. ஒன்றாகக் காணும் காட்சி."

கலைப்பாங்கோடு எதையும் காணும் மாசறு காட்சி ரசிகமணியிடம் இருந்தது.

டி.கே.சி. தென்காசியிலிருந்து ரயிலிலே சென்னைக் குப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களை ரயிலடியி லாவது சந்திக்கலாம் என்று போயிருந்தோம். சந்தித்து இரண்டு வார்த்தை பேசுவதற்குள், சீவிலிப்புத்தூர் ஸ்டேஷனைவிட்டு ரயில் நகர்ந்துவிட்டது. ஒரே ஏமாற்றம்! சென்னையிலிருந்து வந்த டி.கே சி.யின் கடிதம், கீழ்க்கண்டவாறு ஏமாற்றத்தைத் தெரிவிக்கிறது:—

> "எவ்வளவோ ஆத்திரத்தோடு, தாங்கள் வந்தீர்கள். ஆனால், ரயிலும், காலதேவதையும் ரொம்பக் கேலி பண்ணிவிட்டன. இரண்டுவார்த்தை பேசுவதற்குள் வாய்க் கருவியை (Whistle) ஊதிவிட்டான்.........வெறும் இருட்டிலிருந்து இந்த உலகத்துக்கு வருகிறோம். கண்ணைத் துடைக்கவே,

பத்திருபது வருஷம் (நிமிஷந்தான்) ஆகிறது. அதைக் கொஞ்சம் பார்க்கிறோம். இதைக் கொஞ்சம் பார்க்கிறோம். ஏதோ குருடன் தடவிப் பார்க்கிற கணக்குத்தான். ஆனால், ஒன்று தெரிகிறது. எவ்வளவோ பார்க்க வேண்டியிருக்கிறதே, எவ்வளவோ அறிய வேண்டியிருக்கிறதே என்பதாக. கற்றது ஒன்றும் இல்லையே என்ற திகைப்பும் ஏற்படுகிறது. அப்போது உலக ஓட்டி சங்கை ஊதி விடுகிறான். அடடா. உலகத்தோடு ஒன்றும் பேசவில்லையே என்று தோன்றுகிறது.''

இருபது வருஷங்கள் டி.கே.சி.யோடு பழகிய பிறகு இன்னும் எவ்வளவோ அவர்களிடம் அறியவேண்டியிருக்கிறதே என்று பட்டது. அதற்குள்ளாக உலக ஓட்டி சங்கை ஊதிவிட்டான். டி.கே.சி. தத்துவம் மறைந்து விட்டது. ராஜாஜி அவர்கள் டி.கே.சி.யின் ''கம்பர் தரும் ராமாயணம்'' என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் சொல்வதுபோல்,

''டி.கே.சி. அவர்கள் கம்பனுடைய உள்ளத்தில் நுழைந்து, அதன் அந்தரங்கத்தை அறிந்து, கம்பன் பாடல்களைப் பாடி, கவிவானம் உண்டாக்கி, அமுத மழை பொழியச் செய்வார். அதை நேரில் அனுபவித்த நூற்றுக் கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அறிவார்கள் அதன் மகிழ்ச்சியை. எழுத்தில் ஓரளவுதான் தொனிக்கும்.

ஆனால், இப்போது டி கே.சி. ஊனுடலை விட்டுப் போய்விட்டார். நிற்பது என்னைப்போன்ற பித்தர்களின் உள்ளத்தில் இருக்கும் நினைவுகளும் இந்த நூலும்.''

டி.கே.சி. ஓர் அழுகுணிச்சித்தர் அல்ல. நிறைந்த வாழ்க்கை வாழ்வதிலே அவர்களுக்கு நிறைந்த ஆசை உண்டு. 10-11-48ல் அக்காளுக்கு எழுதிய கடிதம் கீழ்க் கண்டவாறு பேசுகிறது:—

''அருமைப்படுத்துவதற்கு நீங்களும் தம்பியும் கிடைத்த பிறகு எனக்கு யாதொரு குறைவும் இல்லை. ஆனாலும், ஓர் ஆசை கொஞ்சம் அதிகமாகவே உள்ளத்தில் வந்துவந்து போகிறது அதாவது ரொம்ப நாளாக ஆயுள் நீடிக்கவேண்டும் என்ற ஆசைதான்.

இவ்வளவு ஒத்த உள்ளத்தோடு கலையையும் தமிழையும் அனுபவிக்கச் சகாக்கள் இருக்கும்போது உலகம் ஆனந்த மயமாகத்தானே இருக்கும். அந்த உலகத்தில் சாவகாசமாகச் சப்பணம் போட்டு உட்காரலாம் என்றுதான் தோன்றுகிறது. இப்படித் தோன்றுகிறதே, அதைப் பற்றியே சந்தோஷந் தான்.''

ராஜாஜி சென்னைப் பிரதமராக இருந்தபோது ஸ்ரீ பிரகாசா சென்னை கவர்னராக இருந்தார். ''தமிழ்ப் பண்பாட்டின் உருவத்தை நீங்கள் காண வேண்டுமென்றால், குற்றாலத்தில் இருக்கும் டி.கே.சி.யை அவர்கள் வீட்டிலேயே சென்று காணுங்கள்'' என்று ராஜாஜி ஸ்ரீ பிரகாசாவிடம் சொல்லியதின் பேரில், கவர்னரும் டி.கே.சி.யின் இல்லத்திற்கு வந்து தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி உரையாடினார். அதைப் பற்றி டி.கே.சி. எழுதிய கடிதங்கள் பல.

''கவர்னர் 9உ வருகிறார். மாலை 5 மணிக்குச் சந்திப்பு. பெரிய கௌரவந்தான். இருவரும்

பண்பாட்டின் சம்பந்தமாக எப்படி ஒட்டுவதென்பது தெரியவில்லை. நமக்கே பல காரியங்களின் மர்மம் இன்னதென்று தெரியவில்லை. மாடன் கோயில்கள் எப்பேர்ப்பட்ட பக்திகளை உண்டு பண்ணுகின்றன. அவைகள் நமக்கு எளிதில் கிட்டுவதில்லை.

அப்பர், மாணிக்கவாசகர் முதலியவர்கள் உருகிப் பாடும்போது நாமும் உருகுகிறோம். பண்பாட்டை உணருகிறோம். உள்ளூர்க்காரியம் இந்த அழகில் இருக்கும்போது, வடகோடிக்கும் தென்கோடிக்கும் பாலமேது! போக்குவரத்தேது! உபசாரமாக ஒருவருக் கொருவர் பரிமாறிக்கொள்ள வேண்டியதுதான்."

* * *

"கவர்னர் இன்று குற்றாலம் வருகிறார். மாலை 5 மணிக்கு என்னைப் பார்க்க வருகிறார். தமிழின் பெருமையைப் பற்றி ஆங்கிலத்தில் பேசவேண்டும்!"

* * *

"மந்திரிகள், கவர்னர் எல்லோரும் வந்து போய் விட்டார்கள். கவர்னர் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். தமிழ், முக்கியமாக அகஸ்த்தியர் பற்றித்தான் பேச்சு. அக்காள் எழுதியிருக்கிறபடி தமிழர் அல்லாதவர்களுக்குத்தான் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வு தெரிகிறது. காரணம், அவர்கள் கற்றவர்கள். தமிழ் அண்ணாக்கள் நிரக்ஷர குக்ஷிகள், அவ்வளவுதான்.

* * *

மேற்சொன்ன எல்லாக் கடிதங்களிலும் டி.கே.சி.க்கே யுரிய தமிழ் உரை நடையின் பாங்கை அறிந்து அனுபவிக்க

லாம். அந்த நடை எப்படி உருவாயிற்று என்பதைத் தமிழ் அறிஞர்கள் கவனிக்கவேண்டும்.

ரஸிகமணி மாணவனாக இருந்த காலம், சுமார் எழுபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன். அந்தக் காலத்துத் தமிழ் வசனநடை ரொம்பப் படித்தவர்கள் கையிலகப் பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த, வழக்கொழிந்த தமிழ்ச் சொல்லில் நவநாகரிகக் காட்சிகளை வருணித்துக் கொண் டிருந்தார்கள். நாவலாசிரியர்கள்கூட.

தங்கசாலை வீதியிலே நடக்கும் காதல் காட்சியை சங்க இலக்கியத்தைக் கரைத்துக் குடித்த முதுபெரும் புலவர் ஒருவர் கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார் :—

''அவ்வீட்டின் மாடத்தும்பர், ஓர் அறையின்கண்ணே இன்னிசைப் பாட்டும், மன்னிசைக் கல்வியும், வல்லளாய் எழிலும் குணமுமியைந்த பூங்கொம்பராய் மிளிர்தரும் ஓர் இளம் பருவத்துப் பெண் தனது வார்குழல் கோதி முடித்துக்கொண்டு நின்றாள். அப்போழ்தத்து, கரிய மாலனைய காளையொருவன் அவட்குப் பின்புறம் போந்து, அவளின் விழிகளிரண்டையுந் தன்னிருகையா லிறுகப் புதைத்துக்கொண்டு நின்றான். அன்னணம் ஒருவன் கண் புதைத்ததுணர்த்த அந் நங்கை 'நீ என்னைத் தொடற்பாலையல்லை,' என்றனள்—''

இப்பேர்ப்பட்ட கரடுமுரடான, விறைத்துப் போன பாஷையிலே நாடோடிச் சம்பவங்களைத் தமிழாசிரியர் கள் விஸ்தரித்து வந்தார்கள். பிரம்மாண்டமான சர்க்கஸ் யானை ஐம்பொறிகளையும் அடக்கி ஒருமுகப்படுத்திக் கீழே கிடக்கும் பட்டாணிக் கடலையை எடுப்பதில் முக்கி முனைந்து எப்படித் திக்கு முக்காடுமோ அப்படி

அவஸ்தைப்பட்டார்கள், அந்தக் காலத்துத் தமிழ் எழுத்தாளர்கள். கருத்துக்கு ஒவ்வாத வார்த்தைப் படாடோபமும், திருகு முறுகலும், சுவையற்ற கோணல் தமிழும் புலமை வேஷம் போட்டுக்கொண்டு நடமாடிய காலம் அது.

அந்தக் காலத்தில் பள்ளிமாணவனாக இருந்த ரஸிக மணிக்கு இந்தக் கொடுங்கோன்மை எல்லாம் தாங்க முடியவில்லை. உரைநடை எப்படி இருக்கவேண்டும் என்ற ஆராய்ச்சியில் இறங்கி, சில முடிவுகளுக்கு வந்தார்கள். எடுத்துக்கொண்ட விஷயத்தை, உண்மையோடும், நேருக்குநேரும் சொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும். கருத்தும் சொல்லும் சுகமாய்க் கலந்து கைகோத்து நடக்க வேண்டும். அடுப்பங்கரையில் பெண்கள் பேசுகின்ற தமிழிலே எவ்வளவு ஆற்றலும், உணர்ச்சியும் இருக்கின்றன! நாட்டுப்புறத்திலே பட்டிக்காட்டான் பேசுகிற தமிழிலே வகை வகையான சுவையிருக்கிறதே, விஷயத்தைக் குறி பார்த்து அடித்த மாதிரியல்லவா, அவன் சொல்லிவிடுகிறான். இதையெல்லாம் சிரத்தையோடு தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்து, கொச்சையை அகற்றி விட்டு, நாடோடித் தமிழிலுள்ள ரஸத்தைப் பிழிந்து தமிழ்வசனத்தில் பெய்துவிட வேண்டும். அப்போதுதான் தமிழ் எழுத்துக்கு வல்லமையும், வளமும் ஏற்படும் என்று டி.கே.சி. வற்புறுத்திவந்தார்கள்.

பேச்சுத் தமிழின் வளைவு, நெளிவுகளோடும் பம்மல் பாய்ச்சல்களோடும் பழகினால்தான், ஒரு எழுத்தாளனுடைய தனித்தத்துவம், அவனுக்கே உரிய நடையில் வெளிப்படும். நடை என்றால் என்ன என்பதை அபூர்வமான தெளிவோடும், அதிகாரத்தோடும் ரஸிகமணியின் கடிதம் கீழ்க் கண்டவாறு விளக்குகிறது.

''ஆங்கில ஆசிரியர்கள் ஸ்டைலைப்பற்றி என்ன எல்லாமோ எழுதுகிறார்கள். எழுத்தில் முக்கிய மான காரியம் அதுதான் என்று சொல்வார்கள் ஆனால், அது எளிதில் அமைகிறதில்லை என்றும் சொல்லுவார்கள். ஆங்கில ஆசிரியர்களது ஸ்டைல் இன்னது இப்படி இருக்கிறது என்றும் நமக்கு எளிதில் தெரிகிறதில்லை. ஏதோ தெரிகிறது—இருட்டுக்குள் ஆளை இனங்காணுகிற கணக்கில்தான்.

''ஆனால் தமிழுக்கு வந்தால் (பண்டித உலகத்தைவிட்டு வெளியேதான்) இன்னது ஸ்டைல் என்று லகுவாய்த் தெரிகிறது. ஏன், அன்னம்மாள் தங்கம்மாளுக்கு எழுதிய கடிதத்தில் அவளுடைய தனித் தத்துவம் வெகு ஜோராய்த் துள்ளி ஓடுகிறது. கருத்தும் சொல்லும் சுகமாய்க் கலந்து கை கோர்த்து நடக்கின்றன. பெண் குழந்தைகளைப் பார்த்து நாம் பயப்பட வேண்டியதாய்த்தான் இருக்கிறது.

''கவி என்பதற்கு வந்தால் கம்பரிடத்தில்தான் ஸ்டைல் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. தற்காலத்துக் கவியில் தேசிக விநாயகம்பிள்ளை அவர்களது கவியில்தான் ஸ்டைல் இருக்கிறது. கவியில் அவர்களது எளிய தூய உள்ளம் பளிங்கில் வைத்த மாதிரி தெரிகிறது. ஆனால் இந்த ஸ்டைலில் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது எழுதுகிறவருக்கு அது தெரியாது என்று சொல்ல லாம். ஏனென்றால், அவருக்கே தெரியாமல் அநா யாசமாய் வருவது அது. நாம் தெருவிலோ ரோட்டிலோ நடந்து போகிறோம். (மிலிட்டரி மார்ச் அல்ல) இயல்பாக நடக்கிறோம். அந்த நடை யில் நூற்றுக்கணக்கான அம்சங்கள் இருக்கின்றன,

ஏன் இருக்காது! உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையும் எத்தனையோ எலும்புக் கட்டுகள், தசைகள், நரம்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு கணக்குப்படி ஒத்து வேலை செய்கின்றன. நாம் ஒன்றுமே செய்ய வில்லை என்று சொல்லலாம்.

"ஆனால், அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் நடையின் தனிப்பண்பை உடனே கண்டுகொள்கிறார்கள். ஆயிரம் பேர் நடந்துபோய்க் கொண்டிருக்கலாம். ஆனாலும், நம் முகத்தைப் பாராமலே, நம்முடைய நடையை இனம் கண்டு கொள்ளுகிறார்கள். நடையில் (உடம்பு சம்பந்தமாகத்தான்) எல்லாருக்கும் ஸ்டைல் வந்துவிடுகிறது. காரணம் என்ன? பாடமாக வைத்துப் பள்ளிக்கூடத்தில் நடையைக் கற்பிப்ப தில்லை. ஆனால், எழுத்தில் ஸ்டைல் வரமாட்டேன் என்று சாதிக்கிறது. பள்ளிக்கூடத்துப் பயிற்சிதான் காரணம். மனுஷ தத்துவத்தை எடுத்துவிட்டு, எந்திர தத்துவத்தை மாணவர்களுக்குள் புகுத்திவிடுகிறது. இந்த எந்திர தத்துவத்தின் கோணல்கள், "முத்தி, முத்தி"க் கடைசியில் பரிமேலழகர் நச்சினார்க்கினியர் பண்டிதமணிகளாக முடிகின்றன.

"நடையில் ஸ்டைல் இருக்கவேண்டும் என்றால் (கால் இருந்தால்ப் போதாது) உடலுக்குள் உயிர் இருக்கவேண்டும். அதுபோல, எழுத்தில் ஸ்டைல் இருக்கவேண்டும் என்றால் (வார்த்தைகள் இருந்தால் போதாது) உள்ளத்தில் உயிர், அதாவது உண்மை உணர்ச்சி இருக்கவேண்டும்.

"ஏதோ "டைம்ஸ் சப்ளிமெண்டுக்கு"க் கட்டுரை எழுதுவது போல எழுத்து நீண்டுவிட்டது. பிள்ளையார் இப்படி ஆயிற்று. இருக்கட்டும்.

தாங்கள் இருக்கும்போது, எந்தக் கஷ்டமான விஷயத்தையும் தைரியமாய் எழுதத் தோன்றுகிறது. பேசக்கூடத் தோன்றுமல்லவா? அப்படியே எழுதவும் தோன்றுகிறது.''

பேரறிஞர் பலரைப் பார்த்திருக்கிறோம். அரசியல், பொருளாதரம், சமூக இயல், விஞ்ஞானம், இலக்கியம், சங்கீதம், கலை, சமயம்—ஆகிய ஒவ்வொரு துறையிலும் அவர்கள் ஒரு முடிவு கட்டி வைத்திருப்பார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் ஒரு துறையில் ஒரு கொள்கை இருக்கும்; மற்றொரு துறையில் மற்றொரு கொள்கை இருக்கும். இந்தக் கொள்கைகளுக்கு இடையே அடிப்படையான ஒற்றுமை இருக்காது; பெரும்பாலும் முரண்பாடுதான். ஆனால், ரஸிகமணி காரியம் அப்படியல்ல எந்தத் துறையானாலும் சரி, அடிப்படையான ஒரே கோணத்திலிருந்துதான் விஷயங்களைக் கண்டு முடிவு கட்டுவார்கள். கிளைகள் எத்தனையாயிருந்தால்தான் என்ன, ஒரே கொப்பிலிருந்து முளைத்தெழுந்த கிளைகள்தான்.

இப்படியாக, வாழ்க்கையின் பல பட்டங்களைப் பற்றி, ஒரு ஞானியின் தெளிவோடும் நிறைவோடும் நுணுக்கத்தோடும், இன்பமும் எளிமையும் கலந்த அழகிய தமிழில் டி.கே.சி.யின் கடித இலக்கியம் எடுத்துப் பேசி நம்மோடு நெருங்கி உறவாடுகிறது. பேருண்மைகளை யெல்லாம் நமக்கு உணர்த்துகிறது. அரிய கலைக்கும் கவிதைக்கும் பண்பாட்டுக்கும் உடைமையாளர்களாக இருக்கும் தமிழர்கள் டி.கே.சி.யின் கடித இலக்கியத்தைக் கற்று இன்பமும் மன நிறைவும் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,

**எஸ். மகராஜன்**